# விழிநீர் தாங்காயோ!!!

ஸ்ரீகலா SRIKALA

VIZHINEER THANGAYO!!!

# விழிநீர் தாங்காயோ!!!

ஸ்ரீகலா SRIKALA

VIZHINEER THANGAYO!!!



தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER




தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS




Download

## Contents

துளி : 1
துளி : 2
துளி : 3
துளி : 4
துளி : 5
துளி : 6
துளி : 7
துளி : 8
துளி : 9
துளி : 10
துளி : 11
துளி : 12
துளி : 13
துளி : 14
துளி : 15
துளி : 16
துளி : 17
துளி : 18
துளி : 19
துளி : 20
துளி : 21
துளி : 22
துளி : 23

# துளி : 1

சென்னையில் இருந்த அந்த மிகப் பெரிய விளையாட்டு உள்அரங்கம் விழாவிற்குரிய தோற்றத்துடன் ஆடம்பரமாய், அழகாய் ஜொலித்தது. வானத்து தேவர்களும், தேவதைகளும் பூலோகம் வந்துவிட்டார்களோ என்று நினைக்கும் அளவிற்கு அந்த அரங்கம் தமிழ் திரைப்பட நட்சத்திரங்களால் நிரம்பி வழிந்தது. அங்கு மேடையில் நடன நிகழ்ச்சி நடைப்பெற்றுக் கொண்டிருந்தது. அது முடிந்ததும் தோன்றிய நிகழ்ச்சி அறிவிப்பாளர்,

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

"இப்போது சிறந்த நடிகருக்கான விருதை தட்டிச் செல்லப் போகும் அந்த அதிர்ஷ்டசாலி நடிகர் யாரென்று பார்க்கலாம்?" என்று அறிவித்தவுடன்... அங்கிருந்த திரையில் போட்டியிட்ட திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

"விருதினை அறிவிக்கப் பிரபல நடிகர்..... வருவார்..." என்று சொல்லப்பட்டவுடன் அந்தப் பிரபல நடிகர் மேடையில் தோன்றினார்.

"இந்த வருடத்திற்கான சிறந்த நடிகருக்கான விருதை பெற போகிறவர்..." என்று அவர் சிறிது இடைவெளி விட... அங்குக் கூடியிருந்த மொத்த கூட்டமும் "கௌதம் கிருஷ்ணா" என்று மகிழ்ச்சியோடு ஆர்ப்பரிக்க...

"எஸ்... யூ ஆர் அப்சோலிட்லி கரெக்ட்... த ஒன் அன்ட் ஒன்லி அவர் ட்ரீம் ஸ்டார் கௌதம் கிருஷ்ணா..." அவர் அறிவித்ததும் தான் தாமதம் கூட்டம் மொத்தமும் பலத்த கரவொலியை எழுப்பி,

"கௌதம் கிருஷ்ணா... கௌதம் கிருஷ்ணா... கௌதம் கிருஷ்ணா..." என்று உற்சாகமாய்க் கத்தியது.

அந்த அறிவிப்போ, மக்கள் கூட்டத்தின் கூக்குரலோ கௌதம் கிருஷ்ணாவை எட்டவில்லை... பாதிக்கவில்லை. அவனின் முகம் இறுகி உணர்ச்சிகளைத் துடைத்திருக்க... அவனது கண்களோ எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

"கௌதம்..." அவனருகில் அமர்ந்திருந்த அவனது நண்பனும், அவனது வலதுகரமாய்ச் செயல்படும் கணேஷ் அவனது தோளை தொட்டான். தனது தொடுகையைக் கூட உணராமல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கௌதமின் பார்வையைத் தொடர்ந்து தன் பார்வையை ஓட்டியவன் திடுக்கிட்டான்.

"கௌதம்..." அழுத்தமாய் அவன் கூப்பிட... கௌதம் தன் பார்வையை விலக்கி கொண்டவன் மனதில் எழுந்த

எரிச்சலுடன் நண்பனை பார்த்தவன் சலிப்புடன் எழுந்து மேடையை நோக்கி சென்றான்.

அவனது கால்கள் தான் மேடையை நோக்கி சென்றது... ஆனால் கண்கள் என்னமோ அங்குச் சற்று தள்ளி அமர்ந்திருந்தவளை குரோதத்துடன் பார்த்தது. மெல்ல மெல்ல அவன் விழிகளில் குரோதம் மறைந்து வெற்றி களிப்பு வந்தமர்ந்தது. 'பார்த்தாயா நான் வென்று விட்டேன்...' என்ற மமதை அவன் முகத்தில் தோன்ற, ஒருவித ஏளனச் சிரிப்புடன் அவளைப் பார்த்தவன் அடுத்தக் கணம் மின்னல் வேகத்தில் மேடையை நோக்கி சென்றான்.

கௌதமின் பார்வையில் மதுஶ்ரீயின் தண்டுவடம் சில்லிட்டது... உள்ளுக்குள் குளிரெடுத்தது. என்ன மாதிரியான பார்வை இது... பழிவாங்கும் பார்வை... வேட்டையாட போகும் புலியின் பார்வை... 'அப்பப்பா... விட்டால் இந்த இடத்திலே என்னை அடித்துக் கொன்றுவிடுவான் போலிருக்குதே...' என்று நினைத்தவள் உடல் பயத்தில் சிலிர்த்தது. ஆனால் மறுகணம் அவளது மனம், 'அப்படிக் கொன்றாலும் நன்றாயிருக்குமே...' என்று துயரத்துடன் நினைத்துக் கொண்டது.

பழைய நியாபகங்கள் அவள் துக்கத்தைக் கிளறிவிடத் துக்கம் தொண்டையை அடைக்க அங்கிருந்த பாட்டிலில் இருந்த குளிர்ந்த நீரை எடுத்து ஒரே மூச்சில் பருகி முடித்தாள். நாவின் வறட்சியைக் குளிர்ந்த நீர் போக்கிவிடும்... ஆனால் மனதின் வறட்சியை யார் போக்குவது...? அதைப் போக்க கூடியவனோ எதிராளியை, பகையாளியை பார்ப்பது போல் அல்லவா அவளைப் பார்க்கிறான். அவளின் வறண்ட மனதிற்கு இதமாகப் பாலைவனச் சோலையாக அவன் வருவானா...? அவளையும் அறியாமல் அவளிடமிருந்து ஒரு நெடிய மூச்சு கிளம்பியது.

அதற்குள் மேடையில் சிறந்த கதாநாயகிக்கான விருதை அறிவிக்க... அதில் அவள் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. மேடையை நோக்கி நடந்தவள்

முகத்தில் இத்தனை நேரம் இருந்த கலக்கம் மறைந்து ஒருவித மகிழ்ச்சி நிறைந்திருக்கத் துள்ளலுடன் சென்றாள். அதற்குக் காரணம் ஒன்று கௌதம் கையால் விருது வாங்க போகிறாள்... இரண்டு சிறந்த நாயகன் அவனென்றால் சிறந்த நாயகி அவளல்லவா... எவ்வளவு பொருத்தம் இருவருக்கும்... இதைவிடச் சந்தோசம் வேறு இருக்கிறதா என்ன...???

தன் விருதினை வாங்கிய கௌதமை சிறந்த நாயகிக்கான விருதினை வழங்கச் சொல்ல... அவன் அதற்காக வேண்டி மேடையிலேயே நின்றான். ஆனால் அவனே எதிர்பாராத விதமாக மதுஸ்ரீயின் பெயர் தேர்வு செய்யப்பட... என்ன செய்வது என்று திகைத்துப் போனான்.

'என் கையால் அவளுக்கு அவார்ட் கொடுக்கணுமா...? போயும் போயும் அவளுக்கு... துரோகி...' வெறுப்புடன் நினைத்தது அவனது மனம்... நறநறவென்று கடிப்பட்டது அவனது பற்கள்.

முகம் நிறையப் புன்னகையுடன், துள்ளல் நடையுடன் மேடையேறியவளை பார்த்தவன் இதயம் தாளம் தப்பியது... கண்கள் இமைக்க மறந்தது... அவளின் அழகு தந்த பிரமிப்பில் லேசாகத் திறந்த வாய் சத்தியாகிரகம் செய்தது போல் திரும்ப மூட மறந்தது. இளஞ்சிவப்பு நிறத்தில் வெள்ளை கற்களும், முத்து மணிகளும் கோர்க்கப்பட்ட ஷிபான் புடவையில் அந்தத் தேவலோக மங்கையர்களுக்கே சவால் விடும் அளவுக்குக் கொள்ளை அழகாய் இருந்தவள் அவன் மனதை மயக்கியது ஒன்றும் அதிசயமல்லவே.

தன்னருகில் வந்து நின்றவளை கூர்ந்து பார்த்தவன் மனம் அவளை ஒரு விசயத்தில் மெச்சி கொண்டது. அது புடவையைக் கண்ணியமாய்க் கட்டிருந்த அவளின் நடத்தையில்... நாகரீகமாக உடுத்தியிருந்த அந்தப் புடவை அவளை எந்தவிதத்திலும் அநாகரீகமாகக் காட்டவில்லை.

'இதிலெல்லாம் இவள் கெட்டி தான்...' என்று மெச்சியவன் மனம், 'இதில் மட்டுமா அவள் கெட்டி...?' வேறு ஏதோ

ஒன்றை நினைத்தவன் முகம் கோபத்தில் சுருங்கியது.

"வாழ்த்துக்கள்..." என்ற சம்பிரதாய வார்த்தையுடன் அவன் அந்த விருதை அளிக்க,

"தேங்க்ஸ்..." என்றபடி வாங்கியவள் முகம் அந்த ஆஸ்காரை வென்றது போல் மலர்ந்து விகசித்தது. பின்னே இருக்காதா... கௌதம் கையால் விசத்தைக் கொடுத்தால் கூட மகிழ்வோடு வாங்கிப் பருகுபவளாயிற்றே அவள்... அவன் கையால் விருது வாங்குவது என்றால் சந்தோசமிருக்காதா என்ன...

"நமது ட்ரீம் ஸ்டாரும், ட்ரீம் கேர்ளும் நமக்காக நடனம் ஆடுவார்கள்..." என்று எதிர்பாராதவிதமாக அறிவிப்பாளர் அறிவிக்க...

"இவன் வேற நேரம் காலம் தெரியாமல்..." கௌதம் முணுமுணுத்தது அவளது காதில் தெளிவாக விழ... அத்தனை நேரமிருந்த அவளது உற்சாகம் அப்படியே வடிந்தது. முகம் தொங்கி போக அங்கிருந்து நகரப் போனவளை அவனின் கை பிடித்துத் தடுத்து நிறுத்தியது. என்ன என்று அவள் அவனை ஏறிட்டு பார்க்கும் போதே...

"தேடல் வரும் பொழுது என் உணர்வுகளும் கலங்குதடி
கானலாய்க் கிடந்தேன் நான் உன் வரவால் விழி திறந்தேன்
இணை பிரியாத நிலை பெறவே நெஞ்சில் யாகமே
தவித்திடும் போது ஆறுதலாய் உன் மடி சாய்கிறேன்
காலம் தோறும் நெஞ்சில் வாழும் உந்தன் காதல் நியாபகங்கள்
தினம்... தினம்..."

என்ற பாடல் ஒலிக்க... அந்தப் பாடலில் உள்ள வார்த்தைகளின் அர்த்தத்தைக் கௌதமின் விழிகள் பிரதிபலிக்க... அதில் அவள் பிரமித்துப் போய் நின்றுவிட்டாள். அவன் கண்கள் அவளிடம் யாசித்த காதலில் அவள் மனம் அவன் பால் உருகியது. அந்த நேரம் பார்த்து அவனது இடது கை அவளின் இடையை அழுத்தமாய்த் தழுவ... அவனின் வலது கை அவளின் இடது

கையை உறுதியாய் பற்றியது. அவளது இடையில் அவன் கைப்பட்டதும் அவனது தொடுகையில் அவள் உள்ளம் போல் அவளது உடலும் உருகியது. அவனது கண்கள் அவளது கண்களுக்குள் ஊடுருவி பார்த்து அவளது உயிரை இன்பமாய்க் கொன்றது. அவள் இன்ப பரவசத்தில் ஆழ்ந்திருக்கும் போதே அவன் அவளோடு சேர்ந்து மேற்கத்திய பாணியில் நடனமாட கூடியிருந்த கூட்டம் விசிலடித்து, கைத்தட்டி ஆர்ப்பரித்தது.

அதில் இத்தனை நேரம் தன்னைக் கட்டி போட்டிருந்த மாயவலை அறுந்து விழ... சட்டென்று அவளை விட்டு விலகினான் கௌதம். சபை நாகரீகம் கருதி தான் அவன் அவளை ஆட அழைத்தது... ஆனால் பாடலின் வரி அவனின் மனதை எடுத்துரைத்ததோ என்னமோ அவனையும் அறியாமல் அவளுடன் ஒன்றிவிட்டான். தன் நிலையை எண்ணி அவனுக்கே அருவருப்பாய் இருந்தது.

"ச்சே..." என்று முணுமுணுத்தவன் கையை இறுக்கி கொண்டு இறுக்கமாய் நின்றிருந்தான். அவனின் முகபாவத்தில் அவள் தான் தவித்துப் போனாள்.

'நான் உன் அருகில் இருக்கும் போது அப்படி என்னடா தவிப்பு உனக்கு..?' என்று அவனை ஆறுதலாய் தன் மடி சாய்க்க விழைந்தது அவளது காதல் மனம். அவனின் தவிப்பே அவள் தான் என்பது அவளுக்குப் புரியவில்லையா...? இல்லை புரியாதது போல் நடிக்கிறாளா...?

"கௌதம் சார்... நீங்க பீல்டுக்கு வந்து இரண்டு வருடங்களாகுது... உங்கள் முதல் படமே சூப்பர் டூப்பர் ஹிட்... இதுவரை பல ஹீரோயின்களுடன் நடிச்சிட்டீங்க... எப்போ சார் எங்க கனவுக்கன்னி மதுஸ்ரீ மேடம் கூட நடிக்கப் போறீங்க...?" அறிவிப்பாளரின் கேள்வியில் இருவருமே தங்கள் உலகத்திலிருந்து நடப்பிற்கு வந்தனர்.

மதுஸ்ரீ கௌதமின் பதிலுக்காக ஆவலுடன் அவன் முகம் பார்க்க... அவனோ எந்தவித தயக்கமும் இன்றி... "என்னோட அடுத்தப் படம் மதுஸ்ரீயோட தான்..." அவனது

பதில் அவளுக்கு எந்தளவுக்கு உவகை அளித்தது என்பதை வார்த்தையில் வர்ணிக்க முடியாது.

"மேடம்... சார் சொன்னது உங்களுக்கு எப்படியிருக்கு...?" அறிவிப்பாளர் அவளைக் கேட்க...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு... தேங்க்ஸ் கௌதம் சார்..." மகிழ்வோடு சொன்னவள் அவனுக்குத் தன் மனமார்ந்த நன்றியை தெரிவிக்க... அவனோ எந்தவித உணர்ச்சியுமில்லாமல் அவளின் நன்றியை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு மெல்லமாய்த் தன் தலையை மட்டும் அசைத்தான்.

பின்னர் இருவரும் மேடையை விட்டு கீழேயிறங்க... "ரொம்பச் சந்தோசப்பட்டுக்காதே... இனி தான் இருக்கு உனக்கு... உன்னை ஜெயிக்காம விட மாட்டேன்டி... இப்பவே நான் ஜெயிச்சிட்டேன் தான்... ஆனா அது தொழில் ரீதியா... உனக்கு இன்னமும் இருக்கு... இந்தக் கௌதம் யார்ன்னு உனக்குக் காட்டுறேன்டி..." கர்ஜனை போல் ஒலித்த அவனின் குரலில் முன்னே படிகளில் இறங்கி கொண்டிருந்த அவளது உடல் நடுங்கியது. நிற்க முடியாமல் தத்தளித்தவள் அங்கிருந்த பக்கவாட்டு சுவரை பிடித்துக் கொண்டு அப்படியே நின்றுவிட்டாள்.

"என் கிட்ட தோத்துடுவோம்ன்னு பயமாயிருக்கா...?" எள்ளல் குரலில் சொன்னவன் வார்த்தையில் சட்டென்று திரும்பி பார்த்தவள் கண்களில் அடிபட்டார் போன்ற வலி ஒன்று பரவி மறைந்தது.

"கௌதம்..." ஆசையுடன் அழைத்த அவளது குரலில் அவனது உதடும், புருவமும் ஒருங்கே சுளித்தது.

"என் பேரை சொல்லும் அருகதை உனக்குக் கிடையாதுடி... இன்னொரு தடவை என் பேரை சொன்ன நான் மனுசனாயிருக்க மாட்டேன்..." பல்லை கடித்தவன் சுற்றும் முற்றும் பார்த்தான். நல்லவேளை அடுத்தடுத்து வந்த நடிகர், நடிகை மேல் தங்களது கவனத்தைப் பதித்த கூட்டம் இவர்களை மறந்து போனது.

"சரி சொல்லல..." உடனே தன் பேச்சை கேட்டு கொண்டவளை கண்டவன் மனம் கனத்துப் போனது. 'இன்னைக்கு என் பேச்சை கேட்ட நீ... அன்னைக்கு ஏண்டி என் பேச்சை கேட்கல...' அவன் மனம் ஓலமிட்டு அழுதது.

"உங்களைப் பார்த்து நான் ஏன் பயப்படணும்...? உங்க கையால் என்னைக் கொன்னால் கூடச் சந்தோசமாய் நான் சாவேன்..." கூறியவளின் உறுதியான வார்த்தைகள் அவனின் கல் மனதையும் அசைத்துப் பார்த்தது.

"அப்பறம் என்ன சொன்னீங்க... என்னை ஜெயிச்சு காட்டுறேன்னா... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா... நீங்க என்னை ஜெயிச்சு பத்து வருசமாகுது..." கண்களில் காதலோடு சொன்னவள் அடுத்த நொடி அவனின் பதிலை எதிர்பாராமல் நடந்தாள். அவளின் வார்த்தையில் ஸ்தம்பித்துப் போய் அவன் சிலையாய் நின்றிருந்தான்.

********************

"அவன் உன் கூட நடிக்கப் போறதா சொல்லியிருக்கான்... அதை நீ மறுத்து பேசாம தேங்க்ஸ் சொல்லிட்டு வந்திருக்க... உன் மனசுல நீ என்ன நினைச்சிட்டிருக்க...?" வீட்டிற்குள் நுழையும் போதே உச்சஸ்தானியில் கத்திய அக்கா இதயாவை அலட்சியப்படுத்தி விட்டு தாயின் அறைக்குச் செல்லவிருந்தவளை அக்காவின் கணவன் ரஞ்சனின் குரல் தடுத்து நிறுத்தியது.

"மது... கௌதம் கூட நடிக்கிறது உண்மை தானா...? அவன்..." என்ன சொல்வதென்று தெரியாமல் பாதியில் நிறுத்திய ரஞ்சனின் வார்த்தையிலிருந்த அக்கறை அவள் மனதை தொட....

"அவரே அந்த வாய்ப்பை கொடுக்கும் என்னால் மறுக்க முடியல மாமா... அவர் கூடத் தான் என்னால் சேர்ந்து வாழ முடியாமல் போயிருச்சு... அட்லீஸ்ட் அவர் கூடப் படத்திலாவது நடிச்சிக்கிறேனே..." விரக்தியாய் சொன்னவளின் வெறுமை ரஞ்சனின் மனதை தாக்க...

உடன்பெறாத அந்தத் தங்கைக்காக அவன் கண்கள் கலங்கியது.

"உன் மனசுக்கு நல்லதே நடக்கும்..." என்றவன் வாஞ்சையுடன் அவள் தலையைத் தடவி விட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

"என்ன அவ அழகாயிருக்கான்னு தொட்டுத் தடவி பேசுறியா...?" தங்கள் அறைக்கு வந்ததும் படபடவெனப் பொரிந்த மனைவியைப் பார்த்தவன் கண்கள் அருவருப்பை உழிந்தது.

"ச்சீ... நீயெல்லாம் மனுசியா...? ராட்சசி... அவ உன் தங்கச்சி... எனக்குத் தங்கச்சி மாதிரி... இப்படியெல்லாம் அசிங்கமா பேசாதே..." கண்டிப்புடன் கூறியவனை அலட்சியத்துடன் பார்த்த இதயா,

"பெத்த மகளையே பொண்டாட்டியா பார்க்கிற உலகம் இது... இதில் மச்சினிச்சியைப் போய்த் தங்கச்சின்னு சொன்னா நான் ஒத்துக்கிட முடியுமா என்ன...? இனி மேல் அவ கூடப் பேசும் போது தள்ளி நின்னு பேசுங்க... எனக்கு அவ சக்களத்தியா வந்துடுவாளோன்னு மனசு பக்பக்குன்னு அடிச்சிக்குது" என்றவளை முறைத்து பார்த்தவன்... தலையிலடித்த படி அறையைவிட்டு வெளியேறினான்.

*************************

"அம்மா... இப்ப உடம்பு நல்லாயிருக்கா...?" தாயின் அருகில் அமர்ந்து அவரின் கையை ஆதரவாய் வருடியவாறு மதுஸ்ரீ கேட்க... அவளைப் பார்த்து மீனாகுமாரியின் கண்கள் கலங்கினாலும் தலை ஆம் என்பது போல் ஆடியது.

"டேப்லெட் எல்லாம் சரியா கொடுத்தீங்களா...?" அங்கிருந்த செவிலிப் பெண்ணிடம் விசாரித்தவள் அவளை அனுப்பிவிட்டு அன்னையிடம் சிறிது நேரம் மனம் விட்டு பேசி கொண்டிருந்தாள்.

"அம்மா... இன்னைக்கு நான் கௌதம் கூடப் பேசினேன்..." அவளின் பேச்சை கேட்டு... அவர் தன் கையைத் தொலைக்காட்சி பெட்டி பக்கம் காட்ட...

"ஓ... அதை நீங்க பார்த்தீங்களா...?" என்றவுடன்... சந்தோசமாய்த் தலையசைத்தவர் ஆசிர்வதிப்பது அவளின் தலை மேல் கை வைக்க... அது வரை மனதை அடைத்துக் கொண்டிருந்த பாரமெல்லாம் அணையை உடைத்துக் கொண்டு வரும் வெள்ளம் போல் அழுகையாய் வெளிப்பட்டது.

"அம்மா... ஐ ரியலி மிஸ் ஹிம் மா... என்னால முடியல..." மகளின் அழுகையைச் செய்வதறியாது பார்த்து கொண்டிருந்தவரின் முகத்தில் வேதனையின் சாயல். அவரால் செய்ய முடிந்த ஒன்று மகளின் தலையை ஆறுதலாய் வருடுவது ஒன்றே...

தன் அழுத விழிகளை அழுந்த துடைத்தவள், "சாரிம்மா... உங்களையும் சேர்த்து கஷ்டப்படுத்திக்கிட்டு..." என்றவள், "நீங்க ரெஸ்ட் எடுங்க..." எழுந்தவள் அவர் அருகிலிருந்த மாத்திரை பெட்டியில் இருந்து தூக்க மாத்திரை இரண்டை எடுக்க... மீனாவின் கைகள் அவளைத் தடுக்க, அவரின் தலை வேண்டாமென்பது போல் அசைந்தது.

"எப்போதும் எடுக்கிறது தானேம்மா... இன்னைக்கு என்ன புதுசா...?" மகளின் கேள்விக்கு அவள் கையிலிருந்த இன்னொரு மாத்திரையை அவர் சுட்டி காட்ட...

"ஓ... எப்பவும் ஒண்ணு எடுக்கிறவ இன்னைக்கு இரண்டு டேப்லெட் எடுத்திருக்கிறதை கேட்கிறீங்களா?" அவள் கேட்டதும் அவர் ஆம் என்று தலையசைக்க...

"இன்னைக்குத் தூக்கம் வரும்ன்னு தோணல..." துக்கமாய்ச் சொன்னவள்... "எல்லா டேப்லெட்டும் போட்டுட்டு ஒரேடியாய் நிரந்தரமாய்த் தூங்கணும் போலிருக்கு..." துயரத்துடன் சொன்னவளை அவர் திகைத்துப் போய்ப் பார்க்க...

"அம்மா பயப்படாதீங்க... நீங்க இருக்கிற வரைக்கும் நான் உயிரோடு தான் இருப்பேன்... நீங்க போன அடுத்தச் செகண்ட் நானும் செத்துருவேன்ம்மா..." அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டவள், "குட் நைட்ம்மா..." என்றவள் அறையை விட்டு வெளியேற... மகளின் மனத்துயரத்தை துடைக்க வழி தெரியாதவாராய் இயலாமையில் அந்தத் தாய் கண்ணீர் வடித்தார்.

தன் அறைக்கு வந்து உடையை மாற்றிய மதுஸ்ரீ கையோடு கொண்டு வந்திருந்த மாத்திரையைப் போட்டுவிட்டு படுத்தவளுக்கு அந்த ஏசி அறை கூட ஒரே புழுக்கமாய் இருப்பது போல்... மூச்சடைப்பது போல் தோன்ற எழுந்து சென்று ஏசியை அணைத்தவள் ஜன்னலை திறந்து வைத்துவிட்டு மீண்டும் படுக்கையில் வந்து விழுந்தாள். அவள் மனம் பழைய நிகழ்வுகளை நினைக்க... இரண்டு தூக்க மாத்திரை போட்டும் தூக்கம் அவளருகில் வராமல் சடுகுடு ஆடியது. அவளையும் அறியாமல் அவளின் கண்கள் ஜன்னலை பார்க்க... அதன் வழியே தெரிந்த நிலவில் அவள் கண்கள் நிலைத்தது. நிலவில் கௌதமின் முகம் புன்னகையுடன் தோன்ற... அவளின் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

"என் கௌதம்..." என்று அவள் வாய் முணுமுணுத்தது. சிறிது நேரம் நிலவை பார்த்து கொண்டிருந்தவளை அந்த நிலவு தாலாட்டியதோ இல்லை அதில் தெரிந்த கௌதம் தாலாட்டினானோ தெரியவில்லை... உறக்கம் அவளது விழிகளைத் தழுவியது.

அவள் நிம்மதியாய் உறங்கியிருக்க... அங்கோ அவன் உறக்கமில்லாமல் அவளது நினைவில் தவித்துக் கொண்டிருந்தான். என்ன தான் அவன் மனதில் அவள் மீதான தவிப்பிருந்தாலும் அதையும் மீறி அவனது மனம் அவளை வஞ்சம் தீர்க்க சந்தர்ப்பம் கிடைக்கக் காத்திருந்தது.

## துளி : 2

வாயிலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு வாசலுக்கு விரைந்த ரெங்கநாதன் கண்கள் காரை விட்டிறங்கிய மகன் கௌதமை ஆராய்ச்சியுடன் ஆராய்ந்தது. அவரின் எண்ணத்தை மெய்ப்பிக்கும் வண்ணம் கண்களெல்லாம் சிவந்து, முகம் இறுகிப் போய் வந்த கௌதமை கண்டு அவரின் மனம் எல்லையில்லா துயரம் கொண்டது. வீட்டிற்குள் வரும் வரை எதுவும் பேசாது இருந்தவர் உள்ளே வந்ததும்...

"கண்ணா... என்னப்பா இது... தினமும் இப்படிக் குடிச்சா உன் உடம்பு என்னத்துக்காவது...?" வருத்தத்துடன் வந்தது அவரின் வார்த்தைகள்.

"அவ செஞ்ச துரோகத்தை என்னால மறக்க முடியலப்பா... அதை மறக்க எனக்கு இது தேவைப்படுது... நான் என்ன செய்யட்டும்...?" இயலாமையுடன் கேட்டவனைக் கண்டு என்ன சொல்வது என்று அவருக்குத் தெரியவில்லை.

"சரி... நீ சொல்ற மாதிரியே வச்சுக்குவோம்... இப்போ குடிச்சதால அவ துரோகத்தை அதாவது நீ துரோகமாய் நினைப்பதை மறக்க முடிஞ்சதா... இல்லை அவளைத் தான் உன்னால் மறக்க முடிஞ்சதா...?" கூர்மையுடன் வந்த தந்தையின் வார்த்தையில் அவனின் தலை தானாகக் குனிந்தது.

"அப்பா..." என்ன பேசுவது என்று தெரியாமல் தடுமாறியவன் நிலை... தவறு செய்துவிட்ட சிறுவனின் நிலையைப் போலிருந்தது.

"இல்லை கண்ணா... இந்த விசயத்துக்கு இப்பவே ஒரு முடிவு கட்டிறது உனக்கு நல்லது... அவ உனக்குத் துரோகம் செஞ்சிட்டான்னு நீ சொல்ற... சும்மா அதையே நினைச்சிட்டு நீ தொங்கறதால எந்தப் பலனுமில்லை... அவளை மறந்துட்டு வேற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோ... அதான் உனக்கும் நல்லது... அவளுக்கும் நல்லது... இப்பவே உனக்கு முப்பத்திமூணு வயசாச்சு... யோசிச்சு செயல்படு..."

தமிழ் நாவல்

"அவளை மறக்க என்னால் முடியாதுப்பா..." ஆணித்தரமாய் வந்தது அவனின் வார்த்தைகள்.

"அப்படின்னா..."

"அப்படின்னா என் மனைவியாய் வருவதற்கு அவளைத் தவிர வேறு யாருக்கும் அருகதையில்லை..."

"அப்போ அவளைக் கல்யாணம் பண்ணிக்கோ..." தந்தையின் வார்த்தையில் அவன் அமைதியானான். பின் மெதுவே...

"அது நடக்கிற கதையில்லை..."

"கௌதம்... உன் மனசுல வேறு ஏதும்..." அதைக் கேட்கும் போதே அவரது குரல் நடுங்கியது. தன் மகன் ஒழுக்கத்தில் அந்த ராமனை ஒத்த தூய்மையுடையவன் என்பதில் அவருக்குச் சந்தேகமில்லை. ஆனால் இந்த விசயத்தில் அவன் தன் ஒழுக்கத்தைப் பணயம் வைக்கப் போகிறானோ என்ற கலக்கம் அவருள் எட்டி பார்ப்பதை அவரால் தவிர்க்க முடியவில்லை.

"ச்சீ... ச்சீ... நீங்க என்னை அந்த மாதிரி வளர்க்கலப்பா..." என்றவனின் வார்த்தையில் அவர் மனம் அடைந்த நிம்மதியை வார்த்தையில் வடிக்க முடியாது.

"எனக்குத் துரோகம் செஞ்ச அவளே என்னைத் தேடி வரணும்ப்பா... நான் வேணாம்ன்னு சொன்னவ நீங்க மட்டும் தான் வேணும்ன்னு என்னைச் சரணாகதி அடையணும்... அதுக்காகத் தான் நான் காத்திருக்கேன்... வருவா... வராமல் போக நான் விட்டிருவேனா என்ன... விட மாட்டேன்..." என்றவன் கண்கள் தீயாய் ஜொலித்தது.

"நீ பேசறது சரியில்லை கண்ணா... வேண்டாம்ன்னு விலகினவளை போய் மறுபடியும் சீண்டுவது தப்புப்பா..."

"அவளுக்கு நான் எப்போதுமே வேண்டாதவன் தான்ப்பா..." சொன்னவனின் மனவேதனையை அந்த அன்பு தந்தையால் புரிந்து கொள்ள முடிந்தது. அவனின் காதலின்

ஆழம் அவருக்கும் தெரியுமே. ஆனால் அதை அவள் புரிந்து கொள்ளாதது அவனது தூரதிர்ஷ்டமே...!!!

"அதுக்காக..."

"எனக்கு அவள் எப்போதுமே வேணும்ப்பா... என்னை விட்டு போனவள் என்னைத் தேடி வரணும்... அதுவரை நான் ஓயமாட்டேன்..." என்றவனின் வார்த்தையில் இருந்த உறுதி அவரது மனதை பயம் கொள்ளச் செய்தது.

"மது எனக்கு மகள் போல... அதை ஒரு நாளும் நீ மறக்க வேணாம்... அவளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா உதவுவதற்கு முதல் ஆளா நான் தான் முன்னால் நிற்பேன்... அப்போ என் மேல் கோபபட்டு எந்தப் பிரயோஜனமில்லை..." கண்டிப்புடன் வந்தது அவரது வார்த்தைகள்.

"அப்பா... ஜோக்கடிக்காதீங்க... அவ உங்களுக்கு மகளில்லை... உங்கள் மருமகள்... அந்த அழகான ராட்சசியை என்னால் என் சகோதரியா நினைச்சு கூடப் பார்க்க முடியாது..." சிரியாமல் சிரிப்பு மூட்டியவனைக் கண்டு அவருக்குச் சிரிப்பு வந்தது.

"அது நீ நடந்து கொள்ளும் விதத்தில் இருக்கிறது படவா..." என்றவரின் மனம் லேசானதோ என்னமோ, "குட் நைட் கண்ணா... நாளைக்கு விடியற்காலையில் சூட்டிங் இருக்குல்ல... போய்ப் படு..." என்றவர் தன்னறைக்குச் செல்ல... அவனோ வரவேற்பறை சுவற்றில் மாற்றியிருந்த தன் தாயின் புகைப்படத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டமர்ந்திருந்தான்.

அன்னை இறந்ததில் இருந்து ஆரம்பமான இந்தக் குடிப்பழக்கம் இன்றுவரை தொடர்கதையாகத் தொடர்கிறது. இருபத்தெட்டு வயதுவரை நல்லவனாய் மிக மிக நல்லவனாய் தான் அவன் இருந்தான். அவனது உறவினர் வட்டத்திலும் சரி... நட்பு வட்டத்திலும் சரி... அவனைப் போல் நல்ல பிள்ளை யாருமில்லை. எல்லோருக்கும் உதாரணமாய் அவன் இருந்ததில் அவனது

தமிழ் நாவல்

பெற்றோருக்கு தான் எவ்வளவு பெருமை... அதிலும் குறிப்பாக அவனது தாய்க்கு...

'என் பிள்ளை போல் நல்லவன்... பொறுப்பானவன் உண்டா...' என்று எல்லோரிடமும் புகழ்ந்து பேசாமல் அவரால் இருக்க முடியாது. அதை நினைத்து பார்த்தவன் முகத்தில் சின்னப் புன்னகை கீற்று உதயமானது.

ரெங்கநாதன் அந்தக் காலத்தில் பிரபல நகைச்சுவை நடிகர். அவர் எந்தளவுக்குப் புகழின் உச்சியில் இருந்தாரோ... அதே போல் ஒரே படத்தில் அப்படியே கீழிறங்கி போனார். பட வாய்ப்புக்கள் குறைய அது அவரை வறுமையின் பிடிக்குள் தள்ளியது. ஆனால் அந்தச் சமயம் அவருக்குப் பக்கபலமாய் இருந்தது அவரது மனைவி பெரியநாயகியும்... அவரது மகன் கௌதமும் தான். அவர்களின் அன்பில், மகிழ்ச்சியில் அவர் தன் வேதனையை மறந்து எதார்த்த வாழ்க்கையை மனமுவந்து வாழ பழகி கொண்டார். கௌதம் வளர்ந்து இளைஞனான பின் அவன் திரைப்படத் துறையை அறவே வெறுத்தான். அதனால் அவன் கல்லூரி படிப்பு முடிந்ததும் ஐடி கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தான்.

நிம்மதியாய் சந்தோசமாய்ச் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் திடீரென்று அவனது தலையில் குண்டை தூக்கி போட்டாள் மதுஸ்ரீ. அதன்பின் அவன் வாழ்க்கை சூன்யமானது போல் ஸ்தம்பித்துத் தான் போனான். அப்போது ஆரம்பமானது அவனது குடிப்பழக்கம். அது மட்டுமா... அவன் எதை விசமென வெறுத்தானோ அந்தத் திரைப்படத்துறையை நோக்கி அவனைச் செல்ல வைத்துவிட்டாள் அவள். இன்றும் மனதளவில் திரைத்துறையுடன் ஒட்ட முடியாமல்... அவளை வெல்ல வேண்டும்... அவள் தனக்குக் கொடுத்த வலியை அவளுக்குத் தான் வலிக்க வலிக்கக் கொடுக்க வேண்டும்... அதற்காக மட்டுமே மனதுக்கு ஒவ்வாமல் திரைத்துறையைச் சகித்துக் கொண்டு அதில் இருக்கிறான்.

இதை அவன் தன் தந்தையிடம் கூடக் கூற முடியாது. இது அவனுக்கும் அவளுக்குமான போராட்டம். அவளை வஞ்சம் வைத்து வீழ்த்த வேண்டி தான் இந்தப் போராட்டம். அவளை வீழ்த்துவதன் மூலம் அவன் அவளை வெற்றிக் கொண்டு அவளை வெல்ல வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அவன் மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டான். திரைத்துறைக்கு அவன் வந்து இரண்டு ஆண்டுகள் தானாகிறது. ஆனால் பல முன்னணி நட்சத்திரங்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு அவன் வேகமாய் முன்னேறிக் கொண்டிருக்கிறான்.

பந்தயத்தில் ஓடும் குதிரையில் இப்போது அவன் வெற்றி குதிரை. அதனால் தயாரிப்பாளர்கள் கண நேரம் கூட யோசிக்காமல் தயங்காமல் அவன் மேலுள்ள நம்பிக்கையில் கண்ணை மூடி கொண்டு அவன் படத்தில் பணம் போட தயாராக உள்ளனர். அதுவே அவனுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியல்லவா...!!! அந்த வெற்றியை கொண்டு தான் அவன் அவளை வெல்ல வேண்டும். வெற்றி கொள்வானா... வெற்றி கொல்வானா... காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

கடிகார மணி ஓசையில் நினைவு கலைந்தவன் எழுந்து தன் அறையை நோக்கி சென்றான். அங்கே ஒரு பக்க சுவர் முழுவதும் மறைத்துக் கொண்டு நிரம்பியிருந்த மதுஸ்ரீயின் பிம்பத்தைக் கண்டவன் முகத்தைச் சுளித்தான். வேகமாய் அதன் அருகே வந்தவன்,

"என்னடி பல்லை காண்பிக்கிற...?" அவள் கன்னத்தை ஓங்கி தட்டியவன் கைவிரல் அப்போது அவள் இடையை ஸ்பரிசித்த மென்மையை உணர்ந்தது. தீச்சுட்டார் போன்று தன் கையை அவள் பிம்பத்தில் இருந்து எடுத்தான்.

தன் கையைப் பார்த்துக் கொண்டே படுக்கையில் விழுந்தவன் மனம் அவளின் உடலின் மென்மை எவ்வாறு இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தது. நிச்சயம் இடையை விட மென்மையாகத் தான் இருக்கும் என்று நினைத்தவன் தன் யோசனை செல்லும் திசையறிந்து தன்

தலையைக் குலுக்கி தன்னைச் சமன்படுத்திக் கொண்டான். தலையைத் திருப்பி அவளின் ஆளுயர புகைப்படத்தைப் பார்த்தவன்,

"உன்னோட துரோகத்தை மறக்காமல் இருக்கத் தான் உன் ஃபோட்டாவை இங்கே வச்சிருக்கேன்... உன்னைக் கொஞ்சுறதுக்கு இல்லை..." உரக்க சொன்னவன்... அவள் பிம்பத்திடம் சொன்னானா... இல்லை தனக்குத் தானே அவ்வாறு சொல்லி கொண்டானா... அது அவனுக்கே விளங்கவில்லை...

பின்பு அவளைப் பார்க்க பிடிக்காதவன் போல் திரும்பி படுத்து கொண்டவனுக்கு வெகுநேரம் சென்றும் உறக்கம் வரவில்லை. 'ம்ப்ச்...' என்று சலித்தப்படி திரும்பிப் படுத்தவன் சுவற்றிலிருந்த அவளின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதில் அவன் மனதின் அலைப்புறுதல் படிப்படியாய் குறைந்து அமைதியடைந்தது... நித்ராதேவி அவனது விழிகளை விருப்பத்துடன் தழுவி கொண்டாள்.

அவனது சந்தோசம், நிம்மதி, ஆறுதல் எல்லாம் அவள் தான் என்பதை அவன் ஆழ்மனம் உணர்ந்தாலும் அதை ஒத்துக் கொள்ள அவனுக்கு விருப்பமில்லை. துரோகம் என்ற கண்ணாடி அணிந்து கொண்டு அவளைக் காண்பவனுக்கு எப்படி அவளின் நல்ல மனம் புரியும். அப்படி அவளைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் அவனின் காதல் மனம் வெளிவர வேண்டும். அதற்கு அவனின் பழிவாங்கும் குணம் அவனை விட்டு விலக வேண்டும். அது விலக வேண்டுமாயின் அதற்கு அவள் கொடுக்க வேண்டிய விலையோ அதிகமாய் இருக்க வேண்டும். அது அவள் காதல்... அவள் உயிர்... இல்லை அவளது கற்பு... எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அவனின் காதல் பெற அவள் இதையெல்லாம் விட்டு கொடுப்பாளா இல்லை அவன் காதல் வேண்டாம் என்று அவனைப் புறக்கணிக்கப் போகிறாளா...? எதுவென்று காலம் தான் தீர்மானிக்க வேண்டும்.

**********************

'உலகத்து மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் கொடு இறைவா... நோய் நொடியில்லாமல் ஆயுளோடு ஆரோக்கியத்தோடு வாழ வகைச் செய் இறைவா...' எல்லாம் வல்ல இறைவனைத் துதித்தப்படி எழுந்த மதுஸ்ரீ முதலில் கண் விழித்தது அவளது மனங்கவர்ந்தவன் புகைப்படத்தில் தான்...

"குட்மார்னிங் மா... சாரி... கௌதம்..." மாமா என்று அவனை விளிக்க நினைத்தவள் அந்த வார்த்தை அவனுக்குக் கோபத்தை அளிக்கும் என்பதை நினைத்தவளாய் தன் பிழையை உணர்ந்து தன் நாக்கை கடித்துக் கொண்டாள்.

தன்னை விடப் பத்து வயது அதிகமுள்ள கௌதமை அவள் சிறுவயது முதல் 'மாமா' என்றழைத்தே பழக்கமாகிவிட்டது. முதலில் அவனும் பெரியதாய் ஆட்சேபித்தது இல்லை. தன்னைப் பெரிய மனிதனாய் உணர செய்யும் சிறியவள் வார்த்தையில் அவனுக்கு நிறையக் கர்வமும், பெருமையும் உண்டு. அதெல்லாம் அவள் பெரிய பெண்ணாய் ஆகும் வரையே... பதினான்கு வயதில் அவள் பெரியவளான பின் ஒருநாள் அவள் எப்போதும் போல் மாமா என்றழைக்க... அதில் அவன் அவளை முறைத்துப் பார்த்தான்.

"இனிமேல் என்னை மாமான்னு கூப்பிடாதே அம்மு... கௌதம்ன்னு கூப்பிடு..." என்று அவன் கண்டிப்புடன் சொன்ன போது அவள் புரியாமல்,

"கௌதமா... ஐய்யோ வேணாம்... நீங்க ரொம்பப் பெரியவங்க... உங்களைப் போய் நான் பேர் சொல்லி கூப்பிடுவதா... ம்ஹூம்..." காது தொங்கட்டான் வேகமாய் அசைய தன் தலையை இடமும் வலமுமாய் ஆட்டியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"இப்போது கூப்பிட்டாயே அப்படியே கூப்பிடு..." என்றவனைப் பார்த்து...

"ஆங்... நான் எப்போது..." என்று அவள் திருதிருவென விழிக்க...

"அதான் இப்போது..." என்று அவளைக் கேலி செய்தவன், பின் தன் தொண்டையைச் செருமி கொண்டு, "நீ மாமான்னு கூப்பிடும் போது நமக்கிடையே உள்ள பத்து வயசு இடைவெளி தான் எனக்கு நியாபகம் வருது... வயது கூட நமக்கிடையில் இடைவெளி கொடுப்பதை நான் விரும்பல..." மென்மையான குரலில் கூறிய கௌதமின் குரலை இன்றும் அவள் மறக்கவில்லை.

அன்று அவன் சொன்னதன் அர்த்தம் புரியாவிட்டாலும் அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதால் அப்படி அழைப்பதை விட்டுவிட்டாள். அவளுக்குப் பதினாறு வயதான போது அவன் தன் காதலை சொன்ன போது அதற்கான அர்த்தம் அவளுக்குப் புரிந்தது. அவனின் மனமும் புரிந்தது. அன்றிலிருந்து அவர்கள் இருவரும் அன்றில் பறவைகளாய் காதல் வானில் சிறகடித்துப் பறந்ததை நினைத்து பார்த்தவளுக்கு மகிழ்ச்சியாகவும்... அதே சமயம் துக்கமாகவுமிருந்தது. பின் தன் மனதை சமன்ப்படுத்திக் கொண்டவள் படப்பிடிப்புக்கு செல்ல ஆயத்தமானாள். தாயாராகிக் கீழே வரும் போதே அவளது தங்கை உஷாவின் குரல் உரத்து ஒலித்தது... கூடவே அவளின் கணவன் தன்ராஜ் குரலும் கேட்க அவள் முகமும் உடலும் இறுகி போனது.

வரவேற்பறையில் அமர்ந்து அக்கா, தங்கை எல்லோரும் பேசி கொண்டிருப்பதைக் கண்டும் காணாதது போல் உணவு மேஜையை நோக்கி சென்றாள். தன் வரவை உணர்ந்து இருவரும் தன்னைப் பின் தொடர்ந்ததை அறியாதவள் போல் தட்டை எடுத்து வைத்து ஒரு சப்பாத்தியை எடுத்து வைத்து கொண்டமர்ந்தாள்.

"மது... நம்ம உஷா முழுகாம இருக்கா..." இதயா சொல்லி கொண்டே இனிப்பை அவள் தட்டில் வைக்க... வேண்டாம் என்பது போல் தடுத்தவள் தங்கையை நிமிர்ந்து பார்த்தாள். அவளின் பார்வையின் தீட்சண்யம் தாங்காமல் உஷா தலையைக் குனிய...

"இப்போ இது தேவையா...?" மதுவின் கேள்விக்கு உஷா என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் முழித்துக் கொண்டு நின்றிருக்க... மதுவின் வார்த்தையில் இதயாவிற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"வார்த்தையை யோசிச்சு பேசு மது... குழந்தை உண்டாகி இருப்பவள் கிட்ட பேசுற மாதிரியா நீ பேசுற..." முகத்தை நொடித்துக் கொண்டாள் இதயா.

"இவ வயசு என்ன... என்னை விட ரெண்டு வயசு சின்னவ... இருபத்து ஒண்ணு வயசு தானாகுது... அதுக்குள்ள... மூணு குழந்தைன்னா... கேட்கவே கஷ்டமாயிருக்கு... அதுல ஒண்ணையாவது பொறுப்பா வளர்க்க தெரியுதா... எல்லாம் ஆயாம்மா கிட்ட தான் வளருது... இந்த லட்சணத்துல இன்னொன்னு தேவையா..." காட்டமாய் அக்காவிடம் ஆரம்பித்தவள் தங்கையிடம் முடித்தாள்.

"என் குழந்தை நான் எப்படியும் வளர்ப்பேன்... உனக்கென்ன வந்தது...?" தைரியமாய் எதிர் குரல் கொடுத்தாள் உஷா.

"அவளுக்கு இது போல வாழ்க்கை அமையலைன்னு பொறாமை உஷா... புருசன் கையால தொங்க தொங்க தாலி வாங்கவும், குழந்தைகள் பெத்துக்கவும் ஒரு யோகம் வேணும்ல... இப்படி மினுக்கிட்டு அலைஞ்சா எவன் இவளை கட்டுவான்... இவ இப்படி இருக்காங்கிறதுக்காக நாமளும் அவளை மாதிரி எல்லாத்தையும் இழந்துட்டு இருக்க முடியுமா..." உஷாவிடம் பேசுவது போல் ஜாடை பேசிய இதயாவின் வார்த்தையில் மதுவிற்குக் கண்கள் கலங்கியது. முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், இதயாவை பார்த்து,

"நீங்க சொல்ற மாதிரி தான் நான் இருக்கேன்... அதுக்கென்ன இப்போ...? ஆனா எதுக்காக நான் இப்படி மாறினேன்னு கொஞ்சம் யோசிச்சு பார்த்தீங்கன்னா அது என்னன்னு உங்களுக்கே புரியும்... அப்போ தகுதிக்கு மீறி ஆசைப்பட்டியே அப்போ எங்கே போச்சு இந்தப் பேச்சு..." என்றவள் உஷா பக்கம் திரும்பி, "பதினைஞ்சு வயசுல வெட்கமே இல்லாம வயத்தைத் தள்ளிட்டு வந்து நின்னியே

தமிழ் நாவல்

அப்போ எங்கே போச்சு உன்னோட இந்தப் பேச்சு... இன்னைக்கு நீ சொல்றீயே என் பிள்ளையை வளர்க்கிறது என் இஷ்டம்ன்னு... அந்த ஆயாவுக்கு நான் தான் சம்பளம் கொடுக்கிறேங்கிறதை நீ மறந்திறாதே... அது மட்டுமல்ல... இன்னைக்கு நீங்க நிம்மதியா சோறு சாப்பிடறீங்கன்னா அன்னைக்கு நான் எடுத்த முடிவால தான்... இதோ இப்போ கூட வாயை கட்டி, வயத்தைக் கட்டி சம்பாதிக்கிறேனே இதெல்லாம் எதுக்காக... நீங்க எல்லாம் நல்லா இருக்கணும்ங்கிறதுக்காகத் தான்..." ஆவேசமாய்க் கத்தியவள் பின் நிதானமடைந்து,

"இப்போ கூட என்னால் எல்லாத்தையும் உதறி தள்ளிட்டு போக முடியும்... என்னை எனக்காக மட்டும் நேசிக்கிறவர் இருக்கார்... எனக்காக அம்மாவை கூட அவர் பார்த்துப்பாரு... நீங்க சொல்ற மாதிரி அவர் கையால தொங்க தொங்க தாலியை வாங்கிட்டு குழந்தைகளைப் பெத்துட்டு வாழ எனக்கு ஒரு நிமிசமாகாது..." என்றவளை இடைமறித்த இதயா...

"போக வேண்டியது தானே... யார் தடுத்தா...?" எக்காள குரலில் கூற... அவளை வெறுப்புடன் பார்த்தவள்,

"இந்த வார்த்தை ஐஞ்சு வருசத்துக்கு முன்னாடி எங்கே போச்சு...?" அதே எக்காளத்துடன் திருப்பிக் கேட்டவள், "எப்படிப் போகச் சொல்ற... அதுக்கான தகுதி எனக்கு இருக்கா? அவரோட காதலை கொன்னுட்டு... அவரோட நிம்மதியை கொன்னுட்டு எப்படி அவர் கிட்ட போகச் சொல்ற... அன்னைக்கு நான் கொன்னது அவரோட காதல், நிம்மதி மட்டுமா...?" என்றவளின் முகத்தில் அன்றைய நாளின் நினைவில் வேதனை படர்ந்தது. அவள் பேசியதை கேட்டு அவளின் சகோதரிகளின் முகம் பேயறைந்தது போலானது.

## துளி : 3

மதுஸ்ரீ தன் வேதனையை விழுங்கி கொண்டு சகோதரிகள் முகத்தைப் பார்த்தாள். இருவரின் முகம் போன போக்கு கண்டு மனதில் ஒருவித திருப்தி எழ அவள் மனம் மகிழ்ந்தது. அன்று கௌதம் அடைந்த வேதனையை அறிந்த போதும் அவனருகில் இருந்து அவனைத் தன் தோளில் சாய்த்து ஆறுதல் சொல்ல முடியாத தன் நிலையை எண்ணி தன்னைத் தானே எத்தனை நாள் சபித்திருப்பாள்... வெறுத்திருப்பாள்... அதை எண்ணி எண்ணி எத்தனை இரவுகள் கண்ணீரில் கரைந்திருப்பாள். அந்த வேதனை எல்லாம் இருவரின் இருண்ட முகத்தைக் கண்டதும் சற்று ஆறியது. ஒன்றும் பேசாது அங்கிருந்து அகன்றவள் வரவேற்பறைக்கு வந்தாள். அங்கு நின்று கொண்டிருந்த ரஞ்சன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"மது..." அவன் அழைக்கவும் என்னவென்பது போல் அவள் பார்க்க...

"நான் வேணும்ன்னா கௌதம் கிட்ட பேசவா...?" என்றவனைப் பார்த்து மறுப்பாய் தலையசைத்தவள்,

"எங்க ரெண்டு பேருக்குமிடையில் யாரும் வருவதை அவர் விரும்ப மாட்டார் மாமா..." என்று நிறுத்தியவள், "அவர் என்னை வெறுக்கல மாமா... அதே மாதிரி நானா அவர் கிட்ட போனா என்னை ஏத்துக்கத் தான் செய்வார்... நிச்சயம் மறுக்க மாட்டார்..." என்றவள் சட்டென்று அமைதியானாள்.

"அப்போ என்னம்மா... அவனைத் தேடி நீயே போயேன்... இவங்களுக்காக நீ உழைச்சது போதும்... உனக்கான வாழ்க்கையை நீயே அமைச்சுக்கப் பாரு... இதயாவை பத்தி கவலைப்படாதே... எனக்கு வேலையிருக்கு... நான் அவளைப் பார்த்து கொள்வேன்... அது போல ராஜூம் ஏதாவது வேலைக்குப் போய் உஷாவை பார்த்து கொள்ளட்டும்... இப்படியே இருந்தா அவங்களுக்கு எப்படிப் பொறுப்பு வரும்...?" ரஞ்சன் சொல்வதும் உண்மை தான். அவன் நல்ல சம்பளத்தில், நல்ல வேலையில் இருக்கிறான்.

மது தங்களுக்காகக் கஷ்டப்படுவதைக் கண்டு அவள் உழைப்பில் வாழாமல் தன் உழைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

"மாமா..." ரஞ்சனை ஏறிட்டு பார்த்த மதுவின் விழிகளில் தான் எத்தனை உணர்ச்சிக் குவியல். அவள் விழி பேசிய பாஷைக்குப் பதில் தெரியாமல் அவன் திகைத்து தான் போனான். தவிப்பு, ஏக்கம், குற்றவுணர்வு, மருகல், இதையெல்லாம் விட 'எல்லாம் தெரிந்த நீயே இப்படிக் கேட்கலாமா...' என்ற குற்றச்சாட்டை அவளது விழிகளில் கண்டவன் பதில் பேச முடியாமல் வாயடைத்துப் போனான்.

அதற்கு மேல் அங்கு ஒரு கணம் கூட நிற்காமல் மது வெளியேறி விட்டாள். வெளிவராந்தாவில் காத்திருந்த அவளின் செயலாளர் மேகாவை கண்டதும் செயற்கையாய் முகத்தில் புன்னகையை ஒட்ட வைத்து கொண்டாள். இவளை கண்டதும் மரியாதையாக எழுந்து நின்ற மேகா,

"குட்மார்னிங் மேம்..." என்க...

"மார்னிங் மேகா... கிளம்பலாமா...?"

"எஸ் மேம்..." பணிவுடன் சொன்னவளை பார்த்த மது முன்னே நடக்க... மேகா அவளைப் பின் தொடர்ந்தாள்.

அப்போது மூக்கில் வியர்த்தார் போல் எங்கிருந்து தான் வந்தானோ தன்ராஜ்... "மது..." குழைந்தபடி வந்தது அவனது குரல்.

'என்னமோ இவன் தான் பேர் வைச்ச மாதிரி மதுன்னு கூப்பிடறதை பாரு... ஆளும் மூஞ்சியும்...' மனதுக்குள் நினைத்தவளாய் முகத்தைச் சுளித்தாள் மேகா.

மதுவோ எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் அவனைக் கூர்ந்து பார்த்தாள். "என்ன...?" அதிகாரமாய்க் கேட்டாள் அவள்.

"உன் கூடத் தனியா பேசணும்..." மேகாவை முறைத்தபடி அவன் கூறினான். அவனுக்குக் குதிரை மூஞ்சிக்காரி

மேகாவை கண்டாலே பிடிக்காது. எப்போதும் மதுவின் பாதுகாவல் போல் அவள் சுற்றி கொண்டிருப்பதில் அவனுக்குச் சற்று எரிச்சலாக வரும்.

வெளியில் மேகா தொல்லை என்றால்... வீட்டில் அவனது மனைவி தொல்லை. கண் கொத்தி பாம்பு போல் நொடி நேரம் கூட விடாமல் அவனைக் கண்காணிப்பாள் அவள். அதையும் மீறி அவன் மதுவை நெருங்கினால்... எங்கிருந்து தான் வருவானோ அந்த ரஞ்சன்... அவன் முழு நேரமும் அவளைப் பாதுகாப்பது போல் அவளருகில் இருப்பான். இதைத் தாண்டி அவன் மதுவை நெருங்குவது என்பது சாத்தியப்படாது.

"நீ போ மேகா..." மது சொல்லவும் மேகா தயங்கி நின்றாள்.

"மேம்..."

"பேசிட்டு வர்றேன் நீ போ..." மது அழுத்தமாய்ச் சொல்லவும் வேறு வழியின்றி மேகா அங்கிருந்து நகன்றாள்.

"சொல்லுங்க..." தன்ராஜை பார்த்து கேட்டாள்.

"மதும்மா... நேத்து நெட்ல உன்னோட ஹாட் சீன் ஒண்ணு பார்த்தேன்... செம சூப்பராயிருந்தது..." அவனின் விகாரமான பேச்சில் அவள் திடுக்கிட்டு தான் போனாள். இத்தனை நாட்களில் அவன் இது போல் ஒரு நாளும் பேசியது இல்லை. யார் கொடுத்தார்கள் இவனுக்கு இவ்வளவு தைரியத்தை...??? ஏற்கெனவே பழைய நினைவு தாக்கத்தில் பலகீனப்பட்டுப் போயிருந்த அவளது மனம்... அவனின் பேச்சில் இன்னமும் பலவீனமடைந்தது. அவளையும் அறியாமல் அவள் கண்கள் கலங்கியது. கண்கள் கலங்க அவனைப் பார்த்தவளை கண்டு அவனுக்கு ஏகத்துக்கும் குஷியாகி போனது. அவளது பலகீனம் அவனது பலமல்லவா...!!!

"நான் வேற லூசுத்தனமா பேசிட்டு... உனக்குத் தான் இதிலெல்லாம் அனுபவமிருக்குமே... யார் யார் கூட எல்லாமோ படுக்கிற நீ... உன் தங்கச்சி புருசனான என்

கூடப் படுக்கிறதுக்கு என்ன...? வேணும்ன்னா உன் கழுத்துல தாலி கட்டி நான் உனக்கு வாழ்க்கை பிச்சை போடறேன்... உன் தங்கையோட நீயும் இருந்திட்டு போ... வர வர அந்த உஷா கழுதை என் பேச்சை கேட்குறதே இல்லை..." ஆசையுடன் கூறியவன் கண்கள் வெறியில் பளபளத்தது.

"ச்சீ நீயெல்லாம் மனுசனா... என் வீட்டில் இருந்திட்டு... என் உழைப்பை சாப்பிட்டுக்கிட்டு... இப்படிப் பேச வெட்கமாய் இல்லை..." அடிக்குரலில் சீறியவளை கண்டு ஆணவமாய்ச் சிரித்தவன்,

"வெட்கமா தான் இருக்கு... பொண்டாட்டியோட அக்கா உழைப்பில் வாழ வெட்கமா தான் இருக்கு... அதான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு என் பொண்டாட்டியான உன் பணத்தில் வாழ ஆசைப்படறேன்... இந்த மாமன் மனசை கொஞ்சமும் புரிஞ்சிக்க மாட்டேங்கிறியே மதும்மா..." உருகினான் அவன். அவளுக்கோ பற்றிக் கொண்டு வந்தது.

"ச்சீ..." என்றபடி மேலே நடக்கப் போனவளை தன் வலது கையை நீட்டி தடுத்தான் தன்ராஜ்.

"என்ன சத்தம் ராஜ்...?" குரல் கொடுத்துக் கொண்டு வந்த ரஞ்சனை கண்டதும் தன்ராஜ்,

"ஒண்ணுமில்லைண்ணே... மதுக்கிட்ட சும்மா பேசிட்டிருந்தேன்..." ஏகத்துக்கும் பணிவு காட்டினான் அவன். ஏனெனில் ரஞ்சனின் முரட்டுக் குணம் அவன் அறிந்ததே...

"உன்னை மார்க்கெட்டுக்குப் போகச் சொன்னாங்களாமே நம்ம அன்னம்மா... நீ இங்கே என்ன பண்ணிட்டிருக்க...? சாப்பிடற சாப்பாட்டுக்கு கொஞ்சமாவது உழைக்கணும் ராஜ்..." என்றபடி ரஞ்சன் அவனை விரட்ட... விட்டால் போதுமென்று நாலு கால் பாய்ச்சலில் ஓடி போனான் அந்த மனித மிருகம்.

இதையெல்லாம் ஒட்டு கேட்டுக் கொண்டிருந்த மேகா தன் அலைப்பேசியில் எண்ணை அழுத்திவிட்டு மறுபுறம் எடுப்பதற்காகக் காத்திருந்தாள். மறுமுனை எடுத்ததும் அலைப்பேசி வழியே முத்தமழை பொழிய...

"லூசு... லூசு... காலங்கார்த்தால முத்தம் கொடுக்கிறதை பாரு..." அவள் கோபப்பட...

"யாரு லூசு... முத்தம் கொடுக்கிறதுக்குக் காலம் நேரம் பார்க்க சொல்ற நீதான்டி லூசு..." அவன் முறுக்கி கொள்ள...

"புஜ்ஜூ குட்டி கோபப்படாதேடா... இங்கொருத்தன் காலையிலேயே என்னைச் செம டென்சனாக்கிட்டான்... அதான் அப்படிப் பேசிட்டேன்..." மெய்யான வருத்தத்துடன் கூறியவளின் குரலில் இருந்த கவலை அவனையும் கவலை கொள்ளச் செய்தது. அடுத்த நொடி அவன் கண்ணம்மாவை வருத்தம் கொள்ளச் செய்தவனைத் துவம்சம் செய்ய அவன் மனம் விழைந்தது.

"யாருடி அவன்... உன் கிட்ட வம்பிழுத்தது... அவன் கிட்ட சொல்லி வை... என் கண்ணம்மா கிட்ட வம்பிழுத்தா உயிரோடு போக மாட்டான்னு..." அவனின் கோபக்குரலில் அவள் மனதில் சாரலடித்தது.

"பிரச்சினை எனக்கில்லை... மேம்க்கு தான்..." என்றவள் தன்ராஜ் மதுவிடம் பேசிய அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொல்ல... மறுபுறம் கேட்டுக் கொண்டிருந்த அவனோ ஆத்திரத்தில் கண்கள் சிவந்தான்.

"நீ ஃபோனை வை... இன்னைக்கு இருக்கு அவனுக்கு..." அந்தப் பக்கம் அவன் பல்லை கடிப்பது அவளுக்குக் கேட்டது.

"சோ ஸ்வீட் டா... இதுக்குத் தான் என் புஜ்ஜூ குட்டி வேணுமன்னு சொல்றது..." அவள் அலைப்பேசியில் தன் இதழை பதிக்க... அதில் அவன் மயங்கி போய் நின்றான்.

"மது... அவன் கிட்ட டிஸ்டன்ஸ் மெயின்டெயின் பண்றது உனக்கு நல்லதும்மா..." ரஞ்சன் அறிவுரை போல் கூற...

"சரி மாமா..." என்ற மது தன் கலங்கிய விழிகளை அவனுக்குக் காட்டாமல் தலையைக் குனிந்து கொண்டு சென்றாள்.

'இந்தப் பெண்ணுக்கு என்று தான் விடிவுகாலம் வருமோ... தானாகவும் அதைத் தேடி கொள்ள மாட்டேங்கிறாளே...' வேதனையுடன் நினைத்த ரஞ்சன் ஒன்றும் செய்ய முடியாதவனாய் பெருமூச்சை வெளியிட்டபடி தன் பணிக்கு கிளம்ப ஆயத்தமானான்.

காரருகில் வந்த மது அங்கே மேகாவை காணாமல் சுற்றும் முற்றும் தேட... அவள் அலைப்பேசியை அணைத்தபடி ஓடி வந்தாள்.

"வேலை நேரத்தில் ஃபோன் பேசாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது...?" எரிச்சலுடன் சொன்னவளை கண்டு மனதுக்குள்,

'ஃபோன் பேசினா நீங்க திட்டுறீங்க... உங்களைப் பத்தி நிமிசத்துக்கு நிமிசம் ரிப்போர்ட் பண்ணலைன்னா அவன் திட்டுறான்... நான் என்ன தான் செய்றது...? இந்த ஸ்பை வேலை பார்க்கிறதுக்குப் பாத்ரூம் கழுவுற வேலைக்குப் போயிடலாம் போலிருக்கிறது...' தான் கையில் பெருக்குமாறும், வாளியுமாய் நிற்பதை கற்பனை செய்து பார்த்தவளுக்கு 'ஐய்யோ' என்று உடல் சிலிர்த்தது.

"சாரி மேம்..." மன்னிப்பு கேட்டவளை ஒரு பார்வை பார்த்த மது...

"சரி காரிலேறு..." என்றபடி காரிலேறி மது அமர... அவளைத் தொடர்ந்து மேகாவும் ஏறிக் கொள்ளக் கார் படப்பிடிப்புத் தளத்தை நோக்கி சென்றது.

***********************************

"என்ன இது ஒரு தக்காளி கூட என் மது கன்னம் மாதிரி சிவப்பாய் இல்லை..." என்று சலித்தபடி தக்காளியை எடுத்து எடுத்து பார்த்துக் கொண்டிருந்த தன்ராஜை சலிப்புடன் பார்த்த கடைக்காரர்,

"சாரு... இஷ்டமிருந்தா வாங்கு... இல்ல நகரு... அடுத்தப் போணி வர்றதை மறைச்சிட்டு நிக்காதே..." என்று சத்தம் போட...

"யேய் நான் யாரு தெரியுமா...?" என்று அவன் சத்தம் போடும் போதே... அவனருகில் வந்த ஆஜாகுபானுவான ஒருத்தன்,

"என்னப்பா தக்காளி சிவப்பா இல்லையா...?" என்று கேட்க... தனக்குச் சாதகமாய்ப் பேச ஒருத்தன் வந்துவிட்டான் என்ற தைரியத்தில் தன்ராஜ்,

"ஆமாங்க... அதைச் சொன்னா இவன் சண்டைக்கு வர்றான்..." கடைக்காரரை சுட்டி காட்ட,

"நான் உனக்குச் சிவப்புத் தக்காளி நிறையத் தர்றேன்... நீ என் கூட வா ராசா..." என்றபடி தன்ராஜ் கழுத்தில் அவன் கை வைக்க...

"டேய் யாருடா நீ...? என் மேலேயே கை வைக்கிறியா...?" குரலும், உடலும் நடுங்கியது தன்ராஜூக்கு.

"உன்னைப் பத்தி நல்லாவே தெரியும் டா... புறம்போக்கு..." என்றவன் தன்ராஜ் பேசுவதற்கு இடம் கொடாமல் அவனைத் தள்ளி கொண்டு தான் வந்திருந்த காரை நோக்கி சென்றான்.

"கௌதம்... கௌதம்..." கணேஷின் குரலுக்குத் தன்னறையில் இருந்து வெளியில் வந்தான் கௌதம். அங்குத் தன்ராஜை கண்டதும் அவன் உள்ளம் கொதித்தது. ஆத்திரத்தை அடக்கி கொண்டு அங்கு வந்து நின்றான்.

கௌதமை கண்டதும் தன்ராஜின் முகம் வாயெல்லாம் பல்லானது... "சகலை நீங்க தான் கூப்பிட்டு அனுப்பிச்சதா... சொல்லியிருந்தா நானே வந்திருப்பேனே..." குழைந்தவனின் முன் வந்து நின்ற கௌதம்... தன்ராஜ் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் அவன் கன்னத்தில் ஓங்கியறைந்தான். அதில் தன்ராஜூக்கு உலகமே சுற்றியது.

"ஏழ்... சக...லை... அடுச்சீங்க..." வாயிலிருந்து அவனுக்கு ரத்தம் வழிந்தது.

"என் மதுவை பேசினால் உன்னைச் சும்மாவா விடுவேன் ராஸ்கல்... என் மதுவை பேசினா கேட்கிறதுக்கு ஆளில்லைன்னு நினைச்சியா... அவளுக்கு நானிருக்கேன்டா... அவள் மேலே தூசி விழுந்தா கூடத் துடிச்சு போற நான்... உன்னை மாதிரி அல்லைக்கையோட பார்வை அவள் மேலே பட்டா நான் சும்மாயிருப்பேன்னு நினைச்சியா... நாயே..." என்று கர்ஜித்த கௌதம் தன்ராஜை அடி புரட்டி எடுத்துவிட்டான். கையெடுத்து கும்பிட்டு மன்னிப்பு கேட்டவனைக் கண்டு கொஞ்சமும் மனம் இரங்கவில்லை கௌதம்.

முகமெல்லாம் வீங்கி போய் அணிந்தருந்த உடை கிழிந்து பார்க்கவே பரிதாபமாயிருந்த தன்ராஜை மேலும் கீழும் பார்த்த கணேஷ், "ம்... தக்காளி நல்லா சிவப்பா தானிருக்கு... நீ என்ன சொல்ற தன்ராஜ்...?" கிண்டல் குரலில் கேட்க...

'அடப்பாவிங்களா... புரட்டி புரட்டி அடிச்சிட்டு கேட்குறதை பாரு...' மனதில் நொந்தவன் நினைவில் 'உனக்கு வந்தா ரத்தம்... அதே இது எனக்கு வந்தா தக்காளி சட்னியாடா...' என்ற அந்த நகைச்சுவை காட்சி தான் நியாபகம் வந்தது.

"ஹி... ஹி..." அசடு வழிந்தவனைப் பார்த்துக் கணேஷ்...

"டேய் இவ்வளவு அடி கொடுத்தும் இவன் அடங்கல பாரேன்... என்னைப் பார்த்துக் கிண்டலா சிரிக்கிறான் கௌதம்..." என்று கௌதமை ஏற்றிவிட...

"அண்ணா... என்னை விட்டுருங்கண்ணா... இதுக்கு மேலே அடிச்சா நான் தாங்க மாட்டேன்..." தன்ராஜ் அலறிக் கொண்டு கௌதம் காலில் விழ...

"இனிமேல் மதுக்கிட்ட வம்பிழுத்தன்னு தெரிஞ்சது... உனக்குச் சங்கு தான்டி..." கோபமாய்ச் சொன்ன கௌதமை பார்த்து,

"அண்ணி இருக்கும் திசைப்பக்கம் தலை வச்சு படுக்க மாட்டேன்..." உறுதிமொழி கூறியவன் தன் உடல் காயத்தைக் கூடப் பொருட் படுத்தாமல் விட்டால் போதுமென்று அங்கிருந்து ஓட... அதைக் கண்டு கணேஷ் வாய்விட்டு சிரிக்க... கௌதம் யோசனையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

"என்ன யோசனை கௌதம்..." கணேஷ் அவன் தோளில் கை வைக்க...

"மேகா கிட்ட சொல்லி இவன் மேலே ஒரு கண்ணை வைக்கச் சொல்லு... இவன் டேன்ஜரான ஆளு..." இறுகி போன முகத்துடன் கௌதம் சொல்ல...

"சொல்லிடறேன் கௌதம்... நீ கவலைப்படாதே..." ஆறுதலாய்ச் சொன்னான் கணேஷ். அதில் சிறிது நிம்மதியடைந்தவனாய் வெளியில் கிளம்பினான் கௌதம்.

************************************

இரவு ஒரு மணிக்குப் படுக்கையில் களைப்புடன் விழுந்த மதுவுக்கு உடலெல்லாம் அசதியாய் இருந்தது. காலையில் இருந்து விடாமல் தொடர்ந்த படப்பிடிப்பால் அவள் மிகவும் சோர்ந்து போயிருந்தாள். தூக்கம் கண்களை அழுத்தினாலும் காலையில் இருந்து அலைப்புற்ற மனம் அவளைத் தூங்க விடவில்லை. அந்நேரம் அவளின் அலைப்பேசி அழைக்க... 'யார் இந்த நேரத்தில்...' யோசனையுடன் எடுத்தவள் இனிமையாய் அதிர்ந்தாள். கடந்த ஐந்து வருடங்களாக எவனை இழந்து தவிக்கிறாளோ... எவனின் காதலுக்கு ஏங்கி தவிக்கிறாளோ அவன் தான் அழைக்கிறான். உடலின் அணுக்கள் அனைத்தும் புத்துணர்வு பெற்றது போல் பரபரக்க அலைப்பேசியை உயிர்பித்துக் காதில் வைத்தவள்,

"கௌதம்..." என்றாள் காதலாக... அதைக் கேட்டுக் கௌதம் பிரமித்துப் போனான். ஒற்றை வார்த்தையில் உள்ளத்து காதல் அத்தனையையும் காட்ட முடியுமா... அது சாத்தியமா... அவன் மனதில் கேள்வி எழ... விடையாக அவனவளின்

பிம்பம் மனதில் பிரமாண்டமாக எழுந்து நின்றது. கண்களை மூடி அவளின் காதலில் அவன் கரைந்தான்.

"கௌதம்... கௌதம்..." அவள் குரல் பதட்டமாய் ஒலிக்க... அதில் தன்னுணர்வு அடைந்தவன்...

"அவன் என்ன பேசினாலும் மரம் போல் கேட்டுட்டு இருப்பியா... அவனைக் கன்னம் கன்னமாய் அறைய வேணாமா...?" சீறலுடன் வந்த அவனின் வார்த்தையில் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"யாரை சொல்றீங்க...?" மெதுவாகக் கேட்டாள்.

"ம் யாரை சொல்வேன்... அந்த உதவாக்கரை... உன் தங்கச்சி புருசனை தான் சொல்றேன்..." ஆத்திரத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்.

மதுவின் மனக்கண்ணில் சற்று முன் பார்த்த தன்ராஜின் முகம் வந்தது. உடலில் ஆங்காங்கே கட்டு போட்டுப் படுத்திருந்த அவனது தோற்றம் கண்டு அவள் என்னவென்று விசாரிக்க... மாடு முட்டி விட்டது என்று அதற்குப் பதில் வந்தது. இப்போது அதை நினைத்து பார்த்தவள் முகம் புன்னகையில் மலர்ந்தது.

"தேங்க்ஸ் கௌதம்... தேங்க்ஸ் கௌதம்..." மகிழ்ச்சியோடு சொன்னவள் அலைப்பேசியின் மூலம் தன் அன்பை அவனுக்கு அனுப்பி வைத்தாள். அந்த அன்பு மழையில் அவனும் சுகமாய் நனைய... அதைக் கலைக்கும் விதமாக அவளின் குரல் குதூகலத்துடன் ஒலித்தது.

"எனக்கு யாருமே இல்லைன்னு நான் கவலைப்பட்டுக்கிட்டு இருந்தேன்... ஆனா எனக்காகக் கவலைப்பட என் கௌதம் இருக்காருன்னு நினைக்கிறப்போ சந்தோசமாயிருக்கு... கௌதம் என்னை மன்னிச்சீட்டீங்களா...?" இனிய ஸ்வரமாய்க் கழிந்த பொழுதில் அபஸ்வரமாய் ஒலித்த அவளது குரலில் அவன் தன்னை மீட்டுக் கொண்டான்.

"மன்னிச்சிட்டேன்னு சொன்னா... இப்பவே என் கூடக் குடும்பம் நடத்த நீ வர்றியா...? சொல்லுடி..." அவனது

கேள்விக்கு அவளது மௌனமே பதிலாக வர... அவன் ஆத்திரத்துடன்,

"எனக்குத் தெரியும்டி நீ பதில் பேச மாட்டன்னு... நானும் நீ சம்மதம் சொல்லப் போற அந்த நாளுக்குத் தான் காத்துக்கிட்டு இருக்கேன்... ஆனா நீ சம்மதம் மட்டும் சொல்ல மாட்ட... உனக்காகக் கவலைப்பட, சந்தோசப்பட இந்தக் கௌதம் இருக்கான்டி... ஆனா எனக்கு யாரு இருக்காடி... எல்லாம் இருந்தும் அநாதை தான்டி நான்... எனக்கு இப்பவே நீ வேணும்... உன் காதல் வேணும்... தர முடியுமாடி உன்னால..." அவனின் அத்தனை வார்த்தைக்கும் அவளது பதில் மௌனமே... ஆனால் அவனுக்குத் தெரியும் அவளின் மௌனத்துக்குப் பின்னால் இருக்கும் அவளின் கண்ணீர்...

"அழாதேடா அம்மு..." வெகுநாட்கள் கழித்து அவன் அழைத்த அம்மு என்றழைப்பில் அவள் அப்படியே உடைந்தாள்.

"ப்ளீஸ் அழாதே..." என்றவன் குரலும் கரகரத்தது.

"வந்துடுறியா அம்மு... உன்னைக் கண்ணுக்குள் வச்சு பார்த்துக்கிறேன்..." அவனது குரல் கெஞ்சியது. திரும்பவும் அவள் மௌனத்தைப் பதிலாகத் தர... அவனின் பொறுமை காற்றில் பறந்தது.

"அப்போ நீ வர மாட்ட..." கோபமாய்க் கர்ஜித்தவன், "உன்னை எப்படி வரவழைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்டி... அதுக்கு அப்புறம் வச்சுக்கிறேன்டி என் கச்சேரியை..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் கோபத்துடன் அலைப்பேசியைத் தூக்கியெறிய அது சுவற்றில் மோதி உடைந்து கீழே விழுந்தது. அந்தச் சத்தம் மறுமுனையில் இருந்த அவளின் காதில் விழுந்தது. பெரும் துக்கத்துடன் அலைப்பேசியைப் பார்த்தவள் கண்களில் கண்ணீர் மட்டும் வற்றவே இல்லை...!!!

## துளி : 4

கௌதம் பரபரப்பாகத் தனதறையில் நடை பயின்று கொண்டிருந்தான். நொடிக்கு ஒரு தரம் அவனின் கண்கள் கடிகாரத்தின் மீது பதிந்து மீண்டது. 'ச்சே... இன்னும் டைம்மாகலையே...' சலிப்புடன் நினைத்தவன் கண்கள் கடிகாரத்தின் முட்கள் வேகமாய் நகராதா என்று ஏக்கத்துடன் கடிகாரத்தின் மீது நிலைத்தது. சரியாய் பன்னிரெண்டாக ஐந்து நிமிடம் இருக்கும் போது தன் அலைப்பேசியை எடுத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தான். இன்று மதுவிற்குப் பிறந்தநாள்... அதனால் தான் தன் படப்பிடிப்பை கூட நேரத்தோடு முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டான்.

ஏனோ முதன்முறையாய் அவளிடம் பேசுவது போல் ஒரு தயக்கம் எட்டி பார்க்க அலைப்பேசியையே பார்த்துக் கொண்டிருந்தான். அன்று அவள் பேசிய பேச்சில் கோபமுற்று அலைப்பேசியை உடைத்தது அவனுக்கு நினைவு வர அவன் முகத்தில் சிறு வேதனை எட்டி பார்த்தது.

'ராட்சசி வான்னு சொன்னா வர்றாளா...? வாயைத்தான் திறக்கிறாளா...? ஊமைக்கோட்டான்... இதைப் பத்தி நான் பேசினா மட்டும் அவள் வாயடைச்சிடும். என்ன தான்டி பிரச்சினை உனக்கு...?' மனதுக்குள் அவளைத் திட்டியவன் கண் முன்னால் அன்றைய நாளின் பிரச்சினையின் வில்லன் தன்ராஜின் முகம் தோன்றியது.

'அந்த நாயை...' ஆத்திரமாய் நினைத்தவன் உள்ளங்கையை இறுக்கி மடக்கி மெத்தையில் ஓங்கி குத்தினான்.

அன்றே தன்ராஜ் பார்த்த இணையத்தளம் முகவரி எடுத்துக் காவல்துறை அதிகாரியாய் இருந்த அவன் நண்பனிடத்தில் புகாரும் தெரிவித்துவிட்டான்... விசயத்தை ஊடங்களுக்குத் தெரியாமல் கையாள வேண்டும் என்ற கோரிக்கையோடு. அதே போல் காவல்துறையும் துரிதமாகச் செயல்பட்டு

அந்தக் கேவலமான வேலையில் இறங்கியவனைக் கண்டுப்பிடித்து அவனை அடித்து உதைத்ததில் உண்மையைச் சொல்லிவிட்டான். அது... வேறொரு பெண்ணின் உடலில் மதுவின் முகத்தை ஒட்டி கிராபிக்ஸ் செய்தது பிறகு தான் தெரிய வந்தது. காவல்துறை அவனுக்குத் தண்டனை கொடுத்ததைக் கேள்விப்பட்டதும் தான் கௌதமின் ஆத்திரம் அடங்கியது.

தன்ராஜின் நினைவில் கோபத்தில் முகம் சிவந்தவன் மனதில் தன்னவளுக்குத் தன்னை விட்டால் யாருமில்லை என்ற நிதர்சனம் சுட... நொடியில் தன் தயக்கத்தை விட்டொழித்து விட்டு அவளுக்கு அழைத்தான். ஐந்து வருடங்களுக்குப் பிறகு அவளின் இந்தப் பிறந்தநாளுக்குத் தான் அவன் அழைக்கிறான். இத்தனை வருடங்களாய் அவளாகத் தன் தவறு உணர்ந்து வருவாள் என்று அவன் காத்திருக்க... அவன் எண்ணத்தை அவள் தவிடு பொடியாக்கினாள். இன்று வரை அவள் வரவே இல்லை. இதற்கு மேல் பொறுக்கமாட்டாமல் தான் அவனே களத்தில் இறங்கிவிட்டான். அவள் வராவிட்டால் என்ன... தானே அவளை வரவழைக்கும் வேலையைப் பார்க்க ஆரம்பித்துவிட்டான். அந்தளவுக்கு அவளின் துரோகத்தையும் மீறி அவளின் காதல் அவனைக் கவர்ந்து இழுத்தது. அவளை வெல்ல வேண்டும் என்று நினைத்தான் தான்... அவளின் காதலை வெல்ல வேண்டுமென்று தான் அவன் நினைத்தான்.

"கௌதம்..." மதுவின் குரல் இனிமையாய் அவன் செவியைத் தீண்டியது. அன்றைக்குக் குறையாத காதல் அவளின் குரலில் இன்றைக்கும் அப்படியே இருந்தது.

"மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆப் தி டே..." அவனின் வார்த்தையில் அவளடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

"முடிந்து போன இத்தனை பிறந்தநாளில் இந்தப் பிறந்தநாளில் தான் என்னை விஷ் பண்ணனும்னு உங்களுக்குத் தோணுச்சா...?" அவள் குரல் தழுதழுத்தது.

"முடிஞ்சு போனதை விடு... இன்னைக்கு உள்ள சந்தோசத்தை... இந்த நொடியை அனுபவி..." அவனின் குரல் மென்மையாய் ஒலித்தது. அவனுக்குத் தன்நிலையை எண்ணி வியப்பாயிருந்தது. அன்று விருது வழங்கும் விழாவில் அவளை முறைத்துக் கொண்டிருந்தது தான் தானா என்று அவனுக்கே சந்தேகமாயிருந்தது. அன்றும் அவள் காதலுக்காகத் தான் முறைத்துக் கொண்டு நின்றான்... இன்றும் அவள் காதலுக்குத் தான் கட்டுண்டு இருக்கிறான். தன்னை நினைத்து அவனுக்கே சிரிப்பாய் வந்தது.

"கௌதம்..." அவளின் அழைப்பில் தன்னினவை கலைந்தவன்,

"ம்... சொல்லு..."

"எனக்கு ஜாதிப்பூ வாங்கித் தர்றீங்களா...?" என்று அவள் கேட்டதும்,

"வாட்..." என்று அதிர்ந்தான் அவன்.

"உங்களுக்கு நியாபகமிருக்கா... என் செவன்டீன்த் பேர்த்டேக்கு நீங்க என்ன வேணும்ன்னு கேட்டப்போ... நான் ஜாதிப்பூவை கேட்டேனே..."

அதை அவனுக்கு அவள் நியாபகப்படுத்த தேவையே இல்லை. அது அவனுக்கு நன்கு நியாபகமிருந்தது. அன்று அவளுக்குப் பூ வாங்கிக் கொடுத்திவிட்டு அவள் அருகாமையில் அவன் அவஸ்தையாய்த் தவித்தது அவனுக்கு என்றும் மறக்குமா என்ன...

"ஏய் லூசு... அது அன்னைக்கு வசதிக்கு நீ பூ கேட்ட... இன்னைக்கு உன் கௌதம் பெரிய ஸ்டார்டி... அதுக்குத் தகுந்தா மாதிரி வைரம், கார்ன்னு இப்போ நீ கேட்கணும்... உனக்கு என்ன வேணும்ன்னு சொல்லு..." அவன் பேசிய எந்த வார்த்தையும் அவளின் காதில் விழவில்லை. 'உன் கௌதம்' என்ற வார்த்தை மட்டுமே அவள் காதில் தித்திப்பாய் விழுந்தது.

"என்ன வேணும் சொல்லுடி...?" மீண்டும் அவன் கேட்கவும்...

"அதெல்லாம் எனக்கு வேணாம்... உங்க கையால் பூ வாங்கிக் கொடுத்தா மட்டும் போதும்..."

"சரி வாங்கித் தர்றேன்..." என்றவன், "பூ வாங்கிக் கொடுத்தா மட்டும் போதுமா..." அவன் குரல் ஒரு மாதிரியாய் ஒலிக்க... அதில் தெரிந்த பேதத்தில் அவள் முகத்தில் வெட்கமும், துக்கமும் போட்டி போட்டது.

"ஆரம்பிச்சிட்டியா..." என்று சலித்தவனிடம்...

"என்ன ஆரம்பிச்சேன்...?" புரியாமல் அவள் கேட்க...

"அதான் உன் மௌனவிரதத்தை..."

"இல்லை வந்து..." அவள் என்ன சொல்வது என்று தெரியாமல் தடுமாற...

"வர தான் சொல்றேன்... வர மாட்டேங்கிறியே..." என்றவன் அவள் மேலே பேசும் முன், "இன்னைக்கு நான் நல்ல மூடில் இருக்கேன்... அதைக் கெடுத்துடாதே... குட் நைட்..." அவளின் பதிலை எதிர்பாராமல் துண்டித்தான். மேலும் மேலும் பேசினால் வீண் மனவருத்தம் தான் இருவருக்கும் மிஞ்சும். அதை அவன் உணர்ந்தே இருந்தான்.

*******************************

"ஹேப்பிப் பேர்த்டே டூ யூ... ஹேப்பிப் பேர்த்டே டூ டியர் மது... ஹேப்பிப் பேர்த்டே டூ யூ..." படப்பிடிப்புத் தளத்திலிருந்த அனைவரும் மதுவை வாழ்த்தினர். அவள் படப்பிடிப்பிற்காகக் குலுமணாலி வந்திருந்தாள்.

"ஹேப்பிப் பேர்த்டே மை டியர் ஏஞ்சல்..." என்றபடி தனது வலது கையில் கேக்கை ஏந்தியபடி அங்கே வந்தான் சித்தார்த். அவள் நடிக்கும் படத்தின் தயாரிப்பாளர். அவனுடன் சேர்ந்து வாழ்த்தியபடி வந்தான் அவளுடன் நடிக்கும் நித்தீஷ்.

"தேங்க்ஸ்..." அனைவருக்கும் தனது நன்றியை சொன்னவள், "ஸ்பெசல் தேங்க்ஸ் ஃபார் யூ சித்து..." என்று புன்னகைத்தாள் தன் முத்துப் பற்கள் பளீரிட...

"ஐ நோ... ஐம் ஆல்வேஸ் ஸ்பெசல் ஃபார் யூ..." என்று சட்டை காலரை தூக்கிவிட்டுக் கொண்டான் சித்தார்த்.

அவள் கேக் வெட்டி முடித்து எல்லோருக்கும் கொடுக்கவும் சித்தார்த்தின் அலைப்பேசி அடிக்கவும் சரியாக இருந்தது.

"அப்பா மது..." என்றவன் அதை எடுத்துக் காதில் வைத்தான். "மதுவாப்பா இங்கே தான் இருக்கா... இதோ இப்போ முடிஞ்சது... அதுக்கப்புறம் அவ ரூமுக்கு போயிருவா... இல்லப்பா... அவளை நான் பத்திரமா பார்த்துக்கிறேன்... அதை நீங்க சொல்லணுமா... எனக்குத் தெரியாதா... மது நம்ம வீட்டு பொண்ணுப்பா..." எப்போதும் குறும்புத்தனத்துடன் சுற்றி திரிபவன்... அடக்கமாய்ப் பவ்யமாய்ப் பேசுவது கண்டு மதுவுக்குச் சிரிப்பு பீறிட்டது.

"மது பேசு..." அலைப்பேசியை அவளிடம் தர... அதை வாங்கியவள், "அப்பா... நல்லாயிருக்கீங்களா...?" நெகிழ்ச்சியுடன் வந்தது அவளின் வார்த்தைகள்...

...................

"தேங்க்ஸ்ப்பா..."

....................

"சரிப்பா... இதோ முடிஞ்சது..." என்றவள் அலைப்பேசியை அணைத்துச் சித்தார்த்திடம் தர...

"சரி நீ உன்னோட ரூமுக்கு போ... இதுக்கு மேலே உன்னை இங்கே இருக்க வச்சா அப்பா என்னைத் தான் திட்டுவார்..." என்க...

"ஓகே சித்து நான் கிளம்பறேன்..." என்றவள் மற்றவர்களிடம் சொல்லிவிட்டு கிளம்ப... அந்த விடுதியின் உணவு அருந்தும் கூடத்தின் மூலையில்

அமர்ந்திருந்தவனின் கண்கள் சினத்துடன் சித்தார்த்தை பார்த்தது.

"கௌதம்..." கணேஷ் அவனை அழைக்க...

"கணேஷ்... அந்தச் சித்தார்த் ரொம்ப ஓவரா தான் பண்றான்..." இறுகி போன முகத்துடன்...

"கௌதம்... சிஸ்டரை சந்தேகப்படுறியா...?"

"ச்சேசே... அப்படியெல்லாம் இல்லைடா... ஆனா சித்துப் போற போக்கு சரியில்லை... அவன் பார்வையில் வித்தியாசம் இருக்கு..."

"கௌதம் நீ தப்பா நினைக்கிற... அவனோட அப்பா டைரக்டர் நரேந்திரன் மதுவோட காட்ஃபாதர்... அதனால சித்துக் கூடச் சகஜமா பழகியிருப்பா... அதே போல் தான் அவனும்... நீ தான் தேவையில்லாமல் யோசிக்கிற..." கணேஷ் சொன்னது போல் நரேந்திரனின் இயக்கித்தில் தான் மது முதன்முதலில் நடித்தது. அன்று முதல் இன்று வரை அவளின் முழு நேர பாதுகாவலன் அவர்... அவரைப் போல் இயக்குநராகாமல் தயாரிப்பாளரான அவரது மகன் சித்தார்த்தும் அவரைப் போல் அவளை அக்கறையோடு பார்த்துக் கொண்டான். ஆனால் அந்த அக்கறையைக் காதல் என்று சந்தேகப்படுகிறான் கௌதம்.

"உனக்குப் பொறாமை கௌதம்..." என்று சிரித்த கணேஷை உற்று நோக்கிய கௌதம்,

"காதலில் பொறாமையும் ஒரு அங்கம் தான்டா..." என்றவன் எழுந்தபடி... "நான் என் அம்முவை பார்த்துட்டு வர்றேன்... நீ போய்த் தூங்குடா..."

"நீ உன் அம்முவை பார்த்தா... நான் என் கண்ணம்மாவை பார்க்க போறேன்..." கண்சிமிட்டி கொண்டு தானும் எழுந்தான் கணேஷ்.

"ம்... நடத்து... நடத்து..." சிரித்தபடி விடைப்பெற்றான் கௌதம்.

மதுவின் அறைக்குச் செல்ல எண்ணி அவன் வெளியில் வர... அங்கே அவள் யாரிடமோ பேசி கொண்டிருந்தாள். ஒருவேளை அவளுக்கு வாழ்த்து சொன்னார்களோ என்னமோ... அவர்களிடம் விடைப்பெற்று நடந்தவளை பின் தொடர்ந்தான் அவன்.

அவனது அறையைத் தாண்டி தான் அவள் செல்ல வேண்டும்... திடுமென அவள் பின்னால் சென்று இடது கையால் அவளது வாயை பொத்தியவன் அவளை இழுத்துக் கொண்டு தனது அறையின் முன் வந்தவன் வலது கையால் அறையைத் திறந்தான்.

யாரோ எவரோ என்று பயத்தில் உடல் நடுங்கிய மது அவனது கையில் திமிறினாள். பலம் கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ளினாள். ம்ஹூம்... அவன் அசைவதாய் இல்லை... அறைக்குள் நுழைந்ததும் அவன் அவளை விட... அவள் கத்துவதற்கு ஏதுவாக வாயைத் திறக்க போக...

"அம்மு நான் தான்டி..." என்றவன் அவசரமாய் அவள் முன் வந்து நின்றான்.

"கௌதம்..." அவனது பெயரை மெல்லமாய் உச்சரித்தது அவளது உதடுகள்.

"கௌதமே தான்..." விரிந்த புன்னகையுடன் கூறியவன்... "ஒன் மினிட்..." என்றவன் குளிர்சாதன பெட்டியிலிருந்து எதையோ எடுத்து வந்தான்.

"திரும்பு..." அவன் சொன்னதற்கு என்னவென்று புரியாதவளாய் அவள் திரும்பி நிற்க... அவள் தலையில் தன் கையிலிருந்த ஜாதிப்பூவை வைத்துவிட்டான். அதன் வாசத்திலேயே அவளுக்குப் புரிந்து போனது. அவளைத் தன் புறம் திருப்பி...

"ஹேப்பிப் பேர்த்டே அம்மு..." என்றவன் அவளின் முன்னுச்சியில் மென்மையாய் முத்தமிட்டான்.

"நான் கேட்டதுக்காகவா..." நெகிழ்ந்து போனது அவளது குரல்.

"ம்... மதியத்தோடு ஷூட்டிங் முடிச்சிட்டு உனக்காக வாங்கிட்டு வந்தேன்..." அவனது குரலும் காதலில் உருகியது. அதைக் கேட்டு களுக்கென்று அவள் சிரித்தாள்.

"என்னடி...?" உருகல் மறைந்து அதிகாரம் வந்தது அவனது குரலில்.

"இல்ல... பூ கொடுக்கிறதுக்காக ப்ளைட் பிடிச்சு வந்தவரை நினைச்சேன்... சிரிச்சேன்..."

"கேட்டது என்னோட அம்முவாகப் போய்ட்டாளே..." திரும்பவும் காதல் கனிந்திருந்தது அவனது குரலில்.

"கௌதம்... என் மேலுள்ள கோபம் போயிருச்சா...?"

"தெரியல... அன்னைக்கு உன்னைப் பார்த்தப்போ கூடக் கோபம் இருந்துச்சு தான்... ஆனா இப்போ அதை விட நீ வேணுங்கிற தாபம் தான் அதிகமாயிருக்கு அம்மு..." என்றவனின் குரல் அவனின் தேவையை அவளுக்கு நன்கு உணர்த்தியது. விருப்புக்கும் வெறுப்புக்கும் இடைவெளி நூலளவு என்பதை உணர்ந்தவனாய் அதைத் தாண்ட அவன் துடித்தான்.

"கௌதம்..." கண்ணீர் மல்க அவனை அணைத்து கொண்டாள்.

"அம்மு..." என்றழைத்தவன் அவளின் முகம் முழுவதும் இதழொற்ற... அதில் மயங்கி கிறங்கி நின்றாள் அவள்.

"அம்மு... நீ எனக்கு வேணும்டி..." அவளின் கழுத்து வளைவில் முகம் புதைத்தவன் கிறங்கி போய் நின்றான்.

"எடுத்துக்கோங்க..." என்றவளின் கரங்கள் அவனைத் தன்னோடு அமிழ்த்தி கொண்டது.

"எப்போ நாம கல்யாணம் பண்ணிக்கலாம்...? இப்பவே தாலி கட்டவும் நான் ரெடி..." ஹஸ்கி குரலில் கேட்டவனின்

குரலில் சுடு தண்ணீரை முகத்தில் ஊற்றியது போல் பதறி போய் விலகினாள் அவள்.

"என்ன...?" அதட்டியவன் அவளை மீண்டும் அருகில் இழுத்து தன் முத்த ஊர்வலத்தைத் தொடர்ந்தான்.

"கௌதம்..." உணர்ச்சியற்று ஒலித்த அவளது குரலை உணர்ச்சியின் பிடியிலிருந்த அவன் கவனிக்கவில்லை.

"நமக்கிடையில் கல்யாணம் எல்லாம் வேணாம் கௌதம்..." தன் மனதிலுள்ளதை சட்டென்று சொல்லிவிட்டாள்.

"என்ன சொன்ன...?" தன் உணர்வுகள் அடங்க அவளை விட்டு விலகியவன் அவளை முறைத்துப் பார்த்தான். இனிய கனவு கலைந்த எரிச்சல் அவனுக்கு...

"கல்யாணம் வேணாம்ன்னு சொன்னேன்..." மீண்டும் அவள் சொன்னதைக் கேட்டு அவன் உள்ளம் துடித்தாலும் தன்னை அடக்கி கொண்டு,

"என்னைப் பிடிக்கலையா...?" கூர்மையாய் அவளை அளவிட்டான்... "ஆனா பிடிக்காத மாதிரியும் தெரியலையே..." கை கொண்டு தன் தாடையைத் தடவியவனின் பார்வை அவளின் கன்னச்சிவப்பை ஆராய்ச்சியாய்ப் பார்த்தது. அவனது பார்வையில் அவள் இன்னமும் சிவந்து தான் போனாள்.

"பிடிச்சுத் தானிருக்கு... ஆனா கல்யாணம் வேணாம்..." என்றவளை புரியாமல் பார்த்தான்.

"பிடிச்சியிருக்கு... ஆனா கல்யாணம் வேணாம்ன்னா... உன் லாஜிக் எனக்குப் புரியல..."

"நான் உங்களுக்கு வேணுமா... வேண்டாமா...?" என்றவளின் அருகில் வந்தவன்,

"யேய் லூசு... நீ வேணும்ன்னு தான்டி நான் போராடுறேன்..." அவள் தலையில் செல்லமாய் முட்டியபடி...

"அப்போ எனக்கு ஒரு சத்தியம் பண்ணி கொடுங்க..." வலது கையை நீட்டியவளை பார்த்தவன்,

"அந்தத் தசரதன் மாதிரி வாக்குறுதி, சத்தியம் கொடுத்துட்டு என்னால எல்லாம் அல்லாட முடியாதும்மா... ஆளை விடு..." தோளை குலுக்கினான். அவள் அசையாமல் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தவன்,

"முதல்ல விசயத்தைச் சொல்லு... அதுக்கப்புறம் சத்தியம் பண்றேன்..." விட்டு கொடுத்தவனாய்...

"நீங்க கல்யாணம் பண்ணிக்கணும்..." பிசிறில்லாமல் ஒலித்தது அவளது குரல்.

"யாரை...?" அவனின் பார்வை அவளைத் துளைத்து.

"வேறு நல்ல பெண்ணை..."

"ஓஹோ அப்புறம்..." அவனின் குரல் எக்காளமாய் வந்தது.

"நம்ம உறவு எப்போதும் போலத் தொடரும்..." என்றவள் கட்டிலை சுட்டி காட்டி, "நான் இதுக்கு மட்டும் தான் லாயக்கு... அதாவது இல்லீகல் ரிலேசன்ஷிப்பிற்குத் தான் நான் சரி..." அவள் சொல்லி முடிக்கவில்லை... அவளின் கன்னம் எரிந்தது... காது சொய்ங் என்று ரீங்காரமிட... அவளது கை அவளையும் அறியாமல் கன்னத்தைத் தாங்கியது.

"என்னடி சொன்ன...? தைரியமிருந்தா இன்னொரு தடவை சொல்லுடி பார்க்கலாம்..." அவளின் முடியை பிடித்து இறுக்கியவன் அவளின் முகத்தைத் தன் முகம் நோக்கி இழுத்தான். அவன் தலைமுடியை பிடித்து இழுத்ததில் அவளுக்கு வலித்தது.

"ஷ்..." மெல்லியதாய் முனங்கினாள்.

"வலிக்குதா... நல்லா வலிக்கட்டும்டி... நீ பேசிய வார்த்தை கேட்டு எனக்கு வலிச்சதை விடவா... உனக்கு வலிக்கப் போகுது..." தன் பிடியை இன்னமும் இறுக்கியவனைக் கண்டு அவள் முகம் கலவரமானது.

"ப்ளீஸ் கௌதம்..." இறைஞ்சியவளின் பார்வையில் என்ன கண்டானோ மெதுவே அவளை விடுவித்தான். ஆனால் அவளை முறைப்பதை மட்டும் அவன் கைவிடவில்லை.

"நான் சொன்னதுல என்ன தப்பிருக்குக் கௌதம்... என்னால் உங்க மனைவியாக முடியுமா...? அதுக்கான அருகதை எனக்கிருக்கா...? என்னால முடியல கௌதம்... உங்க கூட வாழவும் முடியாம... உங்களை மறக்கவும் முடியாம... முடியல கௌதம் முடியல..." என்று அவன் நெஞ்சில் சாய்ந்து அழுதவள், "எனக்கு நீங்க வேணும்... இப்பவே இந்த நொடி நீங்க வேணும்... உங்க கூட நான் வாழ்ந்தாகணும்... அதுக்கான விலை என் கற்புன்னா அதையும் இழக்க நான் தயாரா தான் இருக்கேன்..." ஆவேசமாய்க் கூறியவள் அதே ஆவேசத்துடன் தன் இதழ் கொண்டு அவன் இதழை அணைத்தாள்.

அவளின் முத்தத்தை அவன் மறுக்கவும் இல்லை... திருப்பிக் கொடுக்கவும் இல்லை... ஆடாமல் அசையாமல் இரும்பு போல் உறுதியாய் அப்படியே நின்றிருந்தான்.

"ப்ளீஸ் கௌதம்... என்னை எடுத்துக்கோங்க..." அவன் முகம் முழுவதும் முத்தமிட்டபடி காதலோடு சொன்னவளை அவன் ஒதுக்கி தள்ளவும் இல்லை. அவனின் உணர்வற்ற நிலை வெகுநேரம் சென்றே அவளுக்கு உறைத்தது.

"கௌதம்... உங்களுக்குக் கூட என்னைப் பிடிக்கலையா...?" பாவமாய்ப் பார்த்தவளின் பார்வை அவனை ஏதோ செய்யத் தான் செய்தது. ஆனாலும் பொறுமை காத்தான்.

"கௌதம்..." கெஞ்சியவளை கண்டு அவனது வாய் மெல்ல திறந்தது.

"முதல்ல நீ இங்கிருந்து போ... என்னைக் கொலைக்காரனாக்குறதுக்கு முன்னாடி வெளியில் போயிரு... ஐ சே கெட் அவுட்..." கதவை நோக்கி கையைக் காண்பித்தவன் அவளுக்கு முதுகு காட்டி நிற்க... அவனின் பேச்சில் அவளின் கண்களில் கண்ணீர் பொங்கி வந்தது.

"ப்ளீஸ் கௌதம்..." அவளின் வார்த்தை கேட்டு அவன் இறங்குவதாய் இல்லை. அழுகையில் எழுந்த பெரும் விம்மலை அடக்கி கொண்டு அங்கிருந்து வேகமாய் வெளியேறினாள் அவள்.

அவள் சென்றதும் கதவை திரும்பி பார்த்தவனின் விழிகளில் ஈரத்தின் சுவடுகள்... அவன் முகத்தில் தான் எத்துணை வேதனை...!!! அவள் படும் வேதனைக்குக் கொஞ்சமும் குறையாமல் இருந்தது அவனது வேதனை...

வேறொருவன் அவனிடத்தில் இருந்திருந்தால் காதலியின் துரோகத்திற்கு அவளைப் பழிவாங்கியிருப்பார்கள். ஆனால் அப்படியிருந்தும் அவன் அவளிடத்தில் காதல் யாசகம் வேண்டி தான் நிற்கிறான். அந்தக் காதலை பிச்சை போட கூட அவனது காதலிக்கு மனம் வரவில்லையே... அவனது காதலுக்கு, அவளது துரோகத்துக்குக் கற்பை காணிக்கை ஆக்குகிறாளாமே...

'யாருக்கு வேண்டும் அவள் உடல்...? மனதை கொடுக்கத் தெரியாத ராட்சசியிடம் காதலை வேண்டி நிற்பதில் அர்த்தமில்லை' அவன் மனம் ஓலமிட்டுத் துடித்தது.

"என்னை என்னன்னு நினைச்சா...?" அருகிலிருந்த நாற்காலியை ஓங்கி உதைத்தான்... வாழ்க்கையில் இரண்டாம் முறையாக அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தான்.

****************************

சரியாக மூன்று மாதங்கள் கழித்துத் தன்னோடு சேர்ந்து நடிக்க மதுவிற்கு அழைப்பு விடுத்தான் கௌதம். அவனோடு நடிக்கும் ஆசையில் விருப்பத்துடன் அவன் அளித்த ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டாள். அந்தக் கையெழுத்து அவளின் தலையெழுத்தை மாற்ற போவதை அறியாமல்... அவளின் வாழ்க்கையைக் கௌதம் தன் கையில் எடுத்து கொண்டதை அவள் அறியாமல்... தான் நூலில் ஆடும் பொம்மையாக... அவன் தன்னை ஆட்டுவிக்கும் கருவியாக மாறிப் போனது அறியாமல்...

அவனோடு இணைந்து நடிக்கப் போகும் மகிழ்ச்சியில் சந்தோச வானில் சிறகடித்துப் பறந்தாள் அவள்.

## துளி : 5

"சார்... நீங்க சொன்ன மாதிரி பேப்பர்சை கொண்டு வந்திட்டேன்..." என்றபடி கையிலிருந்த கோப்பை தன்னிடம் கொடுத்த மேகாவை பார்த்துச் சிநேகமாய்ச் சிரித்தபடி அதை வாங்கிய கௌதம்,

"தேங்க்ஸ் சிஸ்டர்..." என்றபடி அதிலிருந்த காகிதங்களைப் புரட்டி பார்த்தான்.

"சார்... மேம்க்குத் தெரிஞ்சா பெரிய பிரச்சினையாகிடும்... உங்க மேலுள்ள நம்பிக்கையில் படிச்சு கூடப் பார்க்காம சைன் பண்ணிட்டாங்க... இருந்தாலும் எனக்கு மேம்க்குத் துரோகம் பண்ணிட்டேனோன்னு மனசுக்குள்ள சின்னக் குறுகுறுப்பு இருந்திட்டே இருக்கு சார்..." மேகா கவலை தோய்ந்த முகத்துடன் கூற...

"யார் புரொடியூசர்... யார் டைரக்டர்ன்னு கேட்டாளா...?" அவளின் கேள்விக்குப் பதிலளிக்காமல் அவன் வேறு கேள்வியைக் கேட்டு வைக்க... மேகா தன்னருகில் நின்ற கணேஷை புரியாமல் பார்த்தாள். அவளின் பார்வையில் அவனும் 'எனக்குத் தெரியாது' என்ற பாவனையில் தோளை குலுக்கினான்.

"இல்லை சார்... நீங்க சொன்னீங்கங்கிற ஒரு வார்த்தைக்காக மட்டுமே அவங்க எதுவுமே கேட்கல... இதே இது மத்த புரொடியூசரா இருந்தா ஆயிரம் கேள்வி கேட்டிருப்பாங்க..." மேகாவின் பதிலில் கௌதமின் முகத்தில் புன்னகை வந்து தானாக ஒட்டி கொண்டது.

"சார்... நான் கேட்டதுக்கு..." ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தவனை மேகாவின் குரல் நடப்புக்குக் கொண்டு வந்தது.

"இது அவள் நல்லதுக்குத் தான் செய்றேன்... அதை நீங்க புரிஞ்சிக்கணும்ன்னு சிஸ்டர்..." என்றவனின் முகத்திலும், குரலிலும் வேதனை நிரம்பி வழிந்ததோ...???

"மேகா... யார் கிட்ட என்ன பேச்சு பேசுற...? உங்க மேம்மை எங்க கௌதம் விட யாராலும் நல்லா பார்த்துக்க முடியாது... அதை முதல்ல நீ புரிஞ்சிக்கோ...?" நண்பனை உணர்ந்தவனாய் கணேஷ் தன்னவளை அதட்டினான்.

"அதுக்கில்ல கணேஷ்... மேம் சைன் போட்ட பேப்பர்ஸ் எல்லாம்..." மேகா முடிக்கும் முன்...

"அவளை என் கிட்ட வரவழைக்கிறதுக்கு எனக்கு இதைத் தவிர வேறு வழியில்லை... மதுவோட வாழ்வு நல்லாயிருக்கணுமா... வேணாமா...?" கௌதமின் கேள்வியில் மேகாவின் வாய்த் தாமாக மூடி கொண்டது.

"இன்னும் எத்தனை நாளுக்கு அவளால இந்தப் பீல்ட்ல இருக்க முடியும்... அவளோட அழகு காணாம போகும் போது இன்னைக்குத் தலையில் வச்சு கொண்டாடுற இந்த உலகம் ஒரு நொடியில் அவளைத் தூக்கி எறிஞ்சிரும்... அதுக்கப்புறம் அவள் நிலைமை...? அவளைச் சுத்தியிருக்கிற கூட்டத்திலிருந்து அவளை உங்களால காப்பாத்த முடியுமா...? இதுக்கு எல்லாம் ஒரே முடிவு... அவள் என் கிட்ட வர்றது தான்... ஆனா வர மாட்டேன் பிடிவாதம் பிடிக்கிறவளை நான் என்னத்தான் செய்றது...? இப்படித்தான் வழிக்குக் கொண்டு வர வேண்டியிருக்கு... நான் உங்க கிட்ட ஒண்ணு கேக்கிறேன்... உங்க மேம் மனசு விருப்பப்பட்டுத் தான் இந்தப் பீல்ட்ல இருக்காளா...?"

கௌதமின் கேள்விக்கு மேகாவால் பதில் சொல்ல முடியவில்லை... எத்தனையோ தடவை கலங்கிய கண்களுடன் மது படப்படிப்புத் தளத்தை விட்டு வெளிவருவதைப் பார்த்திருக்கிறாள். அது எதனால் என்று மது அவளிடம் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் மேகாவாக அதைப் புரிந்து கொள்வாள். என்னத்தான் இயக்குநர் நரேந்திரனுக்கு வேண்டிய பெண் என்றாலும் உடன் பணி புரியும் சிலர் அவளை வேண்டுமென்றே பாலியல் ரீதியாகச் சீண்டத்தான் செய்தார்கள். அதை மது யாரிடமும் சொன்னதில்லை... தனக்குள் வைத்துக் கொண்டு மருகி போவாள்... அதையெல்லாம் மேகா உணர்ந்து தான்

இருந்தாள். தலையைக் குனிந்திருந்தவளை கண்டு கௌதமின் முகம் கனிந்தது.

"சிஸ்டர்... அவளை என்னிடம் கொண்டு வர நான் எடுக்கும் முயற்சிகள் வேணும்ன்னா நேர்மையானதா இல்லாமல் இருக்கலாம்... ஆனா நான் நேர்மையானவன்... அவளை நல்லா பார்த்துக்குவேன்..." சிரித்தபடி சொன்னவனைக் கண்டு மேகாவுக்கு நிம்மதியாக இருந்தது.

"கௌதம் நீ என்ன இவளுக்கு விளக்கம் கொடுத்துட்டு... மேகா கௌதமை கேள்வி கேட்குற அதிகாரத்தை உனக்கு யாரும் கொடுக்கல... உன் வேலை முடிஞ்சிருச்சில்ல... நீ கிளம்பு... மதுவை கௌதம் பார்த்துப்பான்..." கடுமையுடன் சொன்ன கணேஷை பயத்துடன் பார்த்தவள்,

"உங்க மேலுள்ள நம்பிக்கையில் நான் கிளம்பறேன் சார்..." கௌதமிடம் சொல்லிவிட்டு கலங்கிய விழிகளோடு கணேஷை ஏறிட்டு பார்த்தவள் விடுவிடுவென நடந்து வெளியில் சென்றாள்.

"கௌதம் அவளைச் சமாதானப்படுத்திட்டு அப்படியே நானும் வீட்டுக்கு கிளம்பறேன்..." என்ற கணேஷ் கௌதம் பதில் சொல்லும் முன் மேகாவை பின் தொடர்ந்து சென்றிருந்தான். நண்பனையும் விட்டுக் கொடுக்காமல் அதே சமயம் காதலியையும் விட்டுக் கொடுக்காமல் இருக்கும் கணேஷை வியப்புடன் பார்த்த கௌதம்,

"எப்பா... இந்தக் காதல் படுத்தும் பாடு இருக்கே..." சலித்தப்படி கூறினாலும் அவனின் முகத்தில் புன்னகை தான் நிரம்பியிருந்தது.

"கௌதம் என்னப்பா ஃபைல் இது...?" என்று கேட்டபடி வந்த ரெங்கநாதனை கண்டதும் கௌதமின் முகம் மாறியது.

"அது வந்து... ஆங்... இப்போ நடிச்சிட்டிருக்கிற படத்தோட டயலாக்ஸ் ஃபைல்ப்பா... வேற ஒண்ணுமில்லை..." தந்தையிடம் உண்மையை மறைத்து பொய் கூறியவன், "சரிப்பா... எனக்குத் தூக்கம் வருது நான் தூங்க

போறேன்..." அவரின் பதிலை எதிர்பாராமல் தனது அறைக்குச் செல்ல அவரின் பார்வை அவனை யோசனையாய் பின் தொடர்ந்தது. ஏனெனில் அவரின் மகனுக்கும் இந்த மாதிரியான தடுமாற்றத்துக்கும் தூரம் அதிகம். அவரறிந்த மகன் இதில்லை...

அறைக்குள் நுழைந்து நியாபகமாய்க் கதவை தாள் போட்டவன் கையிலிருந்த கோப்பை எடுத்துக் கொண்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான். அதிலிருந்த காகிதத்தாள்களை ஒவ்வொன்றாய் வாசித்துப் பார்த்தவன் மனம் குதூகல கும்மாளமிட்டது. பின் அதை மீண்டும் கோப்பில் வைத்தவன் அதன் மீது தன் இதழை பதித்து லேசாக விசிலடித்தபடி அறையிலிருந்த அலமாரியில் பூட்டி வைத்தான். அவனின் மனம் சந்தோசமாயிருக்க... அதே அலமாரியின் மூலையிலிருந்த மதுப்புட்டிகளை எடுத்துக் கொண்டு வந்தமர்ந்தான். மதுவை கண்ணாடி கோப்பையில் ஊற்றியவன் அதைத் தன் முகம் அருகே கொண்டு வந்து,

"என் மது எனக்குத் துணையாக வரும் வரைக்கும் மதுபானமான நீ தான் எனக்குத் துணை... அதுக்கப்புறம் உனக்கு இங்கே வேலை கிடையாது..." என்றவன் அதை ஒரே மூச்சில் குடித்து முடித்தான். முதலில் சந்தோசத்திற்காகக் குடிக்க ஆரம்பித்தவன்... பின் மெல்ல மெல்ல அடிமனதின் துயர் போதையில் வெளிவர அதை மறக்க மேலும் மேலும் மது அருந்தியவன் முதன் முறையாகத் தன்னினவை மறந்து போதையில் ஆழ்ந்தான்.

"ஏண்டி உயிரோடு என்னைக் கொல்ற... உன்னைப் பார்க்கவே கூடாது நீயா தான் வரணும்ன்னு தானே நான் வைராக்கியமா இருந்தேன்... அன்னைக்கு ஏண்டி அவார்ட் ஃபங்ஷனுக்கு வந்த...? வந்தாலும் ஏண்டி கண்ணுல பட்டு தொலைச்ச... அப்படியே பட்டாலும் ஏண்டி காதல் பார்வை பார்த்த... நான் உன்னை ஜெயிச்சு பத்து வருசமாச்சுன்னு ஏண்டி சொன்ன... அப்போ பதிமூணு வயசுல இருந்து உன் மனசை நான் பாதிச்சு இருக்கேன்ல... அப்படிப்பட்ட என்னை எப்படிடி உன்னால தூக்கி எறிஞ்சிட்டு போக முடிஞ்சிச்சு...?

அன்னைக்கு உன்னைப் பார்த்ததுல இருந்து நான் நானா இல்லைடி... உன்னோட காதல் தான் என்னை ஆக்கிரமிச்சிருக்கு... என் ஈகோவை கூட உனக்காக விட்டுட்டு உன் கூட நான் பேசினேனா இல்லையா... அப்போ கூட என் கூட உன்னை வர சொன்னேன் தானே... நீ தான் வரல... சரி அதை விடு... உன் பிறந்தநாளுக்கு ஒரு மனுசன் அவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கானே... அவன் கிட்ட சந்தோசமா பேசுவோம்ன்னு நினைச்சியா...? என்னை என்னமோ தேர்ட் க்ரேட் ரோக் மாதிரி... உன் உடம்புக்கு அலையறவன் மாதிரியில்ல நீ பேசின... கல்யாணம் வேணாம்... சேர்ந்து வாழலாம்ன்னா அதுக்கு என்ன அர்த்தம்ன்னு தெரிஞ்சு தான் நீ பேசினியா...? அந்த வார்த்தையில் அப்படியே என்னை உயிரோடு கொன்னுட்டேடி... இதுக்கு மேலயும் உன்னைச் சும்மா விட்டு வச்சா அது சரி வராது..." என்றவனின் குரல் போல் முகமும் இறுகியது.

"கடைசியில் என்னை வில்லன் ரேன்சுக்கு கீழிறக்கிட்டியே பாவி... நான் உனக்குச் செய்யப் போறது துரோகம் தான்... ஆனா எனக்கு வேற வழி தெரியல... என்ன ஆனாலும் பரவாயில்லை... எனக்கு நீ வேணும்... இப்பவே முப்பத்திமூணு வயசுடி... இப்ப கல்யாணம் பண்ணாம... பேரன், பேத்தி எடுக்கிற வயசுலையா கல்யாணம் பண்ணிக்க முடியும்... உன் கிட்ட சம்மதத்தை எதிர்பார்த்தா அது தான் நடக்கும் போலிருக்கு... அதான் ஸ்ரைட்டா மேட்டரில் இறங்கிட்டேன்... நீ என்ன சொன்ன கல்யாணம் பண்ணிக்காம குடும்ப நடத்தலாம்ன்னா சொன்ன... இனி நடத்திட்டா போச்சு... அதுக்கு ரெடியாயிரு மை டியர் மது..." என்றவனின் இளிப்பு விகாரமாயிருந்தது.

****************************************

"மது நில்லு..." இதயாவின் குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

"என்ன...?" அவ்வளவு நேரம் பார்த்த வேலைப்பளுவினால் வந்த அசதியில் அலுப்புடன் வந்தது மதுவின் வார்த்தை.

"நாளையிலிருந்து அந்தக் கௌதம் கூட நடிக்கப் போறியாமே...?"

"ஆமாம் அதுக்கென்ன...?" சொன்ன மது சகோதரியை ஆழ்ந்து பார்த்தாள். அவளின் பார்வையின் பொருளறிந்தவளாய் இதயாவின் முகம் ஒரு நொடி கன்றியது.

"அவன் கூட எதுக்கு நடிக்கற...? அவன் உன்னை விட ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்... உன் தகுதிக்கு...?" என்று சொல்லிக் கொண்டே போனவள் தங்கையின் முறைப்பில் அமைதியானாள்.

"ஜூனியரா இருந்தா என்ன இன்னைக்குப் பேமஸ் ஆக்டர் அவர் தான்..." என்று நிறுத்தியவள், "வீணா மனசை போட்டு குழப்பிக்காதே... அவரோட நடிக்கிறதால அவர் கிட்ட மயங்கி நான் அவர் கூடப் போயிற மாட்டேன்... உங்க எல்லோருக்காகவும் கடைசி வரை உழைக்க நான் இருக்கேன்... அதனால கவலைப்படாம இரு..." என்றவளின் அருகில் வந்து கன்னம் தொட்டு நெட்டி முறித்த இதயா...

"அதுக்குச் சொல்லல மது... அந்தக் கௌதம் சரியில்லை... அதுக்குத் தான் எச்சரிக்கையா இருக்கச் சொன்னேன்... நீ நல்லாயிருக்கணும்ன்னு தான் நான் சொல்றேன்..." என்றவளை எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்த மது,

"இப்பவாவது நான் தூங்க போகலாமா...?"

"தாராளமா தூங்க போ மது..." சிரித்தவளின் சிரிப்பு அத்தனை போலியாய் இருந்தது. அதைக் கண்டு கொண்டாலும் ஒன்றும் பேசாது தனது அறையை நோக்கி நடந்தாள் மது.

இதயா மனம் முழுதும் சந்தோசத்துடன் அறைக்குள் நுழைய... அங்கே ஏற்கெனவே வந்து தூங்கியிருந்த கணவனைக் கண்டதும் கோபத்தில் பல்லை கடித்தாள். 'இந்தாளுக்கு என்னைப் பார்த்தால் மனுசியா தெரியாதா...? அதுயென்ன எப்போ பார்த்தாலும் தூக்கம்...' மனதுக்குள்

ரஞ்சனை வசைப்பாடியபடி அவனருகில் வந்து படுத்தவள் மனம் தாங்கள் இருவரும் கடைசியாக எப்போது சந்தோசமாக இருந்தோம் என்று யோசித்துப் பார்த்தது. என்ன முயன்றும் அது அவளுக்கு நியாபகத்தில் வரவில்லை. அதனால் என்ன இன்றைய நாளை அந்தத் திருநாளாக மாற்றிவிடுவோம் என்று எண்ணி அவன் மேல் கை போட்டவள்,

"ரஞ்சி..." கணவனைக் குழைந்து அழைத்தாள்.

"என்ன...?" தூக்க கலக்கத்தில் எரிச்சலுடன் வந்தது அவனது வார்த்தைகள்.

"ஏன் இவ்வளவு எரிச்சல்...? கனவில் மதுவோடு டூயட் பாடிட்டு இருக்கீங்களோ...? அதை நான் கலைத்துவிட்டேனோ...?" அவளின் நக்கல் பேச்சில்... முகத்தில் சுடு நீர் கொட்டியது போல் பதறி எழுந்து உட்கார்ந்துவிட்டான் ரஞ்சன்.

"இதயா..." என்று கத்தியவன், "என் வயசு என்ன? உன் தங்கை வயசு என்ன...? இப்படிப் பேச உனக்கு வெட்கமாயில்லை..."

"இதில் வெட்கப்பட என்னயிருக்கு...? அதிலும் இப்போ எல்லாம் இந்த மாதிரி உறவுக்கு வயசு ஒரு தடையில்லை... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா அவ காதலிக்கிற கௌதமுக்கும் உங்க வயசு தான்... அவளுக்கு உங்களை மாதிரி ஆளுங்களைத் தான் ரொம்பப் பிடிக்கும் போல..." நொடித்தவளை கண்டு அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

"இப்போ எதுக்கு இந்தத் தேவையில்லாத பேச்சு... பேசாம படு..." என்றவன் அவளுக்கு முதுகு காட்டி படுக்க...

"சரி தேவையான பேச்சு பேசலாமா..." என்றவள் அவன் பக்கம் நெருங்கிப் படுத்து,

"நம்ம அஞ்சுக்கு ஒரு தம்பியோ... தங்கச்சியோ வேணாமா...?"

"எதுக்கு அதையும் ஹாஸ்டலில் சேர்த்து விடுறதுக்கா...? நாலு வயசு பொண்ணைப் பார்த்துக்க முடியாம ஊட்டில கொண்டு சேர்த்திருக்கியே... உன்னை எல்லாம் என்ன செய்றது...? இந்த லட்சணத்தில் இன்னொரு குழந்தை வேணுமா... விளங்கிடும்..." என்றவன் மனைவியை விட்டு விலகி படுத்தான். அவனது விலகலில் அவளது தன்மானம் சீண்டப்பட, பாயும் பெண் புலியாய் அவள் சீறினாள்.

"எனக்குத் தெரியும்... உன் மனசுல மது தான் இருக்கான்னு... அது தான் என் கிட்டயிருந்து நீ விலகி விலகி போற... நான் தூங்குனதுக்கு அப்புறம் அவக்கிட்ட போய்ச் சரசம் கொண்டாடுறியோ...?" உச்சஸ்தானியில் கத்தியவளின் பேச்சில் அவன் அரண்டு தான் போனான்.

"யேய் ஏன் இப்படிக் கத்துற...?" என்றவன் வேறுவழியின்றி அவளின் வாயை இறுக மூடினான் தன் இதழால்.

இதயாவிற்குத் தெரியும் மதுவை ஒரு வார்த்தை கூறினால் தன் கணவன் தாங்க மாட்டான் என்று... அது தான் அவனது பலவீனம்... அவளது பலம்... இதைச் சொல்லி சொல்லி அவள் சாதித்துக் கொண்ட காரியங்கள் எத்தனையோ... மதுவின் வருமானம் கூட ரஞ்சனுக்குத் தெரியாமல் அவளின் வங்கி கணக்குக்கு வருவது கூட இது போன்ற பேச்சால் தான். ரஞ்சன் கணக்கு கேட்டால், 'உன் பொண்டாட்டி சொத்துன்னு உனக்குக் கவலையாயிருக்கா...?' என்ற ஒற்றைக் கேள்வியில் அவனது வாயை மூடிவிடுவாள். அதே பிரம்மஸ்திரத்தை அவள் படுக்கைக்கும் ஏவ அது நன்கு பலித்தது. காமத்துடன் அவள் அவனுடன் கூட... அவனோ கடமை என்ற உணர்ச்சியையும் தாண்டி ஜடமாய் அவளுடன் இணைந்தான். காதலுடன் கலக்க வேண்டிய கலவியில் காமமும், கடமையும் போட்டி போட்டது. அதைப் பற்றிய கவலை அவளுக்குச் சிறிதும் இல்லை.

****************************************

அன்று கௌதமுடன் நடிக்கும் படத்திற்குப் பூஜை போடும் நாள். வெகுநாட்கள் கழித்து அவனைச் சந்திக்கப் போகிற

மகிழ்ச்சியில் மது தன்னை வெகு கவனமாய் அலங்கரித்துக் கொண்டு சென்றாள். அங்கிருந்த எல்லோரும் அவளை இன்முகத்துடன் வரவேற்க... கௌதம் மரியாதை நிமித்தமாக அவளைப் பார்த்து...

"ஹாய்..." என்று கை குலுக்க... பதிலுக்கு,

"ஹாய்..." என்றவள் அவனது முகத்தைப் புன்னகையுடன் நோக்க... அவனது முகம் உணர்ச்சிகளைத் தொலைத்து இறுகி போயிருந்தது. அவன் கண்ணில் அணிந்திருந்த கறுப்பு கண்ணாடி அவன் உணர்வுகளை இன்னமும் மறைத்தது. அதற்கு மேல் என்ன பேசுவது என்று தெரியாமல் அவள் அவனை விட்டு விலகி நின்றாள். அவனும் அதைக் கண்டு கொள்ளாதவனாய் நின்றிருந்தான்.

பூஜை முடிந்ததும் இருவரையும் சேர்த்து வைத்துப் புகைப்படம் எடுக்கப் பத்திரிக்கையாளர்கள் விரும்ப... கௌதம் அவள் அருகில் வந்து நெருங்கி நின்றான். அவனது அருகாமை, அவனிடமிருந்து வரும் அவனுக்கென்ற பிரத்யேக நறுமணம் எல்லாம் சேர்த்து அவளைத் தன்வசம் இழக்க செய்தது. அவனது தோள் உரசலில் அவளையும் அறியாமல் முகம் செம்மையுற பார்ப்பதற்கு அவ்வளவு அழகாகயிருந்தாள். புகைப்படம் எடுத்து முடித்தவன் அவசரமாய் அடுத்து ஒரு படப்பிடிப்புக்கு செல்ல வேண்டுமென்று சொல்லிவிட்டு கிளம்பி சென்றான். அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு அசையாது நின்றவளின் கண்கள் அவளையும் மீறிக் கலங்கியது.

'கௌதம் இன்னமும் என் மேல் கோபம் கொண்டு தான் இருக்கீங்களா...? உங்களுக்கும் எனக்கும் இடையிலுள்ள காதல் அவ்வளவு தானா...? நான் உங்களுக்கு வேணாமா...? என் அருகாமை உங்களைப் பாதிக்கவே இல்லையா...?' அவளது மனம் கேள்வி கேட்டது.

அவளது கேள்விகள் அவனின் காதில் விழுந்ததோ என்னமோ... காரிலேறி அமர்ந்தவன் கண்ணாடி வழியே

அவளைப் பார்த்தான். அவளின் ஓய்ந்து போன தோற்றம் அவன் கண்ணில் விழுந்தது. அவளது விழி வழியே கசிந்த செய்தி அவனுக்குப் புரிந்தது.

"இதுக்கே இப்படி ஓய்ஞ்சு போனா எப்படி அம்மு...? இன்னும் நீ போக வேண்டிய தூரம் நிறைய இருக்கு..." என்று நினைத்தவனின் உதடுகள் வெற்றிக் களிப்பில் வளைந்தது.

## துளி : 6

அன்று படப்பிடிப்பு தளத்திற்குள் நுழையும் போதே மதுஸ்ரீக்கு படபடப்பாக இருந்தது. இன்றும் கௌதம் பாராமுகம் காட்டுவானா இல்லை தன்னிடம் இணைந்து இயல்பாய் பேசுவானா என்ற எண்ணம் மனதை வாட்ட சுற்றும் முற்றும் பார்த்தாள். நல்லவேளை இன்னமும் அவன் வந்திருக்கவில்லை. அதற்குள் படத்தின் இயக்குநர் அவள் அருகில் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"வணக்கம் மேம்... என்னோட பேர் தேவன்... இந்தப் படத்தோட டைரக்டர்... கௌதம் சார் தான் இந்தப் படத்தில் என்னை அறிமுகப்படுத்துறாரு..." என்றவனிடம் மரியாதை நிமித்தம் வணக்கம் சொல்லி புன்னகைத்தவள் மனம்... 'ஏன் புது டைரக்டரை போடணும்...? பேமஸ் டைரக்டராய்ப் போட்டிருந்தால் நல்லாயிருக்குமே...' என்று நினைக்கத்தான் செய்தது. பின்னர்க் கௌதம் எதைச் செய்தாலும் சரியாகத் தான் செய்வான் என்ற நம்பிக்கையில் அதைப் புறம் தள்ளினாள்.

"மேம்... இன்னைக்கு எடுக்கப் போற சீனை பத்தி எக்ஸ்ப்ளைன் பண்றேன்..." என்ற தேவன் தான் எடுக்கப் போகும் காட்சியின் அமைப்பை அவளிடம் சொல்லியவன்... அவள் நடிக்க வேண்டிய பகுதியை விளக்கினான். அவளுக்கு அது ஏற்கெனவே தெரிந்திருந்தது... ஏனெனில் இன்று நடிக்க வேண்டிய காட்சியை விரிவாக விளக்கி நேற்றே அவளுக்குக் கொடுக்கப்பட்டது விட்டது.

அந்தப் படத்தில் கிராமத்து பண்ணையார் வீட்டு பெண்ணான அவளைக் கௌதம் விரும்பி காதலித்து மணம் முடிக்க நினைக்கிறான். ஆனால் மதுவோ அவளின் தந்தைக்குப் பயந்து அவனைக் காதலிப்பதை மறைக்கிறாள்... மறுக்கிறாள். தேவன் கதையைச் சொல்லும் போதே அவளுக்கு என்னவோ போலிருந்தது. அது இந்தக் கதை அவர்களுடைய சொந்தக் கதையை உருவம் மாற்றிக் கொடுப்பது போலிருந்தது. ஆனாலும்

தேவனிடத்தில் அவள் ஒன்றும் பேசவில்லை... கௌதமிடத்தில் பேசி கொள்ளலாம் என்று பேசாது இருந்தாள்.

"மேம்... இன்னைக்குத் தான் முதல் நாள் ஷூட்டிங்கிறதால மங்களகரமான சீனை வைக்கணும்ன்னு நினைச்சு... இந்தப் படத்தில் உங்க இரண்டு பேருக்கும் நடக்கும் கல்யாண சீனை முதல்ல எடுக்கப் போறோம்..." அவன் மேலும் விவரிக்க...

"சார்... இதை நீங்க ஏற்கெனவே எக்ஸ்ப்ளைன் பண்ணிட்டீங்க..." அவளது சலித்த குரலில்...

"சாரி மேம்... முதல் படம் எல்லாம் சரியா வரணும்ங்கிற டென்சன்... அதான் இப்படித் திரும்பத் திரும்பச் சொல்றேன்... நீங்க தப்பா எடுத்துக்காதீங்க..." தேவன் சற்று பயந்து போய்ப் பணிந்தான்.

திரைப்படத் துறைக்குத் தேவையான முக்கியமான ஒன்று பணிதல்... எந்த இடத்தில்... எப்படி... யாரிடம்... பணிந்து போக வேண்டுமென்ற வித்தையை நன்கு கற்று வைத்திருக்க வேண்டும். நாணல் போல் வளைந்து கொடுத்து போக வேண்டுமே தவிர... மூங்கில் போல் வளையாமல் இருந்தால் அது உடைந்து போவது போல் பல வருட கனவுகளை நனவாக்காமல், ஆள் இருக்குமிடம் தெரியாமல் அழிந்து போக வேண்டும். அந்த வித்தையை நன்கு தெரிந்து வைத்திருந்த தேவன் மூங்கிலாக இருக்க விரும்பவில்லை... நாணலாகவே இருக்க விரும்பினான்.

"கவலைப்படாதீங்க... எல்லாம் நல்லபடியாக நடக்கும்..." அவனின் பயம் கண்டு அவனைத் தைரியமூட்டிவள் ஒப்பனை செய்யும் அறையை நோக்கி சென்றாள்.

'எவ்வளவு பெரிய நடிகை இவங்க... கொஞ்சம் கூடக் கர்வம் இல்லாமல் நடந்துக்குறாங்களே...' அவளைப் பற்றிப் பிரமிப்பாய் நினைத்த தேவன்... அதே பிரமிப்புடன் அங்கிருந்து நகன்றான்.

சாதாரணமாகக் கோவிலுக்குச் செல்லும் பெண் போல் தன்னை அலங்காரம் செய்து கொண்ட மது ஒப்பனை அறையை விட்டு வெளியில் வந்தாள். வந்தவளின் கண்ணில் அங்கு நாற்காலியில் அமர்ந்திருந்த கௌதம் விழுந்தான். வேஷ்டி, சட்டையில் இருந்த அவனது கம்பீரம் அவளை எப்போதும் போல் காந்தமாய்க் கவர்ந்திழுத்தது... ஓடி போய் அவன் நெஞ்சில் சாய்ந்து கொள்ள அவளது ஆசை கொண்ட மனம் விழைந்தது. அவனோ அவள் வந்ததைக் கூட உணராமல் தேவனிடம் மிகவும் தீவிரமாக உரையாடி கொண்டிருந்தான். அதில் அவளின் காதல் கொண்ட மனம் அனிச்சம்பூவாய் வாடியது.

"ஓகே மேம்... ஷாட்டுக்கு போகலாமா..." உதவி இயக்குநர் ஒருவனின் அழைப்பில் தன்னுணர்வு பெற்ற மது தன் கண்களைத் தாழ்த்தி கொண்டு போலியாய் நிர்மாணிக்கப்பட்டிருந்த கோவில் போன்ற அந்த அமைப்பினுள் நுழைந்தாள்.

அவளைத் தொடர்ந்து வந்த கௌதமை காண அவளின் கண்கள் துடியாய் துடிக்க... அங்கிருக்கும் அனைவரும் தங்களைப் பார்த்து கொண்டிருப்பதை உணர்ந்தவளாய் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு காட்சியில் மனதை செலுத்தினாள்.

"ஸ்டார்ட்... கேமிரா... ஆக்சன்..." என்றதும் மதுவிடம் அத்தனை நேரமிருந்த படபடப்பு எல்லாம் குறைந்து தொழில் பக்தி மேலோங்க அந்தக் கதாப்பாத்திரமாகவே மாறி நின்றாள்.

அந்தக் காட்சியின் படி அவள் கண்களை மூடி கடவுளை வேண்டியபடி நிற்க... அந்த நேரம் பார்த்து அங்கு வரும் கௌதம் அவள் கழுத்தில் கட்டாயத் தாலி கட்ட வேண்டும். கடவுள் சந்நிதானத்தில் நின்ற மது கடவுளை உற்று பார்த்தாள். செயற்கையாய் உருவாக்கப்பட்ட கோவிலாக இருந்தாலும் அங்குக் கடவுள் அலங்கரிக்கப்பட்ட விதத்தில் அவளின் மனம் நிறைய நிஜமாகவே கண்களை மூடி தன்னவனுக்காகக் கடவுளை வேண்டினாள்.

அந்த நேரம் அவளின் தோள்களை உராய்ந்து சென்ற கரங்களின் வலிமை அது யாரென்று கட்டியம் கூற... கண்களைத் திறவாமல் அவனின் ஸ்பரிசத்தை, அவன் செய்து கொண்டிருக்கும் செயலை ஒரு நிமிடம் ரசித்து அனுபவித்தாள். இது உண்மையல்ல பொய் என்று அவளுக்குத் தெரியும் இருந்தாலும் அந்த நொடி அந்தப் பொய்யான திருமணத்தை அவள் மனம் விரும்பத்தான் செய்தது. அவனுடனான திருமணத்தை அவள் நினைத்து கூடப் பார்க்க முடியாது... அதை அவளும் உணர்ந்தே இருந்திருந்தாள். அதை உணர்ந்தவளாய் சட்டென்று கண்களைத் திறந்தவள் தன் எதிரில் எதிரியை போன்று நின்று கொண்டிருந்தவனைக் கண்களில் பெருகிய காதலோடு, முகத்தில் மலர்ந்த மலர்ச்சியோடு பார்க்க...

"கட்... கட்... கட்..." தேவன் கத்தினான். அவனின் குரலில் கௌதம் மது தோள் மேலிருந்த கையை எடுக்க, சட்டென்று சூழ்நிலை ஒளியிழந்தது போல் அவள் முகம் வாடியது.

"மேம்... நான் அத்தனை தடவை சொல்லியும்... நீங்க இப்படிச் சொதப்புறீங்களே..." தேவன் அலுத்துக் கொள்ள... மதுவின் கண்களில் நீர் தேங்கியது.

"சாரி சார்... இனி இப்படி நடக்காது..." முகம் கன்ற பதில் சொன்னவளை கௌதம் திரும்பி கூடப் பார்க்கவில்லை... அவன் தன் ஒப்பனையைச் சரி செய்வதில் கவனமாயிருந்தான். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மதுவுக்கு என்னவோ போலாகிவிட்டது.

மறுபடியும் அதே காட்சியைப் படமாக்க... மீண்டும் கௌதம் அவள் கழுத்தில் தாலி கட்ட அவள் புறம் குனிந்தவன்,

"உனக்குத் தான் கல்யாணம்ன்னாலே பிடிக்காதே... அப்புறம் எதுக்குச் சந்தோசப்படுற...? அப்படியே ஜெர்க்கான மாதிரி ஒரு ரியாக்*ஷன் கொடு பார்க்கலாம்..." அவனின் வார்த்தையில் அவள் திகைத்துப் போய்க் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள். அவன் தாலி கட்டும் முன்னர் அவள் கண்களைத் திறக்க இந்த முறையும் அவள் சொதப்பிவிட்டாள்.

மீண்டும் அதே காட்சி... அவளருகில் நெருக்கமாய் அவன்... அவளுக்கு மூச்சு முட்டுவது போலிருந்தது... "இப்படி ஊரறிய நாம கல்யாணம் பண்ணிக்க வேண்டியது... எல்லாம் உன்னால கெட்டிருச்சு... ஹூம்..." என்று முணுமுணுத்தவன் விட்ட பெருமூச்சு அவளது உச்சந்தலையை உரசி செல்ல... இப்போது பெருமூச்சு விடுவது அவளது முறையானது... அவனின் மூச்சோ இயலாமையில் வந்த கோபத்தில் வந்தது... அவளது மூச்சோ அவனது மூச்சுக்காற்று உராய்வில் மூங்கில் காடுகளாய் பற்றியெறிந்த அவளது உணர்வுகளின் தாக்கத்தில் வந்தது. மொத்தத்தில் இருவருமே உஷ்ணத்தின் உச்சத்தில் இருந்தனர்.

"ஏண்டி என் கிட்ட சொன்ன மாதிரி தான் அடுத்தவன் கிட்டயும் சொல்வியா...? இப்படித்தான் தாலி கட்டாம என்னோடு வாழ வான்னு அவனையும் கூப்பிடுவியா...? இது உனக்கே வெட்கமாயில்ல..." அவன் அடிக்குரலில் கர்ஜித்தப்படி தாலியை கட்ட... அவனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவள் மனதை சம்மட்டியால் அடிக்க உண்மையில் அதிர்ந்து போனவளாய் கண்களைத் திறந்து அவனைப் பார்க்க... அவளின் அந்தப் பாவனையில்...

"சூப்பர் மேம்... வெல்டன்..." தேவன் ஆர்ப்பரிக்க... அங்கிருந்த மொத்த யுனிட்டும் கைத்தட்டி ஆரவாரம் செய்தது. அதில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் அங்கிருந்து விடுவிடுவெனச் சென்றுவிட்டாள்.

வேகமாய் நடந்து செல்லும் மதுவை பார்த்தவன் முகம் ஒரே ஒரு நொடி வேதனையைக் காட்டி சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டது. தான் பேசியது சற்று அதிகம் தான் என்பதை அவன் உணர்ந்தே தான் இருந்தான். ஆனால் அவன் காதல் திருமணத்தில் வெற்றி பெற... அந்தக் காதலுக்கு வலிக்க வலிக்க ரணச்சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயத்தில் அவன் இருந்தான். அதன் பின் நடந்த படப்பிடிப்பில் அவள் எந்தவிதமான உணர்ச்சிகளையும் காட்டாமல் இயக்குநர் சொன்னதைச் செய்துவிட்டு தன் கையிலிருந்த புத்தகத்தில் ஆழ்வதைக்

கண்டவன் முகத்தில் ரகசியப் புன்னகை மலர்ந்தது. அந்தப் புன்னகையின் பின்னணியில் அவன் அவளைக் கண்டு கொண்டதன் அடையாளம் இருந்தது.

கௌதம் நினைத்தது போல் அன்றிரவே மது அவனைத் தேடி அவன் வீட்டிற்குச் சென்றாள். அப்போது தான் கௌதம் வீட்டிற்கு வந்தவன் தனது அறைக்குச் சென்றிருக்க... அவனது தந்தை ரெங்கநாதன் வீட்டின் முன்பக்க கதவை சாத்துவதற்காக வந்தவர் மது வருவதைக் கண்டு திகைத்து போய் நின்றுவிட்டார்.

"மாமா..." அவளது அழைப்பில் அவரது தொலைந்த ஜீவன் திரும்ப...

"அம்மாடி மதும்மா... எப்படிடா இருக்க...?" என்றவர், "வாடாம்மா... உள்ளே வா..." அவளை வீட்டினுள் அழைத்தார். மது வாயிலை தாண்டும் போது ஒரு கணம் தயங்கியவள் மறுகணம் கவனமாய் வலது காலை எடுத்து வைத்து கௌதமின் வீட்டிற்குள் பிரவேசித்தாள்.

"உட்காரும்மா..." என்று சோபாவை காட்டியவர் அவள் அமர்ந்ததும் அவளருகில் அமர்ந்து, "மீனா எப்படியிருக்கா...?"

"படுத்த படுக்கையா தான் இருக்காங்க... எந்தவொரு முன்னேற்றமும் இல்லை..." அவள் சொன்ன செய்தியில் அவர் முகத்தில் வருத்தம் வந்தமர்ந்தது.

"ம்ஹூம்... பார்த்து அஞ்சு வருசத்துக்கு மேலாகுது இல்லையா... எனக்கும் மீனாவை பார்க்கணும்ன்னு தோணும்..." என்றவர் இடைவெளிவிட... அவள் மௌனம் காத்தாள். எல்லாவற்றுக்கும் காரணம் தான் தான் என்ற கழிவிரக்கம் அவள் மனதை வாட்டியது.

"சரி போனதை நினைச்சு கவலைப்படுறதால எந்தப் பிரயோஜனமும் இல்லை..." விரக்தி குரலில் கூறியவர், அவள் கையை எடுத்து பார்த்து, "என்ன மது இப்படி மெலிஞ்சு போயிட்ட...? நல்லா சாப்பிடும்மா..." அதற்கும்

கவலைப்பட்டவரை கண்டு அவள் உள்ளம் நிறைந்தது. தனக்காகக் கவலை கொள்ளும் இந்த உறவுகளை விட்டு விட்டு யாருக்காகத் தான் ஓடி கொண்டிருக்கோம் என்ற எண்ணம் தோன்ற சட்டென்று ஒருவித வெறுமை சூழ்ந்தது அவளது மனதில். முயன்று தன் மனதை கட்டுப்படுத்திக் கொண்டவள்,

"இப்போ இது தான் ஃபேசன் மாமா... ஜீரோ சைசில் இருந்தா தான் ஹீரோயின்னே ஒத்துக்கிறாங்க..." கன்னம் குழி விழ சிரித்தவளை கண்டவர் மனம் நிறைந்தது.

"அம்மாடி மது... நீ கௌதமை கல்யாணம் பண்ணிட்டு... நீயும், மீனாவும் இங்கே வந்திடுங்க... நானும், கௌதமும் உங்களை நல்லா பாரத்துக்குவோம்..." அவரின் வார்த்தைக்கு அவள் தலை கவிழ்ந்து அமர்ந்திருக்க...

"கௌதமை கூப்பிடவா மதும்மா..." அவரே பேச்சை மாற்ற... அதில் நன்றியுடன் நிமிர்ந்தவள்...

"நான் போய் அவரை..." அவனைத் தனிமையில் சந்திக்க வேண்டும் என்பதை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் அவள் நிறுத்த... அவர் சிரித்தபடி,

"போய்ப் பாரும்மா... மாடியில் தான் இருக்கான்..." இன்னமும் செல்லாமல் அவள் தயங்குவதைக் கண்டு, "உன் மேலயும், கௌதம் மேலேயும் எனக்கு நம்பிக்கையிருக்கு... போம்மா..."

'இத்தகைய நம்பிக்கையை வைத்திருக்கும் மாமாவுக்கு மட்டும் என் மனதின் அசிங்கம் தெரிஞ்சா...' தன்னைக் குறித்து அருவருப்பு எழ மனதுக்குள் குன்றி போனாள்.

"இன்னும் என்ன தயக்கம் போம்மா..." என்றவர் தனது அறைக்குச் சென்றார். அவருக்குத் தெரிந்திருக்கவில்லை... அவரது எண்ணம் பொய்க்கப் போவதை... அதுவும் தன் மகனால் பொய்க்கப் போவதை அவர் அறிந்திருக்கவில்லை.

மெல்ல மாடியேறியவள் கௌதம் அறையின் முன் வந்து நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பின் கதவை தட்டினாள். முகம் கழுவி கொண்டு வந்த கௌதம் வந்திருப்பது தன் தந்தை என்றெண்ணி,

"கதவு திறந்து தான் இருக்குப்பா... உள்ளே வாங்க..." என்று குரல் கொடுக்க... கதவை திறந்து கொண்டு அவனது அறைக்குள் சென்றாள் மது. கௌதமின் மனைவியாய் உரிமையோடு அவள் செல்ல வேண்டிய அவனது அறையில்... தங்கள் அறையில் கதவை தட்டிவிட்டு உள்ளே நுழையும் தன் துர்பாக்கிய நிலையைச் சபித்தவளாய் நுழைந்தாள்.

தன்னுடைய அறையில் மதுவை எதிர்பார்க்காத... அதுவும் இந்த நேரத்தில் சற்றும் எதிர்பார்க்காத கௌதமின் விழிகளில் முதலில் வியப்பு தோன்றி பின் மெதுவே அது மறைந்து அதன் இடத்தை மகிழ்ச்சி தக்க வைத்துக் கொண்டது. அவளை வரவேற்கும் வண்ணம் தன்னை மறந்தவனாய் அவளை நோக்கி ஒரு எட்டு வைக்கப் போனவன்... ஏதோ நியாபகம் வந்தவனாய் தலையைக் குலுக்கி கொண்டு தன்னை நிலைப்படுத்திக் கொண்டான்.

"ஏதேது உனக்கு என்னோட நியாபகம் எல்லாம் இருக்குப் போலிருக்கு... என்னைத் தேடி அதுவும் என் ரூமுக்கே வந்திருக்க..." துவாலையால் முகத்தைத் துடைத்தவன் வார்த்தைகள் நக்கலாய் வந்தது.

"கௌதம் ஏன் அப்படிச் சொன்னீங்க...?" மது அமைதியாய் கோபத்தை அடக்கி கொண்டு கேட்க...

"அட... நான் என்னமோ சொல்ல கூடாததைச் சொன்னது போல... நீ கேட்க கூடாததைக் கேட்டது போல எதுக்கு இத்தனை பில்டப்... கொஞ்ச மாசத்துக்கு முன்னாடி இதே வார்த்தையை நீ சொல்லி நான் காது குளிர கேட்டாச்சு... அதே இதை நான் மாத்தி சொன்னேன்... அதுக்கு என்ன இப்போ...?" கடும் சீற்றத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்.

"நான் என்ன அர்த்தத்தில் சொன்னேன்... நீங்க என்ன அர்த்தத்தில் சொன்னீங்கன்னு உங்களுக்குப் புரியலையா...?" கேட்கும் போதே அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. என்னமாய் வார்த்தையால் தன்னைக் காயப்படுத்திவிட்டான் என்று...

"ரெண்டுக்கும் ஒரே அர்த்தம் தான்... அதான் தாலி கட்டாமல் குடும்பம் நடத்துவது... என்ன குடும்பம் நடத்தும் ஆள் தான் மாறிப் போயிருக்கு அவ்வளவு தான்... உனக்கு இதெல்லாம் ஒரு மேட்டரா என்ன...?" இரு புருவங்களையும் தூக்கி நக்கலாய் கேட்டவனைக் கண்டு அவளுக்குக் கொலைவெறியே வந்தது.

"என்ன சொன்னீங்க கௌதம்...?" ஆக்ரோசத்துடன் கேட்டபடி அவன் அருகில் வந்தவள் அவனின் டீசர்ட்டின் காலரை ஆத்திரமாய்ப் பற்றியிருந்தாள். அவனோ நிதானமாய்த் தன் பார்வையை அவளுள் ஊடுருவியபடி,

"நான் இருக்கும் திசைப்பக்கம் திரும்பி பார்க்காத உன்னை... எப்படி என் வீடு தேடி வரவழைச்சேன் பார்த்தியா...? இது தான் ஆரம்பம்டி... வருவ... நீ வருவ... கௌதம் எனக்கு எல்லாமே நீங்க தான் என்னைத் தேடி வருவ... என் வார்த்தை தாங்க முடியாம இப்போ என் அறையைத் தேடி வந்த நீ... என்னோட செயல்கள் தாங்க முடியாம என்னைத் தேடி வருவ... என் படுக்கைக்கு..." என்றவன் ஒரு நொடி நிறுத்தி, பின் "வருவ..." என்று நம்பிக்கையுடன் முடித்தவன் அவளை அலட்சியமாய்ப் பார்த்தான்.

அவனின் வார்த்தையில் ஒரு கூடை தணலை தலை மேல் கொட்டியது போல் அவள் துடிதுடித்துப் போனாள். பலமில்லாது ஓய்ந்து போனவளின் கைகள் இறுக பற்றியிருந்த அவனின் டீசர்ட்டை விடுவித்தது. இதே போல் தானே தன்னுடைய வார்த்தைகளும் அவனை உயிரோடு கொன்றிருக்கும் என்பதை ஏனோ அந்தக் கணம் அவள் மறந்து தான் போனாள்.

## துளி : 7

மதுவை காயப்படுத்த வேண்டும் என்ற வெறியில், தன்னைப் புரிந்து கொள்ள மாட்டேங்கிறாளே என்ற ஆதங்கத்தில், தன்னுடைய இத்தனை நாள் காத்திருப்புக்கு அவளிடத்தில் எந்தப் பிரதிபலிப்பும் இல்லையே என்ற கோபத்தில் கௌதம் சற்று அதிகமாகத் தான் பேசிவிட்டான். அதை அவனும் உணர்ந்தே தான் இருந்தான். ஆனால் அன்று அவள் பேசிய வார்த்தைகள் தனக்கு என்ன மாதிரியான வலியை உண்டு பண்ணியிருக்கும் என்பதை அவளும் உணர வேண்டும்... தெரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணி தான் அவன் அவ்வாறு சொன்னது.

அது அவளை இந்தளவுக்குக் காயப்படுத்தும் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. தன்னுடைய வார்த்தையில் துடித்துப் போய் நின்றிருந்தவளை அரவணைத்து 'நானிருக்கேன்டி உனக்கு...' என்று ஆறுதல் கூற விழைந்தது அவனது மனம். அவளை அரவணைக்க அவனுக்கு ஒரு நொடி போதும்... ஆனால் அதன் பின் வேதாளம் முருங்கை மரமேறின கதையும், பழைய குருடி கதவை திறடி கதையும் தான் இங்குத் தொடரும். முயன்று தன் மனதை பாறையாய் இறுக செய்தவன்,

"என்ன பேயறைஞ்ச மாதிரி நிக்க...? நீ சொன்ன அதே வசனத்தைத் தானே நான் இப்போ சொன்னேன்... நீயும் என்னைப் படுக்கைக்குக் கூப்பிட்ட... நானும் உன்னைப் படுக்கைக்குத் தான்ம்மா கூப்பிட்டேன்... கல்யாணம் பண்ணிக்கக் கூப்பிடல..." முயன்றளவு கேலியை தன் குரலில் தேக்கி அவன் கூறினான்.

"போதும் கௌதம்... போதும்..." அவன் பேச்சை தாங்க மாட்டாதவளாய் தன் இரு காதுகளையும் பொத்தி கொண்டாள் மது.

"நான் சொன்னதுக்கும்... நீங்க சொன்னதுக்கும் வித்தியாசம் இல்லையா...? நான் சொன்னதுக்குக் காரணம்

நான் உங்க மேல வச்ச காதல்... உங்களை இழந்துவிடுவேனோங்கிற தவிப்பில் வந்த வார்த்தைகள்... ஆனா நீங்க சொன்னது...? அதுக்கு அர்த்தம் தெரிஞ்சு தான் பேசுனீங்களா...? கௌதம் உங்களால எப்படிக் கௌதம் அதுவும் என்னைப் பார்த்து இப்படிப் பேச முடிஞ்சது...?" அதுவரை உருக்கமாய்ப் பேசியவள் சட்டென்று நிமிர்ந்தாள்.

"நான் ஒரு நடிகைங்கிறதால தானே... இதே இது இந்த மது அம்மா, அப்பாவுக்கு நல்ல மகளா... உடன்பிறப்புகளுக்கு நல்ல சகோதரியா... கணவனுக்கு நல்ல மனைவியா இருந்திருந்தா இப்படியொரு கேள்வியை நீங்க என்னைப் பார்த்து கேட்டு இருப்பீங்களா கௌதம்... அவளைச் சேர்ந்தவங்க கேட்க தான் விட்டுருவாங்களா...? இப்போ நான் தட்டி கேட்க யாருமில்லாத அநாதை... நாலு பேரு முன்னாடி பல்லை காட்டி நடிக்கிற நடிகைங்கிறதால தானே உங்களுக்கு என்னைப் பார்த்தா இளக்காரமா போயிருச்சு... நான் என் அழகை காட்டி சம்பாதிக்கிறவளா இருக்கலாம்... ஆனா நான் உடலை காட்டி, அதை வித்துச் சம்பாதிக்கிற வேசியில்லை... முதல்ல அதைப் புரிஞ்சிக்கோங்க கௌதம்..."

ஆவேசமாய்ப் பேசி கொண்டே போனவளை கண்ணிமைக்காமல் பார்த்தான் கௌதம். அவளின் பேச்சில் அவன் சற்று அசந்து தான் போனான். எப்போதுமே அவளின் நிமிர்வு, தைரியம், குறும்பு, கலகலப்பு எல்லாமே அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். காதலில் மட்டுமே அவள் குழைந்து உருகி... கண்ணீர் விட்டு அழுது என்று வெவ்வேறு பரிணாமங்களைக் காட்டி அவன் பார்த்து இருக்கிறான். அதுவும் அவனிடம் அவள் கொண்ட உரிமையினால் வந்தது அன்றோ... முதன் முறையாய் காதலில் தன் நிமிர்வை காட்டியிருக்கிறாள். வெகுநாட்கள் கழித்து அவளின் நிமிர்வை கண்டவன் முகத்தில் லேசாகப் புன்னகை வந்தமர்ந்தது.

அவன் ஆணாய் அவளின் உணர்வுகளை எடை போட்டு கொண்டிருந்தவன்... பெண்ணாய் அவளின் மனவுணர்வுகளை எடை போட தவறிவிட்டான். அவளின்

ஆவேசப் பேச்சின் பின்னால் இருக்கும் மனவலியை கணிக்கத் தவறிவிட்டான். அந்த வலியின் பின்னால் இருக்கும் காயத்தின் அளவை, ரணத்தின் அளவை அவன் அறிந்திருக்கவில்லை. அவனுக்கே தெரியாத பல ரகசியங்கள் அவள் வாழ்வில் உண்டு. அவனும் அவளும் இணைவதற்கு அதுவும் ஒரு தடைக்கல்லாக இருக்கிறது என்பதை அறியாதவனாய் அவனிருந்தான். என்றுமே பெண்களின் சூட்சம புத்தி ஆண்களுக்குக் கிடையாது என்பது சரி தானோ...?

"நீங்க நினைச்சவுடனே உங்க படுக்கைக்கு வர நானொண்ணும் கேவலமான பெண் இல்லை... அதுக்குன்னு இருக்கிற பெண்கள் கிட்ட ட்ரை பண்ணுங்க கௌதம்... என் கிட்ட வேணாம்..."

அவளின் வார்த்தைகள் மீண்டும் அவனைக் கோபப்படுத்தியது. பேசிவிட்டு வேகமாய் அறையை விட்டு வெளியேற போனவளின் கையை எட்டி பிடித்தவன் அவளைச் சுண்டி இழுத்தான் தன் புறமாக... அவன் இழுத்த வேகத்தில் அவன் நெஞ்சில் மோதி தடுமாறி நின்றவள் சுதாரிக்கும் முன்... அவளின் இடையில் கை கோர்த்து இன்னமும் நெருக்கமாய் அவளருகில் நெருங்கி நின்றவன்,

"என்னடி சொன்ன...? யாரை பார்த்து இப்படியொரு வார்த்தை சொன்ன...? நான் வேற பொண்ணைப் பார்த்து போகணுமா...? அப்படிப் போகணும்ன்னு நினைச்சிருந்தா... அஞ்சு வருசத்துக்கு முன்னாடி நீ என்னைத் தூக்கியெறிஞ்சிட்டு போனப்பவே நான் போயிருக்கணும்டி... இத்தனை நாள் உனக்காகக் காத்துட்டு இருக்கணும்ன்னு அவசியம் எனக்கு இல்லைடி... நீ செஞ்ச துரோகத்தை மறந்துட்டு... என் இழப்பை கூடப் பெரிசா எண்ணாம..." இதைச் சொல்லும் போதே அவனின் முகம் வேதனையைச் சுமந்திருந்தது.

அவனின் வேதனையைக் கண்டவள் மனதிலும் வேதனை ஊற்றெடுத்தது. அதையும் மீறி அவனின் வார்த்தைகள் அவள் காதில் தேனாய்ப் பாய்ந்தது. அவளைத் தவிர வேறு

பெண்ணை அவன் கண்ணால் கூடத் தீண்ட மாட்டான் என்று அவளுக்கு நன்கு தெரியும். ஆனால் அதை அவன் வாயால் கேட்கும் போது அவள் அடைந்த உவகைக்கு அளவே இல்லை. 'என் கௌதம்' பெருமையாய் நினைத்தது அவளது மனம். அவன் கோபப்பட்டு வார்த்தையைத் தவறாக விட அதனால் அவளும் பொங்கிவிட்டாள். இப்போது அவள் மனதிலிருந்த அவன் மீதான கோபம் போய்க் காதல் எழுந்தது.

அவளையும் அறியாமல் அவளது கரங்கள் அவனின் முகம் தடவியது. காதலும் காலநிலையும் சில நேரங்களில் ஒன்று தான்... எப்போது வெயிலடிக்கும்... எப்போது குளிரடிக்கும்... எப்போது இடி மின்னலுடன் மழை பொழியும்... எப்போது சாரலடிக்கும்... என்று யாருக்குமே தெரியாது... அதே போல் தான் அவனின் கோபத்தில் கோபம் கொண்டவள்... அவனின் வேதனையில் தானும் வேதனையில் உழலுகிறாள். கோபத்தில் சூரியனாய் தகித்தவள்... காதலில் மனதை கவரும் சாரலாய் அவனை இதம் கொள்கிறாள்.

"சாரி கௌதம்... உங்க கிட்ட மன்னிப்பு கேட்க கூட எனக்கு அருகதையில்லை... உங்க வேதனைக்கு நான் மட்டும் தான் காரணம் அது மட்டும் எனக்கு நல்லா தெரியும்..." என்றவள் அவனின் கழுத்தை வளைத்து தன் தோளோடு சேர்த்து ஆறுதல் படுத்த முயல... அவனோ அவளிடமிருந்து திமிறியபடி நிமிர்ந்தவன்,

"உன் ஆறுதல் ஒண்ணும் எனக்கு வேணாம்... அழுகிற குழந்தைக்கு ஐஸ்க்ரீம் காட்டி ஏமாத்தற மாதிரி... உன் காதலை அப்பப்போ காட்டி என்னை ஏமாத்தற... நான் ஆசையா உன் கிட்ட வரும் போது அந்த ஐஸ்க்ரீம் மாதிரி உருகி காணாம போயிடற... ஆசை காட்டி மோசம் பண்றதே உனக்கு வேலையா போச்சு..." அவளின் தோள் பற்றி உலுக்கி ஆவேசமாய்க் கேட்டவனை அவள் செய்வதறியாது பார்த்து கொண்டிருந்தாள். அவன் சொல்வதும் உண்மை தானே...

"எனக்கு நீ தான் வேணும்... வேற எந்தப் பொண்ணு வேணாம்... வர்றியாடி..." என்றவன் அவளைப் படுக்கையில் தள்ளி தானும் அவளோடு சரிந்தான்.

"ஐய்யோ கௌதம் என்ன பண்றீங்க...?" அவள் கேட்டதைக் கவனிக்காமல் அவள் முகம் முழுவதும் முத்த ஊர்வலம் நடத்தியவன்,

"அன்னைக்கு நீ கேட்டதை இன்னைக்குக் கொடுக்கப் போறேன்டி..." என்றவன் தன் வேலையில் கவனமாயிருக்க...

"மாமா என்ன நினைப்பார்...?"

"ம்... நாளைக்குக் காலையிலேயே கல்யாணத்தை முடிப்பார்..." என்றவன் அடுத்தக் கட்ட நடவடிக்கையாக அவளைப் பேசாது செய்தான் தன் இதழ் கொண்டு... திமிறியவளை அடக்குவது ஒன்றும் அவனுக்குக் கஷ்டமாயில்லை... ஜீரோ சைஸ் உடம்புக்காரி அந்தச் சிக்ஸ் பேக் உடம்புக்காரனிடம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தோற்றுப் போய்க் கொண்டிருந்தாள். அவனிடம் தான் கேட்டதைத் தான் அவன் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான் என்ற போதும் அவளால் அவனுடன் முழுமனதுடன் ஒன்ற முடியவில்லை.

'கௌதம் மேலயும்... உன் மேலயும் எனக்கு நம்பிக்கையிருக்குமா...' என்று சொன்ன ரெங்கநாதன் வார்த்தைகளே அவள் காதில் ஒலிக்க... அவள் வாய் மெதுவே முணுமுணுத்தது.

"நான் வேணும்ன்னா... அந்த நான்ங்கிறது என் மனசா... இல்லை என் உடலா கௌதம்...?" அவளின் வார்த்தையில் அவன் அதிர்ந்து போய் அவளிடமிருந்து அவசரமாய் விலகி அமர்ந்தான். மது மெல்ல எழுந்து அமர்ந்தவள் தன் உடையைச் சரி செய்து கொண்டு அவனருகே அமர்ந்தாள். அவன் கையை எடுத்து தன் கைக்குள் பொத்தி வைத்து கொண்டவள்,

"என் உடல் தான் தேவைன்னா அதை இப்பவே எடுத்துக்கோங்க... ஆனா அது என் மனசுன்னா இங்கே வேணாம் கௌதம்... மாமா நம்ம மேல ரொம்ப நம்பிக்கை வச்சிருக்காரு கௌதம்... நம்ம காதலுக்காக என்னைத் தர நான் தயாராயிருக்கேன்... ஆனா அது இங்கே வேணாம்..." என்றவளை அமைதியாய் பார்த்தவன்,

"அப்போ நாளைக்கே ஹோட்டல்ல ரூம் போடவா...?" அவனின் ஆக்ரோச பேச்சின் அர்த்தத்தை உணர்ந்தவள் மனதுக்குள் ஒரு நொடி அதிர்ந்தாலும் உடனே அதை மறைத்துக் கொண்டு சம்மதமாய்த் தலையை ஆட்டினாள்.

அவளின் சம்மதம் கண்டு அவன் தான் உள்ளுக்குள் ஆடி போனான். அவளின் காதல் அவனைப் பிரமிக்க வைத்தது. அத்தகைய அவளது நேசம் தவறான பாதையில் செல்வதைக் கண்டவன் மனம் நொந்து தான் போனது. அவளின் முகம் பார்க்காமல் எழுந்து நின்றவன்...

"நீ போகலாம்..." அவனின் வார்த்தையில் கட்டிலை விட்டு எழுந்தவள் அவன் முதுகில் சாய்ந்து பின்புறமாக அவனை அணைத்து கொண்டவள்,

"நீங்க பேசின வார்த்தையில கோபப்பட்டு... உங்க கிட்ட சண்டை போடணும்ன்னு தான் வந்தேன்... ஆனா கௌதம் உங்க காதல்ல நீங்க என்னை அப்படியே கட்டி போட்டுட்டீங்க..." என்றவள் குரல் திடீரெனக் கமறியது.

"எப்பவுமே நான் தான் உங்களைக் காயப்படுத்துவேன் கௌதம்... ஆனா இப்ப என்ன புதுசா நீங்க என்னைக் காயப்படுத்துறீங்க? இது உங்க முறையா கௌதம்...? வேணாம் கௌதம்... என் கௌதமுக்கு இது அழகு இல்லை... கெட்டவளாய் இந்த மது மட்டுமே இருந்திட்டு போறேன்... நீங்க மாற வேணாம்... நீங்க எப்பவும் போல நல்லவங்களா இருங்க..." என்றவளின் கையைப் பிடித்துத் தன் முன் நிறுத்தியவன் அவளை உற்று நோக்கி,

"என்னை ரொம்ப நம்பாதே அம்மு... நான் எதையாவது அடையணும்ன்னா... அதை அடையறதுக்காக எந்த

எல்லைக்கும் போவேன்... இப்போ நான் அடைய நினைக்கிறது உன்னை..." என்றவனின் பேச்சில் நியாயத்துக்கு அவள் மிரள வேண்டும்... இல்லை கோபமாவது பட வேண்டும். ஆனால் மாறாக அவளது கண்கள் மின்னியது... ஆசையாக அவனைப் பருகுவது போல் பார்த்தாள். அவன் என்னவென்று புருவத்தை உயர்த்திய போது சட்டென்று தன் முகபாவனையை மாற்றிக் கொண்டவள்,

"என்னை அடையறதுல உங்களுக்கு எந்தத் தடையுமில்லை கௌதம்... ஆனா அது காதலால் மட்டுமே முடியும்... கல்யாணத்தால இல்ல..." என்றவள் எம்பி அவன் கன்னத்தில் அழுத்தமாய்த் தன் முத்திரையைப் பதிக்க...

"ராட்சசி..." என்று கன்னத்தைத் தடவியவன் வாய் முணுமுணுத்தான் அவன்.

"குட்நைட் கௌதம்..." என்றபடி அவள் வெளியேற... அவள் பின்னேயே அவன் சென்றான்.

"இந்நேரம் எப்படித் தனியா போவ...?" என்று கேட்டபடி அவளுடன் இணைந்து அவன் நடக்க...

"வேணும்ன்னா என் கூட வர்றீங்களா...?" தலை சரித்துக் கேட்டவள் அழகில் தன்னை மறந்தவனாய்,

"உன் வாழ்க்கை முழுசும் வர தான்டி நான் விரும்பறேன்... ஆனா நீ தான் வர மாட்டேங்கிற..." என்றவனின் பேச்சில் வாய் மூடி களுக்கென்று சிரித்தாள்.

"இப்போ கூட வந்தாலேயே நாளைக்குக் காலையில் கொட்டை எழுத்துல முதல் பக்கத்துல பேப்பருல போட்டுருவான்... இதுல வாழ்க்கை முழுசுமா...? நான் வரலைப்பா இந்த ஆட்டத்துக்கு..." என்றவள் மேலே நடக்க...

"இப்போ நீ வந்ததை மட்டும் எழுதாம தான் இருக்கப் போறாங்களா... போடி பேசாம..." கோபத்துடன் சொன்னவனை நின்று பார்த்தவள்,

"நாம வாழ போற வாழ்க்கையில் அதையும் சந்திச்சு தான் ஆகணும்ன்னா அதுக்கும் நான் தயார் தான்..." என்றவள், "அதை நான் சந்தோசமா ஏத்துக்குவேன்... ஏன்னா என் கௌதம் கூடத் தானே என்னைக் கிசுகிசுக்கிறாங்க... அதுல எனக்குச் சந்தோசம் தான்..." என்றவளின் காதல் அவனின் இதயத்தை ஊடுருவி சென்று அவனுள் சுகமாய்ப் பரவியது.

"பை..." என்றபடி காரிலேறி புறப்பட்டவளை அனுப்பி வைத்துவிட்டு அறைக்குள் நுழைந்தவன் கண்ணில் கசங்கிய படுக்கை பட்டு அவனின் தாபத்தை அதிகரித்தது.

படுக்கையில் அமர்ந்து அதைத் தடவி கொடுத்தவன் கண்கள் கலங்கியது... வாய் மெதுவே முணுமுணுத்தது... "அம்மு... ஐ லவ் யூடி..."

அவளிடம் போலியாகவாவது கோபம் கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்த அவனது எண்ணம் அவளின் காதலில் காணாமல் போனது. அவளின் காதலின் முன் தான் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செயலாற்ற முடியுமா? என்ற கேள்வி அவனுள் எழுந்து அவனை ஆட்டம் காண செய்தது. அவளின் காதலுக்கு அவன் கொடுக்கப் போகும் பரிசு துரோகம்... அதை அறிவாளா அவள்...?

அவளின் காதல் முக்கியமா இல்லை அவர்களின் காதலை அடுத்தக் கட்டத்துக்குக் கொண்டு செல்ல போகும் திருமணம் முக்கியமா...? மனதில் கேள்வி ஊசலாட... அவன் தலையைப் பிடித்துக் கொண்டான்.

எல்லாம் நொடி நேரம் தான் தீர்க்கமாய் முடிவெடுத்தவனாய் நிமிர்ந்தவன், "அவளை நிரந்தரமாய் என்னிடம் வரவழைக்கும் கல்யாணம் தான் எனக்கு முக்கியம்... அதுக்காக நான் எதையும் செய்வேன்..." உறுதியாய் நினைத்தவன் அவளின் காதலை கொன்று தங்களின் காதலை வாழ வைக்க எண்ணினான். காதல் வேறு... கல்யாணம் வேறு என்பதை அவன் உணர்வதற்கு அவன் கொடுக்கப் போகும் விலை...??????

## துளி : 8

"மேகா... நாளைக்கு என்ன ப்ரோகிராம்...?" படப்பிடிப்பு முடிந்து வீட்டிற்குக் காரில் சென்று கொண்டிருந்த மது மேகாவிடம் நாளைக்கான வேலைகள் என்னென்ன என்று கேட்டதில் மேகா என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தன் கைகளைப் பிசைந்தாள். அவள் நெஞ்சில் தடக் தடக்கென்று இரயில் வேகமாய்க் கூவி கொண்டு ஓடியது. கௌதம் கூடக் கூட்டணி சேர்ந்து கொண்டு மதுவுக்கு எதிராகச் செய்த சதி மட்டும் மதுவுக்குத் தெரிய வந்தால் தன்னை உண்டு இல்லையென்று ஆக்கிவிடுவாள் என்று அவளுக்கு நன்கு தெரியும். அதை விடத் தன்னுடைய முதலாளிக்கு தான் விசுவாசமாக இல்லை என்ற நினைவே அவள் நெஞ்சை அறுத்தது. தான் நன்றி கெட்ட நாயாகப் போய்விட்டோமே என்று அவளின் துரோகமே அவளை உயிரோடு கொன்றது.

"என்ன மேகா... சத்தத்தையே காணோம்...? ஒண்ணு ஃபோன் பேச வேண்டியது... இல்லை ட்ரீமில் இருக்க வேண்டியது... எப்பவுமே நீ நீயா இருக்க மாட்டியா மேகா...?" மது சலித்துக் கொண்டவள், பின் மெதுவே... "ஏன் மேகா... நீ யாரையாவது காதலிக்கிறியா...?" அவளின் பேச்சில் திடுக்கிட்டு போன மேகா ஒரு அதிர்ந்த பார்வையை மதுவின் மேல் பதித்தாள். மேகாவின் அதிர்வு கண்டு புன்னகைத்த மது,

"மேகா... காதலிக்கிறது ஒண்ணும் தப்பில்லை..." அவளின் வார்த்தையில் மேகாவிற்குப் பழையபடி ஜீவன் திரும்பியது.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை மேம்..." என்றாள் பொய்யாக... அவள் தன் காதலை மறைத்தது ஏனென்றால்... அவள் காதலிக்கிறேன் என்றால் அந்தக் காதலன் யாரென்று மது கேட்பாள். மேகாவால் இப்போதைக்குக் கணேஷின் பெயரை மதுவிடம் சொல்ல முடியாது. அதே சமயம் கணேஷை தவிர வேறொருவனைப் பொய்யாய் கூடத் தன் காதலனாய் கூற அவளுக்கு மனம் வரவில்லை.

"மேம்... நாளைக்கு எந்த ஷூட்டிங்கும் இல்லை..." குற்றவுணர்ச்சி மேலோங்க மெதுவாய் சொன்னாள் மேகா.

"ஏன்...?" மதுவின் புருவங்களும், கண்களும் யோசனையாய்ச் சுருங்கியது.

"கௌதம் சார் படம் முடியுற வரைக்கும் வேறெந்த படத்திலும் நடிக்க மாட்டேன்னு காண்ட்ராக்ட்ல சைன் போட்டிருக்கிறீங்க மேம்..."

கௌதம் என்ற வார்த்தையில் மது சட்டென்று அமைதியானாள். அவனுடன் சேர்ந்து நடிக்கப் போகும் சந்தோசத்தில், அவன் கொடுத்தனுப்பிய ஒப்பந்தம் என்றதால் அவள் அதை வாசித்துப் பார்க்க கூட மறந்துவிட்டாள். அவள் மனதிலிருந்த காதல் அந்நேரம் கௌதமை சந்தேகப்பட விடவில்லை. அப்போது மட்டுமல்ல இப்போதும் கௌதமை அவளால் சந்தேகப்பட முடியவில்லை. மதுவின் அமைதியை கண்டு மேகாவின் மனம் கலங்கியது.

"மேம்... நான்..." என்று இழுத்தவளின் கையை ஆறுதலாய் தட்டி கொடுத்த மது,

"நீ படிச்சு பார்க்க தான் சொன்ன நான் தான் கேட்கல..." சிரித்தபடி கூறியவள், "இப்படி ரெஸ்ட்டே இல்லாமல் ஓடிட்டு இருக்கேன்ல... எனக்கு ரெஸ்ட் கொடுக்கத் தான் கௌதம் அப்படிச் செஞ்சியிருக்கணும்... நீ கௌதமை தப்பா நினைக்காதே..." ஒருவேளை இதனால் மேகா கௌதமை தவறாக நினைத்து கொள்வாளோ என்ற எண்ணத்தில் மது தன்னையும் அறியாமல் தன் மனதை அவளிடம் சொல்லிவிட்டாள். காரின் ஓட்டுநரையும் கூட அவள் கருத்தில் கொள்ளவில்லை. அவள் மனதில் கௌதம் மட்டுமே நிறைந்திருந்தான்...

"இதை நீங்க சொல்லணுமா மேம்... சாரை பத்தி எனக்குத் தெரியாதா...?" மேகா கூறியதும் மதுவின் முகத்தில் புன்னகை விரிந்தது. அதைக் கண்ட மேகாவின் மனமும் நிறைந்தது. மதுவும், கௌதமும் நீண்ட நாள்

சந்தோசத்துடன் வாழ வேண்டும் என்று அவள் மனம் கடவுளிடம் பிரார்த்தனை செய்தது.

மறுநாள் விடுமுறையை உற்சாகத்துடன் கழித்தாள் மது. எந்தவித பரபரப்பும் இல்லாமல் நிதானமாக எழுந்தவள் அதே நிதானத்துடன் அன்றைய வேலைகளைச் செய்ய மனதுக்குள் மகிழ்ச்சியாய் உணர்ந்தாள். இது போன்ற ஓய்வை அவள் இப்போதைக்கு எடுத்தது போல் அவளுக்கு நியாபகமில்லை.

'தேங்க்ஸ் கௌதம்...' அவளின் வாய்த் தாமாக முணுமுணுத்தது.

"என்ன மது இன்னைக்கு ஷூட்டிங் இல்லையா...? வீட்டில் இருக்கிற...?" இதயாவின் குரல் மதுவின் சந்தோச மனநிலைக்கு எதிர்ப்பதமாய் அபஸ்வரமாய் ஒலித்தது. மது வீட்டிலிருப்பதைக் கண்டு இதயாவிற்குத் தான் பக்கென்றிருந்தது. மது நடிக்காவிட்டால் அவளுக்குத் தான் இந்தச் சொகுசு வாழ்வு ஏது...? நடிகையின் அக்கா என்ற பந்தா ஏது? அது இல்லாமல் போய்விடுமோ என்கிற பயம் அவளுக்கு... அவளின் அச்சம் அவளுக்கு...

"இன்னைக்கு ஷூட்டிங் இல்லை..." மொட்டையாக அறிவித்தாள் மது.

"ஏன்...?" சந்தேகமாகப் பார்த்தாள் இதயா.

கௌதம் படம் முடியும் வரை வேறெந்த படத்திலும் நடிக்கப் போவதில்லை என்று கூறிய மதுவை கண்டு, "நினைச்சேன்டி... அவன் இந்த மாதிரி தான் ப்ளான் பண்ணுவான்னு... நீ எங்களுக்காக இருக்கிறன்னு அவனுக்குப் பொறாமை... அதான் உன்னை வேற படங்கள்ல நடிக்க விடாம பண்றான்... பார்த்து ஜாக்கிரதையா இருந்துக்கோ... அந்தக் கௌதம் பொல்லாதவன்..." அவன் மீதுள்ள எரிச்சலை மதுவிடம் காண்பித்தாள் இதயா. இதயாவிற்குக் கௌதமை கண்டாலே பிடிக்காது... அதிலும் அன்று அவளைப் பார்த்து

அவன் கேட்ட கேள்விகள் அனைத்தும் அவள் மனதில் நெருஞ்சி முள்ளாய் குத்தி கொண்டிருக்கிறது.

"உங்களை விட என் மேல் அவருக்குத் தான் அதிக அக்கறையிருக்கு..." பட்டுக்கத்தரித்தாற் போல் கூறிய மது தன் அன்னையின் அறைக்குச் சென்றாள். அதைக் கண்டு இதயா முகத்தை நொடித்துக் கொண்டாள்.

அப்போது தான் எழுந்திருந்த அவளது அன்னை அவளைப் பார்த்து புன்னகைத்தார். "அம்மா... இன்னைக்குப் பூராவும் உங்க கூடத் தான் நான் இருக்கப் போறேன்..." என்றவளை பார்த்து படப்பிடிப்புக்கு போகவில்லையா என்று அவர் சைகையில் கேட்க...

"இல்லைம்மா... உங்க மாப்பிள்ளை எனக்கு ரெஸ்ட் கொடுத்திருக்கிறார்..." பெருமையுடன் சொன்ன மகளைக் கண்டதும் அவரது கண்கள் கலங்கியது. மகளின் கையை எடுத்து தன் கன்னத்தோடு வைத்து கொண்டவர் சைகையில்... 'கௌதமை திருமணம் செய்து கொண்டு இங்கிருந்து போய்விடு... என்னைப் பற்றிக் கவலைப்படாதே...' என்று சொல்ல... மதுவின் விழிகளும் கலங்கியது.

"அதுக்கான கொடுப்பினை எனக்கு இல்லைம்மா..." என்றவள், "அதை விடுங்கம்மா... இன்னைக்கு நான் தான் உங்களைக் குளிப்பாட்டி, சாப்பாடு ஊட்டி விட்டு உங்களோட எல்லா வேலையையும் பார்க்க போறேன்..." மகிழ்ச்சியோடு சொன்னவளின் மகிழ்ச்சி அவரையும் தொற்றிக் கொள்ளச் சந்தோசமாய்ச் சம்மதித்தார்.

தான் குழந்தையாய் இருக்கையில் தன்னைப் பாராட்டி சீராட்டி வளர்த்த அன்னைக்கு அவள் தாயாய் மாறி பணிவிடை செய்தாள். சொன்னது போல் அவரைக் குளிப்பாட்டி, உணவு ஊட்டிவிட்டவள் தானும் அவருடன் சேர்ந்து உணவு உண்டவள் மனம் வெகுநாட்களுக்குப் பின் நிறைந்திருந்தது. சிறிது நேரம் அவருடன் பேசி கொண்டிருந்தவள் அவரை உறங்க செய்துவிட்டு தனதறைக்கு வந்தாள்.

அறைக்கு வந்தவள் தொலைக்காட்சி பெட்டியை உயிர்ப்பித்து அதில் படம் பார்க்க கொஞ்ச நேரத்தில் அது சலித்துவிட, சிறிது நேரம் இணையத்தளத்தில் மேய்ந்தாள். அதுவும் கொஞ்ச நேரமே பிறகு அதுவும் சலிக்க என்ன செய்வது என்று யோசித்தவள் கண்ணில் ஐபாட் விழ... அதை எடுத்துக் காதில் வைத்தாள். எம்.எஸ் சுப்புலெக்ஷ்மி அம்மாவின் தேன் குரலில் 'காற்றினில் வரும் கீதம்' பாடல் அவள் காதில் தேனாய் பாய... அவளது கண்கள் தாமாக மூடி அதை ரசிக்க ஆரம்பித்தது.

'நிலா மலர்ந்த இரவினில் தென்றல் உலாவிடும் நதியில்
நீல நிறத்து பாலகன் ஒருவன் குழல் ஊதி நின்றான்
காலமெல்லாம் ...காலமெல்லாம் அவன் காதலை எண்ணி
உருகுமோ என் உள்ளம் ...
காற்றினிலே வரும் கீதம்'

'காலமெல்லாம் அவன் காதலை எண்ணி உருகுமோ என் உள்ளம்' என்ற வரியில் அவள் மனம் முழுவதும் கௌதமே நிறைந்திருந்தான். அவனைக் கண்ணனாகவும், தன்னை மீராவாகவும் கற்பனை செய்து பார்த்தவள் கண்களில் கண்ணீர் கசிந்தது. அந்த மீராவாவது கண்ணனின் காதலுக்காக உருகி நின்றாள். ஆனால் இங்கே அந்தக் கண்ணன் அல்லவா இந்த மீராவுக்காக உருகி நிற்கிறான். அந்தப் பக்தை மீராவுக்குள் இருந்த காதலை விடப் பன்மடங்கு காதல் இவளுக்குள்ளும் இருக்கிறது. ஆனால அதைக் காட்ட தான் அவளால் முடியவில்லை. அவளைத் தடுப்பது தான் எதுவோ...??? அந்த எதையோ நினைத்தவள் மனம் வேதனையில் கசங்க அதையே அவளது முகமும் பிரதிபலித்தது.

'வேண்டாம் மனமே... கண்டதையும் நினைத்து மனதை வருத்தி கொள்ளாதே... என்னால் கௌதமின் மனைவியாய் வாழ தான் முடியாதே தவிர... அவருக்கு என்னால் முடிந்தளவு சந்தோசத்தைக் கொடுக்க முடியும்... அது போதும் எனக்கு... என் கௌதம் என்னுடன் இருந்தால் போதும்... அது மட்டும் தான் எனக்கு வேண்டும்...' என்று நினைத்தவள் மனதை பாடலில் செலுத்த... அந்த மீரா

பஜனில் இருந்த பாடல்களின் இனிமையில் அவள் மனம் மயங்க... அவள் மனம் முழுவதும் கௌதமின் நினைவுகளே வியாபித்திருக்க... இனிமையான கனவுகளில் மூழ்கியவள் மெல்ல அமைதியான துயிலில் ஆழ்ந்து போக ஆரம்பித்தாள்.

******************************

"படம் என்னவோ கிராமத்துப் படம்... ஆனா சாங்ஸ் மட்டும் ஃபாரினா...? ச்சு..." அலுத்துக் கொண்ட மேகாவிடம்...

"இதுவும் கௌதமோட திட்டத்தோட ஒரு பார்ட் தான்..." என்ற கணேஷ்... "ஃபாரின் ட்ரிப்பை அனுபவிக்காம ஏன் அலுத்துக்கிற கண்ணம்மா...?"

அவர்கள் இருவரும் லண்டனின் பிரபல விடுதியின் அறைகள் நிறைந்த அந்த நீண்ட வராண்டாவின் ஒரு மூலையில் யாரும் பார்க்கா வண்ணம் நின்று கொண்டிருந்தனர். எல்லோரும் உறங்க போயிருக்கக் கணேஷ் அவளிடம் தனிமையில் பேச வேண்டுமென்று இங்கே அழைத்திருந்தான். ஆம்... படம் முடிந்து பாடல் காட்சிகள் மட்டுமே பாக்கியிருந்த நிலையில் அதை எடுப்பதற்காக அவர்கள் படக்குழு இங்கே வந்திருந்தது.

"குளிர் காலத்துல யாராவது இங்கே வருவாங்களா...? இங்கே பாருங்க கை காலெல்லாம் எப்படி விறைச்சு போகுதுன்னு... நம்ம ஊர் மார்கழி பனியிலேயே ஸ்வெட்டரும், மப்ளருமா தான் நான் அலைவேன்... இப்போ இந்தக் குளிருல விறைச்சே செத்துருவேன் போலிருக்கு..." அழ மாட்டாத குறையாய் சொன்னவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"நான் உன் பக்கத்தில் இருக்கும் போது நீ இப்படிப் பேசலாமா கண்ணம்மா...?" என்றபடி அவள் அருகில் இழைந்தபடி நின்றவன் அவளின் தோளில் கையைப் போட வர... அவள் நறுக்கென்று அவன் கையில் கிள்ளினாள்.

"கொன்னுடுவேன் கொன்னு... முதல்ல தாலியை கட்டுங்க... அதுக்கப்புறம் தான் இதெல்லாம்..." கண்டிப்பான குரலில்

சொன்னவளை ஏக்கத்துடன் பார்த்தவன்,

"நானா மாட்டேங்கிறேன்... முதல்ல கௌதம் வாழ்க்கை சரியாகட்டும்..." என்றவன் கௌதமை நினைத்துக் கவலையிலாழ்ந்தான். ரம்மியமான அந்தச் சூழ்நிலை சட்டென்று மாறி போனதை உணர்ந்தவள் அவன் கை மீது தன் கையை ஆறுதலாய் வைத்து,

"எல்லாம் சரியா போகும் கணேஷ்..." அவளின் ஆதரவு வார்த்தை அவனுக்கும் தேவையாயிருந்தது. அவனின் கையும் அவளின் கையை இறுக்கி கொண்டது.

"நான் போகணும்..." மெல்லிய குரலில் கிசுகிசுத்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ம்... போ..." என்றவன் அவள் கையை விட...

"கோபமா...?" அவள் போகாமல் அங்கேயே நின்றாள்.

"ஆமாம்ன்னா என்ன பண்ணுவ...?" என்றவனின் குரலில் குறும்பு நிரம்பி வழிந்தது.

"ம்..." என்று இழுத்தவள் கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு, "இதைத் தான் பண்ணுவேன்..." என்றவள் அவனுக்குப் பழிப்பு காட்டிவிட்டு சிட்டாய் பறக்க... அவனோ இதழில் உறைந்த புன்னகையுடன் நிறைவான மனதுடன் அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

********************************

"ரொம்பக் குளிருதா...?" கனிவுடன் கேட்ட கௌதமை பார்த்து சிரித்த மது ஆம் என்பது போல் தலையசைத்தாள்.

அவர்கள் இருவரும் பாடல் காட்சிக்காகக் குறிப்பிட்ட இடத்தில் நின்று கொண்டிருந்தனர். படப்பிடிப்பு குழுவும், ஒளிப்படக் கருவியும் சற்றுத் தள்ளியிருக்க நடன இயக்குநர் நடனத்தைச் சொல்லி கொடுத்துவிட்டு அவரும் விலகிவிட இவர்கள் இருவர் மட்டுமே தனித்து விடப்பட்டனர். இன்னமும் நடனம் ஆடுவதற்குச் சமிக்ஞை

கிடைக்கவில்லை... அப்போது தான் கௌதம் கவனித்தான்... சேலை அணிந்த மது குளிரில் உடலை குறுக்கி கொள்வதை...

"இந்தக் குளிருல சேலையைக் கட்டிட்டு ஆடணும்ங்கிற ரூல்ஸை இந்தச் சினிமாக்காரங்க கிட்ட யாரு சொன்னது...? எவனோ ஆரம்பிச்சு வச்சதை இன்னமும் ஃபாலோ பண்ணிட்டு... இதுல முதுகில ஜன்னல் வச்ச ஜாக்கெட் வேற... எனக்குக் கொலைவெறியை கிளப்புறாங்க... அடுத்தவன் பார்க்க நீ இப்படி நடிக்கணுமா...? இதுக்குத் தான் சொல்றேன்... பேசாம கல்யாணத்தைப் பண்ணிட்டு செட்டிலாகுன்னு... கேட்டா தானே...? எல்லாம் உன் இஷ்டம் போல் நடக்கணும்..." குளிரில் கஷ்டப்படும் அவளின் கஷ்டத்தைக் கண்டு அவன் பல்லை கடித்தான். அவளின் கஷ்டத்தைப் போக்க தன்னால் முடியவில்லை என்ற இயலாமையில் அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

"இதுக்கே இப்படிச் சொன்னீங்கன்னா..." அவள் ஏதோ சொல்ல வரும் முன் இயக்குநர் அவர்கள் நடனம் ஆடுவதற்குச் சமிக்ஞை கொடுக்க... இருவரின் கவனமும் நடனத்தில் சென்றது.

பனிமலையில் நெருக்கமாய் இருவரும் இணைந்து ஆடுவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது இருவருக்கும். தனிமையில் இருவரும் அணைத்திருக்கின்றனர்... முத்தமிட்டிருக்கின்றனர். ஆனால் இப்படி எல்லோரும் பார்க்கும்படி நடனமாடியது இருவருக்குமே என்னவோ போலிருந்தது. இருவருமே நடிப்பை தொழிலாய் கொண்டவர்கள். இதற்கு முன் அவன் பல கதாநாயகிகளுடனும், அவள் பல கதாநாயகர்களுடனும் இது போல் நெருங்கி நடித்திருக்கின்றனர்... அதை இல்லையென்று சொல்லிவிட முடியாது. ஆனால் அதையெல்லாம் தொழில் ரீதியாய் இயந்திரத்தன்மையுடன் நடித்துவிட்டு சென்றுவிடுவர். ஆனால் முதன்முறையாக மனம் கவர்ந்தவருடன் நெருங்கி நடித்தது அவர்களுக்குள் மெல்லியதாய் பதட்டத்தைத் தோற்றுவித்தது.

சுற்றிப் பரவியிருந்த குளுமை அவர்களுக்குள் தீயை மூட்டியது. அதை மற்றவர்கள் அறிந்து கொண்டு விடுவார்களோ என்ற எண்ணமே அவர்களைப் பதற செய்தது. முதலில் சுதாரித்துக் கொண்ட கௌதம் நடன இயக்குநர் சொல்லி கொடுத்தது போல் செய்ய... அதில் லஜ்ஜையடைந்த மது அழகாகத் தன் வெட்கத்தை வெளிப்படுத்த அதை ஒளிப்பதிவு கருவி அழகாய் தன்னுள் வாங்கிக் கொண்டது.

காட்சி முடிந்ததும் அங்கிருந்து நகர முயன்றவள் கூடவே இணைந்து நடந்த கௌதம், "அப்ப என்னவோ சொன்னீயே... என்ன சொன்ன...?" என்று கேட்க... அதைக் கேட்டு அவள் முகம் விகாரமாய் மாறியது. உடனே அதை அவனுக்குத் தெரியாமல் மறைத்தவள்,

"என்ன கௌதம் என்னோட டான்ஸ் ஆடும் போது அப்படியே வியர்த்து வழிஞ்சிச்சு... இந்தக் குளிரிலும் வியர்க்கிறது உங்களுக்கு மட்டும் தான்..."

"அங்கே மட்டும் என்ன வாழுதாம்... அப்படியே உடம்பெல்லாம் நடுங்குச்சே..." தான் கேட்ட கேள்வியை மறந்து அவளைப் பார்த்து கிண்டலாய் கேட்டவன் உதடு கேலியாய் வளைந்தது.

"ஆங்... அது குளிரால..." சமாளித்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. பின் மெதுவே...

"நாலு சுவத்துக்குள்ள நடக்க வேண்டியதை இப்படிப் பப்ளிக்கா பண்ணும் போது கொஞ்சம் கூச்சமாயிருக்குடி..." உண்மையை ஒத்துக் கொண்டான்.

"அய்யோடா... சார் என்னமோ இப்ப தான் நடிக்க வந்திருக்கிறாரு..." ஏளனமாய் உதட்டை சுளித்தவளின் மீது தன் பார்வையை நிலைத்தவன்,

"எத்தனையோ பேர் கூட நான் நடிச்சிருக்கலாம்... ஆனா உன் கிட்ட நான் நடிச்சது இல்லைடி... இந்தப் படத்துல மத்தவங்க கண்ணுக்கு வேணும்ன்னா நீயும் நானும்

நடிக்கிறதா தெரியலாம்... ஆனா நான் இந்தப் படத்துல உன்னோடு வாழ்ந்திட்டு இருக்கேன்டி... ஏன்னா உன்னிடம் மட்டும் என்னால் நடிக்க முடியாது அம்மு..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராது விறுவிறுவென நடந்தான். அவனின் வார்த்தையில் திகைத்து போய் அவள் நின்றுவிட்டாள். அவனின் ஆழமான, உண்மையான காதலுக்குத் தான் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் என்ற கேள்வி அவளுள் எழுந்து அவளது மனதை பெரிதாய் வியாபித்தது.

அதற்கான சந்தர்ப்பம் வெகு சீக்கிரத்தில் அமைந்தது. அவனின் பிறந்த நாளுக்கு அவளைச் சுவிஸர்லாந்து அழைத்துச் சென்றவன் முதன்முறையாக அவளிடம் அவளைக் கேட்டு காதல் யாசகம் வேண்டி மண்டியிட்டு நின்றான்.

"அம்மு... அப்போ உன் பிறந்தநாளுக்கு நீ கேட்டதை... இப்போ என் பிறந்தநாளுக்கு நான் உனக்குக் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்... என்னோட பிறந்தநாள் கிப்ட்டா நீ எனக்கு வேணும்...? உன்னை எனக்குத் தருவாயா...? உனக்குச் சம்மதமா...?" அவள் முன் மண்டியிட்டுக் கையில் சிவப்பு ரோஜாவை ஏந்தியபடி கேட்டவனைக் கண்டு முதலில் அதிர்ந்தவள் மெல்ல தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டு... எங்கே அவன் மனம் மாறி விடப் போகிறானோ என்ற கலக்கத்தில் வேகமாய்த் தலையை ஆட்டியபடி,

"சம்மதம்..." என்று புன்னகையுடன் சொல்லும் போதே அவளின் விழிகளில் சொல்லொண்ணா வேதனை, வலியொன்று மின்னி மறைந்தது.

## துளி : 9

வெள்ளியை உருக்கினார் போன்று எங்குத் திரும்பினாலும் வெண்மை நிறமே காட்சியளிக்க அந்த மலைப் பிரதேசம் பார்ப்பதற்கு அவ்வளவு ரம்மியமாக அழகாக இருந்தது. தன் கன்னங்களில் கையை வைத்துக் கண்களை அகல விரித்துப் பனி மூடிய சிகரங்களை வியந்து கண்டு கொண்டிருந்த மதுவை பார்த்த கௌதமின் முகமும் புன்னகையில் விரிந்திருந்தது. தன்னவளோடு மேற்கொண்ட தனிமை பயணம், அவளின் அருகாமை, அவனுக்கும் அவளுக்குமான தனித்த பொழுது எல்லாம் சேர்த்து அவனை எல்லையில்லா மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

பின்னே கடத்தாத குறையாகத் தன்னுடன் அவளை வரவழைக்க அவன் பட்ட கஷ்டம் அவனுக்குத் தான் தெரியும். படப்பிடிப்பு முடிந்து எல்லோரும் ஊருக்கு கிளம்ப ஒரு நாள் இருக்கும் போது அவன் மதுவை தனியே அழைத்து அவளைத் தன்னுடன் சுவிஸர்லாந்து வரும்படி அழைக்க… முடியாது என்று மறுத்தவளை வந்தேயாக வேண்டும் என்று உறுதியாய் சொன்னவனைக் கண்டு அவளால் மேலும் மறுக்க இயலவில்லை. அவளுக்குமே அவனுடன் சேர்ந்திருக்க வேண்டுமென்று மனதின் மூலையில் ஆவல் ஒன்று தோன்ற தான் செய்தது. தான் செய்வது தவறு என்று தோன்றினாலும் கூட அவளால் அவனை மறுக்கவோ வெறுக்கவோ இயலவில்லை.

தனக்கு வேறொரு படப்பிடிப்பு இருப்பதாய் கௌதம் முன்னதாய் கிளம்ப… அவள் லண்டனில் இருந்த அவளது அபிமான மூத்த நடிகையின் வீட்டிற்குச் செல்வதாகக் கூறிவிட்டு அங்கே சென்றாள். யாருக்கும் எந்தச் சந்தேகமும் வரவில்லை. ஏனெனில் அந்த நடிகையுடன் மது கொண்ட நட்பு எல்லோருக்கும் தெரியுமாதலால் அதைப் பற்றி அவர்கள் தேவையில்லாமல் கேள்வி கேட்கவில்லை. கணேஷ், மேகா இருவருக்கும் விசயம் தெரிந்தாலும் இருவரும் ஒருவரிடமும் இதைப் பற்றி மூச்சு விடவில்லை. அவர்கள் இருவரும் படப்பிடிப்பு குழுவுடன் சேர்ந்து இந்தியா

கிளம்பினர். மேகாவுக்கு விசயம் தெரியாது என்று நினைத்து மது அவளை ஏதேதோ சொல்லி சமாளிக்க... 'மேம்... நீங்க உங்க ப்ரெண்ட் வீட்டுக்கு போய்ட்டு வாங்க... நான் கிளம்பறேன்...' எந்தச் சந்தேகத்துக்கும் இடமில்லாமல் அவள் விடைப்பெற்றாள். நிம்மதி பெருமூச்சு விட்ட மது கௌதமுடன் கிளம்பி சுவிஸை நோக்கி பயணமானாள்.

"எவ்வளவு அழகு பாருங்களேன் கௌதம்...?" அவளால் இன்னமும் வியப்பிலிருந்து வெளிவர முயலவில்லை. காதலுடன் கழிக்கும் இனிமையான பொழுது ஒவ்வொன்றையும் விரும்பி அனுபவித்ததன் மகிழ்ச்சி அவள் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது. அது அவளை மேலும் அழகாய்க் காட்டியது. அவனின் அருகாமையைப் பொக்கிசமாய்த் தன் மனப்பெட்டகத்தில் சேமித்து வைத்து கொண்டாள்.

மதுவின் பேச்சில் தன்னினைவு களைந்தவன், "ம்... ரொம்ப அழகா தான் இருக்கு..." என்றவனின் குரலில் இருந்த பேதத்தைக் கவனிக்க மறந்தாள் அவனது காதலி.

"புது வெள்ளை மழை இங்கே பொழிகின்றது
இந்தக் கொள்ளை நிலா உடல் நனைகின்றது
இங்குச் சொல்லாத இடம் கூடக் குளிர்கின்றது
மனம் சூடான இடம் தேடி அலைகின்றது"

கௌதமின் மந்தகாச குரல் அவளது காதருகில் ஒலிக்க... திடுக்கிட்டு திரும்பியவளின் காதோரம் மென்மையாய் முத்தமிட்டான் அவன். முத்தமிட்டவனின் இதழ்கள் கொஞ்சம் கீழிறங்கி அவளது கழுத்தில் அழுத்தமாய்ப் பதிய அவளது மேனி சிலிர்த்தது. சுற்றுப்புறத்தின் குளிரால் ஏற்பட்ட சிலிர்ப்பா? இல்லை அவனது இதழொற்றலினால் ஏற்பட்ட சிலிர்ப்பா? எதுவென்று அவளால் பிரித்தறிய முடியவில்லை. அந்தக் குளிருக்கு அவனது சூடான முத்தம் அவளது உடலை வெயிலில் உருகும் பனிகட்டியாய் உருக செய்தது.

"கௌதம்..." என்றவளின் குரலும் மேனியும் நடுங்கியது.

"ம்..." என்றவனுக்கும் அந்த மோன நிலையைக் கலைக்க விருப்பமில்லை. அவளுள் புதைந்து போகவே அவனும் விரும்பினான். அவளது நடுக்கத்தில் தைரியம் வர பெற்றவனாய் அவனது கைகள் முன்னேற... அந்நேரம் அவர்கள் அருகில் யாரோ பேசி சிரித்துக் கொண்டு செல்ல அவளது உணர்வுகள் விழித்துக் கொண்டது.

"ப்ளீஸ் கௌதம்..." இறைஞ்சியது அவளது குரல்...

"ப்ச்..." என்றவன் அவளை மேலும் இறுக்க...

"அங்கே பாருங்க ஆட்களா இருக்காங்க..." அவளது குரலில் விடவே மனமில்லாமல் அவளை விடுவித்தவன் அவள் சுட்டி காட்டிய இடத்தைப் பார்க்க... அதைப் பார்த்ததும் அவனது முகம் கடுப்பாகியது. அவளது முகத்தைத் திருப்பி அங்கே காண்பித்தவன்,

"உன் முட்டை கண்ணை நல்லா விரிச்சி பாரு..." அவன் என்ன சொல்கிறான் என்று புரியாதவளாய் திரும்பி பார்த்தவள் கண்ணில் இதழோடு இதழ் பதித்து முத்தமிட்டுக் கொண்டிருந்த அந்த வெளிநாட்டினரை கண்டதும் அவளுக்கு வெட்கமாய்ப் போய்விட...

"என்ன கௌதம் இது...? கொஞ்சம் கூட விவஸ்தையில்லாமல்..." முகத்தைத் திருப்பிக் கொள்ள...

"அவங்க இருக்காங்கன்னு தானே வேணாம்ன்னு சொன்ன... அவங்களுக்கு நாம பரவாயில்லை..." என்றவன், "உண்மையில் குளிருதுடி... அதான் சூடாய்..." மேலே அவன் பேசும் முன் அவன் வாயை மூடியவள் லஜ்ஜையுடன்,

"வர வர நீங்க பார்க்கிறது, பேசுறது, நடந்துக்கிறது எதுவுமே சரியில்லை கௌதம்..." என்று முணுமுணுத்தவள் அவனை விட்டு தள்ளி நடந்தாள்.

"ச்சு... போடி அவஸ்தை..." என்றவன் கோபமாய்க் காலால் பனிக்கட்டியை எட்டி உதைக்க... அவளோ அவனைக் கண்டு கொள்ளாமல் குனிந்து பனிக்கட்டியை உருண்டையாய் உருட்ட...

"மனுசனோட அவஸ்தையைப் புரிஞ்சிக்காம ஐஸ்கட்டியோட விளையாடுறதை பாரு இம்சை..." அவளை வைதபடி அங்கேயே நின்றிருந்தவனை ஓர கண்ணால் பார்த்தவள் அடுத்த நொடி அவன் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் அந்தப் பெரிய பனிப்பந்தை அவன் மேல் தூக்கியெறிய,

"யேய் அம்மு..." அதைத் தடுக்க முயன்று தோற்றவனாய் மேனி முழுவதும் பனித்துகள்கள் வழிய நின்றிருந்தவனைக் கண்டு அவள் கைத்தட்டி சிரித்தாள்.

"என்னைப் பார்த்தா சிரிக்க..." என்றவன் தன் பங்கிற்குப் பனிக்கட்டியை அள்ளி வீச... அதில் அவளும் நனைய இருவருக்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு மனம் விட்டு சிரித்தவர்களின் மனம் இறகை போல் லேசாய் இருந்தது.

நடுஇரவில் யாரோ தன்னை எழுப்புவதை உணர்ந்து பதறி போய் எழுந்த மது அங்கே கௌதம் நின்று கொண்டிருப்பதைக் கண்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். இங்கு வந்து ஒரு நாளாகிறது... அவளும் அவனும் ஒரே அறையில் தான் தங்கியிருந்தனர். அவன் உள்ளே இருந்த படுக்கையறையை உபயோகப்படுத்திக் கொள்ள... அவள் முன்பக்கமிருந்த சோபாவில் படுத்து கொண்டாள். அவன் அதை ஒன்றும் சொல்லவில்லை. அவள் விருப்பப்படி விட்டு விட்டான்.

"என்ன கௌதம்...? என்ன வேணும்...?" என்றபடி அவசரமாய் எழுந்தவளை தன் இரு கை கொண்டு தூக்கியவன்,

"எனக்கு நீ தான் வேணும்..." குனிந்து அவள் காதில் முணுமுணுத்தவனை அவள் திகைத்துப் போய்ப் பார்க்கும் போதே அவனிருந்த அறைக்குள் நுழைந்தவன் அவளைக் கீழிறக்கிவிட்டான். அப்போது தான் அவள் அந்த அறையை நன்கு பார்த்தாள். சிவப்பு ரோஜாக்களைக் கொண்டு அழகாய் அலங்கரிக்கப்பட்ட அறை மிகவும்

ரசனையுள்ளதாய் இருந்தது. ஆனால் அதை ரசிக்க முடியாமல் ஏதேதோ எண்ணங்கள் அவள் மனதை அழுத்த,

"கௌதம் என்ன இது...?" அவனின் டீசர்ட்டின் நுனியை பிடித்து இழுத்துக் கொண்டு கேட்டவள் அவன் பின்னே பயத்துடன் ஒளிந்து கொண்டாள். அவன் ஒன்றும் பேசாது அருகில் இருந்த பூச்சாடியில் இருந்து ஒற்றைச் சிவப்பு ரோஜாவை கையில் எடுத்தவன் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து அதை அவள் புறமாய் நீட்டியபடி,

"அம்மு... அப்போ உன் பிறந்தநாளுக்கு நீ கேட்டதை... இப்போ என் பிறந்தநாளுக்கு நான் உனக்குக் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்... என்னோட பிறந்தநாள் கிப்ட்டா நீ எனக்கு வேணும்...? உன்னை எனக்குத் தருவாயா...? உனக்குச் சம்மதமா...?" என்று சொன்னவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

"அம்மு..." மீண்டும் தன்னை அழைத்தவனைப் பார்த்தவள் அவன் கண்ணில் வழிந்த காதலில் வாயடைத்து போனாள். அவளின் துரோகம் தெரிந்தும் அதை மறந்து அவளிடம் மண்டியிட்டு அவன் காதல் யாசகம் கேட்கிறான் என்றால் அவனின் காதல் எத்தகையது... அவன் எந்தளவுக்கு உயர்ந்தவன்...? எண்ணியவள் மனம் அவனின் காதலுக்காகத் தன்னையே தர விழைந்தது.

அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தவள் ரோஜா ஏந்திய அவனின் கையைப் பிடித்துக் கொண்டு, "இதை நீங்க கேட்கணுமா கௌதம்...?" என்றவள் அவனின் மனம் மாறுவதற்கு முன், "சம்மதம் கௌதம்..." என்றவள் அவனை ஆரத் தழுவி கொண்டாள். அடுத்த நொடி அவனும் அவளைத் தழுவியிருந்தான்.

"உங்க பிறந்த நாளை நான் மறந்திட்டேன் சாரி கௌதம்... எப்பவும் உங்க பிறந்த நாளை நியாபகம் வச்சிருப்பேன்... இந்தத் தடவை நீங்க என் கூட இருந்ததால அதை மறந்திட்டேன்... சாரி..." மன்னிப்பு கேட்டவளை தன்னுடன் இறுக்கி கொண்டவன்,

"இந்தக் கௌதம் கூட இருக்கும் போது அவனை மட்டும் நீ நினைச்சா போதும்... அவன் பிறந்தநாள் எதுக்கு உனக்கு...?" அவனின் பிறந்தநாள் கூட இரண்டாம் பட்சமாய் நினைத்து பேசியவன் காதல் அவளைக் கரையுடைக்கப் போதுமானதாய் இருந்தது.

தன் அணைப்பில் உருகி வழிந்தவளை கைகளில் ஏந்தி கொண்டு படுக்கையில் சரித்தவன் மீண்டும் கேட்டான்... "சம்மதமா அம்மு...?" கண்களை இறுக மூடியிருந்தவள் அவனது குரலில் அவனை ஏறிட்டு பார்த்தாள். பின் சம்மதம் என்பது போல் அவள் தலையாடியது... அவளது கைகள் அவனை வளைத்துப் பிடித்தது. அவளின் சம்மதத்தை உணர்ந்தவன் சந்தோசமாய் மேலும் மேலும் முன்னேற... அவளது உடலோ அவனது தொடுகையில் உருகி குழையாமல் இறுகி போயிருந்தது. அவளது மாற்றத்தை உணர்ந்தவன் தன் இயக்கத்தை நிறுத்திவிட்டு அவள் முகத்தைத் தன் புறம் திருப்பி,

"ஏய்... இங்கே பாருடி..."

'என்ன...?' என்பது போல் பார்த்தவளை கண்டு அவனுக்குள் காதல் எந்தளவுக்குப் பெருகியதோ அந்தளவுக்குப் பரிதாபமும் பெருகியது.

"உனக்கு இஷ்டம் இல்லைன்னா வேணாம் அம்மு..." மீண்டும் மீண்டும் தன் சம்மதம் வேண்டி நின்றவனின் காதல் கண்டு அவள் உதடுகள் புன்னகை சிந்தியது. ஆனால் அதையும் மீறி கொஞ்சமே கொஞ்சம் என்றாலும் அவளின் கண்ணில் தோன்றி மறைந்த வேதனை, வலியை அவன் உணர தான் செய்தான்.

"உனக்கு விருப்பமில்லாததை நான் எப்பவுமே செய்ய மாட்டேன் அம்மு..." என்றவன் அவள் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவளை விட்டு விலகி படுக்க... அவள் அவனருகில் நகர்ந்து படுத்தாள். அவன் மீது கைப்போட்டு தன் பக்கமாய் அவனைத் திருப்பியவள் அவன் முகம் பார்க்காமல்,

"எனக்கு... நீங்க..." தயக்கமாய் அவள் நிறுத்த... அவள் நாடியில் ஒற்றை விரல் வைத்து நிமிர்த்தியவன்,

"உனக்கு நான்..." ஆழ்ந்து பார்த்தவன் பார்வையில் உணர்ச்சிவசப்பட்டவள் அவன் நெஞ்சில் முகத்தை மறைத்துக் கொண்டு,

"வேணும்.." என்றாள் கிறக்க குரலில்...

"உண்மையாவா...?" என்று கேட்டவன் அவளின் வார்த்தையில் இருந்த உண்மையைப் பரிசோதித்துப் பார்க்க ஆரம்பித்தான். அவனின் பரிசோதனையில் அவன் உண்மையை அறிந்தானா என்னமோ... ஆனால் அவள் அவனை அறிந்தாள்... அவன் காதலை அறிந்தாள்... வாழ்வில் கண்டறியாத பல ரகசியங்களை அவன் சொல்லி கொடுத்ததை அவள் உணர்ந்தாள். அவனின் பல நாள் காத்திருப்புக்கு, அவனுக்குத் தான் செய்த துரோகத்தால் எழுந்த மனப்புண்ணை ஆற்றுவதற்கு அவள் தன்னையே ஒப்பு கொடுத்தாள் அவனுக்கு.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த கௌதம் ஏதோ தோன்ற கண்களைத் திறந்தவன் மதுவை காணாமல் திடுக்கிட்டு எழுந்தமர்ந்தான். நான்கு பேர் தாராளமாய்ப் படுக்கக் கூடிய அந்தப் படுக்கையின் மறுமுனையில் தனக்குள் ஒடுங்கி சுருங்கி கொண்டு படுத்திருந்தவளை கண்டதும் நிம்மதியுற்றவன்,

"ஏண்டி பக்கத்திலேயே மலை மாதிரி ஒருத்தன் படுத்திருக்கிறேன்... என்னைக் கட்டிப்பிடிச்சிட்டு படுக்கணும்ன்னு உனக்குத் தோணல... அவ்வளவு தள்ளி போய்ப் படுத்திருக்க..." செல்லமாய் அவளைக் கடிந்தபடி அவளருகில் வந்தவன் அவளை அள்ளியெடுத்து தன் மீது போட்டுக் கொண்டான்.

"மாமா..." தூக்கத்தில் சிணுங்கியவள் அவன் நெஞ்சில் ஒன்ற அவன் ஸ்தம்பித்தான். அவள் மனதில் தான் இன்னமும் 'மாமா'வாக இருப்பதை அறிந்தவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. எப்போதுமே அந்த

வார்த்தையை அவள் கூறும் போது அவனுக்கு அது பிடிக்காது. ஏனெனில் அது அவளை விடத் தன்னை மூத்தவனாகப் பெரியவனாகப் பத்து வயது அதிகமுள்ளதை சுட்டி காட்டுகிறது என்பதால் அந்த வார்த்தையை அறவே வெறுத்தான். ஆனால் இன்று அவள் அது போல் அழைத்ததும் அவனுள் ஏதோ ஒன்று சிலிர்த்தது. அன்று இடைவெளி ஏற்படுத்தியதாய் நினைத்துக் கொண்டிருந்த வார்த்தை இன்று ஏதோ ஒருவித நெருக்கத்தை ஏற்படுத்துவதாய்த் தோன்ற,

"அம்மு..." என்று அவளை ஆசையுடன் அணைத்து கொண்டவன் அவளது நெற்றியில் இதழ் பதித்தான். அவள் முகத்தில் படிந்த முடிக்கற்றையை விலக்கியவன் கைகளில் அவளது கண்ணீர் தட்டுப்பட்டது. அவளது கன்னங்களில் கண்ணீர் கரை படிந்திருந்தது.

"அம்மு..." எந்தவொரு துன்பமும் அவளை நெருங்கா வண்ணம் இறுக்கி அணைத்து கொண்டவன், "இவ்வளவு வேதனைப்படுற நீ ஏன் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டேங்கிற...? இந்த வேதனை, வலி உனக்குத் தேவை தானா...?" கேட்டவனின் முகமும் மனமும் வேதனையில் ஆழ்ந்தது.

**********************************

"கௌதம்... எழுந்திருங்க... டைம் என்ன தெரியுமா...? டென் ஓ க்ளாகாகப் போகுது..." கௌதமை எழுப்பி விட்டபடி உல்லன் போர்வையை மடித்துக் கொண்டிருந்த மதுவை கண்ணிமைக்காமல் பார்த்தான் கௌதம். நேற்று அவள் அழுததற்கான எந்தச் சுவடுமில்லாமல் நேற்று நடந்த வாழ்வின் இன்பத்தை மட்டும் அவளது முகம் தாங்கி கொண்டு அதன் விளைவாக அவளது முகம் செவ்வானமாய்ச் சிவந்திருந்தது.

"என்ன இது புதுப் பொண்..." என்றவள் தன் நாக்கை கடித்துக் கொண்டு, "புதுசா பார்க்கிற மாதிரி பார்க்கறீங்க...?" சொல்லி முடிப்பதற்குள் அவள் முகம் அப்படியே கன்றிப் போனது. மனைவி என்ற

வார்த்தையைக் கூட உரிமையுடன் சொல்ல முடியாதளவுக்கு அவளுக்கு என்ன தான் பிரச்சினை என்று யோசித்தவன் அவளின் கையைப் பிடித்து இழுக்க அதில் தடுமாறி அவன் மீது விழுந்தவள் சுதாரித்துக் கொண்டு எழுவதற்குள் அவளைத் தன் அணைப்பில் கொண்டு வந்தவன்,

"என் பொண்டாட்டி நான் பார்ப்பேன்... உனக்கென்ன வந்தது..." சொல்லி கொண்டே அவனது விரல் அவளது முகம் முழுவதும் கோலம் போட... அவனது சொல்லில் அவள் திகைத்துப் போய்ப் பார்க்க...

"என்ன முட்டை கண்ணை முழிச்சிட்டு பார்க்க...? நீ என் மனைவி தானே..." இரு புருவங்களை உயர்த்தியபடி கேட்டவனைக் கண்டு தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.

"என்ன...?" அவள் முகம் நிமிர்த்தியவன் அவள் கண்ணுக்குள் உற்று நோக்க...

"அந்த வார்த்தைக்கு நான் தகுதியில்லாதவ..." மெதுவாய் முணுமுணுத்தது அவளது இதழ்கள்.

அவளது வார்த்தைகள் எப்போதும் போல் அவனுள் கோபத்தைக் கிளப்பியது. ஆனாலும் அவளுக்காக அதை அடக்கி கொண்டவன், "இவ்வளவு நடந்ததுக்கு அப்புறமும் இப்படி அபத்தமாய்ப் பேச உன்னால் மட்டும் தான் முடியும்... தாலிங்கிற பேர்ல ஒரு மஞ்சள் கயிறை கட்டினால் மட்டும் போதுமா...?" அவளிடம் கேட்டவன், "ரெண்டு மனசும் சேர வேணாமா...?" ஆழ்ந்து ஒலித்த அவனது குரலில் அவள் உடைந்து போய் அழுதாள்.

"ப்ச்சு... இப்போ எதுக்கு அழுகை...? இங்கே பாரு..." அவளது முகம் நிமிர்த்திக் கண்ணீரை துடைத்தவன், "மத்தவங்க மாதிரி நாமளும் சந்தோசமா தான் இருக்கப் போறோம் பாரு..." என்றவனின் பேச்சில் அவளது உதட்டில் விரக்தி புன்னகை ஒட்டி கொண்டது.

"நம்புடி இந்தக் கௌதமை நம்பு... அப்புறம் பாரு..."

"நம்பாம தான் இந்த மாதிரி இருக்கேனா..." அவளது கிசுகிசுப்பான பேச்சில் அவளை மேலும் கீழும் பார்த்தவன் தன் கையணைவில் இருந்தவளை கண்டு வாய் விட்டுச் சிரித்தான். அவனது சிரிப்பு கண்டு அவளது முகமும் மலர்ந்தது. பனியில் குளித்த ரோஜா பூ போலிருந்த அவளது மலர்ந்த முகத்தைப் பார்த்து கண்சிமிட்டியவன் அவள் முகம் நோக்கி குனிந்து,

"புத்தம் புது மலரே என் ஆசை சொல்லவா
பொத்தி வைத்து மறைத்தேன் என் பாஷை சொல்லவா
இதயம் திறந்து கேட்கிறேன்
என்னதான் தருவாய்ப் பார்க்கிறேன்
நெஞ்சுக்குள்ளே என்னென்னமோ நினைத்தேன்
நித்தம் நித்தம் கற்பனைகள் வளர்த்தேன் தவித்தேன்"

மெதுவாய் பாடியவன், "நீயும் நானும் சேர்ந்து வாழும் வாழ்க்கையை நினைச்சு எத்தனை ஆசைகள் தெரியுமா...? எத்தனை கனவுகள் தெரியுமா...? அத்தனையும் உன்னோடு வாழ போற இந்த ஒரு வாரத்தில் நான் வாழுணும்... எனக்கு நீ வேணும்... என் மனைவியாய்... என் காதலியாய்... என் தோழியாய்..." என்று சொல்லியபடி அவளை அணைத்தவன் அவளின் காதுக்குள், " இது எல்லாத்துக்கும் மேலாய் என் அம்மாவா நீ என்னை மடி தாங்கணும்..." என்றவனை இழுத்து மடி தாங்கி அணைத்து கொண்டவள், தன்னைப் போல் அவனும் தன்னைத் தேடியிருக்கிறான் என்பதே அவளுக்கு உவகையாய் இருந்தது. அதிலும் அவன் அன்னையைப் பற்றிச் சொன்ன போது அவள் மனம் அவனுக்காகப் பரிதவித்தது.

"இதை நீங்க சொல்லணுமா கௌதம்..." என்றவளின் விரல்கள் அவன் கேசத்தை வருடி கொடுத்தது. அதில் அவன் அமைதியாய் அவளிடம் அடங்கி நின்றான். சற்று நேரம் அமைதியில் கரைய,

"அம்மு... மாமான்னு சொல்லேன்..." அவள் ஆச்சிரியமாய் அவனைப் பார்த்தாள்.

"அது உங்களுக்குப் பிடிக்காதே..."

"அது அப்போ... இப்போ நீ என்னை அப்படிக் கூப்பிடணும்... ப்ளீஸ்..."

"இதுக்கெல்லாமா ப்ளீஸ் போடுறது..." என்று அவனைக் கடிந்தவள், குனிந்து அவன் முகத்தைப் பார்த்து, "மாமா..." என்றாள் கண்ணில் காதல் வழிய... அதில் அவன் அப்படியே கிறங்கி தான் போனான்.

"மாமாக்கு இருக்கிற கிக்கே தனித் தான்..." என்றவன் கள் வெறி கொண்டவனாய் அவளின் கழுத்தை வளைத்து தன் முகம் நோக்கி இழுத்து அவளின் இதழில் காவியம் பாடினான்.

"என்ன இது ப்ரெஷ் கூடப் பண்ணாம..." என்று அவள் சிணுங்கினாலும் அவன் கைகளுக்குள் அடங்க தவறவில்லை.

***************************

"அம்மு... ப்ளீஸ்டி... ஒரே ஒரு சிப் தான்... குளிரு தாங்க முடியலடி..." மது பாட்டிலை கையில் வைத்திருந்த தன்னவள் மதுவிடம் கெஞ்சி கொண்டிருந்தான் கௌதம்.

"இந்தப் பழக்கம் வேற இருக்கா...? வேற என்னவெல்லாம் பழக்கமிருக்கு மரியாதையா சொல்லிருங்க..." ஒற்றை விரலை ஆட்டி மிரட்டியவளை கண்டு போலியாய் பயந்தவன்,

"சிகரெட் பிடிப்பேன் அவ்வளவு தான்..." என்றவனை நம்பாமல் பார்த்தவளை கண்டு,

"அவ்வளவு தான்டி..." அவளருகில் நெருங்கி நின்று சொன்னவன், "ஒரு மதுவே மதுவை கையில் வைத்திருக்கிறதே... அடடே ஆச்சிரியக்குறி..." கவிதை சொல்லி கொண்டே அவள் எதிர்பாராவிதமாய் மது கோப்பையைப் பறித்தான். அவனின் கவிதை கேட்டு அவள் பேயறைந்தார் போல் 'பே' என்று நின்றிருந்ததைக் கண்டு

அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவளின் இதழில் அவன் விரல் கோலம் போட அதில் உணர்வு அடைந்தவள் அவனை முறைத்தாள்.

"இப்போ இது ரொம்ப அவசியமா...?" மது பாட்டிலை சுட்டி காட்ட...

"விதவிதமாய் அடுக்கி வச்சிருந்தான்... வேஸ்ட் பண்ண வேண்டாமேன்னு பார்த்தேன்... நீ சொன்னதுக்கு அப்புறம் எனக்கு அந்த மது வேணாம்..." என்று அவள் முகம் நோக்கி குனிந்தவன் பார்வை அவளது இதழிலில் நிலைத்து, "இந்த மது தான் வேணும்..." என்றவன் அவள் இதழ் தேனை சுவைக்க... அங்கே கேட்பாரற்றுக் கிடந்தது அந்த மது பாட்டில்.

அந்த ஒரு வாரமும் இன்பமாய் ஒரு நொடியில் கடந்தது. நாளை ஊருக்கு கிளம்ப வேண்டுமென்ற நினைவே இருவருக்குள்ளும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி ஒருவரின் அருகாமையை ஒருவர் அதிகமாய் என்றைக்கும் இல்லாத வண்ணமாய் நாட செய்தது. அதிலும் மது தான் அவனை அதிகம் நாடினாள்.

"என்னடி... நாளைக்குக் கிளம்பற நேரத்தில் ஆளை இப்படிக் கிறங்கடிக்கிறியே..." கிறக்கும் குரலில் கேட்டவனின் முகம் அவள் மீதான மயக்கத்தை அப்பட்டமாய்க் காண்பித்தது. அவளோ பதில் பேசாமல் அவனுள் புதைய... அவனும் அவளுள் புதைந்து காணாமல் போனான்.

ஆழ்ந்த உறக்கத்திலும் தன்னை இறுக்கி கொண்டு படுத்திருந்த மதுவை பார்த்தவனின் முகம் வேதனையைப் பிரதிபலித்தது. போராட்டங்களையே தன் வாழ்க்கையாய் கொண்டவளுக்குத் தானும் போராட்டத்தைப் பரிசாக அளிக்கப் போவதை எண்ணி அவன் மனம் கசந்தது. மெல்ல அவளை அள்ளியெடுத்து தள்ளி படுக்க வைத்துவிட்டு தான் மட்டும் எழுந்தான். அங்கிருந்த சிகரெட் பாக்கெட்டை கையில் எடுத்தவன் அங்கிருந்த ஹாலில் சென்று சோபாவில் அமர்ந்தான்.

சிகரெட்டை பற்ற வைத்தவன் வாயில் வைத்து இழுத்து புகையை விட்டான். ஏனோ அது அவனின் மனக்காயத்திற்கு இதமளிப்பது போல் இருந்தது. ஊருக்குப் போன பின் தான் செய்ய வேண்டிய வேலையைப் பட்டியல் போட்டவன் மதுவை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தான். தான் செய்யப் போகும் வேலையால் அவள் தன்னைத் தான் தேடி வருவாள்... தன்னை மட்டும் தான் நாடுவாள்... அதை விட்டால் அவளுக்கு வேறு வழியில்லை என்று இறுமாப்புக் கொண்டான். எந்த நிலையிலும் அவனைத் தேடி அவள் வர மாட்டாள் என்ற உண்மையை அவன் வெகு தாமதமாய்த் தான் உணர போகிறான் என்பதை அவன் தெரிந்திருக்கவில்லை. அவனின் இறுமாப்பு தூள் தூளாகப் போகப் போகிறது என்பதையும் அவன் அறிந்திருக்கவில்லை... விதி தேவன் அவனைப் பார்த்து விகாரமாய்ச் சிரித்ததை அவன் உணரவில்லை.

"கௌதம்... மாமா..." திடீரென்று அலறிய மதுவின் அலறலில் அவன் பதறியடித்துக் கொண்டு உள்ளே ஓடினான்.

"அம்மு... என்னடாச்சு..." அவளருகில் அமர்ந்து ஆதரவாய் அணைத்து கொண்டவன் அவள் முதுகை மெதுவாய் தடவி கொடுத்தான்.

"கௌதம்..." குரல் நடுங்க தன்னுடன் ஒடுங்கியவளின் நிலை அவனுக்கு வித்தியாசமாய்த் தோன்ற...

"என்னம்மா... ஏன் பயந்து அலறின...?" அவளின் தலையை ஆறுதலாய் வருடி கொடுத்தான்.

"மாமா... எனக்குப் பயமாயிருக்கு... தூக்கம் வரலை... ஸ்லீப்பிங் டேப்லெட் கொடுக்கிறீங்களா...?" அவனிடம் கையை நீட்டி கேட்டவளை கண்டு அவன் உறைந்து தான் போனான்.

"ஏண்டி லூசாடி நீ... பயப்படுறதுக்கு எல்லாமா ஸ்லீப்பிங் டேப்லெட் போடுவாங்க... என்ன பழக்கம் இது...? ஓங்கி

அடிச்சேன்னா..." அவன் கத்திய கத்தலில் தன்னுணர்வு அடைந்தவள் அவனின் கோபம் கண்டு இன்னமும் தனக்குள் ஒடுங்கினாள்.

"ஏண்டி... கேட்கிறேன்ல பதில் சொல்லு..." என்று உலுக்கியவனை ஏறிட்டு பார்த்தவளின் விழிகளில் பிரதிபலித்த வலி அவன் இதுவரை காணாதது.

"என்னடா அம்மு...?" அவன் குரல் அவளை உருக்கியது.

"நான் என்னென்னு சொல்வேன் கௌதம்... நான் நடிக்கப் போனப்போ எனக்கு வயசு பதினேழு இருக்குமா..." தான் என்ன கேட்கிறோம்... அவள் என்ன சொல்கிறாள் என்று பல்லை கடித்தவன் ஆமோதிப்பாய் தலையை ஆட்டினான்.

"எல்லா நடிகைக்கும் அம்மா துணைக்கு வருவாங்க... ஆனா எனக்கு அம்மா வந்ததில்லை... ஏன் யாருமே கூட வந்ததில்லை... வெளியூர் ஷூட்டிங் போனா கூடத் தனியா தான் போகணும்... அந்த மாதிரி சூழ்நிலையில எத்தனை பேர் என்னை அவங்க..." சொல்ல முடியாமல் முகத்தை மூடி கொண்டு அழுதவளை ஆவேசமாய் அணைத்துக் கொண்டான் கௌதம். அவளது வேதனை கண்டு அவன் உடல் இரும்பாய் இறுகியது... கண்கள் ரத்தமெனச் சிவந்தது.

"அந்த மாதிரி நேரத்தில் பயந்து போய்த் தூங்காம விடிய விடிய முழிச்சிட்டு இருந்திருக்கேன்... அதுவே எனக்குப் பழக்கமாயிருச்சு... அதுக்கப்புறம் தான் மேகா வந்து சேர்ந்தா... அவள் வந்ததுக்கு அப்புறம் கொஞ்சம் குறைஞ்சாலும் முழுதாய் விடல... இப்பெல்லாம் நைட் தூக்கமே வர்றது கிடையாது... அதான் ஸ்லீப்பிங் டோஸ் போட்டுட்டுப் படுக்கிறது வழக்கமாயிருச்சு... உங்க கூடயிருந்த இந்த நாட்களில் நான் அதைத் தேடல... ஏன்னா நீங்க என் கூடயிருந்தா எனக்கு நிம்மதியா, பாதுகாப்பா, பலமா இருக்குது... இப்ப திடீர்ன்னு உங்களைக் காணோம்ன்னதும் பயந்து போயிட்டேன்..." என்றவளின் வார்த்தைகள் குத்தீட்டியாய் அவனைக் குத்தியது...

'கடவுளே... என்னை நம்பும் இவளுக்கு நான் செஞ்ச துரோகம் மட்டும் தெரிஞ்சா என்னாவாளோ...?' என்று அவன் உள்ளம் மறுகியது.

"கௌதம்... எனக்குத் தூக்கம் வரல..." என்றவள் அவனின் சட்டை காலரில் முகத்தைத் துடைக்க... அவன் என்னவென்பது போல் பார்த்தான். அவளும் சளைக்காமல் அவனின் பார்வையை எதிர் கொண்டாள்.

"சாரிடி..." தான் செய்ததற்கு மன்னிப்பு கேட்டானா இல்லை இனிமேல் செய்யப் போகும் செயலுக்கு மன்னிப்பு கேட்டானோ அது அவன் மட்டுமே அறிவான். அவனின் முகம் காட்டிய வேதனையை உணர்ந்தவள் மீண்டும்,

"தூக்கம் வரல கௌதம்..." அதே வார்த்தைகளை மாற்றிப் போட்டு சொன்னாள். அவனிருக்கும் மனநிலையில் அவளோடு சரசமாட மனம் ஒப்பவில்லை.

"ம்... ம்..." என்று பட்டுப் படாமல் முணுமுணுத்தவனின் காதில்,

"ஒண்ணு எனக்கு நீங்க வேணும்... இல்லை ஸ்லீப்பிங் டேப்லெட் வேணும்... எதைத் தர்றீங்க...?" என்றவளின் மிரட்டல் அவனிடத்தில் சரியாய் வேலை செய்தது. அவனே அவளுக்கு நிம்மதி, பாதுகாப்பு, பலம் எல்லாமுமானான்.

**************************

கௌதம் - மது நடித்த படம் வெளிவருவற்கு முன்னால் திரை உலகை சார்ந்தவர்களுக்கு மட்டும் சிறப்புக் காட்சியாக அன்று திரையிடப்பட்டது. வெகுநாட்களுக்குப் பின் மது கௌதமை பார்க்கிறாள். படத்தின் கொசுறு வேலைகளை முடிப்பதற்கு என்று அவனது நேரம் அதிலேயே ஓடியது. அதனால் அவளைச் சந்திப்பது கூட அவனுக்கு அரிதாய்ப் போனது. மதுவை கண்டதும் கௌதம் அவளருகே ஓடி வந்தான். அவளின் கைப்பிடித்து அழைத்தவன் அவளின் தோள் மீது கையைப் போட்டு தன்னுடன் அணைத்துக் கொண்டான். ஆச்சிரியமாய்ப்

பார்த்த அனைவரது பார்வையையும் அலட்சியப்படுத்தியவன் அவளை உள்ளே அழைத்துச் சென்றான். அவளுக்கே அவன் செய்வது சற்று அதிகப்படியோ என்று தோண தான் செய்தது.

"கௌதம்... எல்லோரும் பார்க்கிறாங்க..." அவள் சங்கோஜத்துடன் சொல்ல...

"பார்த்தா பார்க்கட்டுமே..." என்றவனின் பதில் அவளுக்குப் புதுமையாக, விடை தெரியா வினாவாக இருந்தாலும் அவளின் மனம் அவனது செயலில் மகிழ்ச்சியடையத் தான் செய்தது. அதை இல்லையென்று மறுக்க முடியாது...

திரையரங்கு இருளில் மூழ்கி படம் திரையில் ஓட ஆரம்பித்ததும் கௌதம் மெல்ல அவளின் கையை எடுத்து அதில் இதழ் பதித்தவன்,

"ஐ மிஸ் யூ அம்மு..." தாபமாய் ஒலித்தது அவனது குரல். அவனது தாபக்குரலில் அவளது உணர்வுகளும் பேயாட்டம் போட்டது. இருந்தாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

"கௌதம் ப்ளீஸ்..." அவள் கையை எடுக்க முயல...

"அடுத்து எப்போ மீட் பண்ணலாம்...?" என்று கேட்டவனின் குரல் விசமமாய் ஒலித்ததோ...

"கௌதம்... படம் ஆரம்பிச்சாச்சு... ஒழுங்கா படத்தைப் பாருங்க..."

"ஓ... டைட்டில் முடிஞ்சதா...?" என்றவன் திரையின் பக்கம் திரும்பினான். அதன் பின் அவள் புறம் அவன் திரும்பவே இல்லை... அது அவளுக்கு என்னவோ போலிருந்தது. படம் முடிந்ததும் அவனிடம்,

"படம் ரொம்பவும் சுமார் தான் கௌதம்... புது டைரக்டரை போடாம வேற யாரையாவது போட்டிருக்கலாம்..." அவள் குறைப்பட்டுக் கொள்ள... அவன் உதட்டில் மர்ம புன்னகை உதித்தது. அவனின் புன்னகை அவளைக் குழப்பியது.

வெளியில் வந்த போது அவர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்ட பத்திரிக்கையாளர்கள், "சார்... இந்தப் படத்தைப் பத்தி நீங்க கொஞ்சம் சொல்லுங்க..." அவனிடம் கேட்ட கேள்விக்கு அவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். இப்போதும் அவனின் புன்னகைக்கு அர்த்தம் தெரியாமல் அவள் விழித்தாள். அதைக் கண்டு அவனின் புன்னகை மேலும் விரிந்தது.

"இதற்கான பதிலை இந்தப் படத்தின் தயாரிப்பாளரும் என் மனைவியுமான மிசஸ். மது கௌதம் கிருஷ்ணா சொல்வாங்க..." என்றவன் அவளின் இடையில் கை கோர்த்து, "கமான் மை டியர்... டெல் த ட்ரூத்..." கண்ணைச்சிமிட்டியபடி சொன்னவனைக் கண்டு அங்கிருந்த அனைவரும் திகைத்து போய் வாயை பிளந்தனர் என்றால் அவளோ அதிர்ந்து போய் நின்றாள்.

## துளி : 10

கௌதம் கூறிய திருமணச் செய்தி பத்திரிக்கையாளர்களைப் பரபரப்படைய செய்தது. சும்மாவே வெறும் வாயை மெல்லும் அவர்களுக்கு அவன் ஒரு மூடை அவலை வாயில் கொட்டினால் சும்மாயிருப்பார்களா என்ன... கேள்வி கணைகளை மாற்றி மாற்றித் தொடுக்க ஆரம்பித்தனர். அதில் அதிகக் கேள்விகள் மதுவை பார்த்து தான் கேட்கப்பட்டது. ஏனெனில் கௌதமை விட மது தான் இந்தத் திரையுலகத்துக்கு முன்னமே நடிக்க வந்தவள்... அவளின் நட்சத்திர அந்தஸ்துக்கு முண்ணனி நடிகர் ஒருவனைத் தான் திருமணம் செய்து கொள்வாள் என்று எல்லோரும் எண்ணியிருந்தனர்.

அதிலும் பிரபல தெலுங்கு நடிகருக்கு இவள் மேல் ஒரு கண் இருப்பதையும்... அவரைத் தான் அவள் திருமணம் செய்து கொள்வாள் என்ற செய்தியும் கிசுகிசுவாய் பல நாளிதழ்களில் வெளிவந்துள்ளது. அப்படித்தான் எல்லோரும் நம்பி கொண்டிருந்தனர். ஆனால்

திரைத்துறைக்கு வந்து இரண்டு ஆண்டுகளே ஆன கௌதமை அவள் திருமணம் செய்து கொள்வாள் என்று யாரும் நினைத்து கூடப் பார்க்கவில்லை. ஏனெனில் இருவரும் எந்தப் படத்திலும் இணைந்து நடித்ததில்லை... அதை விட இருவரும் ஒரு வார்த்தை பேசி யாரும் பார்த்ததில்லை...

"மேடம்... நீங்க எப்படிக் கௌதம் சாரை கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க...?"

"உங்க திருமணம் எப்போ நடந்தது...?"

"உங்க மேரேஜ் லவ் மேரேஜா...?"

"உங்க காதல் கதையை எங்களுக்கும் கொஞ்சம் சொல்லுங்க..."

"சாரை எப்போ முதன்முறையாய் சந்திச்சீங்க...?"

கௌதம் கொடுத்த அதிர்ச்சியிலிருந்து இன்னமும் வெளிவராத மது நிருபர்கள் கேட்ட அடுக்கடுக்கான கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தாள். ஏனெனில் அவளுமே தனக்கு எப்போது திருமணம் நடந்தது என்பது அறியாத பேதையாக இருந்தாள். கௌதம் வேண்டுமென்ற விளையாடுகிறானோ என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. ஆனாலும் கௌதம் திருமணம் விசயத்தில் விளையாட மாட்டான் என்றே அவளுக்குத் தோன்றியது. அதுவும் அவன் தங்கள் வாழ்க்கை விசயத்தில் பொய் சொல்ல மாட்டான் என்று அவளுக்குத் தெரியும்.

என்ன தான் அவளைக் காதலித்து இருந்தாலும், என்ன தான் அவன் அவளை அறிந்து இருந்தாலும் இந்த இரண்டு வருடங்களில் அவளைத் தெரிந்தது போல் ஒரு நாளும் அவன் காட்டி கொண்டதில்லை. அந்தளவுக்கு இருவரின் உறவுக்கான ரகசியத்தை அவன் காத்தான். அப்படிப்பட்டவன் இன்று அவனுக்கும் அவளுக்குமான உறவை பகிரங்கமாய் எல்லோரிடமும் பறை

சாற்றுகின்றான் என்றால்...? எங்கோ இடித்தது அவளுக்கு... அது எந்த இடம் என்று தான் அவளுக்குப் புலப்படவில்லை. திருமணத்தைப் பற்றி மட்டுமே யோசித்துக் கொண்டிருந்தவள் அந்தப் படத்தின் தயாரிப்பாளர் தான் தான் என்று அவன் சொன்னதைப் பற்றிச் சரியாகக் கவனிக்கவில்லை.

"நீங்க இத்தனை கேள்விகள் கேட்டதில் என் டார்லிங் பயந்து போய் ப்ரீஸாகிட்டா... உங்கள் கேள்விக்கான பதிலை நான் சொல்றேன்..." புன்னகையுடன் கூறியவனை இன்னமும் நம்ப முடியாமல் பார்த்தாள் அவள்.

"ஜி.கே.எம் புரோடக்சன்... இது எனது மனைவி மதுவின் கம்பெனி... இதன் பெயர் இருவரின் பெயரையும் சேர்த்து வச்சது... என் மனைவியின் முதல் தயாரிப்பு நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து நடிச்ச படமா இருக்கணும்னு நினைச்சதால தான் இந்தப் படத்தில் நாங்க சேர்ந்து நடிச்சோம்..." அவன் கூறிய விசயம் அவளுக்கே அப்போது தான் தெரியும். அவளின் திகைப்பு கூடி கொண்டே போனது. அப்போது அவனை இடைமறித்த ஒரு நிருபர்,

"சார்... உங்க கல்யாண மேட்டரை பத்தி சொல்லுங்க..."

"எங்க கல்யாணம்..." என்று நிறுத்தியவன் அருகிலிருந்த மதுவை பார்க்க... அவளின் அதிர்ந்த முகத்தைக் கண்டதும் அவன் முகத்தில் புன்னகை விரிந்தது.

அவன் சரளமாய்ப் பொய் கூறுவதை மதுவால் இன்னமும் நம்ப முடியவில்லை. திருமணத்துக்கு என்ன பொய்யை கூற போகிறான் என்று அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள். ஏனெனில் இந்தப் படத்தை அவள் தயாரிக்கவும் இல்லை... மற்றும் அவனைத் திருமணம் செய்யவும் இல்லை... அது அவளைப் பொருத்த மட்டில்... ஆனால் நடக்காத ஒன்றாய் அவள் நினைத்துக் கொண்டிருக்கும் விசயத்தை நடத்தி காட்டியவனாய் அவன் கர்வத்துடன் நின்று கொண்டிருப்பதை அவள் உணரவில்லை. அவளின் முகபாவனையைக் கண்டு

கொள்ளாமல் அவன் தங்களின் காதல் கதையை அவர்களிடம் விளக்க ஆரம்பித்தான்.

"நானும், மதுவும் சின்ன வயதில் இருந்து நண்பர்கள்... நாங்க வளர... வளர... எங்கள் நட்பும் வளர்ந்து காதலாய் மாறிப் போனது. அது அவள் சினி இண்டஸ்ட்ரி வந்த பின்பும் கொஞ்சமும் மாறல..." என்று நிறுத்தியவன் பின் மதுவை பார்த்தவாறு, "இதுக்கு மேல் எங்கள் காதல் வாழ்க்கையைத் தொடர எங்களுக்கு விருப்பமில்லை... அதனால கல்யாணம் பண்ணிக்கிட்டோம்..." அவனின் பேச்சில் அவள் முகத்தில் ஈயாடவில்லை.

"அதுக்கு நீங்க ஏன் சினி இண்டஸ்ட்ரியை தேர்ந்து எடுக்கணும்..? முதலில் இருந்த மாதிரி இருந்திருக்கலாமே... நீங்க எந்த நிலையில் இருந்தாலும் உண்மை காதல் உங்களை ஏத்துக்கத் தான் செய்யும் இல்லையா...?" வேண்டுமென்றே இடக்காக ஒரு நிருபர் கேள்வி கேட்க... அதைக் கேட்டு அவள் முகம் கன்றிப் போனது. அதை அவன் உணர்ந்தானோ என்னமோ... அவளின் இடையின் மீது படிந்திருந்த கையின் மீது சிறிது அழுத்தம் கொடுத்தான். அது அவளுக்குத் தேவையாய் இருந்ததோ என்னமோ அவனுடன் நெருங்கி நின்றாள். அவன் தனக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அளித்துக் கொண்டிருக்கிறான் என்பதை ஏனோ அந்தக் கணம் அவள் மறந்து தான் போனாள்.

"நிச்சயம் நான் சாதாராண வேலையில் இருந்தாலும் மது என்னை ஏத்து கொண்டிருப்பாள்... ஆனால் நான் என்னோட பிரின்சஸ்க்கு ஏத்த மாதிரி இருக்க வேண்டாமா... அதான் நான் சினி இன்டஸ்ட்ரியை சூஸ் பண்ணினேன்" புன்னகையுடன் சொன்னவன் பேட்டியை முடித்துக் கொண்டு கிளம்பினான்.

அங்குக் குழுமியிருந்த மற்றவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டு அவர்கள் இருவரும் வெளியில் வர மேலும் ஒரு மணி நேரம் கடந்திருந்தது. அவர்களைக் கண்டதும் அவனின் கார் அங்கு வந்து நிற்க...

"அம்மு ஏறு..." காரின் முன் பக்க கதவை அவளுக்காகத் திறந்து வைத்துக் கொண்டு அவன் சொன்ன போது தான் அவளுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது. அவன் பேசிய வார்த்தைகள் உறைத்தது. தன்னைப் பிடித்திருந்த அவனின் கையை வெடுக்கென்று உதறியவள்,

"நான் என் காரில் போய்க்குவேன்..." முகத்தைத் திருப்பியவளின் பக்கம் குனிந்து,

"வீணாய் சீன் க்ரியேட் பண்ணாம காரிலேறு... இல்லை என்ன செய்வேன்னு எனக்குத் தெரியாது..." அவனின் முகத்தில், வார்த்தையில் தெரிந்த கடினத்தில் மேலே பேச்சை வளர்க்காமல் அவன் காரிலேறி அமர்ந்தாள். அவளுக்குமே அவனிடத்தில் கேட்க வேண்டிய கேள்விகள்... தெளிவுப்படுத்த வேண்டிய விசயங்கள் நிறைய இருந்தது.

அவள் ஏறி அமர்ந்ததும் ஓட்டுநரிடம் கார் சாவியை வாங்கியவன் ஓட்டுநர் இருக்கையில் தான் அமர்ந்து காரை கிளப்பினான். காரை ஓட்டி கொண்டே அவள் முகத்தை ஓரக்கண்ணால் பார்த்தான். அவள் முகம் கோபத்தில் இறுகி போயிருந்தது. எரிமலையின் கொந்தளிப்பை மனதில் அடக்கி கொண்டு அவள் அமர்ந்திருப்பதைக் கண்டவன்... அவளிடம் இருந்து பெரிய தாக்குதலை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அதற்கு முதலில் தன்னைத் தயார் படுத்திக் கொண்டான். அதற்கு ஏற்றார் போல் அவளும் வாயை திறந்தாள்.

"நாம எப்போ கல்யாணம் பண்ணிக்கிட்டோம்...? ஏன் அப்படிப் பொய் சொன்னீங்க...?" நேரிடையாய் அவள் கேட்க... அவன் அமைதியாய் காரை ஓட்டி கொண்டிருந்தான்.

"நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லுங்க..." அதற்கும் பதில் சொல்லாதவன் அந்த ஆள் அரவமற்ற சாலையின் ஓரமாய்க் காரை நிறுத்திவிட்டு அவள் புறமாய்த் திரும்பி அமர்ந்தான். அவளின் கண்களை நேருக்கு நேராய் சந்தித்து,

"நான் பொய் சொல்லல... உண்மையில் கல்யாணம் பண்ணிக்கிட்டோம்... அன்னைக்கு அக்ரிமெண்ட்ல சைன் வாங்கும் போது மேரேஜ் ரிஜிஸ்ட்ரேசன் ஃபார்ம்லேயும் சைன் வாங்கிட்டேன்..." அந்த வார்த்தைகளையே அவளுக்குப் போதுமானதாய் இருந்தது.

அவனை நம்பி படித்துப் பார்க்காமல் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டதற்கு அவன் தனக்குத் தக்க தண்டனை கொடுத்துவிட்டதாய் எண்ணி அவன் மீது ஆத்திரம் கொண்டாள். அதிலும் திருமணம் முடிந்து தான் அவன் தன்னைத் தொட்டிருக்கிறான் என்றதில் அவள் உள்ளுக்குள் உடைந்து தான் போனாள். அவள் நினைத்தது ஒன்று... ஆனால் நடந்ததோ வேறொன்று... தன் இயலாத நிலையை எண்ணி அவளுக்குத் தன் மேலேயே கோபம் கோபமாய் வந்தது. அந்தக் கோபம் முழுவதும் இப்போது அவன் மீது திரும்பியது.

"எவ்வளவு பெரிய மோசடி... துரோகம்...!!!" பல்லை கடித்தாள் ஆத்திரத்துடன்.

"காதலிக்கிறவளை கல்யாணம் பண்ணிக்கிறதுக்குப் பேரு உங்க ஊருல மோசடியா... துரோகமா...? நல்லா இருக்கு கதை..." கிண்டல் குரலில் அவளை நக்கலடித்தவன், பின் வலது கையால் அவள் முகத்தை இறுக பிடித்துத் தன் அருகே இழுத்தவன், "கல்யாணம் பண்ணிக்கோன்னு கெஞ்சிய காதலனை கல்யாணம் பண்ணிக்காம அவனோட காதலை தூக்கி போட்டுட்டு ஓடி போனவங்களுக்கு உங்க ஊருல என்ன பேரும்மா...? அதுக்குப் பேரு துரோகம் இல்லையா... மோசடி இல்லையா...?" கோபத்தில் அவன் கண்கள் சிவந்தது. அவளின் துரோகத்தை, ஏமாற்றத்தை அனுபவித்தவன் அவன் அல்லவா... அனுபவித்தவனுக்குத் தான் தெரியும் வலியும், வேதனையும்... கடந்த காலத்தை அவன் நியாபகப்படுத்தியதில் அவள் முகம் பெரும் துயரத்தை தத்தெடுத்தது.

"நான் செய்தது துரோகம் தான் இல்லைங்கல்ல... அதுக்காக நீங்களும் அதே துரோகத்தைச் செய்யலாமா...?"

அவளின் சுருதி குறைந்திருந்தது.

"ப்ச்சு... திரும்பத் திரும்ப நாம கல்யாணம் பண்ணிக்கிட்டதைத் துரோகம்ன்னு சொல்லாதே... எவ்வளவு நாள் தான் இப்படியே காதலிச்சிட்டு இருக்கிறது... காதலுக்கு அடுத்தக் கட்டம் கல்யாணம்... அதுக்கு முன்னேற வேண்டாமா..." என்றவன் முகத்தில் திடீரென்று கனிவு வந்தது,

"கல்யாணத்துக்கு அடுத்தக் கட்டமான குழந்தைகள் நமக்கு வேணாமா...? உன்னைப் போல் ரெண்டு தேவதைகள் எனக்கு வேணும் அம்மு... ப்ளீஸ் என்னைப் புரிஞ்சிக்கோ..." என்றவன் கைகள் அவளை அணைத்துக் கொண்டது.

அவன் குழந்தைகள் என்றதில் அவள் உடல் விறைப்புற்றது. கல்யாணமே வேண்டாம் என்பவளிடம் அவன் தன் வாரிசை எதிர்பார்க்கிறானே என்று அவனை எண்ணி வருந்தியவள்... தன்னை நினைத்து உடலும், மனமும் கூசி போனாள்.

"என்னால்... உங்களுக்கு..." இடைநிறுத்தியவள் கண்களை இறுக மூடி தன்னைச் சமன் செய்து கொண்டு, "நல்ல மனைவியாய் இருக்க முடியாது... ஏன்னா... நான்... நான்..." அதற்கு மேல் சொல்ல முடியாமல் அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள்.

அவளின் அழுகையில் அவன் மனம் பதறித்தான் போனான். "ஏய்... இங்கே பாருடி... உன்னை விட யாராலேயும் எனக்கு நல்ல மனைவியாய் இருக்க முடியாது..." என்று சொன்னவனின் மனக்கண்ணில் அவள் அவனிடத்தில் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் நியாபகத்துக்கு வந்தது. ஏதோ தோன்ற எல்லாவற்றையும் கோர்வையாய் கோர்த்து பார்த்தவனுக்கு ஏதோ புரிய அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

"அம்மு... இந்த இடைப்பட்ட ஐஞ்சு வருசத்தில் உனக்கு என்ன நடந்து இருந்தாலும் எனக்குக் கவலை இல்லை... எனக்கு வேண்டியது என் அம்மு... என் அம்முவோட மனசு...

என் அம்முவோட காதல்..." என்றவனின் பேச்சில் அவள் மனம் ஒரு நொடி இளக தொடங்கியது... மறுநொடி தன்னைச் சுதாரித்துக் கொண்டவள் அவன் அணைப்பில் இருந்து விலகியவள்,

"நான் வேண்டாம் உங்களுக்கு..." என்றாள் மெதுவே... அடக்கப்பட்ட அவனின் கோபம் மீண்டும் திமிறிக் கொண்டு வெளிவந்தது.

"ஏன்டி...?" ஆத்திரத்துடன் அவளின் தோளை பற்றி உலுக்கினான். அதற்கு விடையாக அவளிடத்தில் மௌனம் மட்டுமே பதிலாகக் கிடைக்க அவன் வெறுத்து தான் போனான்.

"இனி உன் கிட்ட பேசி பிரயோஜனம் இல்லை..." என்றவன் காரை கிளப்பினான்.

"நான் என் வீட்டுக்கு போகணும்..." என்றவளை முறைத்து பார்த்தவன் பேசாமல் காரை செலுத்தினான். அடுத்த அரைமணி நேரத்தில் அவளின் வீட்டின் முன் தன் காரை நிறுத்தினான். அவசரமாய்க் காரை விட்டு இறங்கிய மதுவை தொடர்ந்து இறங்கிய கௌதம் காரை பூட்டிவிட்டு வேகமாய் அவள் அருகே சென்று அவளுடன் இணைந்து நடந்தான்.

"இப்போ எதுக்கு என் கூட வர்றீங்க...?" அவன் தன்னுடன் வருவது கண்டு அவளின் நடை நின்றுவிட்டது.

"உன் அம்மா கிட்ட நியாயத்தைக் கேட்க போறேன்..." அதைக் கேட்டு அதிர்ந்து போய் நின்றவளின் கையைப் பிடித்துக் கொண்டு, " வாடி..." என்றவன் முன்னே நடக்க... வேறுவழியின்றி அவள் அவனைப் பின் தொடர்ந்தாள்.

கௌதம் வீட்டிற்குள் நுழைவதை கண்டு வரவேற்பறையில் அமர்ந்திருந்த இதயா அலறிக் கொண்டு எழுந்தாள். அதிலும் இருவரின் கைகளும் இணைந்து இருந்ததைக் கண்டு அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது. ரஞ்சனும், உஷாவும் அவனை ஆச்சிரயமாய்ப் பார்க்க... தன்ராஜ்

அவனைக் கண்டு மனைவியின் பின்னே பயத்துடன் பதுங்கினான்.

இதயா ஆவேசத்துடன் கௌதமின் முன் வந்தவள், "வெளியே போடா நாயே... எங்க வீட்டுக்குள் நுழைய உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்... யார் கொடுத்த இடம் இது...? எல்லாம் இவள் கொடுக்கிற தைரியமா..." என்று அவனைப் பார்த்து கத்தியவள் மதுவிடம் திரும்பி, "ஏண்டி உனக்கு அறிவே கிடையாதா...? உனக்கு ஆம்பிளை சுகம் வேணும்ன்னா வேற யாருமா கிடைக்கல... போயும் போயும் இவன் தான் கிடைச்சானா... அப்படியே யாரும் கிடைக்கலைன்னா இருக்கவே இருக்காரு என் புருசன்... உன்னைக் கண்டாலே அப்படி உருகுறாரு... அவரை வச்சுக்கோ..." என்றவளின் பேச்சில்,

"இதயா..." என்று மதுவும் ரஞ்சனும் ஒரு சேர கூவினர்.

இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் கௌதம் ரஞ்சனிடம் வந்து, "என்னை மன்னிச்சுக்கோங்க..." என்றவன் அடுத்த நொடி இதயாவின் கன்னத்தில் தன் கையை இடி போல் இறக்கினான். அதில் நிலைக்குலைந்து கீழே விழுந்தாள் இதயா.

"ஏற்கெனவே என் கிட்ட வாங்கியதை நீ மறந்திட்ட போலிருக்கு... நியாபகப்படுத்த இன்னும் கொஞ்சம் கொடுக்கவா...?" என்று தன் முழுக்கை சட்டையை ஏத்திவிட்டபடி அவள் அருகில் வந்த கௌதமை கண்டு இதயாவின் கைகள் தாமாகக் கன்னங்களைத் தாங்கி கொண்டது... அவளின் தலை மறுப்பாக வலமும் இடமுமாய் ஆடியது.

"யார் கிட்ட பேசுறன்னு தெரிஞ்சு தான் பேசுறியா...? யாரை பார்த்து நாய்ன்னு சொன்ன...? இது உன் வீடா...? இது என் மனைவி வீடு... இப்போ இது என் வீடு... என்ன புரிஞ்சதா...? கிளம்புறதா இருந்தா நீ தான் உன் குடும்பத்துடன் வெளியே போகணும்... என்னை வெளியில் போகச் சொல்ல உனக்கு இல்ல... என் பொண்டாட்டிக்கு கூட ரைட்ஸ் இல்லை..."

அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனைக் கண்டு எல்லோரும் அதிர்ச்சியும், ஆச்சிரியமாய்ப் பார்த்தனர்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க... இப்போ மது சட்டப்படி என் மனைவி..." என்றவன் முன் வந்த ரஞ்சன்,

"வாழ்த்துக்கள் கௌதம்..." என்று வாழ்த்தினான். பின், "இதயா பேசியதுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... மது எனக்குத் தங்கை போல... நீங்க தப்பா நினைச்சுக்காதீங்க..." கௌதமின் கையைப் பிடித்துக் கொண்டு மன்னிப்பு வேண்ட...

"ச்சேச்சே... நீங்க போய் என் கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிட்டு... எனக்கு மதுவையும் தெரியும்... உங்களையும் தெரியும்... அதை விட உங்க மனைவி இதயாவை ரொம்பவே தெரியும்..." என்றவனின் கண்கள் விசமாய் இதயாவை நோக்கியது.

பின் மதுவை பார்த்தவன், "அத்தையைப் பார்க்க போகலாமா...?" என்றான். இனி அவனைத் தடுத்து நிறுத்த முடியாது என்று உணர்ந்த மது மறுப்புச் சொல்லாமல் தன் அன்னையிடம் அவனை அழைத்துச் சென்றாள்.

"அத்தை..." என்றவனின் அன்பான குரல் மீனாவின் காதில் விழ அவரின் கண்கள் மெல்ல திறந்தது. அங்கே கௌதமை கண்டதும் அவரது விழிகளில் தோன்றிய மலர்ச்சியை மது இது நாள் வரை அவரிடத்தில் கண்டது இல்லை.

"க... க..." என்றவருக்கு அதற்கு மேல் பேச்சு வரவில்லை... அவனின் கையை இறுக பிடித்துக் கொண்டார்.

"எப்படி இருக்கீங்க அத்தை...?" மீனாவின் நிலை கண்டு அவன் மனதுக்குள் வருந்தினான்.

"ம்..." என்றவரின் முகத்தில் விரக்தி பரவியது. "க..." என்று அவனை அழைத்தவர் மதுவை சுட்டி காட்டி அவளை அழைத்துக் கொண்டு போகச் சொன்னார். தன்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று மதுவிடம் சொல்ல சொன்னார்.

அதைக் கண்டு மது, "அம்மா..." என்று அவரை அணைத்துக் கொண்டு அழ...

"அது சம்பந்தமா தான் பேச வந்திருக்கேன் அத்தை... நானும் மதுவும் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம்... எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க..." என்றவன் அவரின் கால் தொட்டு வணங்க... மது பேசாமல் கைகளைக் கட்டி கொண்டு அமைதியாய் இருந்தாள். மீனா கலக்கத்துடன் மதுவை பார்த்தவர் பின் இயலாதவராய் கௌதமை பார்த்தார்.

"மது..." அழுத்தம் திருத்தமாய் அவள் பெயரை அவன் உச்சரித்ததில் அவளுக்குக் குளிரெடுத்தது.

"வா..." என்றவனின் பேச்சை அதற்கு மேல் அவளால் தட்ட முடியவில்லை. இப்போது மீனா முகம் மலர இருவரையும் ஆசிர்வாதம் செய்தார்.

"அது வேற ஒண்ணும் இல்லை அத்தை... உங்க மகளுக்குக் கொஞ்சம் ஸ்டார்ட்டிங் ட்ரபிள்... சொல்ற விதத்தில் சொன்னா கேட்டுக்குவா..." என்றவனை அன்னைக்குத் தெரியாமல் முறைத்து பார்த்தாள் அவள். அவனோ ஒன்றும் அறியாதவனாய் அவளைப் பார்த்து கண்சிமிட்டி சிரித்தான். அவள் வெடுக்கென்று முகத்தை வேறு பக்கம் திரும்பி கொண்டாள்.

"அத்தை... மதுவை நான் எங்க வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்..." என்றவனின் பேச்சில் அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

"நான் வர மாட்டேன்..." அன்னை இருப்பதை மறந்து அவளின் வாய் வார்த்தைகளை உதிர்த்தது.

"வந்து தான் ஆகணும்..." அவளிடத்தில் சொன்னவன், "அத்தை நாங்க கிளம்புறோம்... நாளைக்கு மறுபடியும் அவளைக் கூட்டிட்டு வர்றேன்..." என்று மாமியாரிடம் விடைப்பெற்றவன் எழுந்தான்.

"போகலாமா...?" என்றவனைக் கண்டு அசையாமல் இருந்தவளின் அருகில் வந்தவன் அவளின் கையைப் பிடித்து வலுக்கட்டாயமாய் இழுத்தான்.

"இப்போ வர போறியா இல்லையா...?" கோபத்துடன் கேட்டவன் தரதரவென்று அவளை இழுத்துக் கொண்டு போக அவளோ அவனிடம் இருந்து திமிறினாள்.

"மது..." என்று கர்ஜித்தவன், "என்னைக் கொலைக்காரன் ஆக்காதே..." அதற்கும் அவள் பயப்படவில்லை.

"நான் உங்களோட வர முடியாது... எனக்குத் தெரியாம என்னை ஏமாத்தி கல்யாணம் பண்ணிக்கிட்ட உங்க கூட நான் வர தயாரா இல்லை... நீங்க ஒரு ஏமாத்துக்காரர்... மோசக்காரர்... உங்க கூட வாழ எனக்கு விருப்பம் இல்லை... நாம சட்டப்படி பிரிஞ்சரலாம்... நாளைக்கே உங்களைத் தேடி டிவோர்ஸ் பேப்பர்ஸ் வரும்..." என்றவளின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான் அவன்.

"என்னடி... உனக்குத் தான் பேச வரும்ன்னு பேசுறியா...? என்னோடு வாழ வான்னு நான் கூப்பிடறேன்... நீ என்னடான்னா வாழாம இருக்கிறதுக்கு வழியா சொல்ற..." ஆக்ரோசமாய்க் கேட்டவன் அவள் எதிர்பாராத நேரம் அவள் கழுத்தில் கை வைத்து நெறித்தவன் சுவரோடு சேர்த்து வைத்து அவளை அழுத்தினான்.

"க... க... க..." மீனாவின் கூக்குரலில் அவளின் மீதிருந்த கையை எடுத்தவன், "ச்சே..." என்று தன் நெற்றியில் அறைந்து கொண்டான்.

"க..." மீனாவின் அழைப்பில் அவர் புறம் அவன் திரும்ப, அவர் செயல்படாத தன் ஒரு கையைச் செயல்பட்ட மற்றொரு கையால் எடுத்து சேர்த்து வைத்து கும்பிட்டவர் தலை 'வேண்டாம்' என்பது போல் ஆடியது... மகளின் மனத்துயரம் என்னவென்று அறியாமல் இருக்கும் தன் நிலையை எண்ணி அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவர் அருகில் வேகமாய் வந்தவன் அவரின் கை மீது தன் கையை வைத்து,

"சாரி அத்தை... இனி இது போல் நடக்காது..." என்றான் மெய்யாய் வருந்தியபடி... பின் மதுவிடம் வந்தவன்,

"அப்போ நீ வர மாட்ட அப்படித்தானே..." அவள் எந்தவொரு அசைவும் இல்லாமல் அவனை வெறித்துப் பார்த்தாள்.

"அழுத்தம் மகா அழுத்தம்... நீ இவ்வளவு அழுத்தக்காரியா இருப்பேன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலடி..." சொல்லும் போதே அவன் கண்ணில் வலி படர்ந்தது.

"ஆனா இதுக்கெல்லாம் சேர்த்து வச்சு வட்டியும் முதலுமாய் நீ அனுபவிக்கப் போற... அப்போ நீ இந்தக் கௌதம் கிட்ட தான் வந்தாகணும்... அப்போ தெரியும் இந்தக் கௌதம் யாருன்னு..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் விருட்டென்று அங்கிருந்து வெளியேறினான்.

அவன் போவதை சலனமில்லாமல் பார்த்து கொண்டிருந்தவள் மனதில் வேதனை இல்லை... வலி இல்லை... துயர் இல்லை... ஆனால் அவன் தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கம் மட்டுமே மிஞ்சியிருந்தது.

## துளி : 11

"அம்மா..." மது தன் அன்னையின் அருகில் அமர்ந்து கையைப் பிடிக்க... மீனாவோ தன் கையை அவள் பிடியிலிருந்து உருவி கொண்டவர் அவள் முகம் காண விரும்பாமல் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

"அம்மா... நீங்க கூட என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கறீங்களே..." அவள் கண்ணிலிருந்து வழிந்த கண்ணீர் அவரின் கை மீது பட்டுத் தெறித்துக் கீழே விழுந்தது. அதை உணர்ந்ததும் பெத்த மனம் பதபதைக்க மகளைத் திரும்பி பார்த்தார் அவர். 'அழாதே' என்பது போல் அவரின் கைகள் உயர்ந்து அவளது கண்களைத் துடைத்துவிட்டது.

'கௌதம் கூடப் போயிருக்கலாமே... நீ ஏன் போகலை...' என்று அவர் கோபமாய்ச் சைகையில் கேட்க... அவள் பதில் பேசாமல் அவரின் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் உகுத்து கொண்டிருந்தாள்.

'நான் உன் மேல் ரொம்பக் கோபமா இருக்கேன்...' அவரின் சைகை மொழியில் சொல்ல... அவள் மெதுவே தன் வாயை திறந்தாள்.

"எல்லாம் தெரிஞ்ச நீங்களே இப்படிச் சொல்லலாமா...? கௌதம் கூடப் போக மாட்டேன்னு நான் ஏன் சொல்றேன்னு உங்களுக்குத் தெரியாது... எனக்கு ஆறுதல் கொடுக்கிறது நீங்க ஒருத்தர் தான்... நீங்களும் என் மேல் கோபப்பட்டா நான் எங்கேம்மா போவேன்..." அவரின் கையில் முகத்தைப் புதைத்து கொண்டாள்.

அழுகையில் அவள் உடல் குலுங்கியதை கண்டவருக்கு அந்தப் பொல்லாத நாள் நியாபகம் வந்து அவரின் கண்களிலும் கண்ணீரை சுரக்க செய்தது. இன்று அவர் இப்படிப் படுத்த படுக்கையாய் இருப்பதற்கும் அன்றைய நாளில் நடந்த அதிர்ச்சியான சம்பவம் தானே காரணம்... அதை அவரால் மறக்க முடியுமா...? ஆனால் அதைக்

காரணமாக வைத்து மகள் நல்ல வாழ்க்கையை... நல்ல கணவனை இழக்கிறாளே என்று அவரது மனம் ஆதங்கம் அடைய தான் செய்தது. இதை இப்படியே விட்டுவிடக் கூடாது என்று முடிவு செய்தவர் மகளின் கன்னத்தை வாஞ்சையுடன் தடவி கொடுத்தார். பின் அவள் முகம் பற்றி நிமிர்த்தியவர்,

'அதையே நினைத்து நினைத்து உன்னை நீ கஷ்டப்படுத்திக்காதே... நான் வேணும்ன்னா கௌதம் கிட்ட பேசவா... அவன் உன்னைப் புரிந்து கொள்வான்... உன்னைக் கண்ணுக்குள் வச்சுப் பார்த்துக்குவான்...' என்ற அவரின் மௌன மொழி அவளுக்குப் புரியத்தான் செய்தது. என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் பெருமூச்சு விட்டவள்,

"நிச்சயம் அவர் என்னை ஏத்துக்கத் தான் செய்வார்ம்மா... இல்லைங்கல்ல... ஆனா நான்... என் மனசாட்சி என்னை உயிரோடு கொன்னு போட்டுரும்மா... கல்யாணம்ங்கிறது ஒரு புனிதமான நிகழ்வு இல்லையா... அதை விட மஞ்சள் கயிறு தாலிக்குன்னு சில புனிதம் இருக்கு... அதை என்னை மாதிரி ஒருத்தி கழுத்தில் நினைச்சு பார்க்கவே அருவருப்பா இருக்கு... நான் அதுக்குப் பொருத்தம் இல்லைம்மா... நான் பூஜையறையில் ஏத்தி வைக்கும் குத்துவிளக்கு இல்லை... நான் வரவேற்பறையில் இருக்கும் அலங்கார விளக்கு... அவ்வளவு தான்..."

"கௌதம் மாதிரி ஒருத்தருக்கு நல்ல குடும்பப்பாங்கான பெண் தான் மனைவியா வரணும்... என்னை மாதிரி பொண்ணு இல்லை... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா... இந்தச் சினி இன்டஸ்ட்ரில தப்பு பண்ணாத ஆளுங்க ரொம்பக் குறைவு... அதுல என் கௌதமும் ஒருத்தர்... இதுவரை எந்தப் பெண்ணையும் அவர் தவறா பார்த்தது கூடக் கிடையாது... அப்படிப்பட்டவருக்கு இந்தக் கேடு கெட்டவள் மனைவியா வர வேணாம்... ஆனா அவர் எனக்கே தெரியாம இப்படி ஒரு காரியத்தைப் பண்ணுவார்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல...

இப்போ இதுல இருந்து எப்படி விடுபடுறதுன்னும் எனக்குத் தெரியல..."

மது பேச பேச மீனாவின் கண்களில் கண்ணீர் பொங்கியது. குடும்பத்துக்காக என்று தெரிந்தே தன் மகளைப் படுகுழியில் தள்ளிவிட்டோமோ என்ற குற்றவுணர்ச்சியில் அவரது உள்ளம் தவித்தது. தன்னுடைய இயலாமை, குற்றவுணர்வு எல்லாமும் சேர்ந்து அவர் தன் தலையில் ஓங்கி அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தார்...

"ச்சு... என்னம்மா இது...? என் தலையெழுத்து இப்படின்னா அதுக்கு நீங்க என்ன பண்ணுவீங்க..." மது அவரின் கையைப் பிடித்துத் தடுத்தவள் அவரின் நெற்றியை மென்மையாய் தடவி கொடுத்தாள்.

'கௌதம் கிட்ட நான் பேசறேன்... அவன் உன்னைப் புரிந்து கொள்வான்...' என்று மீண்டும் சைகையில் சொன்னவரை கண்டவள் கண்ணில் வலி நிறைந்திருந்தது.

"புரிந்து கொள்வார் தான் நான் இல்லைன்னு சொல்லலையே..." என்றவள் சற்று நிறுத்தி, "அந்தத் திவாகர் இன்னும் என் காலை சுத்தின பாம்பா தான் இருக்கான்... அவனைப் பத்தி மட்டும் கௌதமுக்கு தெரிஞ்சது... அடுத்தச் செகண்ட் அவனைக் கொலை பண்ணிட்டு ஜெயிலுக்குப் போயிருவாரு... என்னைக் காதலிச்ச பாவத்துக்கு அவர் ஜெயிலுக்குப் போகணும்ங்கிறது தான் உங்களோட ஆசையா... சொல்லுங்கம்மா சொல்லுங்க..." ஆவேசமாய்க் கேட்டவளின் கேள்விக்கு அவரிடம் பதில் இல்லை... கௌதம் அவருக்கு மகன் போல அவனுக்கு ஏதாவது ஒன்று என்றாலும் அவரின் உள்ளம் பதபதைக்கத் தான் செய்கிறது.

"இது மட்டும் இல்லைம்மா... அவர் அம்மாவை நான் தான் கொன்னுட்டேனோங்கிற குற்றவுணர்வு என் மனதில் இருந்து கிட்டே இருக்கு... அப்படி இருக்கும் போது கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாம அந்த வீட்டுக்கு மருமகளா போக என்னால் எப்படி முடியும்...? கௌதமோட காதலை,

நம்பிக்கையை உயிரோடு கொன்னவ நான்... அப்படி இருந்தும் அவர் என்னைத் தேடி வர்றார்ன்னா அது அவரோட பெருந்தன்மை... ஆனா நான்..." மேற்கொண்டு பேச முடியாமல் நிறுத்தியவள் தன்னைச் சமன் செய்து கொண்டு,

"இதைப் பத்தி இனி பேச வேணாம்..." என்றவள் "சரிம்மா... நீங்க தூங்குங்க..." அவருக்குப் போர்வையைப் போர்த்திவிட்டு வெளியில் வந்தாள். அவள் வருவதற்காகவே காத்திருந்தார் போல் இதயா அவளை நோக்கி வந்தாள்.

"என்னடி ஆளை வச்சு அடிக்கறியா...? என் புருசன் கூட என்னை அடிச்சது இல்லை... அவன் யாருடி என்னை அடிக்கிறதுக்கு...? எங்கள வீட்டை விட்டு வெளியில் போகச் சொல்றான்... இதெல்லாம் யார் கொடுத்த தைரியம்... எல்லாம் நீ கொடுக்கிற இடம் தான்டி... யாரை கேட்டுட்டு நீ அவனைக் கல்யாணம் பண்ணின...?" அடுக்கடுக்காய் குற்றச்சாட்டும் கேள்விகளை அவள் அடுக்க... மது அவளைக் கூர்மையாய் பார்த்தவள்,

"ஏன் இதுக்கு முன்னாடி நீ அவர் கிட்ட அடிவாங்கியது இல்லை...? அவர் யார்ன்னு உனக்குத் தெரியாது... தகப்பன் இல்லாத வீட்டுக்கு தகப்பன் மாதிரி இருந்ததை நீ மறந்திட்டியா... அன்னைக்கு அவர் கிட்ட வாங்கிச் சாப்பிடும் போது எங்கே போச்சு இந்தப் புத்தி... அப்பவே உனக்கு இந்தப் புத்தி இருந்திருந்தா இன்னேரம் நான் கௌதம் கையால தாலி வாங்கிட்டு அவர் மனைவியா வாழ்ந்திட்டு இருந்திருப்பேன்... இப்படி எங்க வாழ்க்கை பாழாகி இருக்காது..." என்று நிறுத்தியவள்,

"அப்புறம் என்ன கேட்ட யாரை கேட்டு அவரைக் கல்யாணம் பண்ணினேன்னா... என் லவ்வரை கல்யாணம் பண்ண நான் யாரை கேட்கணும்... நீ அப்படித்தான் எல்லோரையும் கேட்டுட்டு தான் காதலிச்சியா...? இல்லை உன் தங்கச்சி உஷா எல்லோரையும் கேட்டுட்டு தான் பதினைஞ்சு வயசுல வயித்துல குழந்தையை வாங்கிட்டு வந்தாளா...?"

சாட்டையாய்ச் சுழன்றது அவளது நாக்கு... ஏனெனில் கௌதமுடன் தான் சேர முடியாமல் தவிப்பதற்கு அன்று இவர்கள் இருவரும் தானே பெரிய தடைக்கற்களாய் இருந்தார்கள் என்ற ஆத்திரம், இன்று கௌதம் அவ்வளவு வற்புறுத்தி அழைத்தும் அவனோடு செல்ல முடியாத தன் நிலை... அதனால் ஏற்பட்ட கோபம் எல்லாமும் சேர்ந்து சகோதரியிடம் பாய்ந்தது.

"இதுக்கு மேல என்னைக் கேள்வி கேட்கிற அதிகாரம் இங்கே யாருக்கும் கிடையாது... இங்கே இருக்கப் பிடிக்கலையா முதல் வேலையாய் நடையைக் கட்டுங்க... உங்களுக்குப் புண்ணியமா போகும்..." என்றவள் விறுவிறுவென மாடிப்படியில் ஏறினாள்.

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு... புரிஞ்சு இருக்கும்ன்னு நினைக்கிறேன்..." மனைவி அருகில் வந்த ரஞ்சன் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்ல... இதயா அவனை முறைத்து பார்த்தாள். அவன் தோளை குலுக்கியபடி அறைக்குச் சென்றுவிட்டான்.

"அக்கா... இப்போ என்ன பண்றது...? திடீர்ன்னு வீட்டை விட்டுப் போகச் சொன்னா நாம என்ன செய்றது...? உனக்காவது பரவாயில்லை... மாமா நல்ல வேலையில் இருக்காரு... ஆனா என் புருசன்..." உஷா எரிச்சலுடன் தன்ராஜை பார்த்தாள்.

"ம்... உன் புருசனுக்கா வேலை இல்லை... அதான் விடாம அடுத்தடுத்து ரிலீஸ் பண்ணிக்கிட்டே இருக்காரே... அது பெரிய வேலை இல்லையா..." நக்கலாய் சொன்ன இதயாவின் கண்கள் மேடிட்டு இருந்த உஷாவின் வயிற்றைக் கேலியாய்ப் பார்த்தது.

"என்ன கிண்டல் அடிக்கிற வேலை எல்லாம் வேண்டாங்க... நாங்களும் பெரிய பேமிலியில் இருந்து தான் வந்திருக்கோமாக்கும்..." தன்ராஜ் கோபமாய்க் கத்தினான்.

"நீங்க பெரிய பேமிலி... அது சரி மாமியார் வீட்டோடு போன்னு கையைக் கழுவி விட்டவங்க எல்லாம் பெரிய

பேமிலியில் பிறந்தவங்க தான்..."

இதயாவின் பேச்சிற்குத் தன்ராஜால் பதில் பேச முடியவில்லை. அவனின் உண்மை நிலையும் அது தான். அவனால் ரஞ்சனை அது போல் சொல்ல முடியாது... மாமியார் வீட்டோடு இருந்தாலும் சுயகௌரவத்துடன் வாழும் ரஞ்சனை பழித்துப் பேச அங்கே யாருக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அந்த மாதிரி வாய்ப்பை ரஞ்சன் அவர்களுக்கு வழங்கவும் இல்லை.

"யோசிக்கலாம் உஷா... நீ போய்ப் படு..." என்றபடி இதயா தன்னுடைய அறைக்குச் செல்ல... உஷா தன் கணவனைக் கடிந்தாள்...

"சம்பாதிக்கத் தான் துப்பில்லை... இந்த வாயையாவது சும்மா வச்சிட்டு இருக்கலாம்ல..." அவள் அவனிடம் சீறிவிட்டு போக... தன்ராஜ் செய்வதறியாது விழித்தான்.

மது அறைக்குள் நுழையவும் அவளின் அலைப்பேசி அழைக்கவும் சரியாக இருந்தது. நரேந்திரன் தான் அழைத்திருந்தார். திருமணச் செய்தி அவரின் காதுக்குச் சென்றுவிட்டது என்பதை அறிந்தவள் உதட்டை கடித்தபடி அப்படியே யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். பின் மெதுவே அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள்...

"மது... வாழ்த்துக்கள்ம்மா... நீயும் கௌதமும் எப்போடா ஒண்ணு சேருவீங்கன்னு நினைச்சிட்டு இருந்தேன்... அந்த நினைப்பை உண்மையாக்கிட்டம்மா... இப்பத்தான் எனக்கு ரொம்பச் சந்தோசமா இருக்கு... கூடிய சீக்கிரம் ஊரறிய நீங்க கல்யாணம் பண்ணிக்கணும்... அதுக்கு நான் வந்து ஆசிர்வாதம் செய்யணும்..." என்றவரின் உற்சாக வார்த்தையில் அவளுக்கு அவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

"என்ன மது... பேசிட்டே இருக்கேன்... நீ பதில் பேச மாட்டேங்கிற..." மறுமுனையில் அவர் படபடக்க...

"கேட்டுட்டு தான் இருக்கேன்ப்பா..." என்வளின் குரலில் இருந்த அழுகையை அவர் உணர்ந்து கொண்டார்.

"ஏன் மது உன் குரல் ஒரு மாதிரி இருக்கு...? அழறியா...?" அதற்கு அவள் பதில் சொல்லாமல் இருப்பதை வைத்து அவள் அதைத் தான் செய்து கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தார் அந்த அனுபவஸ்தர்.

"கௌதமை கல்யாணம் பண்ணிக்கிட்டது உனக்குப் பிடிக்கலையா...?"

"அய்யயோ... அப்படி எல்லாம் இல்லைப்பா..."

"அப்புறம் எதுக்கு இந்த அழுகை...?" என்று யோசித்தவர் சட்டென்று, "அன்னைக்கு நடந்ததை நீ இன்னுமா மறக்கல..." அவளைப் புரிந்தவராய் அவர் சொல்ல...

"ம்... ம்... ம்..." அழுகையை அடக்கி கொண்டு அவள் சொல்ல...

"ஓ முட்டாள் மது... என்ன பொண்ணும்மா நீ... அதையே நினைச்சிட்டு தான் இப்படிக் கஷ்டப்படுறியா...? அது ஒரு ஆக்சிடெண்ட்.... அதை அப்பவே நீ மறந்திட்டேன்னு நான் நினைச்சிட்டு இருக்க... நீ என்னடான்னா இன்னமும் அதைத் தூக்கி சுமந்திட்டு இருக்க..." அவர் கடிந்து கொள்ள...

"என்னால அதை மறக்க முடியலப்பா..." கேவியவளை என்ன சொல்லி சமாதானப்படுத்துவது என்று தெரியவில்லை அவருக்கு.

"அந்த ராஸ்கல் மறுபடியும் உன் கிட்ட பிரச்சினை பண்றானா...?" ஆம் என்று சொல்ல தான் அவளுக்கும் ஆசை... ஆனால்...??? மறுபடியும் மறுபடியும் பிரச்சினை பூதாகரமாக உருவெடுப்பதை அவள் விரும்பவில்லை.

"இல்லைப்பா..." சொல்லும் போதே குரல் நடுங்கிற்று... இப்போதைக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை... ஆனால்

நாளை அவளின் திருமணச் செய்தியை அவன் பார்த்தால்...???

"இங்கே பாரு மது... பழசை எல்லாம் மறந்திரு... இப்போ தான் பிறந்தோம்ன்னு புதுசா வாழ பாரு..." அறிவுரை சொன்னவரிடம் உம் கொட்டி அலைப்பேசியை அணைத்தவள் மிகவும் சோர்ந்து தான் போனாள்.
படுக்கையில் விழுந்தவளுக்கு உறக்கம் தான் வரவில்லை. அவள் மனதிலும், உடலில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் கௌதம்... கௌதம்... கௌதம் மட்டுமே நிறைந்திருந்தான். அவனோடு இருந்த அந்த ஒரு வார காலம் மட்டுமே அவளின் மனக்காயத்தை ஆற்றும் மருந்தாக ஆனது. எழுந்து அலமாரியை திறந்தவள் தன் மடிக்கணினியை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள். அதை உயிர்ப்பித்து அவளும், கௌதமும் சுவிஸில் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்களை ஆர்வமுடன் பார்த்தாள்.

"கௌதம்... ஐ லவ் யூ..." என்று முணுமுணுத்தவாறு அவனின் பிம்பத்தை வருடினாள்.

அன்று அவனின் தொடுகையில் ஒரு மனம் உருகினாலும்... மறுமனம் தன் இழிநிலையை எண்ணி கண்ணீர் வடிக்கத் தான் செய்தது. அவன் உறங்கிய பின் அவள் வடித்த கண்ணீர் அவளுக்கு மட்டும் தான் தெரியும்... ஆனால் கௌதம் அவளைப் பதிவு திருமணம் செய்து கொண்டு அவளின் கண்ணீரை ஒன்றுமில்லாததாய் செய்துவிட்டான். இவ்வளவு நாள் தன்னைக் குறித்து அருவருப்பில் துடித்துக் கொண்டிருந்தவள் மனப்பாரம் எல்லாம் நொடியில் குறைந்து இறகை போல் லேசானதை அவள் உணர தான் செய்தாள்.

அவளைப் பொருத்தவரையில் கௌதமை திருமணம் செய்வது என்பது மகிழ்ச்சியான ஒரு விசயம் தான்... அவளைப் பொருத்தவரை அவன் எட்டாக்கனி... ஆனால் அவனைப் பொருத்தவரை... அவள் அவனுக்கு அவமானம்... களங்கம்... அசிங்கம்... இதைச் சொன்னால் அவன் ஏற்றுக்

கொள்ள மாட்டான்... 'நீ எப்படி இருந்தாலும் நீ தான் என் மனைவி...' என்று காதலில் பிதற்றுவான். காதல் கற்பனைக்கு நன்றாகத் தான் இருக்கிறது... ஆனால் நிஜத்தில்...??? நினைத்தவளின் முகத்தில் விரக்தி புன்னகை வந்து அமர்ந்தது.

************************

"கௌதம்... நான் வேணும்ன்னா மதுவிடம் பேசவாப்பா..." வேதனையில் துவண்டு போயிருந்த மகனை கண்டு ரெங்கநாதனுக்கு மனம் தாங்கவில்லை.

'என்ன தான் நினைத்து கொண்டிருக்கிறாள் இந்த மது... என் மகனுக்கு என்ன குறை...? அவனைப் போய் வேண்டாம் என்கிறாள்... அவனைத் துயரக்கடலில் தள்ளிவிட்டு விட்டு இப்படி வேடிக்கை பார்க்கிறாளே...' அவருக்கே மது மேல் கோபம் கோபமாய் வந்தது.

"ம்..." என்று தலையசைத்த மகனின் செயல் அவருக்கு வியப்பாய் இருந்தது. எப்போதும் தானே பார்த்துக் கொள்வதாய்ச் சொல்பவன் இன்று இப்படிச் சொன்னதைக் கேட்டு சந்தோசப்படுவதா இல்லை துக்கப்படுவதா என்று அவருக்குத் தெரியவில்லை.

"எனக்கு என்ன செய்றதுன்னு தெரியலப்பா... அவளை எப்படி வழிக்குக் கொண்டு வர்றதுன்னும் தெரியல... அத்தை அவ்வளவு சொல்லியும் வர மாட்டேன்னு அழுத்தமாய் நிற்கிறா... என்ன தான் பிரச்சினைன்னு கேட்டாலும் ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறா..." என்றவன் மனதிற்குள் அவளின் பிரச்சினை என்னவென்று லேசாகப் புரியத்தான் செய்தது. ஆனால் அவனின் கணிப்பு எந்தளவுக்கு மெய் என்பது மது வாயை திறந்தால் மட்டும் தான் தெரியும். அதைத் தந்தையிடம் கூடச் சொல்ல அவனுக்கு மனம் ஒப்பவில்லை. இது அவனுக்கும், மதுவுக்கும் மட்டுமேயான ரகசியம்... தந்தையாக இருந்தாலும் சரி அதை அவரிடம் கூற அவனுக்குப் பிடித்தம் இல்லை.

"நீங்க போய்ச் சொன்னாலாவது கேட்கிறாளான்னு பார்க்கலாம்..." என்று விரக்தியாய் சொன்னவன் தனது அறைக்குச் சென்றான். கௌதம் தளர்ந்த நடையுடன் செல்வதைக் கண்டவருக்கு அவனைக் குறித்துப் பாவமாய் இருந்தது.

அறைக்குள் நுழைந்தவன் நேரே மதுப்புட்டியை தான் கையில் எடுத்தான். அவன் இருக்கும் மனநிலைக்கு அது தான் உற்ற துணை என்று நினைத்தான். ஊற்றி ஊற்றி குடித்த போதும் மதுவானது அவனவள் மதுவின் நினைவை கொஞ்சம் கூட மறக்கடிக்கச் செய்யவில்லை. அளவுக்கு அதிகமாய்ப் போதை ஏறிய போதும் அது அவன் மூளையை மழுங்கடிக்காமல் அவன் காதலியையே நினைத்துக் கொண்டிருக்கச் செய்தது. மதுவின் இதழ் ரோஜாவில் மது அருந்திய நினைவு மீண்டும் மீண்டும் வந்து அவனை அலைக்கழித்தது. அந்தப் போதை முன்னால் இந்தப் போதை நிற்க கூட முடியவில்லை.

"அம்மு... நீ எனக்கு வேணும்டி... இப்பவே இங்கேயே..." என்று உளறியவனின் நினைவு அவர்களின் தேனிலவு காலத்துக்கு ஊர்வலம் சென்றது.

தன் கைகளில் உருகி குழைந்த மதுவின் உடலின் மென்மையை மீண்டும் பரிசோதித்துப் பார்க்க விழைந்தது அவன் காதல் பித்துக் கொண்ட மனம். அந்த மகிழ்ச்சியான தருணத்தை நினைத்து பார்த்தவனுக்கு அவளின் கண்ணீர், அவளின் வேதனை, அதிலும் மனைவி என்ற சொல்லை உரிமையுடன் சொல்ல முடியாமல் மறுகும் அவளின் துயரமான நிலை எல்லாமும் சேர்ந்து நியாபகம் வந்து அவன் முகத்தைப் பயங்கரமாய் மாற்றியது.

"என் அம்முக்கு மட்டும் அப்படி ஏதும் நடந்திருக்கட்டும்... அதுக்குக் காரணமானவனுக்கு என் கையால் தான் சாவு... மவனே... உன்னை உயிரோடு கொளுத்திருவேன்..." ஆக்ரோசமாய்க் கர்ஜித்தவன் அடுத்த நொடி, "ச்சேச்சே... அப்படி ஏதும் நடந்திருக்க வாய்ப்பில்லை..." என்று தன்

மனதை சமாதானப்படுத்தியவன் தன்னவளை நினைத்து கவலை கொண்டான்.

"நம் வாழ்க்கை எவ்வளவு சந்தோசமா இருந்திருக்க வேண்டியது...? இப்படிப் பண்ணிட்டியேடி பாவி..." என்றவன் மது தன் வாழ்வில் வந்த அழகிய தருணத்தை நினைத்துப் பார்த்தான்.

*******************************

"கௌதம்... கௌதம்... எழுந்திருடா..." பெரியநாயகி உறங்கி கொண்டிருந்த தன் மகன் கௌதமை அவசரமாய் எழுப்பினார்.

"ச்சு... என்னம்மா... இப்பத்தான் வந்து தூங்க ஆரம்பிச்சேன்... அதுக்குள்ள எழுப்பினா எப்படி...?" புரண்டு தாயின் மடியில் வாகாய் படுத்தவன் விட்ட தூக்கத்தைச் சுகமாய்த் தொடரலானான். ஐடி கம்பெனியில் அதிகாலை வரை வேலை செய்துவிட்டு வந்த அலுப்பில் உறங்கும் மகனை எழுப்ப அவருக்குமே சங்கடமாகத் தான் இருந்தது. ஆனால் வேறு வழியில்லையே...

"கௌதம் கண்ணா... முக்கியமான விசயம்டா... எழுந்திரு..."

"என்னன்னு சொல்லுங்கம்மா... எனக்கு நல்லாவே காது கேட்குது...?"

"நம்ம அம்முக்குட்டி பெரியவளாகிட்டாடா..." அன்னை சொன்னது கேட்டதும் அவனுக்குத் தூக்கம் பறந்து போனது.

"என்னது...?" துள்ளி குதித்து எழுந்து அமர்ந்தவன் ஆச்சிரியத்தில் கண்களை அகல திறந்து வாயை ஆவெனப் பிளந்தான்.

"கத்திரிக்காய்க்கு கைகால் முளைச்ச மாதிரி இருக்கிற அம்முவா பெரிய பொண்ணு ஆகிட்டா... ச்சேச்சே... அப்படி எல்லாம் இருக்காது... நேத்து கூடப் பார்த்தேனே அதே

உசரத்தில் தானே இருந்தா..." என்று கேட்ட கௌதமின் தலையில் செல்லமாய்த் தட்டிய நாயகி...

"டேய் கிண்டல் பண்ணாதே... மீனா கையில் அஞ்சு காசு இல்லை... அதான் என் கிட்ட கேட்டா..." அன்னை சொல்ல வரும் செய்தியை புரிந்து கொண்டவனாகத் தன் பர்சை திறந்து ஐந்து ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவன் நீட்ட...

"கௌதம்... இந்தப் பணம் திருப்பி வருமான்னு தெரியாது... நீ மீனாவை தப்பா நினைச்சுக்காதே... அவள் நிலைமை அப்படி..."

"இதில் தப்பா நினைக்க என்ன இருக்கு...? அவங்க கொடுக்க வேண்டாம்மா... அப்படியே கொடுத்தாலும் நீங்க வாங்காதீங்க..." என்ற மகனை பெருமையுடன் பார்த்தார் அவர்.

"அம்மு மட்டும் இல்லைன்னா நம்ம அப்பா இப்போ இப்படி இருந்திருக்க மாட்டார்ம்மா... அந்த நன்றிக்கடன் எனக்கு நிறைய இருக்கு..." என்றபடி குளிக்கத் துண்டை எடுத்துக் கொண்டு சென்ற மகனை பார்த்து கொண்டிருந்தவருக்கு அவன் கூறியதில் இருந்த உண்மை புரியாமல் இல்லை.

ரெங்கநாதன் தன் திரை வாழ்க்கையில் சறுக்கி நஷ்டப்பட்டு இந்த வீட்டிற்கு வந்த போது கௌதமுக்கு பத்து வயது. அவர்களின் பக்கத்து வீட்டில் தான் மதுவின் குடும்பம் இருந்தது. மதுவின் தந்தை துணை நடிகராக இருந்தார். சொற்ப வருமானம் என்றாலும் மீனா கட்டுக்கோப்பாகக் குடும்பம் நடத்தியதில் மிகவும் சந்தோசமாகவே இருந்தனர். அப்போது மது ஒரு மாத குழந்தை... இதயாவிற்கு ஐந்து வயதாகி இருந்தது.
அவ்வளவு சம்பாதித்தும் இப்போது தான் ஒன்றுமே இல்லாமல் போய்விட்டதை நினைத்து நினைத்து வருந்திய ரெங்கநாதனுக்குக் குழந்தை மது ஒரு வரப்பிரசாதமாக வந்து சேர்ந்தாள். அவளின் மழலை சிரிப்பில் அவர்கள் மூவருமே தங்கள் கவலைகளை மறந்தனர்.

அடுத்து உஷா பிறந்த போது தான் மதுவின் தந்தை படப்பிடிப்பில் நடந்த விபத்தில் இறந்துவிட... அவர்களின் குடும்பம் அநாதரவாய் நின்றது. அப்போது அவர்களுக்கு ஆதரவாய் இருந்தது ரெங்கநாதனும், நாயகியும் தான். கணவன் இறந்த இழப்பில் இருந்து ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்ட மீனா தையல் வேலை செய்து பிள்ளைகளைக் காப்பாற்ற துவங்கினார். ஆனாலும் சில நேரங்களில் பற்றாக்குறை வர தான் செய்தது. நாயகியால் பெரிதாக உதவ முடியாவிட்டாலும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டு தான் இருந்தார். இப்போது கௌதம் படித்து வேலைக்குச் சேர்ந்த பின் நாயகியால் சற்று தாராளமாய் உதவி செய்ய முடிந்தது. அதைக் கௌதமோ இல்லை ரெங்கநாதனோ ஆட்சேபிக்காதது அவருக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது.

குளியலறையில் இருந்த கௌதமுக்கு மதுவை பற்றிய நினைவுகள் தான் ஓடி கொண்டிருந்தது. மது பெரிய பெண்ணானதை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை. அவனுக்கு மீனாவின் மூன்று பெண்களில் மதுவை தான் மிகவும் பிடிக்கும். இதயா கொஞ்சம் முசுட்டு சுபாவத்துடன் இருந்ததால் கௌதம் அவளிடம் ஒட்டவே மாட்டான். உஷா தொட்டால் சிணுங்கி... அதனால் அவள் இருக்கும் பக்கம் அவன் தலை வைத்து கூடப் படுக்க மாட்டான். அவனுக்கு அன்றலர்ந்த மலர் போல் புத்துணர்ச்சியுடன் உதட்டில் புன்னகையுடன் வலம் வரும் மதுவை தான் ரொம்பப் பிடிக்கும். அவளிடம் அந்த வயதுக்கே உரிய குறும்பு இருக்கும் அதே சமயம் அன்பும், பொறுமையும் சேர்ந்து இருந்தது.

அவன் குளித்துவிட்டு வருகையில் நாயகி ஆளை காணவில்லை... மதுவின் வீட்டிற்குச் சென்றுவிட்டார் என்பதை உணர்ந்து கொண்டவன் தானே உணவை பரிமாறி உண்டுவிட்டு வீட்டின் கதவை மூடிவிட்டு சாவியை எடுத்துக் கொண்டு பக்கத்து வீட்டிற்குச் சென்றான். சாவியை அன்னையிடம் கொடுத்துவிட்டு தன்

நண்பர்களைப் பார்க்க போகலாம் என்று நினைத்து இருந்தான்.

அங்கு வாசலில் அமர்ந்து இருந்த இதயா அவனைக் கண்டதும், "நீ இங்கே எல்லாம் வர கூடாது..." முகத்தில் அடித்தார் போல் அவள் பேச அவன் முகம் சற்று வாடி போனது. அவள் இந்த மாதிரி பேசாவிட்டால் தான் அதிசயம் என்று தன்னைத் தேற்றி கொண்டவன்,

"அது அத்தை சொல்லட்டும்... நீ ஒண்ணும் சொல்ல வேணாம்..." கடுப்புடன் அவன் சொல்லி கொண்டு வீட்டினுள் செல்ல முற்பட...

"அத்தையாம் அத்தை... ஏன் எங்க அம்மாவை அத்தைன்னு கூப்பிடுற...? அத்தை மக ரத்தினத்தைக் கரெக்ட் பண்ணவா...?" என்றவளின் பேச்சில் அவன் அருவருப்பில் முகம் சுளித்தான்.

"ஒரு நாள் இல்லை ஒரு நாள் நீ பேசுற பேச்சுக்கு என் கிட்ட அடி தான் வாங்க போற பாரு..." அவளோ அவன் பேச்சை கொஞ்சமும் கண்டு கொள்ளாமல்,

"அப்படி ஒரு நினைப்பு இருந்தா அதை ரப்பர் வச்சு அழிச்சிரு... நான் உன்னை எல்லாம் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்..." அவள் கோபமாய்ப் பேசியதிலும் ஒரு அர்த்தம் இருந்தது.

மது பெரிய பெண்ணானதில் வருத்தப்பட்ட மீனாவை தேற்றிய நாயகி, "மீனா... வீணாய் ஏன் வருத்தப்படுற... முத்து முத்தா மூணு பொண்ணுங்களை அழகு போல் பெத்து வச்சிருக்க... அதது நேரம் காலம் வந்தா தானா நடக்கும்... உனக்கு வருத்தமா இருந்தா ஒண்ணு சொல்றேன் கேட்டுக்கோ... நம்ம இதயாவை கௌதமுக்குக் கட்டிக்கிறேன்... என்ன சரி தானா... அவன் மூத்த மருமகனா மட்டும் இல்லாம மகனா இருந்து மத்த பொண்ணுங்களுக்கும் கல்யாணத்தைப் பண்ணி வைப்பான்... உங்க குடும்பத்தையும் பார்த்துக்குவான்.

அதுக்கு நானும், உன் அண்ணனும் துணையா இருப்போம்..." என்று ஆறுதல் படுத்தினார்.

"அண்ணி..." நாயகியின் கையைப் பற்றிக் கொண்டு கண்கலங்கிய அம்மாவை கண்டு எரிச்சலாக இருந்தது இதயாவுக்கு.

'போயும் போயும்... அந்தத் திமிர் பிடிச்சவனையா நான் கல்யாணம் பண்ணிக்கணும்...' என்று எண்ணியவளுக்கு ஆத்திரமாய் வந்தது. அதிலும் கௌதமை கல்யாணம் பண்ணி கொண்டு இந்த நடுத்தர வாழ்க்கையை வாழ அவள் மனம் ஒப்பவில்லை. அவள் பணக்காரன் ஒருவனைத் திருமணம் முடிக்க ஆசைப்பட்டாள். தன்னைக் காதலுடன் நோக்கும் பணக்காரன் ரஞ்சனின் முகம் அவள் மனக்கண்ணில் ஒருமுறை மின்னி மறைந்தது.

"ஹலோ..." தன் முகத்தின் முன் விரல் கொண்டு சொடக்கு போட்டு கூப்பிட்ட கௌதமை கோபமாய்ப் பார்த்தாள் இதயா.

"ஏய்... இந்தச் சொடக்கு போட்டு கூப்பிடற வேலை எல்லாம் என் கிட்ட வச்சுக்காதே..." என்றவளை உறுத்து விழித்தவன்,

"அதே தான் நானும் சொல்றேன்... இந்த மாதிரி பேச்சு எல்லாம் என் கிட்ட வச்சுக்காதே... உலகத்திலேயே கடைசிப் பெண் நீ தான்ங்கிற நிலைமை வந்தால் கூட நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்... அதுக்குப் பதிலா தற்கொலை பண்ணிட்டு செத்து போவேன்..." என்றவன் பேச்சில் அவளது முகம் அவமானத்தில் கன்றிப் போனது.

'என்னையா பேசற... உனக்கு வேணும்டி...' அவமானத்தில் சிவந்த அவள் முகத்தை அவன் ரசித்துப் பார்த்தான்.

அதற்குள் மீனா வந்துவிட, "அடடே கௌதம் வாப்பா..." என்றபடி அவர் உள்ளே அழைக்க... இதயாவை பார்த்து ஒரு வெற்றிப் புன்னகையை வீசியவன் நிதானமாய் உள்ளே சென்றான்.

"அம்மா எங்கே அத்தை...? சாவியைக் கொடுத்துட்டு போகலாம்ன்னு வந்தேன்..?" அவனின் குரல் கேட்டு வந்த நாயகி சாவியை வாங்கிக் கொண்டு அவனை வழியனுப்ப... அவனின் கண்கள் பெரிய மனுசியாகி விட்ட அவனின் செல்ல கத்திரிக்காயை தேடியது. தேடியவள் காண கிடைக்காததால் ஏமாற்றத்துடன் அவன் சென்றான். அந்த ஏமாற்றம் ஏன் என்பதை அவன் அப்போது பெரிதாக எண்ணவும் இல்லை... ஆராயவும் இல்லை...

*************************

"கௌதம்... பூ கொஞ்சம் பத்தாதுப்பா... வாங்கிட்டு வந்திடுறியா..." தயங்கியவாறு கேட்ட மீனாவை பார்த்து,

"இதுக்கு ஏன் இவ்வளவு தயக்கம் அத்தை... எவ்வளவு சொல்லுங்க வாங்கிட்டு வர்றேன்... அப்புறம் வேற எதுவும் வேணுமா...?" அப்போது தான் அவன் அலுவலகத்துக்குக் கிளம்பி கொண்டிருந்தான்.

இன்று மதுவிற்குச் சடங்கு கழிக்கும் விசேச நாள். காலையில் இருந்து எல்லா வேலைகளும் பரபரப்பாக நடந்து கொண்டிருந்தது. நாயகி கௌதமை அழைக்க அவன் சங்கடத்துடன் மறுத்துவிட்டான். பெண்கள் கலந்து கொள்ளும் விசேசத்தில் கலந்து கொள்ள அவனுக்குச் சங்கோஜமாய் இருந்தது. அதிலும் அன்று இதயா பேசிய பேச்சை அவன் மறக்கவில்லை.

"அப்படியே வெத்திலை, வாழையிலை கொஞ்சம் வாங்கிட்டு வந்திடு கௌதம்..." நாயகியும் சொல்லவும் மறுக்காமல் கடைவீதிக்கு சென்றவன் அவர்கள் கேட்டதை வாங்கிக் கொண்டு மதுவின் வீட்டிற்கு வந்தான். அங்கிருந்த அன்னையிடம் அனைத்தையும் கொடுத்தவன்,

"எல்லாம் சரியா இருக்காம்மா...?" அவர் சரியாய் இருப்பதாய் தலையசைக்க அவன் அலுவலகத்துக்குக் கிளம்ப வாயிலை நோக்கி சென்றான். அந்நேரம் பார்த்து,

"நம்ம மதுவா இது... என்ன ஒரு அழகா இருக்கா... என் கண்ணே பட்டுடும் போலிருக்கே..." என்ற குரலில் அவன் சட்டென்று திரும்பி பார்த்தான்.

அங்கே அடர் பச்சை நிற பட்டுடுத்தி, தலை நிறையப் பூ வைத்து அழகு சிலையாய் அமர்ந்திருந்த மதுவை கண்டதும் அவனின் கண்கள் இமைக்க மறந்தது. கத்திரிக்காயாய் உருவகப்படுத்தி இருந்தவள் பூங்கொடியாய் தன் கண் முன் அமர்ந்து இருப்பதை அவனால் நம்ப முடியவில்லை.

"பெண்ணல்ல பெண்ணல்ல ஊதா பூ
சிவந்த கன்னங்கள் ரோசபூ
கண்ணல்ல கண்ணல்ல அல்லி பூ
சிரிப்பு மல்லிகை பூ
சிறு கைவளை கொஞ்சிடும் கொய்யா பூ
அவள் கைவிரல் ஒவ்வொன்றும் பன்னீர் பூ
மை விழி ஜாடைகள் முல்லை பூ
மணக்கும் சந்தன பூ
சித்திர மேனி தாழம் பூ
சேலை அணியும் ஜாதி பூ
சிற்றிடை மீது வாழை பூ
ஜொலிக்கும் செண்பக பூ"

## துளி : 12

'பார்றா... கத்திரிக்காய் மாதிரி இருந்தவ எப்படி இப்படி முருங்கைக்காய் மாதிரியானா...?' கௌதமால் தன் வியப்பை அடக்கவே முடியவில்லை. நேற்று வரை பாவாடைச் சட்டையில் சுற்றி திரிந்த சிறுமி இன்று முழுமையான பருவ மங்கையாய் அமர்ந்து இருப்பதைக் கண்டு அவனுக்கு ஆச்சிரியமாய் இருந்தது.

"கௌதம் இன்னும் ஆபிஸ்க்கு போகலையா...?" என்று கேட்டபடி அங்கே வந்த அன்னையைக் கண்டு அவனுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. பின்னே அவர் கூப்பிட்ட போது வர மாட்டேன் என்று பிகு செய்து விட்டு இப்போது இங்கே நின்று கொண்டிருந்தால்...

"இதோ கிளம்பிட்டேன்ம்மா..." என்றவன் அவசரமாய்க் கிளம்பி சென்றான்.

"என்ன அண்ணி கௌதமை சாப்பிட்டுட்டுப் போகச் சொல்ல கூடாதா...?" கௌதம் செல்வதைக் கண்டு அங்கே வந்த மீனா நாயகியிடம் கேட்டார்.

"அவன் உள்ளே வரவே வெட்கப்படுறான் மீனா..."

"இந்தக் காலத்தில் இப்படி ஒரு புள்ள..." ஆச்சிரியப்பட்டவராய் மீனா சொல்ல...

"அவன் அப்படித்தான்... நீ வா..." மீனாவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்ற நாயகி மனதில் தன் மகனை நினைத்துச் சிரித்துக் கொண்டார்.

ரெங்கநாதனும், நாயகியும் தான் தாய்மாமன், அத்தை முறைக்கு நின்று மதுவிற்கு அனைத்து சடங்குகளையும் செய்தனர். அவர்கள் தங்களுடைய பரிசாக ஒரு ஜோடி தங்க வளையலை பரிசாக மதுவின் கையில் அணிவிக்க... அதை இதயா பொறாமையுடன் பார்த்து கொண்டிருந்தாள். மூத்தவள் அவள் பெரியவளாய் ஆன போது கௌதம் வீட்டினர் இந்தளவுக்கு வசதியாய் இல்லை. இப்போது அவன் படித்து முடித்து வேலைக்குப் போனதால்

பொருளாதார நிலை சற்றே உயர்ந்து இருந்தது. அது எதையும் உணராத இதயா தங்கையின் மீது பொறாமை கொண்டாள்.

மறுநாள் காலையில் நாயகி, "கௌதம்... இந்த உளுந்தம் களியை அத்தை வீட்டில் கொண்டு போய்க் கொடுத்துட்டு வாடா..." தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த கௌதமிடம் சொன்னார். அன்று அவனுக்கு விடுமுறை நாள் என்பதால் வீட்டில் இருந்தான்.

"நீங்களே போய்க் கொடுங்கம்மா..." இப்போது எல்லாம் மதுவின் வீட்டிற்குச் செல்வதற்கே அவனுக்கு விருப்பம் இல்லை. அதற்கு எல்லாம் காரணம் அன்று இதயா பேசிய பேச்சுக்கள் தான்.

'ஆமாம்... பெரிய ரதி தேவி இவ... இவளை கண்டு மயங்கிட்டாலும்...' இதயாவை நினைத்து எரிச்சல் அடைந்தது அவனது மனம்.

"என்ன கௌதம் என்னடாச்சு உனக்கு...? ஏன் மீனா வீட்டுக்கு போக மாட்டேன்னு சொல்ற...?" நாயகியின் கூர்மையான பார்வையில் இருந்தும், வார்த்தையில் இருந்தும் தப்புவிப்பதற்காக,

"சரிம்மா... நானே கொண்டு போய்க் கொடுக்கிறேன்..." என்றவன் உள்ளே சென்று சட்டையை அணிந்து வந்து அம்மாவின் கையில் இருந்த பாத்திரத்தை வாங்கிக் கொண்டு சென்றான். நாயகியோ யோசனையாய் மகனை பார்த்துக் கொண்டு நின்றார்.

"நாயகி என்ன கௌதமை பார்த்துட்டு இருக்க...?" ரெங்கநாதன் கேட்கவும் தன் பார்வையைக் கணவன் புறம் திருப்பிவர்,

"கௌதம் ஏன் இப்படிப் பண்றான்...? மீனாவுக்கு வீட்டுக்கு போறதா இருந்தா சந்தோசமா போவான்... இப்ப ஏன் இப்படிப் பேசுறான்...?"

"முதல்ல இருந்த மாதிரி இப்பவும் இருக்க முடியுமா நாயகி... ஒண்ணுக்கு ரெண்டு வயசு பொண்ணுங்க இருக்கு... நாளைக்கு யாராவது தப்பா பேசிட்டா... அதை யோசிச்சு இருப்பானாக்கும்.."

"யார் பேச போறாங்க...? நம்ம ரெண்டு வீட்டுக்கு இடையே உள்ள நெருக்கம் எல்லோருக்கும் நல்லா தெரியும்..."

"சரி... சரி... விடும்மா... இதைப் போய்ப் பெரிசா எடுத்துக்கிட்டு..." ரெங்கநாதன் பேச்சை முடித்துக் கொள்ள நாயகி அரைமனதாய் உள்ளே சென்றார்.

கௌதம் மதுவின் வீட்டிற்குள் நுழையும் போதே மீனாவின் பலத்த குரல் கேட்டது. "உஷா... கடைக்குப் போய்க் காய்கறி வாங்கிட்டு வாடி..."

"என்னால முடியாது போம்மா... என் பிரெண்ட் என்னைக் கூப்பிட்டு இருக்கா... நான் அவ கூட விளையாட போகணும்... இந்த மது சும்மா தானே இருக்கா... அவளை அனுப்புங்க..." பதிலுக்குக் கத்திய உஷா தாயின் பேச்சை கேட்காமல் வெளியில் ஓடி வந்தவள் அங்கே கௌதமை கண்டதும் ஒரு நொடி தயங்கியவள் பின் மீண்டும் ஓட்டம் எடுத்தாள்.

"யேய் ஓடாதடி... நில்லுடி... நேத்து சமைஞ்சவளை எப்படி வெளியில் அனுப்பறது... கொஞ்சம் கூட அறிவில்லாம பேசறதை பாரு..." திட்டியபடி வெளியில் வந்த மீனா கௌதமை கண்டதும்,

"கௌதம்... நீ எப்போப்பா வந்த...?" என்றபடி அவனை வரவேற்க...

"அம்மா இதைக் கொடுத்துட்டு வர சொன்னாங்க..." என்றவன் கையில் இருந்த பாத்திரத்தை அவரிடம் நீட்டினான்.

"சரிப்பா..." மீனா வாங்கிக் கொண்டு நகர...

"அத்தை நான் வேணும்ன்னா காய்கறி வாங்கிட்டு வரட்டா...?" அவனின் உதவி செய்யும் குணம் தலை தூக்க அவரிடம் கேட்டான்.

"சரி கௌதம்..." என்றவர் உள்ளே சென்று பையையும் பணத்தையும் கொண்டு வந்து தந்தார்.

"இந்த இதயா எங்கே போனான்னு தெரியல... சின்னக் கழுதை விளையாட போயிட்டா... மது மட்டும் தான் வீட்டில் இருக்கா... அவளை எப்படி அனுப்பறது... மூணையும் பொண்ணா பெத்துட்டு நான் படுற அவஸ்தை..." புலம்பியவருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் புன்னகையைப் பதிலாகக் கொடுத்தவன் கடையை நோக்கி நடந்தான்.

அரைமணி நேரம் சென்று காய்கறி வாங்கிக் கொண்டு மதுவின் வீட்டிற்கு வந்தவன் வாசல் கதவு பூட்டி இருப்பதைக் கண்டு, அழைப்புமணியை அடித்தான். சற்று நேரத்தில் கதவு திறக்க அங்கே நின்ற மதுவை கண்டதும் அவன் முகத்தில் புன்னகை விரிந்தது.

"அம்மு... அத்தை இல்லையா...?" வாய் அவளைப் பார்த்து பேசினாலும் அவன் கண்கள் அவளைத் தான் ஆராய்ச்சியாய் பார்த்துக் கொண்டிருந்தது. பாவாடை தாவணியில் பெரிய மனுசி போல் இருந்தவளை கண்டு மீண்டும் அவன் வியப்புற்றான்.

"அம்மா... தண்ணி பிடிக்கப் போயிருக்காங்க..." அவன் முகம் பார்க்காமல் தலையைக் குனிந்தபடி வார்த்தைக்கு வலிக்குமோ என்று மெதுவே பேசிய மது அவனுக்கு முற்றிலும் புதிது.

"சரி இந்தா... இதை அத்தை கிட்ட கொடுத்துடு..." என்றவன் தன் கையில் இருந்த பையை அவளை நோக்கி நீட்ட...

"கீழே வைங்க... நான் எடுத்துக்கிறேன்..." அவள் அப்படிப் பேசியது அவனுக்கு வியப்பாய் இருந்தாலும் அது

அவனிடத்தில் சிறிதளவு கோபத்தை உண்டு பண்ணியது என்னமோ உண்மை...

'இப்போ நீ பெரிய பொண்ணு ஆகிட்ட... ஆம்பிளைங்க கிட்ட அளவா தான் பேசணும்... முன்ன மாதிரி ஆடிட்டு திரிய கூடாது...' என்று அடுத்தடுத்து அன்னை கூறிய அறிவுரையால் அந்தப் பிஞ்சு மனம் குழம்பி போயிருந்தது. அதனால் தான் அவள் இத்தனை காலம் நன்றாகப் பழகி வந்த கௌதமிடம் கூடச் சற்று தள்ளி நின்று பேசினாள்.

"என்ன அம்மு... பெரிய மனுசியாகிட்டேன்னு திமிர் காட்டுறியா...? நான் என்ன உன் கையையா பிடிச்சு இழுக்கப் போறேன்..." ஏற்கெனவே இதயா பேசியதில் எரிச்சல் அடைந்து இருந்தவன் இப்போது மதுவின் பேச்சில் கோபம் அடைந்தவன் அவளிடம் இறைந்தான்.

"எதுல ஒத்துமை இருக்கோ இல்லையோ இதுல மட்டும் அக்கா, தங்கச்சி ரெண்டு பேரும் ஒத்துமையா இருக்குதுங்க..." தனக்குள் முணுமுணுத்தான்.

"அய்யோ மாமா... நான் அப்படி எல்லாம் சொல்லல..." என்றவள் அவன் கையில் இருந்த பையை வேகமாய் வாங்கிக் கொள்ளும் போது அவளின் கை அவனின் கையோடு உரசியது.

அவள் பயத்தில் வெடுக்கென்று தன் கையை இழுத்துக் கொள்ள... அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அந்நேரம் அவளும் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளின் கலங்கிய கண்ணில் என்ன கண்டானோ ஒன்றும் பேசாது தன் வீட்டை நோக்கி நடந்தான். ஆனால் அவளின் வார்த்தையில், செயலில் அவனின் மனம் அதிகமாய்க் காயப்பட்டுப் போனது என்னவோ உண்மை. பெண்ணுக்குள் இருக்கும் எச்சரிக்கை உணர்வை பற்றி ஆணாகிய அவனுக்கு எங்கே தெரிய போகுது...

அன்று தீபாவளி என்பதால் தெருவே பட்டாசு வெடிப்பதில் பரபரப்பாய் இருந்தது. கௌதம் தன் நண்பர்களைப் பார்ப்பதற்காகத் தெருவில் சென்று கொண்டிருந்தவன்

அங்கே பட்டாசு வெடிக்கச் செய்வதைக் கண்டு சற்று ஒதுங்கி நின்றான். அந்நேரம் அந்தப் பக்கம் வந்த மது பட்டாசு வைத்திருந்ததைக் கவனிக்காமல் செல்ல அது திடுமென வெடித்ததில் பயந்து அலறிவிட்டாள். அவள் அலறல் சத்தம் கேட்ட கௌதம் வேகமாய் அவளை அங்கிருந்து அப்புறப்படுத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த சந்திற்குள் புகுந்தான்.

"ஏண்டி உனக்குக் கொஞ்சம் கூட அறிவில்லை... பட்டாசு வச்சிருக்கிறதை கூடக் கவனிக்காம அப்படி என்ன பராக்கு பார்த்துட்டு வர்ற..." எட்டி தெருவை பார்த்துக் கொண்டே அவன் அவளைக் கடிய... அவளிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை என்றதும்,

"என்னடி பேசாம இருக்க...? வாயை திறந்து பேசினா முத்தா உதிர்ந்து போயிடும்..." மேலும் கடிந்தவன் அவளைத் திரும்பி பார்த்தான்... பார்த்தவன் அப்படியே பிரமித்தான்.

பாவாடை தாவணியில் தலை நிறையப் பூ வைத்து அழகுற நின்றவள் அச்சத்தில் கண்களை இறுக மூடி இருக்க... அவளின் அழகு முதன்முறையாய் அவனைத் தடுமாறச் செய்தது. அதிலும் அவள் சூடியிருந்த பூவின் வாசம் அவனை மயக்கியது. அவன் அவளைப் பார்த்து ஒரு மாதம் ஆகியிருக்கும். அன்று அவள் அப்படிப் பேசியதில் இருந்து அவன் அவளைப் பார்க்க கூட இல்லை.

வெடி சத்தம் நின்றதும் கண்களை மெதுவே திறந்த மது கௌதமின் பார்வையைக் கண்டதும் அப்படியே நின்றாள். சின்ன வயதில் இருந்து அவள் கௌதமை பார்க்கிறாள்... ஆனால் அவனின் இந்தப் பார்வை புதிது... அவனின் இமைக்காத பார்வை அவளுள் ஏதோ ஒரு புதுமையான உணர்வை தோற்றுவிக்க... அவள் முகம் செந்தாமரையாய் மாறியது. அவன் அளவுக்கு உணர்வுகளை ஆராயும் வயது அவளுக்கு இல்லை... ஆனாலும் அவனின் பார்வை உணர்த்திய செய்தி அவளை லஜ்ஜை அடைய செய்தது.

"மாமா..." என்றவள் அவன் அருகில் இருந்து விலக நினைக்க... அவளால் விலக முடியவில்லை. என்ன என்று

இருவரின் பார்வையும் கீழே பார்க்க... அவனின் கைகள் அவளின் இடையைத் தழுவி இருந்தது. அதிர்ந்து போனவனாய் அவன் சட்டென்று தன் கைகளை அவளின் இடையில் இருந்து எடுத்தவன்,

"சாரி அம்மு..." தலையைக் குனிந்து கொண்டு முணுமுணுக்க... அவள் ஒன்றும் பேசாமல் அங்கிருந்து ஓடிவிட்டாள்.

அன்றிலிருந்து கௌதமை பார்க்கும் போது எல்லாம் மது வெட்கத்தில் முகம் சிவக்க தலையைக் குனிந்து கொண்டு போய் விடுவாள். அவள் பேசாது போவது அவன் மனதுக்குக் கஷ்டமாக இருந்தாலும் அவளின் முகச்சிவப்பு அவனுக்கு உணர்த்திய செய்தி அவனுக்குப் பிடித்தமாய் இருந்தது தான் அவனுக்குப் புரியாத புதிராய் இருந்தது. அந்தப் பிடித்தத்திற்கு என்ன பெயர் என்று அவனுக்குப் புரியவில்லை.

"டேய் மாப்பிள்ளை... என்ன உன் முகம் தௌசண்ட் வாட் பல்பு மாதிரி வெளிச்சமா இருக்கு... யாருடா மாப்பிள்ளை...?" கேட்டபடி அருகில் அமர்ந்த கணேஷை கண்டதும் மதுவை பற்றிய ஆராய்ச்சியைச் சற்று தள்ளி வைத்த கௌதம்,

"என்னடா உளறுற... யாருன்னா அது யாரு...?" தன்னைக் கேள்வி கேட்ட கணேஷை பதிலுக்குக் கேள்வி கேட்டான் அவன்.

"அதான் உன் சந்தோசத்திற்குக் காரணமான தேவதை... உன் மனம் கவர்ந்த தேவதை..." என்று கண்சிமிட்டி சிரித்த கணேஷ், "யாரந்த தேவதை... யாரந்த தேவதை..." என்று பாட...

"டேய் போதும்... போதும் கொல்லாதேடா..." தன் இரு காதுகளையும் பொத்தி கொண்டான் கௌதம்.

"அப்போ யாருன்னு சொல்லு..." விடாக்கண்டனாய் கணேஷ் கேட்க...

"ஒண்ணுமே இல்லாததைச் சொல்லு சொல்லுன்னா... நான் என்னத்தடா சொல்றது... பேசாம வேலையைப் பாருடா..." என்ற கௌதம் தன் முன் இருந்த கணினி திரையில் கவனம் செலுத்த... இனி அவனிடம் இருந்து ஒரு வார்த்தை கூட வாங்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டவனாகக் கணேஷும் தன் வேலையில் ஆழ்ந்தான்.

கணேஷிடம் என்னதான் அப்படிச் சொன்னாலும் ஒன்றும் இல்லாததாய் காட்டி கொண்டாலும் கௌதமின் மனம் கணேஷ் சொன்னதையே ஆராய்ந்து கொண்டிருந்தது.

'கணேஷ் கேட்கும் போது மதுவை தானே நினைத்துக் கொண்டிருந்தேன்... அப்படி என்றால் என் உள்ளம் கவர்ந்த தேவதை மதுவா...? இதற்கு அர்த்தம் என்ன...?' என்று பலவாறு யோசித்தவன் கடைசியில் கிடைத்த விடையில் கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டான்.

'இதற்குப் பெயர் தான் காதலா...? இந்த உணர்வுக்குப் பெயர் தான் காதலா...? அப்படி என்றால் நான் மதுவை காதலிக்கிறேனா... இது நடைமுறை சாத்தியமா...? என்னை விடப் பத்து வயது இளையவள் மீதா காதல் கொண்டு இருக்கேன்... இது அசிங்கம் இல்லையா...?' அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை அவனுக்கு... தலை விண் விண் என்று வலித்தது. வீட்டிற்குக் கிளம்பினால் தேவலை என்று தோன்றியது.

"கணேஷ்... தலைவலிக்கிற மாதிரி இருக்குடா... நான் வீட்டுக்கு கிளம்பறேன்..." கணேஷிடம் சொல்லி கொண்டு வீட்டிற்குக் கிளம்பிவிட்டான்.

கௌதம் வீட்டிற்குள் நுழையவும் நாயகியும், ரெங்கநாதனும் வெளியில் கிளம்பவும் சரியாக இருந்தது. "என்ன கௌதம் அதுக்குள்ள வந்துட்ட..." என்ற நாயகி மகனின் வாடிய முகத்தைக் கண்டு, "உடம்பு சரியில்லையா...?" கேட்டுக் கொண்டே நெற்றியில் கை வைத்து பார்க்க...

"லேசா தலைவலிம்மா..." அவன் சொன்னதும் நாயகி பதறிப் போனார்.

"நாயகி முதல்ல அவனுக்குக் காபியை போடு..." ரெங்கநாதன் மனைவியைக் காபி போட பணித்துவிட்டு, "கண்ணா வா... நான் தலைவலி தைலம் தடவி விடுறேன்..." சொன்னதோடு இல்லாமல் அவனை மடியில் படுக்க வைத்து தலைவலி தைலம் தடவி விட்ட தந்தையின் அன்பில் அவன் கண்கள் கரித்தது.

'இவ்வளவு அன்பானவர்களுக்குத் தன்னால் ஒரு அவப்பெயர் வர விடுவதா...' என்று நினைத்தவன் மதுவின் நினைவை தூர தள்ளி வைத்தான். தன்னை விடப் பத்து வயது இளைய பெண்ணைக் காதல் புரிவதை கொலை குத்தமாக எண்ணி கலங்கினான் அந்த நல்ல உள்ளம் படைத்த நல்லவன்... அந்தக் கடவுள் மது தான் அவனுக்கு என்று முடிச்சு போட்டு இருப்பதை அவன் அறியவில்லை.

பெற்றோர் வெளியில் கிளம்பி சென்ற பின்பும் அலுப்பாய் இருந்ததால் அப்படியே சோபாவில் படுத்திருந்தான் அவன். அப்போது அவனுக்குச் சமீபத்தில் கொலுசொலி கேட்டது. அது யாருடைய கொலுசொலி என்று அவனுக்குத் தெரிந்து இருந்ததாலும் அவளைப் பார்க்க பயந்து மூடியிருந்த கண்களை அவன் திறக்கவே இல்லை...

"அத்தை... அத்தை..." என்று அழைத்துக் கொண்டு வந்த குரல் அப்படியே நின்றது. இதற்கு மேல் கண் மூடி படுத்திருப்பதில் அர்த்தம் இல்லை என்று நினைத்தவன் எழுந்து அமர்ந்தான்.

"அம்மா வெளியில் போயிருக்காங்க..." அவளைப் பார்க்காமல் சுவற்றைப் பார்த்துக் கொண்டு அவன் பதில் சொல்ல...

"ஓ... சரி நான் வர்றேன்..." லேசாக ஏமாற்றம் அடைந்தார் போன்று தோன்றிய மதுவின் குரலில் அவள் பக்கம் திரும்பினான் அவன்.

அவளைக் கண்டதும் அவன் இதுவரை எடுத்திருந்த வைராக்கியம் எல்லாம் தூள் தூளாய் போவதை உணர்ந்தான். இருவருக்கும் இடையில் இருக்கும் வயது

என்ற வேகத்தடையைக் காதல் என்ற ஊக்கம் தாண்டி வர செய்தது. அவள் வேண்டும்... அவள் காதல் வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவன் உள்ளத்தில் தீயாய் தகிக்கச் செய்தது.

"என்ன விசயம் அம்மு... எதுக்கு அம்மாவை பார்க்க வந்த...?" அவன் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் தயங்கியவள்,

"அது வந்து... மாமா..." அவளின் மாமா என்றழைப்பு அவனுக்கு அத்தனை உவப்பானதாய் இல்லை. இத்தனை நாள் அந்த வார்த்தையில் பெருமையும், கர்வமும் கொண்டவன் இன்று அந்த வார்த்தையில் சிறுமை அடைந்தான். அந்த வார்த்தை இருவருக்கும் இடையில் உள்ள வயதின் தூரத்தை அவனுக்கு உரக்க சொல்வது போல் இருந்தது.

"இனிமேல் என்னை மாமான்னு கூப்பிடாதே அம்மு... கௌதம்ன்னு கூப்பிடு..." திடுமென அவன் கண்டிப்புடன் சொன்னதும் அவள் புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"கௌதமா... ஐய்யோ வேணாம்... நீங்க ரொம்பப் பெரியவங்க... உங்களைப் போய் நான் பேர் சொல்லி கூப்பிடுவதா... ம்ஹூம்..." காது தொங்கட்டான் வேகமாய் அசைய தன் தலையை இடமும் வலமுமாய் ஆட்டியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவளுடைய பேச்சு அத்தனை நேரம் அவன் மனதை அழுத்தி கொண்டு இருந்த மனப்பாரத்தை ஒரு நொடியில் அவனை விட்டு விலகச் செய்ததை அவன் உணர்ந்தான்.

"இப்போ கூப்பிட்டியே அது மாதிரி கூப்பிடு..." என்றவனைப் பார்த்து...

"ஆங்... நான் எப்போது..." என்று அவள் திருதிருவென விழிக்க...

"அதான் இப்போது..." என்று அவளைக் கேலி செய்தவன், பின் தன் தொண்டையைச் செருமி கொண்டு, "நீ

மாமான்னு கூப்பிடும் போது நமக்கிடையே உள்ள பத்து வயசு இடைவெளி தான் எனக்கு நியாபகம் வருது... வயது கூட நமக்கிடையில் இடைவெளி கொடுப்பதை நான் விரும்பல..." மென்மையான குரலில் கூறியவனின் வார்த்தையில் இருந்த அர்த்தம் அவளுக்குப் புரியாது போனாலும்... தான் அவனை மாமா என்று அழைப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது மட்டும் அவளுக்குப் புரிய சம்மதமாய்த் தலையை ஆட்டியவள்,

"சரி... அப்போ நான் வர்றேன் மாமா..." என்றவளை அவன் உறுத்து விழிக்க... "சாரி... கௌ...த...ம்..." அவனின் பெயரை ஒவ்வொரு வார்த்தையாய் உச்சரித்தவள் முகம் வெட்கத்தில் சிவந்தது. அதற்கு மேல் நிற்காமல் அவள் செல்ல முயல...

"எதுக்கு அம்மாவை தேடின... அதைச் சொல்லவே இல்லை..." என்றவனின் குரலில் அவள் அப்படியே நின்றுவிட்டாள். அவளிடம் இருந்து பதில் இல்லாமல் போகவும் அவளருகில் வந்தவன்,

"என்ன அம்மு...? என் கிட்ட சொல்ல கூடாதா...?" மென்மையாய் அவன் கேட்டதில் விலுக்கென்று அவனை நிமிர்ந்து பார்த்தவள் கண்கள் கலங்கி இருந்தது... பதினாலு வயது பெண்ணுக்கு அப்படி என்ன கவலை இருக்கப் போகிறது என்று அவன் யோசித்தான்.

"அது..." சொல்ல முடியாமல் அவள் முகம் கன்றியது.

"எதுவா இருந்தாலும் சொல்லு அம்மு... என்னிடம் என்ன தயக்கம்...?"

"நாளைக்கு ஸ்கூல் பீஸ் கட்டுறதுக்குக் கடைசி நாள்... அம்மா கிட்ட பணம் இல்லை... அத்தை கிட்ட கேட்க சொன்னாங்க..." சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு அவமானத்தில் முகம் சிவந்து விட்டது.

அவனுடன் பழகி இருக்கிறாள்... விளையாடி இருக்கிறாள்... அவனோடு சண்டை போட்டு இருக்கிறாள்... ஆனால் இது

போல் பணம் என்று அவனிடம் கையேந்தியது இல்லை... பணக்கணக்கு விசயம் எல்லாம் நாயகி, மீனாவுடன் முடிந்துவிடும். நாயகி கொடுக்கும் பணம் எல்லாம் கௌதம் சம்பாதிப்பது என்று அவளுக்கு நன்கு தெரியும். இன்று மீனாவுக்கு உடம்பு முடியாததால் அவள் வந்திருந்தாள். முதன்முறையாகப் பணம் கேட்டு அவனிடத்தில் அவள் நிற்கிறாள். அவள் நிலை கண்டு அவன் முகத்தில் கனிவு வந்தது.

"ஏன் என் கிட்ட கேட்க மாட்டியா...?" என்றவனிடம் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவள் நிற்க...

"எவ்வளவு வேணும்...?" அவன் கேட்டதற்கு அவள் தயங்கினாள்.

"இல்ல... நான் அத்தை கிட்ட கேட்டுக்கிறேன்..."

"அத்தை கிட்ட கேட்கிறவ... அத்தை மகன் கிட்ட கேட்க மாட்டியா..." என்றவன் அவளின் பள்ளி கட்டணத்தைத் தானாகக் கணித்து அந்தத் தொகையைத் தன் பர்சில் இருந்து எடுத்து அவளிடம் நீட்ட,

"வேணாம்..." என்று அவள் மறுக்க... அவள் கையைப் பிடித்து அதில் பணத்தைத் திணித்தவன்,

"நான் என்ன அடுத்தவனா மது... ஏன் என் கிட்ட இப்படித் தயங்குற...?" என்றவனின் பேச்சில் அவனை நிமிர்ந்து பார்த்தவளால் அவன் கண்கள் உணர்த்திய செய்தியை உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவனின் ஆளை கொல்லும் பார்வை அவளை ஏதோ செய்தது மட்டும் நிஜம்... தெளிந்த நீரோடை போல் சலனமில்லாமல் இருந்த அவளது கன்னி மனதில் அவன் காதல் என்னும் கல்லை எறிந்து சலனமடையச் செய்துவிட்டான்.

இரண்டு வருடங்களுக்குப் பின்...

வேலை முடித்துப் பைக்கில் வந்து கொண்டிருந்த கௌதம் பள்ளி முடித்துப் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த மதுவை பார்த்துவிட்டான். அவளருகில்

நின்று கொண்டிருந்த ஒரு பையன் அவளிடம் ஏதோ சொல்லி கொண்டிருக்க... அவள் அதை மறுத்து கொண்டிருந்தாள். மீண்டும் அவன் ஏதோ சொல்ல அவள் அவனை விட்டு தள்ளி நின்றாள். அவனோ விடாக்கண்டனாய் அவளருகே வந்து நிற்க... அதைக் கண்டு கௌதம் முகம் சுளித்தான்.

மது அருகே சென்று தன் வண்டியை நிறுத்திவிட்டுக் கௌதம் இறங்க... இப்போது மது கௌதமை பயத்துடன் பார்த்தாள். அவன் என்ன சொல்வானோ... தன்னைப் பற்றித் தவறாக நினைப்பானோ என்று பயந்தவள் கண்கள் கலங்கியது. ஆனால் அந்தப் பையன் கௌதமை கண்டு கொள்ளாமல் மதுவிடம் பேச துவங்கினான்.

"மது... ஐ லவ் யூ மது..." அவன் சொல்லி முடிக்கும் முன் கௌதமின் கை அவனின் சட்டையைக் கொத்தாகப் பற்றியது.

"யார் கிட்ட டா ஐ லவ் யூ சொல்ற... மவனே உன்னைக் கொன்னே போட்டுருவேன்..." ஆக்ரோசமாய்க் கர்ஜித்தவன் அந்தப் பையனை அடி புரட்டி எடுத்துவிட்டான். அடி தாங்க முடியாமல் அந்தப் பையன்,

"இல்லைங்கண்ணா... இனி இது மாதிரி பண்ண மாட்டேன்..." என்றவன் விட்டால் போதுமென்று கௌதமிடம் இருந்து தப்பி ஓட... அவன் சென்ற திசையை முறைத்து பார்த்தவன் பைக்கில் ஏறி அமர்ந்து அதை ஸ்டார்ட் செய்தவன் மதுவின் புறம் திரும்பி,

"ஏறுடி..." அவனின் கர்ஜனையில் உடலும் உள்ளமும் நடுங்கியவள் உடனே அவன் பின்பக்கம் ஏறி அமர்ந்தாள்.

கௌதம் தன் கோபத்தை எல்லாம் வண்டியின் மீது காட்டினான். எஜமானின் மனம் அறிந்தார் போல் அதுவும் அதிக வேகத்தில் காற்றைப் போல் பறக்க... மது பயத்தில் கௌதமின் தோளை பற்றியவள் கண்களை இறுக மூடி கொண்டாள்.

"கொஞ்சம் மெதுவாய் போங்களேன்..." அவளின் குரலில் இன்னமும் வேகம் எடுத்தது அவனது வாகனம்.

"எனக்குப் பயமா இருக்கு..." அவன் காதில் முணுமுணித்தவளின் குரலில் பைக்கை ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கியவன்,

"எதுக்கு எடுத்தாலும் இது என்ன பயம்...? அவனை அங்கேயே செருப்பைக் கழட்டி அடிச்சிருக்க வேணாமா...? பயம்... பயம்... பயம்... அப்படி என்னத்தான் பயமோ..." அவளிடம் படபடவெனப் பொரிந்தவன் முகம் எரிச்சலை காட்டியது. அதற்குப் பதில் பேசாது அமைதியாய் இருந்தவளை கண்டு அவனின் கோபம் பன்மடங்கு அதிகரித்தது.

"இப்படிப் பயப்படுறவ அவன் ஐ லவ் யூ சொன்னதுக்குப் பதிலா நீயும் ஐ லவ் யூ சொல்ல வேண்டியது தானே... இப்போ அவன் கிட்ட கொண்டு போய் விடவா... போய்ச் சொல்றியா...?" என்றவனின் முகத்தை ஏறிட்டு பார்த்தவள் பதில் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டு மௌனத்தில் கரைய... அதில் ஆத்திரம் கொண்டவனாய் அவளருகே நெருங்கியவன் அவளின் முடியை இறுக பிடித்துத் தன் பக்கம் அவளை இழுத்தவன்,

"ஏண்டி என்னை உயிரோடு கொல்ற... இதுக்கு மேல என் மனசை என்னால் மறைக்க முடியாது... நீ எனக்கு வேணும்... என் ஆயுள் முழுமைக்கும்... என் மனைவியாய் நீ எனக்கு வேணும்..." என்றவன், "என் கண் முன்னாடி உன் கிட்ட ஒருத்தன் காதலிக்கிறதா சொன்னா பார்த்துக்கிட்டு சும்மா இருக்கிறதுக்கு நான் என்ன பொட்டைப்பயலா...? உனக்கும் எனக்கும் இடையில் வயசு கூட வர கூடாது நினைக்கிறவன் நான்... அப்படிப்பட்ட நான் உனக்கும் எனக்கும் இடையில் யாரும் வர விட்டுருவேனா... அப்படியே வந்தாலும் அவன் உயிரோடு திரும்பி போயிற முடியுமா என்ன... தலை தனியா உடல் தனியா வெட்டி பொளந்திற மாட்டேன்..." என்றவனின் ஆக்ரோசத்தில் பயந்து போனவளின் கண்கள்

மானின் மிரட்சியைக் காண்பிக்க அவளது தளிருடல் நிற்க முடியாமல் வெடவெடவென நடுங்கியது.

## துளி : 13

"ஸ்..." கௌதம் தன் கூந்தலை இறுக்கி பிடித்ததில் உண்டான வலியில் மது மெதுவே முனங்கினாள். அவளின் கண்களில் தெரிந்த மிரட்சியும் அதையும் மீறி வெளிப்பட்ட வலியும் அவனின் ரௌத்திரத்தை சற்று மட்டுப்பட்டுத்தியது. தன் பிடியை மெல்ல தளர்த்தி,

"அம்மு..." மென்மையாய் அழைத்தவன், "என்னை உனக்குப் பிடிக்குமா...?" இத்தனை நேரம் அவளை மிரட்டியவன், கோபப்படுத்தியவன் அவன் தானா என்று சந்தேகமாக இருந்தது. அந்தளவுக்குக் கனிவு இருந்தது அவனது வார்த்தையிலும், முகத்திலும்...

அவனது வார்த்தைக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் அவள் தலையைக் குனிந்து கொண்டாள். அவளுக்கு அவனைப் பிடிக்கும் தான்... இல்லை என்று சொல்லிவிட முடியாது... ஆனால் அந்தப் பிடித்தத்திற்குப் பெயர் காதல் தானா என்று அவளுக்குத் தெரியவில்லை...

"ஏய் உன்னைத் தான்டி கேக்கிறேன்..." ஒற்றை விரலால் அவளின் முகவாய் தொட்டு நிமிர்த்தியவனிடம் மீண்டும் கோபம் மீண்டு இருந்தது.

"தெரியல..." என்றாள் மெதுவாக... அவளது பேச்சில் அவன் அதிர்ந்து தான் போனான். அவனது கை அவளை விட்டு தானாக விலகியது.

"ஏன்...?" இதைக் கேட்கும் போதே அவன் மனதுக்குள் திக்திக் என்று இருந்தது. இருவருக்கும் இடையில் உள்ள வயது வித்தியாசத்தைக் குறிப்பிட்டு விடுவாளோ என்று அச்சப்பட்டான்.

"உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும் தான்... ஆனா காதல்... எனக்குப் படிக்கணும்..." முடிக்க முடியாமல் திணறியவளை கண்டதும் அவன் முகம் மிருதுவானது. தன்னைப் பிடிக்காது என்று சொல்லிவிடுவாளோ என்று அச்சப்பட்டவன் அவளின் இந்தப் பதிலில் நிம்மதியுற்றான்.

"சரி படி... நான் வேண்டாம்ன்னு சொல்லலையே... படிச்சு முடிச்சதுக்கு அப்புறம்...?" அவனது கேள்வி புரியாமல் அவனைப் பார்த்தவள் மெதுவே,

"வேலைக்குப் போகணும்..."

"சரி வேலைக்குப் போகலாம்... அதுக்கு அப்புறம்..." என்றவன் பேச்சில் அடுத்து என்ன என்று தெரியாமல் அவள் திருதிருவென விழித்தாள்.

"என்ன தெரியலையா...? நான் சொல்லவா...?" அதற்கு அவள் அமைதி காக்கவும்...

"கல்யாணம்..." அவன் சொன்னதும் தான் தாமதம் அவள் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

"ஹேய் பார்த்து... பார்த்து... எதுக்கு இத்தனை அதிர்ச்சி...? உங்க அம்மா உன்னைக் கல்யாணம் பண்ணி கொடுக்காம வீட்டிலேவா வச்சியிருக்கப் போறாங்க...? எப்படியும் உன்னை யாருக்கோ கல்யாணம் பண்ணி கொடுக்கப் போறாங்க... அந்த யாரோ ஒருவன் ஏன் நானாக இருக்கக் கூடாது...?" என்றவனின் நீளமான பேச்சு அவளைக் குழப்பமடையச் செய்ததோ என்னமோ... குழப்பத்துடன் அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"யோசிச்சு பாரு... கணக்கு சரியா வரும்..." என்று கேலியுடன் சொன்னவன், சட்டென்று பேசும் தன் த்வனியை மாற்றி, "இன்னும் மூணு நாள் டைம் தர்றேன்... அதுக்குள்ள நல்ல பதிலா யோசிச்சு சொல்லு..." அவன் சொன்னதற்கு வெறுமனே தலையை ஆட்டியவளிடம்,

"சொல்லணும்..." அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவனின் நம்பிக்கை கண்டு அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது.

"கிளம்பலாமா...?" என்றபடி தன் வாகனத்தை அவன் உயிர்ப்பிக்க...

"நான் பஸ்ல போயிர்றேன்..." என்றவளை முறைத்தவன்,

"அது எதுக்கு...? ஏன் என் கூட வந்தா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவன் தப்பா நினைச்சுக்குவானா...?" இடக்காய் கேட்டவன், "நான் ஒண்ணும் உன்னைத் தப்பா நினைச்சுக்க மாட்டேன்... வண்டில ஏறு..." அது தான் தான் என்பதை அவளுக்கு வலியுறுத்தியவன் சொல் வலிமையை அவளால் ரசிக்காமல் இருக்க முடியவில்லை.

ஒன்றும் பேசாமல் அவள் அவனின் பின்புறம் ஏற அந்த இரு சக்கரவாகனம் வேகமாய்ப் பறந்தது அவனது கைகளில். அவளது வீட்டின் முன் இறக்கி விட்டவன்,

"மூணே மூணு நாள் தான்... நல்லா நியாபகம் வச்சிக்கோ... நாலாவது நாள் காலையில் நீ வரல... நானே உன்னைத் தேடி வந்திருவேன்..." மெதுவாய் முணுமுணுத்தவனைக் கண்டு பயந்து போனவளாய் வேகமாய் அங்கிருந்து நகர்ந்தவளை பார்த்து அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அதற்குள் உள்ளிருந்து வந்த மீனா கௌதம் வாசலில் வண்டியுடன் நிற்பதை கண்டு, "என்னப்பா கௌதம்...?" என்று கேட்க... மது திடுக்கிட்டவளாய் அம்மாவையும், அவனையும் மாறி மாறி பார்த்தாள்.

"நான் வரும் போது மது பஸ் ஸ்டாண்ட்ல நின்னுட்டு இருந்தா... அதான் கூட்டிட்டு வந்தேன்..." என்றதும் அப்படியா என்பது போல் மீனா உள்ளே செல்ல மது பெருமூச்சு விட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"என்ன அம்மு பயந்துட்டியா...?" என்றவன் அவளைப் பார்த்து கண்சிமிட்ட... அதில் அவள் திகைத்து போய் நிற்க... அவனோ சிரித்தபடி வண்டியை எடுத்தான்.

மறுநாள் இரவு வேலை முடித்து வந்தவன் வீட்டில் அன்னை இல்லாததை உணர்ந்து தந்தையிடம், "அம்மா எங்கேப்பா...?"

"மதுவுக்குக் காய்ச்சலாம் கண்ணா... அதான் பார்த்துட்டு வர போயிருக்கா..." அதைக் கேட்டதும் அவனுக்கு ஒரு

மாதிரியாக இருந்தது.

உடையை மாற்றிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவன் மனம் எதை எதையோ யோசித்தது. 'ஒருவேளை நான் பேசியதால் அவளுக்குக் காய்ச்சல் வந்து இருக்குமோ... என்ன தான் இருந்தாலும் சின்னப் பெண்ணிடம் போய் இப்படியா அடாவடித்தனமாய்க் காதலை சொல்வது...' தன் செயல் குறித்து அவனுக்கே அவமானமாய் இருந்தது.

நாளைக்கு முதல் வேலையாக மதுவை பார்த்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று மனதில் குறித்துக் கொண்டான். 'அப்போ உன் காதல்...?' எதிர் கேள்வி கேட்ட மனதை அடக்கினான். தனது காதலுக்கு எதிர்காலம் இல்லை என்பதை உணர்ந்து தானே காதலித்தான். இதில் அவள் தவறு எங்கே இழுக்கிறது... எல்லாம் தன் தவறு என்று மனதுக்குள் உரைத்தவன் அவளைக் காண்பதற்காக விடியலை எதிர் நோக்கி காத்திருந்தான்.

காலையில் எழுந்து வேலைக்குச் செல்ல கிளம்பி கொண்டிருந்தவன் மனம் முழுவதும் எப்படி மதுவை தனியே சந்திப்பது என்று தான் யோசித்துக் கொண்டிருந்தது. அதற்கான சந்தர்ப்பத்தை நாயகியே அவனுக்கு அளித்தார்.

"கௌதம் நீ வீட்டை பூட்டிட்டுக் கிளம்பு... நான் மீனாவோடு கடைத்தெரு வரைக்கும் போயிட்டு வர்றேன்..." என்று சொல்லிவிட்டு சென்ற அன்னைக்கு மனதார நன்றி கூறியவன் அவர்கள் கிளம்பி சென்ற அரைமணி நேரத்தில் மதுவின் வீட்டின் முன் நின்றான்.

அழைப்பு மணியை அடித்து விட்டு நின்றவன் மனதுக்குள் வீட்டில் மது மட்டும் தனியாக இருக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டி கொண்டான். அவனது எண்ணம் பொய்க்காமல் அவனது காதலியே வந்து கதவை திறந்தாள். அவனைக் கண்டதும் அதிர்ந்தவள் அதிர்ச்சி தாங்க முடியாமல் கதவின் மீதே சாய்ந்து விட்டாள்.

தலை கலைந்து, கண்கள் சிவந்து, முகம் வீங்கி போய் இருந்தவளை கண்டு அவனுக்கு உள்ளம் வலித்தது. தேவை இல்லாமல் சின்னப் பெண்ணிடம் காதல் கதை பேசி அவள் மனதை காயப்படுத்தி விட்டோமோ என்று மனதுக்குள் கவலை கொண்டான்.

"உள்ளே வரலாமா...?" என்றவனுக்குத் தள்ளி நின்று வழியை விட்டவள் கதவை விட்டு நகராமல் அங்கேயே நின்றாள்.

"அம்மு... காய்ச்சல் எப்படி இருக்கு...?"

"இப்போ பரவாயில்லை..." தலையைக் குனிந்து கொண்டு சொன்னவளை கண்டு அவனுக்கு உள்ளம் வலித்தது. அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் சிறிது நேரம் மௌனத்தில் கரைந்தது.

"வீட்டில் யாரும் இல்லையா...?" அவன் கேட்டதற்கு இல்லை என்று அவள் தலை அசைந்தது. அதைக் கண்டு வேக பெருமூச்சு விட்டுத் தன்னைச் சமன்படுத்திக் கொண்டவன்,

"சாரி அம்மு..." என்றான். அவனின் குரலில் இருந்த குற்றவுணர்வில் பதறி போய் அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் முகத்தில் தேங்கி இருந்த வேதனையைக் கண்டு அவள் பரிதவித்துப் போனாள். எப்போதும் புன்னகையுடன் கலகலப்பாய் இருக்கும் கௌதம் தன் இயல்பு மாறி இந்த மாதிரி இருந்தது அவளுள் ஏதோ செய்தது. அவன் தன் இயல்பை தொலைத்து இருப்பதற்கான காரணம் தான் தான் என்ற எண்ணம் அவளை வாள் கொண்டு அறுத்தது. ஆனால் அதையும் மீறி தன் மனதுக்குள் மகிழ்ச்சி பரவுவதை அவள் ஒருவித அதிர்வுடன் உணர்ந்தாள். அவன் தனக்காகத் தவிப்பதை உணர்ந்து அவளுக்கும் அவனை ஆறுதல் படுத்த வேண்டும் என்ற தவிப்பு எழ தன் எண்ணம் போகும் திசையறிந்து வியர்த்து விதிர்த்து போனாள்.

"இனி மேல் நான்..." அடுத்த வார்த்தையை எப்படிச் சொல்வது என்று துயரத்தில் கண்களை இறுக மூடி திறந்தவன், எழுந்து அவள் அருகில் வந்து அவளது கண்களுக்குள் தன் கண்களைக் கலக்க விட்டான். ஏதோ கடைசி முறையாய் அவளைப் பார்ப்பது போல் தவிப்பாய் ஊடுருவியது அவனின் பார்வை. பின் தன் பார்வையைத் தளைத்துக் கொண்டு,

"உன்னை டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்..." என்றவன் வாசல் தாண்டி போகையில் அவனது கரத்தை அவளது கரம் பற்றியது. அதை உணர்ந்தவனாய் அவனது பார்வை உயர்ந்து 'என்ன' என்பது போல் அவளைப் பார்த்தது.

"பிடிச்சு இருக்கு..." மொட்டையாக அவள் சொன்னாலும் தன்னைத் தான் சொல்கிறாள் என்பதை உணர்ந்தவனுக்கு அவ்வளவு நேரம் இருந்த இறுக்கம் போய் உடலும், மனமும் தளர்ந்து உல்லாசமாய் இருந்தது.

"உப்..." பெருமூச்சு விட்டவன்... அவள் பிடித்துக் கொண்டு இருந்த கதவின் மீது சாய்ந்து கொண்டு அவள் அருகே நெருக்கமாய் அவன் நிற்க... அவனின் செயலில் பதற்றம் அடைந்தவள் தள்ளி நிற்க போக... அவள் கைப்பிடித்து வேகமாய் அவளைத் தன்னருகில் இழுத்தவன்,

"எதைப் பிடிச்சு இருக்கு...?" உல்லாசமாய் வினவியவன் பார்வை வண்டாய் மொய்த்தது அவளை. அவனின் பேச்சில், பார்வையில் அவள் முகம் செவ்வானமாய் மாறியது...

"நீங்க... உங்க..." வெட்கத்தில் சொல்ல முடியாமல் திணறியவளை கண்டு வாய் விட்டுச் சிரித்தான் அவன். இத்தனை நேரம் மனதை அழுத்தி கொண்டிருந்த பாரம் சட்டென்று மறைய மனம் திறந்து சிரித்தான். அவன் சிரிக்கும் போது கன்னத்தில் விழுந்த குழியில் அவள் மனம் தடுமாறி விழுந்து தவித்தது. அவளுக்கு இது ஒரு புது அனுபவம்... அதை மறைக்க முடியாமல் தவித்தவளுக்கு அழுகை வரும் போல் இருந்தது. அவளது கண்ணீர் கண்டதும் அவனின் சிரிப்பு நின்றது.

"ஹேய் அம்மு... எதுக்கு இந்த அழுகை...?" அவளின் கண்ணீரை அவன் துடைத்துவிட...

"எனக்குப் பயமாயிருக்கு..." அவனின் கையைப் பிடித்துக் கொண்டு அழுதவளை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது.

"எதுக்குப் பயம்...? நான் உன்னை ஏமாத்திடுவேனான்னு பயப்படுறியா...?" அவனின் வார்த்தையில் விலுக்கென்று நிமிர்ந்தவள் இல்லை என்பது போல் தலையசைக்க, அவன் யோசனையாய் அவளைப் பார்த்தான்.

"படிக்கிற வயசுல காதல் தேவை தானான்னு குழப்பமா இருக்கு..." அவன் முகம் வாடுவதைக் கண்டு அவசரமாய், "உங்களைப் பிடிச்சு தான் இருக்கு..."

அவளின் வார்த்தை வந்த வேகம் கண்டு அவனின் முகம் மீண்டும் புன்னகையைத் தத்தெடுத்தது. அவளது மனக்குழப்பத்துக்குக் காரணம் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. அவள் கையை எடுத்து தன் கைக்குள் பொத்தி வைத்து கொண்டவன் அவள் கை நடுங்குவதைக் கண்டு பரிவாய் அவளது கையை வருடி கொடுத்தவன்,

"உன் மனசு எனக்கு நல்லா புரியுது அம்மு... உன் மனசில் நான் இருக்கேனா இல்லையான்னு தான் எனக்குத் தெரிய வேண்டி இருந்துச்சு... அது இப்போ தெரிஞ்சிடுச்சு... இனி நான் உன்னைத் தொந்திரவு செய்ய மாட்டேன்... நீ படிப்புல மட்டும் கவனத்தைச் செலுத்து... அது வரைக்கும் நான் தள்ளி இருக்கேன்... ஆனா ஒரு கண்டிசன் நீ படிச்சு முடிச்ச மறுநாள் நம்ம கல்யாணம் நடக்கணும்..." என்றவனின் பேச்சில் அவளது கன்னம் செம்மையுற்றது. திருமணம் என்பது எல்லாப் பெண்களுக்கும் பெரிய கனவு அல்லவா...

அவளது சிவந்த முகத்தை ரசனையுடன் பார்த்தவன், பேச்சை மாற்றும் பொருட்டு... "சரி என்ன படிக்கலாம்ன்னு இருக்க..."

"டாக்டர்..."

"ம்... குட்... குட்... டாக்டரானா இந்த ஐடி பையனை கண்டுக்குவீங்களா... இல்லை டாக்டர் மாப்பிள்ளை தான் வேணும்ன்னு அடம் பிடிப்பீங்களா...?" அவனது பேச்சில் அவள் பதறி போனாள்.

"உங்களுக்குப் பிடிக்கலைன்னா நான் டாக்டருக்கு படிக்கல... என்ஜினீரிங் படிக்கிறேன்..." தனக்காகத் தனது குறிக்கோளை கூட விட்டு கொடுக்கும் காதலி கிடைத்ததை எண்ணி அவன் மனம் மகிழ்ந்தது. அது அவனது காதலை இன்னமும் அதிகரித்தது.

"தேங்க்ஸ் அம்மு..." உணர்ச்சிவசப்பட்டவன் குரல் கரகரத்தது. "நீ டாக்டருக்கு படி... நான் என்ன ஹெல்ப் வேணும்ன்னாலும் பண்றேன்... அதே சமயம் எத்தனை வருசம் ஆனாலும் உனக்காக நான் காத்திருப்பேன்..." அவன் நாக்கில் சனி புகுந்து இருந்தானோ... எந்த நேரத்தில் அப்படிச் சொன்னானோ... கடைசியில் அது தான் நடந்தது.

அடுத்து வந்த நாட்களில் கௌதம் தான் சொன்னதைச் செய்தான். மதுவிடம் இருந்து விலகி நின்றான். அவளிடம் அவன் பேசவில்லை என்றாலும் பார்வையில் அவளிடம் 'உனக்காக நான் இருக்கிறேன்' என்பதை வலியுறுத்தி கொண்டே தான் இருந்தான். எதிர்பாராத நேரத்தில் அவளைக் காணும் போது சின்னப் புன்னகை, சின்னத் தலையசைப்பு இவ்வளவு தான் அவனிடத்தில் இருக்கும் பிரதிபலிப்பு. அது போல் மதுவும் சின்னப் புன்னகையுடன் ஒதுங்கி போய்விடுவாள். அந்தச் சின்னப் புன்னகை அவன் வாழ்க்கையை வண்ணமயம் ஆக்கியதை சொல்ல தேவையில்லை.

*************************

"மாப்பிள்ளை... தியேட்டருல என்னடா கூட்டமே இல்லை... படம் போரடிக்குமோ... நீ சொன்னேன்னு தான் வந்தேன்..." அலுத்துக் கொண்டே சொன்ன கணேஷ் வேண்டா வெறுப்பாய் இருக்கையில் அமர...

"நல்ல படம்ங்கிறதால தானே நான் உன்னைக் கூட்டிட்டு வந்தேன்... வாயை மூடிட்டுப் படத்தைப் பார்க்கணும்..." நண்பனிடம் சொல்லி கொண்டே அந்தத் திரையரங்கை சுற்றி வந்தது கௌதமின் பார்வை.

ஓரிடத்தில் வந்ததும் அவனது பார்வை நிலைக்குத்தி நின்றது. அங்கே இதயா ஒரு ஆடவனுடன் அமர்ந்து சிரித்துப் பேசி கொண்டிருந்தாள். அவர்கள் அமர்ந்திருந்த அந்நியோன்யத்திலேயே தெரிந்தது அவர்களது பழக்கம் எப்படிப்பட்டது என்று... கௌதம் ஒன்றும் காதலுக்கு எதிரி இல்லை தான்... ஆனாலும் இது போன்று பொது இடங்களில் அரங்கேறும் காதல் அவனுக்குச் சுத்தமாய்ப் பிடிக்காது.

"கௌதம்..." கணேஷ் கூப்பிட்டதும் அவன் புறம் திரும்பியவன் அவனுடன் பேசலானான். பின்பு படம் போட்டதும் அதில் மூழ்கி போனவன் ஏதோ தோன்ற இதயா அமர்ந்திருந்த பக்கம் பார்த்தான்.

இருட்டாக இருந்தாலும் திரையில் இருந்து வந்த ஒளியில் அவர்கள் நன்கு அவன் கண்ணுக்கு தெரிந்தனர். அந்த ஆடவன் இதயா தோள் மீது ஒரு கையைப் போட்டு கொண்டவன் மறுகையால் அவளது கையைப் பற்றி முத்தமிட்டான். அடுத்து அவன் செய்த செயல் கௌதமிற்கு அருவருப்பைக் கொடுத்தது. இதயாவின் இதழோடு அவன் தன் இதழை கலந்ததைக் கண்ட கௌதமிற்கு ரத்தம் கொதித்தது. அருவருப்பில் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டான் கௌதம்.

இதயா அருகில் அமர்ந்து இருந்த ரஞ்சனோ காதலின் உணர்ச்சியின் பிடியில் இருந்தான். அந்த வயதிற்குரிய ஆர்வம், தனிமை, இருள், மனதுக்குப் பிடித்த பெண்ணின் அருகாமை எல்லாம் கொடுத்த தைரியம் அவனைக் காதலின் அடுத்தக் கட்டத்திற்குக் கொண்டு சென்றது. அதற்காக அவன் தவறானவன் அல்ல... காதலித்து விட்டு இதயாவை கழட்டிவிட அவன் ஒருபோதும் நினைத்தது

இல்லை. அவளுடன் காதலோடு கருத்தொமித்து வாழவே அவன் விருப்பம் கொண்டான்.

"என்னடா கௌதம்... ஏன் ஒரு மாதிரியா இருக்க...?" என்ற கணேஷிடம்,

"ஒண்ணும் இல்லை..." என்று அவன் பதிலளிக்க...

"இதுக்குத் தான் சொன்னேன் இந்த மாதிரி படத்துக்கு எல்லாம் வர கூடாதுன்னு..." சலித்தவன் கொடுமையே என்று திரையில் கண்களை ஓட்டினான். கௌதமிற்குத் தான் படத்தில் மனம் லயிக்கவில்லை. எப்போதடா படம் முடியும் என்று காத்துக் கொண்டு இருந்தான். படம் முடிந்ததும் வேகமாய் வெளியில் வந்தவன்,

"கணேஷ்... நீ கிளம்பு... எனக்கு வேற வேலை இருக்கு..." கௌதமின் வார்த்தைக்கு மதிப்பளித்து அவன் செல்ல... கௌதம் தன் இரு சக்கர வாகனத்துடன் திரையரங்கின் நுழைவாயிலில் நின்றிருந்தான். அவன் எண்ணத்தைப் பொய்யாக்காமல் வெளியில் வந்த இதயா அருகில் தன் வாகனத்தைச் செலுத்தியவன்,

"ஏறு..." என்றவனின் குரலும், முகமும் இறுகி இருந்தது.

இதயா கௌதமிற்கு எல்லாம் பயப்படுபவள் இல்லை... ஒரு கௌதம் என்ன நூறு கௌதமை சமாளிக்கும் திறன் உள்ளவள் அவள். ஆனால் திடுமென அவன் வந்து அப்படிக் கேட்டதில் திடுக்கிட்டு போனவள் வேறுவழியின்றி ரஞ்சனிடம் கண்களால் விடைப்பெற்று கௌதமின் வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

வீடு வந்து சேரும் வரை இருவரிடத்திலும் மௌனமே ஆட்சி செய்தது. அவளின் வீட்டின் முன் வண்டியை நிறுத்தியவன் அவளைப் பின் தொடர்ந்து வர அதைக் கண்டு ஒரு நொடி திகைத்த இதயா மறுநொடி உதட்டை சுளித்துக் கொண்டு உள்ளே சென்றாள். மதுவின் வீட்டின் வாயிலில் நின்று பேசி கொண்டிருந்த நாயகியும் மீனாவும் இதைக் கண்டு யோசனையாய் பார்த்தனர்.

அன்று மதுவை கௌதம் அழைத்து வந்த போது தவறாக எண்ணாத மீனாவின் மனம் இன்று இதயாவை அவன் அழைத்து வந்ததைக் கண்டு என்னவாக இருக்கும் என்று யோசித்தது. யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்று யோசித்தவர் வாய் விட்டு கேட்கும் முன் நாயகி,

"என்ன கௌதம்... நீயும் இதயாவும் எங்கேயாவது போயிட்டு வந்தீங்களா...?" அவரது முகத்தில் தான் நினைத்தது நடந்து விட்டது என்ற சந்தோசம் அப்பட்டமாய்த் தெரிந்தது. வெள்ளந்தியாய் கேட்ட அன்னையை முறைத்து பார்த்தவன்,

"அதை இதயா கிட்டேயே கேளுங்க..." என்றவன் மதுவின் வீட்டினுள் சென்றான். அவனைக் கண்டதும் புன்னகையுடன் எழுந்த மதுவை கூட அவன் கவனிக்கவில்லை.

"இதயா... கேட்கிறாங்கல்ல... எங்கே போயிட்டு வந்தேன்னு சொல்லு... அது யார் கூடங்கிறதையும் சொல்லு..." யார் என்ற வார்த்தையில் அவன் கொடுத்த அழுத்தம் மீனாவிற்குக் கிலியை ஏற்படுத்தியது என்னமோ நிஜம்.

"இதயா என்னடி இது... கௌதம் என்ன சொல்றான்...?" மீனா மகளை உலுக்கினார். அவரைத் தீர்க்கமாய்ப் பார்த்த இதயா,

"நான் படத்துக்குத் தான் போனேன்... என் லவ்வர் கூட..." அவள் சொன்ன விதத்தில் மீனாவும், நாயகியும் அதிர்ந்து போய் நின்றனர். அவர்கள் ஒன்று நினைக்க தெய்வம் வேறு நினைக்கிறதே என்று மனம் கலங்கினர்.

"கௌதம் கூடத் தானே இதயா..." மீனா தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு கேட்க...

"ச்சீ... ச்சீ... அவன் கூடப் போகல..." அவசரமாய் மறுத்த இதயா அருவருப்பாய் முகத்தைச் சுளித்தாள். அதைக் கண்டு மது உள்ளுக்குள் வெகுண்டாள்.

என்ன இருந்தாலும் கௌதம் அவளது மனதுக்கு இனியவன் அல்லவா... 'மாமாவை பார்த்து இதயா எப்படி இப்படிச் சொல்லலாம்...? ஆண்களில் மாமா போல் பார்க்க முடியுமா... அவரின் குணம் யாருக்கு வரும்...?' மனதுக்குள் இதயாவை திட்டியவள் கௌதமுக்கு வக்காலத்து வாங்கினாள்.

ஆனால் கௌதமோ இதயாவின் குணம் அறிந்தவனாய் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் அப்படியே நின்றான். மீனாவோ இதயாவின் பேச்சில் திகைத்துப் போனார். இதில் சுதாரித்தது நாயகி மட்டுமே...

"அம்மாடி இதயா... நீ இந்தளவுக்கு அருவருப்போடு சொல்ற அளவுக்கு என் மகன் ஒண்ணும் தரம் தாழ்ந்து போயிடல... உனக்கு அவனைப் பிடிக்கலைன்னா பிடிக்கலைன்னு சொல்றதோடு நிறுத்திக்கோ... அதுக்காக இப்படி முகத்தைச் சுளிக்காதே..." படபடத்தவரின் தோளில் கை வைத்து அமைதிப்படுத்தியவன்,

"அம்மா... என்னைப் பத்தின பேச்சை விடுங்க... அவள் என்ன செஞ்சான்னு மட்டும் கேளுங்க..."

"உனக்கு இப்போ என்ன தெரியணும்...? அதான் கண்ணால பார்த்துட்டல்ல... பிறகு என்ன...?" கௌதமை பார்த்து அலட்சியமாய்ச் சொன்ன இதயா மீனாவை பார்த்து,

"அம்மா... நான் ரஞ்சன்ங்கிறவரை லவ் பண்றேன்... அவரைத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்..." உறுதியாய் கூறியவள், கௌதமிடம் திரும்பி,

"லவ் பண்றவங்க அப்படி இப்படித்தான் இருப்பாங்க... அதைப் பார்த்தா கண்ணை மூடிட்டு போகணும்... அதை விட்டுட்டு உன்னை யாரு அதைப் பார்க்க சொன்னது...? உனக்குக் காதலை பத்தி என்ன தெரியும்...? நீ யாரையாவது காதலிச்சு இருக்கியா...? உன்னை மாதிரி முசுட்டு மூஞ்சியை எல்லாம் யார் காதலிப்பா...?" இதயாவின் ஆகங்கார பேச்சில் கௌதமின் ஈகோ

அடிப்பட்டுத் தான் போனது. அவன் முகம் கறுத்து தலை தானாகக் குனிந்தது.

எல்லாம் நொடி நேரம் தான் அடுத்த நொடி கர்வமாய்த் தலை நிமிர்ந்தவன், "என்ன சொன்ன எனக்குக் காதல்ன்னா என்னன்னு தெரியாதா...? ஆமாம் உன்னை மாதிரி நாய் காதல் எனக்குத் தெரியாது தான். எனக்குத் தெரிஞ்சது எல்லாம் என்னவளை மனதார காதலிக்கிறது மட்டும் தான்... உன் காதலன் மாதிரி அவளைத் தியேட்டர், பீச்சுக்கு கூட்டிட்டுப் போய்க் கரெக்ட் பண்ண எனக்குத் தெரியாது தான்... ரெண்டரை வருசமா அவளைக் காதலிக்கிறேன்... ஒரு நாளாவது அவள் கூடத் தனியா பேசி பார்த்து இருக்கியா... இல்லை நாங்க எங்கேயாவது ஊர் சுத்தி தான் பார்த்திருக்கியா..." என்றவனின் பேச்சில் எல்லோரும் திகைத்து போய் நின்றனர் என்றால் இதயாவின் முகத்தில் ஈயாடவில்லை.

"உனக்கு அவள் யாருன்னு தெரியணுமா...?" என்று இதயாவை பார்த்துக் கேள்வி கேட்டவன், மதுவின் அருகில் சென்று அவளின் தோள் மீது கைப் போட்டு தன்னோடு சேர்த்து அணைத்து பெருமையாய் இதயாவை பார்த்தான்.

## துளி : 14

இதயாவிற்குக் கௌதமையும், மதுவையும் கண்டு பொறாமையாக இருந்தது. கௌதமின் கண்களில் பொங்கி வழிந்த காதல் அவள் இதுவரை காணாதது. அதே போல் அவன் அணைப்பில் நின்று இருந்த மது முகத்தில் தெரிந்த செம்மை அவளின் காதலின் ஆழத்தை நன்கு உணர்த்தியது. ரஞ்சனின் அருகாமையில் தான் இது போல் செம்மை அடைந்ததாக அவளுக்கு நினைவு இல்லை... கௌதம் மது ஜோடி பொருத்தம் கண்டு அவளுக்குள் பொறாமை தீ பற்றி எரிந்தது. ரஞ்சனை விடக் கம்பீரமாய் இருந்த கௌதமின் அழகு முதன் முறையாக அவள் மனதை தாக்கியது. அதிலும் காதல் கொடுத்த அழகு அவனை இன்னமும் அழகாய் காட்டியதை கண்டவள் மதுவை கண்டு பொறாமை கொண்டாள்.

மதுவோ கௌதமின் செய்கையில் சற்றுப் பயந்தாலும் அவனின் தன்மானத்தைக் காயப்படுத்திய சகோதரியின் முன் அவனை விட்டு கொடுக்க முடியவில்லை. அவனின் மனம் எந்தளவுக்கு வேதனைப்பட்டு இருக்கும் என்று நினைத்தவள் அவன் மனதை குளிர்விக்கும் வண்ணம் அவனோடு நெருங்கி நின்றாள். அவளது நெருக்கத்தை வியப்பாய் பார்த்த கௌதம் தன் அணைப்பை மேலும் இறுக்கி கொண்டான்.

"அம்மா எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க..." அன்னை ஏதும் சொல்லும் முன் கௌதம் நாயகியின் காலில் விழ... அவனைத் தொடர்ந்து மதுவும் அவரின் பாதம் பணிந்தாள்.

கௌதம் மதுவை காதலிக்கிறான் என்றதும் அதிர்ந்து போனவர் நாயகி மட்டுமே... அவர் இதயாவை அவனுடன் இணை கூட்ட நினைக்க அவர் மகனோ மதுவுடன் அல்லவா கூட்டணி போட்டுக் கொண்டு நிற்கின்றான். மது அவனை விடப் பத்து வயது சின்னவள் என்ற எண்ணமே அவருக்கு அவ்வளவு உவப்பானதாய் இல்லை. சின்னப் பெண்ணின் மனதை கெடுத்து விட்டானோ என்று அவர் உள்ளுக்குள் சஞ்சலம் அடைந்தார்.

இவர்கள் இருவரின் காதலில் மகிழ்ந்த ஒரே ஜீவன் மீனா மட்டுமே. அவரைப் பொருத்தவரையில் கௌதம் அவருக்கு மருமகனாக வந்தது சந்தோசமே... அது மூத்த மகளால் வந்த உறவாக இருந்தால் என்ன... இல்லை சின்ன மகளால் வந்த உறவாக இருந்தால் என்ன... மொத்தத்தில் கௌதம் மதுவை காதலிப்பது அறிந்து உவகைக் கொண்டது அந்தத் தாயுள்ளம். அவனை மாதிரி ஒரு நல்லவனைப் பார்ப்பது அரிது என்பதை அவர் உணர்ந்தே தான் இருந்தார்.

"அண்ணி... பிள்ளைங்க எவ்வளவு நேரம் தான் இப்படியே இருப்பாங்க... சீக்கிரம் ஆசிர்வாதம் பண்ணுங்க அண்ணி..." மீனா உலுக்கவும் தான் தன் உணர்வு பெற்ற நாயகி கலக்கத்துடன் மீனாவை பார்த்தார்.

"முதல்ல ஆசிர்வாதம் பண்ணுங்க... அதுக்கு அப்புறம் பேசிக்கலாம்..." மீனா சொன்னதும்...

"நல்லாயிருங்க..." நாயகியின் குரல் தளுதளுத்தது.

அடுத்து இருவரும் மீனாவின் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க... "நீண்ட ஆயுளோட ஆரோக்கியத்தோட ரெண்டு பேரும் மனம் ஒத்து வாழணும்..." என்று வாழ்த்தியவர் மகளை அன்போடு அணைத்துக் கொண்டார்.

"கௌதம் நீ எப்படிப்பா அம்முவை...?" அதற்கு மேல் நாயகியால் மகனிடம் கேள்வி கேட்க முடியவில்லை. தாயும் அவ்வாறு கேட்டதும் கௌதம் குற்ற குறுகுறுப்புடன் தலையைக் குனிந்து கொண்டான். அவ்வளவு நாள் மனதில் மறைந்து இருந்த சஞ்சலம் மீண்டும் தலை தூக்கியது.

"அத்தை... மாமாவை ஒண்ணும் சொல்லாதீங்க... எனக்கு..." சற்று தயங்கியவள், "எனக்கும் மாமாவை பிடிச்சு இருக்கு..." கௌதமின் குற்றவுணர்வு கண்டு அவனது துயரத்தை போக்க வேண்டும் என்று எண்ணியவள் நாயகியிடம் அவனுக்கு ஆதரவாய் பேச... அவளை நிமிர்ந்து பார்த்தவனின் கண்கள் மின்னியது.

"அண்ணி... உங்க அண்ணனுக்கும் எனக்கும் பன்னிரெண்டு வயசு வித்தியாசம்... நாங்க கல்யாணம் பண்ணி குடித்தனம் பண்ணலையா... இவ்வளவு ஏன் உங்களுக்கும் அண்ணாவுக்கும் எட்டு வயசு வித்தியாசம்... நீங்க சந்தோசமா இல்லையா... என்ன உங்களை விட ரெண்டு வருசம் அதிகம்... இதுக்குப் போய் ஏன் இவ்வளவு யோசிக்கிறீங்களே... மதுவுக்கே விருப்பம் இருக்கிறப்போ நீங்க வீணா மனசை போட்டு குழப்பாம சந்தோசமா இருங்க..." மீனா தைரியம் கொடுக்கவும் தன் கலக்கம் குறைந்து புன்னகைத்தார் நாயகி.

"எங்க கதையை அப்புறம் பாருங்க அத்தை... முதலில் உங்க மூத்த பொண்ணு கதையைப் பத்தி யோசிங்க..." அன்னையின் புன்னகை கௌதமின் குதூகலத்தை மீட்டு இருந்தது.

"உன் கதையை மட்டும் நீ பாரு... என் கதையை எனக்குப் பார்த்துக்கத் தெரியும்..." அவனை முறைத்த இதயா, "அம்மா... நான் ரஞ்சனை தான் கல்யாணம் பண்ணிக்குவேன்... அவர் பெரிய கோடீஸ்வரர்... மத்தவங்க மாதிரி வேலைக்குப் போய் அஞ்சும் பத்தும் சம்பாதிக்கல... அவர் அப்பா பிசினெசை பார்த்துக்கிறார்..." ரஞ்சனை பற்றிப் பெருமையாய் அம்மாவிடம் சொன்னவள் மறைமுகமாகக் கௌதமை வார்த்தையால் குத்த தவறவில்லை.

அவளுக்குப் பதில் சொல்ல வாயெடுத்த நாயகியை தடுத்த கௌதம் மீனாவிடம், "நாங்க வர்றோம் அத்தை... கூடிய சீக்கிரம் இதயாவுக்குக் கல்யாணத்தை முடிங்க..."

"அது எங்க அம்மாவுக்குத் தெரியும்... நீ ஒண்ணும் சொல்ல வேணாம்..." வெடுக்கென்று பேசிய இதயாவை பார்த்து புன்னகைத்தவன் மதுவின் புறம் திரும்பி தலையசைத்துவிட்டு அடுத்த நொடி அங்கிருந்து தன் அன்னையுடன் வெளியேறினான். அவன் போவதை கண்டு மது தான் தவித்துப் போனாள். இதயா பேசிய வார்த்தைகள் அவனை வலிக்கச் செய்து இருக்கும் என்று அவளுக்கு

நன்கு தெரியும். அவனிடம் ஆறுதலாய் பேச விழைந்தது அவளது காதல் மனம்.

வீட்டிற்கு வந்ததும் நாயகி முதன் வேலையாய் ரெங்கநாதனிடம் கௌதம், மது காதல் விசயத்தைச் சொல்ல... அவன் தந்தை முகத்தைப் பார்க்க திராணியற்று தலை குனிந்தான். மகனின் மனம் புரிந்தவராய் அவன் அருகில் வந்தவர்,

"குட் டெசிஷன் மை டியர் பாய்..." அவர் அவன் முதுகை தட்ட... அவன் ஆச்சிரியமாய்ப் பார்த்தான். அவன் மட்டுமல்ல நாயகியும் தான்...

"ஆமாம் நாயகி... இதயா இவனுக்குக் கொஞ்சம் கூடச் செட்டாக மாட்டா... அது எனக்கு நல்லாவே தெரியும்... ஆனா உன் ஆசையைக் கெடுக்க வேணாம்ன்னு தான் நான் பேசாம இருந்தேன்... நமக்கு இருக்கிறது ஒரு பையன்... அவன் சந்தோசமா வாழணும்... அதே சமயம் நம்மளோடயும் இருக்கணும்ன்னா மது மாதிரி பெண் தான் அவனுக்குச் சரி..." என்றவரின் பேச்சை ஆமோதிப்பவராய் தலையாட்டிய நாயகி,

"ஆமாங்க... நீங்க சொல்றதும் சரி தான்..."

"அம்மா... உங்களுக்கு ஏன் என் மேல் இவ்வளவு கொலைவெறி..." திடீரென்று அலறிய கௌதமை புரியாமல் பார்த்தனர் இருவரும்.

"பின்னே அந்த இதயா ராட்சசியை எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நினைச்சா...? அவளுக்கு இருக்கிறது நாக்கா இல்லை தேள் கொடுக்கா...? அப்பா... என்ன பேச்சுப் பேசுறாடா சாமி... நல்லவேளை நான் எஸ்கேப்..." என்று குதூகலமாய்ச் சொன்னவன், "பாவம் அந்தப் பையன்..." என்று ரஞ்சனுக்காகப் பரிதாபப்பட்டான்.

"கௌதம்... அடுத்த வீட்டுக்கு வாழ போற பெண்ணைப் பத்தி தப்பா பேச கூடாதுப்பா..." மகனை கண்டித்தார் நாயகி. அவன் சொல்வது உண்மை தான் என்றாலும் கூட

இதயாவை அவன் அப்படிப் பேசியது நாயகிக்கு பிடிக்கவில்லை. அவர் சொன்னதைக் கேட்டு அவன் கோபப்படவில்லை. மாறாக அவர் அருகில் வந்து,

"இது தான் என் அம்மா..." என்று அவர் கன்னத்தில் முத்தமிட்டவன், "எந்தப் பையனும் அம்மா மாதிரி தான் மனைவி வேணும்ன்னு விரும்புவான்... உங்களை மாதிரி குணமுள்ள மதுவை நான் விரும்பியது தப்பாம்மா...?"

"இல்லைடா கண்ணா... தப்பே இல்லை..." என்றவர் அவனை அணைத்துக் கொண்டார். தாய் தன்னைப் புரிந்து கொண்டதில் அவன் மனம் நெகிழ்ந்தது.

இரவு எல்லோரும் தூங்கிவிட்டாலும் மதுவுக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. இதயாவின் வார்த்தைகள் கௌதமை காயப்படுத்தி விட்டதோ என்று மனம் கலங்கியவள் அவனைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினாள். அவனுக்கு ஆறுதல் கூற வேண்டும் என்று எண்ணினாள். அதை எப்படிச் செய்வது என்று தெரியாமல் தவித்தாள். தூக்கம் வராமல் ஜன்னல் பக்கம் வந்து நின்றவளை கௌதம் அவன் வீட்டின் ஜன்னலில் இருந்து கண்டான். அவனுக்கும் உறக்கம் வரவில்லை. அவனது காதலை இரு வீட்டாரும் ஏற்றுக் கொண்டது அவனுக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுக்க அந்த உற்சாகத்தில் அவனுக்குத் தூக்கம் தூர போனது. ஜன்னல் வழியே தெரிந்த மதியை ரசித்துப் பார்த்து கொண்டவன் கண்ணில் அவன் வானத்து மதி முகம் தென்பட அவனது விழிகள் மகிழ்ச்சியில் மின்னியது.

'என்ன தூங்கலையா...?' அவள் தன்னைக் கண்டு கொண்டதும் சைகையில் அவன் கேட்க... இல்லை என்று தலையசைத்தவளின் கண்ணில் பளபளத்த கண்ணீர் துளிகளைக் கண்டவனின் புருவங்கள் யோசனையாய் நெறிந்தது.

'வா...' என்று சைகையில் சொன்னவன் தன் கையை மேல் நோக்கி காட்டினான். ம்ஹூம் என்று வேகமாய்த்

தலையாட்டி அவள் மறுத்ததைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது.

'இப்போ நீ வரல... கொன்னே போடுவேன்...' சைகையில் மிரட்டியவனைக் கண்டு அவளுக்குப் பயமாய் இருந்தது.

'இருங்க...' அவனைப் பார்த்துக் கை அசைத்தவள்... யாருக்கும் தெரியாமல் மொட்டை மாடி நோக்கி சென்றாள். பதினைந்து படி ஏறி வருவதற்குள் பயத்தில் வியர்த்து வழிந்தது அவளுக்கு... அவளைக் கண்டதும் அவளை நோக்கி வந்தான் அவன். அவன் வீட்டில் இருந்து அவளின் வீட்டு மாடிக்கு வந்து அவளுக்கு முன்னமே வந்து காத்திருக்கிறான் என்றால்... அவனின் வேகம் கண்டு பிரமிப்பாய் இருந்தது அவளுக்கு.

"நான் என்ன செஞ்சிருவேன்னு வர மாட்டேன்னு சொன்ன... என் மேல் அவ்வளவு நம்பிக்கையா உனக்கு...?" கர்ஜித்தவனின் குரலில் அவள் உடல் நடுங்கியது.

"அப்படி எல்லாம் இல்லை... நானே உங்களைப் பார்க்கணும்ன்னு தான் தவிச்சிட்டு இருந்தேன்..." என்றவளின் பதிலில் அவன் மனம் சற்று அமைதியுற்றது.

"என்னைப் பார்க்க என்ன அவ்வளவு கோரமாவா இருக்கு...?" திடுமென அவன் கேட்டதும் திகைத்து போய் நிமிர்ந்தவளின் பார்வையில் அவனின் உதட்டில் புன்னகை பூத்தது.

"ம்... பதில் சொல்லு..."

"ச்சே... ச்சே... நீங்க அழகா இருக்கீங்க..." அவனின் கேள்வியை அவள் மறுத்தாள்.

"என்னைப் பார்க்கணும்ன்னு நினைச்சவ எதுக்கு அழுது வடிஞ்சிட்டு இருந்த...?" அவன் கேட்டதும் மீண்டும் அவளின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

"சாரி மாமா..." என்றவளை அவன் முறைத்து பார்க்க...

"சாரி... கௌதம்... ஓகே..." அவள் அவனைச் சமாதானப்படுத்த... அவன் அமைதியாய் நின்றான்.

"இதயா பேசியது உங்களுக்கு வருத்தமா இருக்கா...? அவளுக்காக நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்..." மது எதைச் சொல்கிறாள் என்று புரிந்தவனாய்,

"ம்ப்ச்சு விடு... அவள் குணம் தெரிஞ்சது தானே..." என்று சலித்தவன்... "நான் வேலை பார்க்கிறது உனக்கு ஒண்ணும் வருத்தமா இல்லையே... என் வருமானத்தில் உன்னை நான் நல்லா வச்சுக்குவேன்... என்னை நம்பலாம் நீ..."

"எனக்கு உங்க வருமானம் முக்கியம் இல்லை... நீங்க தான் முக்கியம்... உங்க மனசு தான் முக்கியம்..." என்றவளின் வார்த்தைகள் அவனை எந்தளவுக்கு மகிழ்ச்சியில் ஆழ்த்தியது என்பதை உணராதவளாய் நின்றவளை கண்டு அவனின் காதல் பன்மடங்கு பெருகியது.

"தேங்க்ஸ் அம்மு..." என்றான் மனமார... பின்பு, "சரி வா போகலாம்..." அவள் முன்னே நடக்க அவன் பின் தொடர்ந்தான். வீட்டின் வாசல் வந்ததும் அவள் காதுக்கு அருகே குனிந்தவன்,

"குட் நைட் அம்மு..." அவனின் கிசுகிசுப்பான குரலும், அவள் காதோரம் உராய்ந்த அவனது மீசை முடியின் குறுகுறுப்பும் அவளுள் ஏதேதோ செய்தது.

"குட் நைட்..." பதிலுக்குத் தெளிவில்லாமல் முணுமுணுத்தவள் ஓடி சென்று வீட்டிற்குள் புகுந்து கதவை சாத்தி கொண்டாள். அவளின் செயலில் அவனின் புன்னகை விரிந்தது.

இரு வீட்டார் சம்மதம் கிடைத்ததாலோ என்னமோ மது இப்போது எல்லாம் கௌதமிடம் நின்று ஒரு சில வார்த்தைகள் பேசினாள். பெரும்பாலும் 'சாப்பிட்டீங்களா... நல்லா இருக்கீங்களா...' இப்படிப் பொதுப்படையான விசாரிப்பாகவே அது இருக்கும். அவனும் அவள் மனம்

புரிந்தவனாய் தேவைக்கு மட்டும் பதில் அளித்துவிட்டு புன்னகையுடன் ஒதுங்கிவிடுவான்.

அன்றும் அப்படித்தான் பள்ளி முடிந்து வந்து கொண்டிருந்தவள் எதிரில் தனது வாகனத்தில் வந்த கௌதமை கண்டதும் அப்படியே நின்றாள். அவளைக் கண்டதும் தன் வண்டியை அவள் அருகில் நிறுத்தியவன்,

"என்ன அம்மு... இவ்வளவு லேட்டா வர்ற...?" புன்னகையுடன் கேட்டான்.

"ப்ளஸ் டூ கோச்சிங் ஆரம்பிச்சுட்டாங்க..."

"ஓ..." என்றவன் அவள் பேசும் முன்,

"நான் இப்போ தான் வேலையை முடிச்சு வந்தேன்... இன்னும் சாப்பிடல... கணேஷ் வெளியில் கூப்பிட்டு இருந்தான்... அவனைத் தான் பார்க்க போறேன்..." அவள் கேட்காமலே படபடவென ஒப்பித்தவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது. கஷ்டப்பட்டு அடக்கி கொண்டாள்.

"இதானே கேட்க நினைச்ச... நீ கேட்கிறதுக்கு முன்னாடி நானே சொல்லிட்டேன்..." என்றவனை ஆழ்ந்து பார்த்தவள்,

"நீங்க நினைக்காததையும் நான் சொல்வேனே..." என்றவளை அவன் அதிசயமாய்ப் பார்க்கும் போதே...

"இந்தச் சர்ட் உங்களுக்கு ரொம்ப அழகா இருக்கு..." என்று சொன்னவள் அவன் பதில் சொல்லும் முன் அங்கிருந்து சிட்டாய் பறந்துவிட்டாள்.

"அப்படியா...? அழகாயிருக்கா...?" கைகளால் தாடையைத் தடவியவன் இரு சக்கர வாகனத்தின் முன்பக்கம் இருந்த கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தான். எப்போதும் போடும் சட்டை தான்... ஆனால் இன்று அவள் சொன்னதால் என்னமோ கூடுதல் அழகாய் இருந்தது அவனுக்கு... மெல்லியதாய் விசிலடித்தபடி வண்டியை கிளப்பியவன் மனம் உற்சாகமாய்... உல்லாசமாய் இருந்தது...

***************************

அலுவலகத்தில் பரபரப்பாய் வேலை செய்து கொண்டிருந்த கௌதமின் அலைப்பேசி விடாமல் அழைத்தது. எடுத்து பார்த்தவன் தந்தை என்றதும் யோசனையாய் எடுத்துக் காதில் வைத்தான். அலுவலக நேரத்தில் ரெங்கநாதன் அவனைத் தொந்திரவு பண்ண மாட்டார். மகனின் வேலையைப் பற்றி அவருக்கு நன்கு தெரியும். அப்படி இருந்தும் அவர் அழைக்கிறார் என்றால்...

"கௌதம்... அம்மா மயக்கம் போட்டு விழுந்துட்டாப்பா... நான் ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போறேன்..." அவர் சொல்லி முடிக்கும் முன்,

"இதோ இப்பவே கிள்மபிட்டேன்ப்பா..." என்றவன் எந்த மருத்துவமனை என்று கேட்டுக் கொண்டு அழைப்பை துண்டித்தவன் அவசரமாய்க் கிளம்பினான்.

"கௌதம்... என்ன இந்த நேரத்துல கிளம்பற...?" அருகில் இருந்த கணேஷ் கேட்கவும்,

"அம்மா மயக்கம் போட்டு விழுந்துட்டாங்களாம்..."

"முதல்ல நீ கிளம்புடா... உன் வேலையை நான் பார்த்துக்கிறேன்... நான் ஈவினிங் வந்து அம்மாவை பார்க்கிறேன்..."

"தேங்க்ஸ் கணேஷ்..." என்ற கௌதமின் தோளில் தட்டியவன்,

"அம்மாவுக்கு ஒண்ணும் ஆகாது..." என்று ஆறுதல் சொல்ல... கௌதம் ஒரு பெருமூச்சுடன் தலையசைத்துவிட்டுக் கிளம்பினான்.

மருத்துவமனையில் நாயகிக்கு எல்லாப் பரிசோதனையும் செய்து பார்த்ததில் அவருக்கு ரத்த புற்று நோய் என்று சொல்லியதில் தந்தையும், மகனும் உடைந்து போய்விட்டனர். அவர்கள் இருவருக்கும் எல்லாமுமாய் இருந்து வழிகாட்டுபவர் நாயகி என்றால் மிகையில்லை... அப்படிப்பட்டவரை இழந்து விடுவோமோ என்ற தவிப்பு

இருவரிடத்திலும் அதிகம் காணப்பட்டது. நாயகி தனக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவை பெரிது படுத்தாமல் எல்லா இல்லத்தரசி போல் அலட்சியமாய் இருந்ததில் நோய் தீவிரமாய்ப் பரவி இருந்தது அவரது உடலில்.

விசயம் கேள்விப்பட்டதும் மீனாவும், மதுவும் தான் ஓடி வந்தனர். இதயா வரவில்லை என்று மறுத்துவிட்டாள். அவளுக்குக் கௌதம் மேல் அவ்வளவு கோபம். கண்ணீர் மல்க கௌதம் நின்று இருந்த தோற்றம் மதுவின் இதயத்தைப் பிழிந்தது. தன் சக்தி எல்லாம் இழந்தார் போன்று களைத்துக் காணப்பட்ட கௌதமை அணைத்து ஆறுதல் படுத்தத் துடித்தது அவளது காதல் நெஞ்சம். அவன் அருகில் இருந்த ரெங்கநாதனின் ஓய்ந்த தோற்றம் பார்க்கவே பரிதாபமாய் இருந்தது.

"அண்ணா... அண்ணிக்கு ஒண்ணும் ஆகாது..." மீனாவின் வார்த்தையில் ரெங்கநாதனுக்குக் கண்ணீர் துளிர்த்தது. மெதுவே தலையசைத்தவர் எங்கோ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்துவிட்டார்.

அன்று இரவு மருத்துவமனையில் நாயகிக்குத் துணையாக ரெங்கநாதன் தங்கி கொண்டு கௌதமை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

"கௌதம் சாப்பாடு கொண்டு வர்றேன்... சாப்பிட்டுட்டு படுப்பா..." என்று கேட்ட மீனாவிடம் உணவை மறுத்தவன் தன் வீட்டிற்குச் சென்றான். அன்னை இல்லாத வீடு வெறுமையாய் இருந்தது. தன் அன்னை பிழைப்பாரா என்று அவனுக்கு அச்சமாய் இருந்தது. அவன் அறிந்தவரையில் ரத்த புற்று நோய் அரக்கன் மிகவும் அபாயகரமானவன்... அது தாக்கியவர்கள் உயிர் பிழைப்பது அரிது... அதையும் மீறி தன் தாய் உயிர் பிழைக்க வேண்டும் என்று அவன் மனம் உள்ளுக்குள் கதறி அழுதது.

"அம்மா... மாமாவுக்குச் சாப்பாடு எடுத்துட்டு போறேன்..." கையில் சிறு கேரியருடன் கிளம்பிய மதுவை தடுத்து நிறுத்திய மீனா,

"நான் கொண்டு போய்க் கொடுக்கிறேன் மது... இந்த நேரத்தில் நீ போறது சரி இல்லை..."

"ஏன்ம்மா..." அன்னையைக் கூர்மையுடன் பார்த்தாள் மது.

"வேண்டாம்ன்னா விடு..."

"அம்மா... இப்போ அவருக்கு வேண்டியது சாப்பாடு இல்லை... மனசுக்கு ஆறுதல்... அதை என்னால் மட்டும் தான் கொடுக்க முடியும்..." என்று நிறுத்தியவள், "நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் நடக்காது... மாமா ரொம்ப நல்லவங்க... அப்படியே நடந்தாலும் மாமா என்னைக் கைவிட மாட்டாங்க..." உறுதியுடனும், காதலுடனும் கூறியவளை கண்டு ஆச்சிரியப்பட்டவர் அதன் பின் அவளைத் தடுக்கவில்லை.

அழைப்பு மணி ஓசை கேட்டு கதவை திறந்த கௌதம் அங்கே மதுவை கண்டதும், "வா..." என்ற ஒற்றைச் சொல்லோடு உள்ளே செல்ல... அவளும் ஒன்றும் பேசாது அவனைப் பின் தொடர்ந்தாள்.

வரவேற்பறையில் இருந்த நாற்காலியில் அமர்ந்தவள், "அத்தை நல்லாயிருவாங்க கௌதம்... கவலைப்படாதீங்க..." அவளின் ஆறுதல் வார்த்தையில் விரக்தியாய் புன்னகை செய்தவன் மேலே ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் மௌனமாய்க் கரைந்தது.

"கௌதம்... வெறும் வயித்தோடு படுத்தா தூக்கம் வராது... கொஞ்சம் சாப்பிட்டுட்டு படுங்க..." மதுவின் வார்த்தையில் அவன் தன் தாயை கண்டான். அவனையும் அறியாமல் அவன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"ஐயோ... என்ன கௌதம் இது...?" அவள் பதறி போய் அவன் அருகில் மண்டியிட்டு அமர்ந்தவள் அவன் முகத்தைத் தன் இரு கைகளில் தாங்கி, "நீங்களே இப்படிக் கலங்கினா... மாமாவுக்கு யார் ஆறுதல் சொல்லுவாங்க... நீங்க தெம்பா இருந்தா தான் அத்தை, மாமாவை பார்த்துக்க முடியும்...

ப்ளீஸ் சாப்பிட வாங்க கௌதம்..." என்றவள் உணவு பாத்திரத்தை திறந்து அவன் அருகே கொண்டு வர...

"எனக்கு வேணாம்..." என்று மறுத்தவன் அவள் அருகே கீழே அமர்ந்து, "நீ தான் வேணும்..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராமல் அவளது மடியில் முகம் புதைத்து அவளின் இடுப்பை கட்டி கொண்டவன் முதுகு அழுகையில் குலுங்கியது.

"கௌதம்..." அவள் பதட்டத்துடன் அவனது முகத்தை நிமிர்த்த நினைக்க... அந்தப் பிடிவாதக்காரனோ பிடிவாதமாய் எழாமல் அவளின் மடியில் ஆறுதல் தேடினான். அவள் மெல்ல அவனின் தலையை வருடி கொடுக்க அதில் அவனின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாய் மட்டுப்பட்டது.

கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் மடியில் இருந்து எழுந்தவன், "நீ வந்து ரொம்ப நேரமாச்சு... வீட்டுக்கு போ..." அவள் முகம் பார்க்காமல் சொல்ல... அவன் முகத்தை அவள் தன் பக்கம் திருப்ப,

"சாரி அம்மு..." என்றான் மெய்யாக வருந்தியவனாய்... இதுவரை அவளிடத்தில் அவன் இது மாதிரி உரிமை எடுத்துக் கொண்டது இல்லை.

"உங்களுக்கு இந்த மாதிரி நேரத்தில் ஆறுதலாய் இருந்தது எனக்குச் சந்தோசமா தான் இருக்குக் கௌதம்... நாளைக்கு ஹாஸ்பிட்டல் போகும் போது நானும் வர்றேன்..." என்றவளை பார்த்து அவன் சரி என்று சொல்ல... அவள் தன் வீட்டிற்குக் கிளம்பினாள். அவனுக்கு ஆறுதலாய் தான் இருந்தது அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது. இன்று அவனுக்கு ஆறுதலாய் இருக்கும் தான் இனிவரும் காலங்களில் அவனின் வேதனை, வலிக்கு காரணகர்த்தாவாய் இருக்கப் போகிறோம் என்பதை அவள் அப்போது அறியவில்லை...

*********************************

"மீனா... கௌதம், மது கல்யாணத்தைச் சீக்கிரம் வச்சுக்கலாமா...? எனக்கு என்னவோ நான் ரொம்ப நாள் உயிரோடு இருக்க மாட்டேன்னு தோணுது..." நாயகி மீனாவின் கையைப் பிடித்துக் கொண்டு கேட்க... அதைக் கண்டு மீனாவிற்குக் கண்ணீர் வரும் போல் இருந்தது.

இந்த ஐந்து மாதங்களில் நாயகி பாதியாக இளைத்துப் போயிருந்தார். நோய்க்கான சிகிச்சை மேற்கொண்டதில் உடல் பாதி இளைத்தது என்றால்... நோயின் தாக்கத்தில் மீதி இளைத்துப் போனது. கௌதமும் தன் கைப் பொருள் அனைத்தையும் செலவழித்துத் தன் அன்னையைக் காப்பாற்ற போராட தான் செய்கின்றான். ஆனால் நோய் முத்திய நிலையில் இருக்கும் அவரை மீட்க முடியும் என்று தோணவில்லை. மருத்துவர்கள் ஆறு மாதம் கெடு கொடுத்து இருந்தாலும் ரெங்கநாதனும், அவனும் தங்கள் நம்பிக்கையை இழக்கவில்லை. நாயகியை மதுவும், மீனாவும் தான் மாற்றி மாற்றிப் பார்த்து கொள்கின்றனர்.

"கண்டிப்பா பண்ணலாம் அண்ணி... உங்க ஆசையை விட எனக்கு எதுவும் முக்கியம் இல்லை..." மீனா நாயகியின் கையை ஆதரவாய் பிடித்துக் கொண்டார்.

"அதுக்கு முதல்ல இதயா காதலிக்கிற பையன் வீட்டில் பேசு... இரண்டு கல்யாணத்தையும் ஓரே மேடையில் நடத்திடலாம்..." அந்த நிலையிலும் அவர் இதயாவை நினைத்துப் பார்த்தது கண்டு மீனாவின் மனம் நெகிழ்ந்தது. இப்படிப்பட்டவரை இதயா புரிந்து கொள்ள மாட்டேங்கிறாள் என்று அவருக்கு ஆற்றாமையாக இருந்தது.

"சரி அண்ணி... நான் அவங்க கிட்ட பேசறேன்... நீங்க கவலைப்படாதீங்க..." என்ற மீனாவை பார்த்து புன்னகைத்தவரின் முகம் இப்போதே தன் மகனது திருமணத்தைக் கண்டு விட்டது போல் பரவசமாய் இருந்தது.

**************************

"உஷ் கண்ணு... இன்னைக்குப் பீச்சுக்கு போகலாமா...?" பல்லை இளித்தபடி கேட்ட தன்ராஜை முறைத்த உஷா,

"இல்லை இன்னைக்கு ஷாப்பிங் தான் போகணும்..." என்று முறுக்கி கொள்ள...

"ஓகே... ஓகே... உனக்குப் பிடிச்ச மாதிரி ஷாப்பிங் போகலாம்..." என்றவன் தன் இரு சக்கர வாகனத்தில் அவளை ஏற சொல்ல... மனதில் எழுந்த பெருமையுடன் அவன் பின்புறம் ஏறி அமர்ந்தவளுக்கு இந்த உலகத்தை வென்றது போல் கர்வம் எழுந்தது.

தன்ராஜ் இருபத்தியொரு வயது நிரம்பிய பொறியியல் கல்லூரி மாணவன்... மூன்றாம் ஆண்டுப் படிக்கிறான். இந்த மூன்று ஆண்டுகளில் ஏகப்பட்ட அரியர்ஸ் வைத்து இருக்கிறான். பெற்றோராலேயே தண்ணி தெளித்து விடப்பட்டவன்... அந்தளவுக்குக் கெட்டவன்... முரடன். பெரிதாக வசதி இல்லை என்றாலும் பந்தாவிற்கு மட்டும் குறைவு கிடையாது. இப்போது கூட நண்பனின் பைக்கை எடுத்து வந்து தான் உஷாவிடம் பந்தா காட்டி கொண்டு இருக்கிறான். இவனின் குணம் தெரிந்தோ என்னமோ எந்தப் பெண்ணும் இவனிடம் மயங்கவில்லை. அதனால் பள்ளி மாணவியான உஷாவிடம் தன் மன்மதப் பாணத்தை அவன் வீச அதில் வசமாய் மாட்டி கொண்டாள் உஷா.

உஷாவை கடைவீதிக்கு அழைத்துச் சென்றவன் அவள் கேட்பதை எல்லாம் வாங்கிக் குவித்தான். அதற்கான பணத்தை நண்பனிடத்தில் கெஞ்சி கூத்தாடி வாங்கியது அவனுக்கு மட்டும் தான் தெரியும். எல்லாம் வாங்கி முடித்ததும்,

"உஷ்... இங்கே பக்கத்தில் தான் என் ப்ரெண்டோட வீடு இருக்கு... கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு போகலாமா..." உஷாவுக்கும் நடந்து நடந்து கால்கள் வலிக்கத் தான் செய்தது. அவள் சம்மதம் சொல்லவும் உற்சாகமாய் அவளை அழைத்துக் கொண்டு சென்றான்.

வீட்டின் கதவை திறந்துவிட்டவன், "நீ போய் உள்ளே இரு... நான் பீட்சாவுக்கு ஆர்டர் பண்ணிட்டுப் பைவ் மினிட்ஸ்ல வர்றேன்..." சொன்ன மாதிரி ஐந்து நிமிடத்தில் வந்தவன் அவள் அருகே அமர்ந்தான்.

"வீட்டில் யாரும் இல்லையா...?" உஷா கேட்ட கேள்விக்கு அவன் மர்மமாய்ச் சிரித்தான்.

"யாராவது இருந்தா நாம இப்படி வர முடியுமா...?" என்றவன் தன் அலைப்பேசியை உயிர்ப்பித்து,

"உஷ்... போரடிக்குது படம் பார்க்கலாமா..." மெதுவே அவளுக்கு வலை விரித்தான்.

"ம்... பார்க்கலாமே..." வேடன் அவன் விரித்த வலையில் மான் தானாய் வந்து மாட்டி கொண்டது.

அவன் அலைப்பேசியில் மூன்றாம் தர காணொளி காட்சியை ஓட... அதைப் பார்ப்பதற்கு உஷாவுக்குப் பயமாய் இருந்தாலும் ஏதோ ஒரு புதுவித உணர்வு தாக்க வெட்கத்துடன் அதை ரசிக்க ஆரம்பித்தாள். அவளின் மனதை புரிந்தவனாய் அவன் அவளுடன் நெருங்கி அமர... அவனின் அருகாமை அவளைப் போதை கொள்ளச் செய்தது.

அதற்குள் பீட்சா வர எரிச்சலுடன் அதை வாங்கி வந்தவன் மீண்டும் அவள் அருகில் வந்து அமர்ந்தான். அலைப்பேசியில் அரங்கேறிய சூடான காட்சிகளைக் கண்டு சூடேறிய இருவரது உடல்களும் அதைச் செய்முறையாய்ச் செய்து பார்க்க விழைந்தது.

"உஷ்... யூ ஆர் வெரி ஹாட்... யூ ஆர் வெரி செக்ஸி..." அவளின் காதுகளில் முணுமுணுத்தவனின் கைகள் அவளது மேனியில் அத்துமீற அதைத் தடுக்கும் எண்ணம் கொஞ்சமும் இல்லாமல் அவனின் கைகளில் பாகாய் உருகி குழைந்தாள் அவள். அதைச் சம்மதமாய் எடுத்து கொண்டவன் நொடி நேரம் தாமிக்காமல் அவளைத் தனக்குச் சொந்தமாக ஆக்கி கொண்டான். உண்பதற்கு

வாங்கிய பீட்சா கேட்பாரற்றுக் கிடந்தது. அவர்களின் பசியே வேறு அல்லவா...

"சாரி உஷ்..." எல்லாம் முடிந்து அவளிடம் இருந்து விலகியவன் வேண்டும் என்றே அவளிடம் பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டான்.

"தனு... எனக்கும் பிடிச்சு தான் இருக்கு..." வெட்கத்துடன் சொன்னவளை பார்த்து மகிழ்ச்சியுடன் சிரித்தவன்,

"அடுத்து எப்போ வச்சுக்கலாம்...?" ஆசையாய் கேட்டவனிடம்,

"எப்போன்னாலும்..." சொல்லியவள் வெட்கத்துடன் அவன் நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்.

அதற்குப் பின் வந்த நாட்களில் அவன் பல தடவை அவளை மோகித்துச் சுகித்தான். அவளும் அவன் சொல்வதைத் தட்டாமல் கேட்டாள்... விருப்பத்துடன் அவனுடன் கலந்தாள். குரங்காட்டி போல் அவளைத் தன் இஷ்டத்துக்கு ஆட்டி வைத்தான் தன்ராஜ். அந்தளவுக்கு அவன் அவளைக் காமத்துக்கு அடிமையாய் ஆக்கியிருந்தான். இதன் விளைவு உஷாவின் வயிற்றில் மூன்று மாதம் கர்ப்பம் வளர்ந்து இருந்தது.

## துளி : 15

"அம்மு... இன்னைக்கு இதயாவை பொண்ணு பார்க்க ரஞ்சன் வீட்டில் இருந்து வர்றாங்கல்ல..." தனக்குத் தர வேண்டிய மருந்துகளைச் சரி பார்த்துக் கொண்டு இருந்த மதுவிடம் வினவினார் நாயகி.

"ஆமாத்தை..."

"நீ அங்கே இருக்காம இங்கே ஏம்மா வந்து இருக்க... போம்மா... கொஞ்சம் நேரம் தானே நான் தனியா இருந்துக்குவேன்"

"அதான் ரெண்டு மாமாவும் அங்கே இருக்காங்களே இதுக்கு மேல நான் அங்கே இருந்து என்ன செய்யப் போறேன்... அதான் உங்களுக்குத் துணையா இருக்கலாம்ன்னு இங்கே வந்திட்டேன்..."

ஆனால் அது உண்மை இல்லை. இதயா தான் அவளை அங்கே இருக்கக் கூடாது என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டாள். ரஞ்சனின் பெற்றோர் தன்னை விட அழகாய் இருக்கும் மதுவை கண்டு அவளைத் தங்கள் மருமகளாக ஆக்கி கொள்ள அவர்கள் விருப்பப்பட்டால்... அதற்குப் பயந்து மதுவை வீட்டில் இருக்க அவள் சம்மதிக்கவில்லை. மதுவும் மறுத்துப் பேசாமல் கௌதம் வீட்டிற்கு வந்துவிட்டாள்.

"மது... உனக்குக் கௌதமை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமாம்மா...?" நாயகியின் கேள்விக்கு,

"சம்மதம் அத்தை..."

"இல்லை... இந்தச் சின்ன வயசில் கல்யாணம் பண்றதை நினைச்சு நீ ஏதும் வருத்தப்படலையே... எனக்காக உங்க ரெண்டு பேரையும் கஷ்டப்படுத்துறேனோன்னு தோணுது..."

"ச்சே... அப்படி எல்லாம் அத்தை..."

"அம்மாடி... கௌதம் நல்லவன்... நீ என்ன படிக்கணும்ன்னு நினைக்கிறியோ அதை அவன் படிக்க வைப்பான்... உன்னை எந்தவிதத்திலும் தொந்திரவு பண்ண மாட்டான்... இது என்னோட கடைசி ஆசை..." என்ற நாயகியின் வாயில் கை வைத்து தடுத்த மது,

"என்ன அத்தை இது... இப்படிப் பேசுறீங்க... எனக்குக் கல்யாணத்துக்கு ஓகே தான் அத்தை..." கௌதமுடனான வாழ்க்கையைப் பத்தி மதுவுக்கு எந்தவித வண்ண கனவுகளும் இல்லை. அவன் தன்னை நன்றாகப் பார்த்து கொள்வான்... தன் மனம் சுணங்கும் படி ஒரு நாளும் நடந்து கொள்ள மாட்டான் என்பதில் மட்டும் அவளுக்கு நம்பிக்கை இருந்தது.

"அம்மா... அவங்க வர்ற நேரம் அவன் எதுக்கு இங்கே நிக்கிறான்... அவனைப் போகச் சொல்லுங்க..." எரிச்சலுடன் படபடத்த இதயாவை முறைத்து பார்த்த மீனா,

"என்ன அவன் இவன்னு மரியாதை இல்லாம பேசுற... கௌதமும் இந்த வீட்டு மாப்பிள்ளை தான்... உனக்கு வர போறவருக்கு மரியாதை கொடுக்கணும்ன்னா முதல்ல கௌதமுக்கு மரியாதை கொடுத்து பழகு... நீ தலையில வச்சு இருக்கிற பூ முதல் கொண்டு அவன் வாங்கிக் கொடுத்தது தான்... இந்த ஏற்பாடு எல்லாத்தையும் அவன் தான் முன்ன நின்னு பார்க்கிறான். அவன் கவலையைக் கூட ஒதுக்கி வச்சிட்டு நமக்காக வேலையைப் பார்க்கிறவனைப் போய் இப்படிப் பேசுறியே... ஆண் பிள்ளை இல்லாத எனக்கு மகன் மாதிரி அவன் இருக்கான்... அவனைக் குறை சொன்ன... பெத்த பொண்ணுன்னு கூடப் பார்க்க மாட்டேன்" பல்லை கடித்தபடி கடிந்த அன்னையைக் கண்டு ஒன்றும் பேசாமல் அடங்கிப் போனாள் இதயா. அன்னையை எதிர்த்தால் தன் காரியம் கை கூடாது என்பதை நன்கு உணர்ந்தவள் அதன் பின் வாயை திறக்கவில்லை.

ரஞ்சனின் பெற்றோர் மட்டுமே வந்து இருந்தனர். ரஞ்சன் வரவில்லை. ரஞ்சனின் தாயார் அணிந்து இருந்த பட்டும்,

வைரமும் அவர்களின் செல்வநிலையைப் பறை சாற்றியது. வீட்டை சுற்றிலும் பார்வையை ஓட்டிய அவரின் முகம் திருப்தியின்மையை அப்பட்டமாய்க் காட்டியது.

"ஏண்டி இதயா... மாப்பிள்ளையைக் கூட்டிட்டு வராம இவங்க மட்டும் வந்து இருக்காங்க..." மகளின் காதை கடித்தார் மீனா.

"அம்மா... சும்மா இருங்க... நானே டென்சன்ல இருக்கேன்..." என்ற இதயாவை அதிசயமாய்ப் பார்த்தார் அவர்.

"இந்தப் பையன் யாரு...?" கௌதமை சுட்டி காட்டி மெதுவே பேச்சை ஆரம்பித்தார் ரஞ்சனின் தாயார்.

மீனா பதில் சொல்லும் முன் ரெங்கநாதன், "அவன் என் பையன்ங்க... எங்க குடும்பமும், மீனா குடும்பமும் ரொம்ப நாளா பழக்கம்... மீனா எனக்குத் தங்கை மாதிரி..." என்றவரை கூர்ந்து பார்த்தவர்,

"நீங்க காமெடி நடிகர் ரெங்கா தானே..." அதைக் கேட்டு ரெங்கநாதன் முகம் கறுத்துப் போனது. ஆனாலும் பதில் சொன்னார்

"ஆமாங்க..."

"ஒரு காலத்தில் ஓகோன்னு வாழ்ந்தவங்களாச்சே... இப்போ என்ன இப்படி ஆகிட்டீங்க... இதுக்குத் தான் சொல்றது... சம்பாதிக்கும் போதே சேர்த்து வச்சுக்கணும்ன்னு..." என்று பேசிய ரஞ்சனின் தாயாரை கண்டு கௌதமுக்கு கோபமாய் வந்தது. கண்ணால் மகனை அடக்கிய ரெங்கநாதன்,

"என் கதை எதுக்குங்க... அதை விடுங்க..." என்றவர், "மாப்பிள்ளை தம்பி வரலைங்களா...?"

"அதான் உங்க வீட்டு பொண்ணு பார்த்து ஓகே சொல்லி ஆச்சே... அப்புறம் அவன் எதுக்கு...? ம்ஹூம்... நம்ம காலத்துல கல்யாணத்து அன்னைக்குத் தான் மாப்பிள்ளையையே பார்த்தோம்... ஆனா இப்போ

அவங்களே முடிவு பண்ணிட்டு இது தான் உங்க மருமகன்னு சொல்றாங்க..." என்று நீட்டி நொடித்தவர்,

"உங்க வீட்டு பொண்ணு எங்க வீட்டுக்கு மருமகளா வர்றதுல எந்தப் பிரச்சினையும் இல்லை... ஏன்னா என் பையன் உங்க பொண்ணை விரும்பிட்டான்... அவன் விருப்பம் தான் எங்க விருப்பம்..." அவர் பேசியதை கேட்டு அனைவரது முகமும் மலர்ந்தது. இதயாவை பற்றிச் சொல்லவே வேண்டாம் சிறகில்லாமல் வானில் பறப்பது போல் உணர்ந்தாள்.

"ஆனா ஒண்ணே ஒண்ணு... எங்க வசதிக்கு ஏத்த மாதிரி உங்க பொண்ணுக்கு நகை போடணும்... சீர் செஞ்சிரணும்... நாலு பேர் நாலு விதமா பேசுற மாதிரி ஆகிற கூடாது பாருங்க... அதுக்குத் தான் நான் சொல்றேன்... இதை எல்லாம் ரெடி பண்ணிட்டு சொல்லுங்க... அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை வச்சுக்கலாம்..." சத்தம் இல்லாமல் அணுக் குண்டை வீசியவர்,

"இந்தா பாரு பொண்ணு..." இதயாவை அழைத்தவர், "இதை என் பையன் கிட்ட போட்டு கொடுத்து எனக்குக் கெட்ட பேரு உண்டாக்க நினைச்சா... அப்புறம் இந்தக் கல்யாணம் நடக்கிறதே கேள்விக்குறி ஆகிரும்..." என்று அவளை எச்சரித்தவர் அதற்கு மேல் பேச ஒன்றும் இல்லை என்பது போல் விடைப்பெற்றுச் சென்றுவிட்டார். அவர் பேசிவிட்டு சென்றதை கண்டு மீனாவுக்கு மலைப்பாக இருந்தது.

"ச்சே... போயும் போயும் இந்த வீட்டில் போய்ப் பிறந்தேனே... எனக்கு அதிர்ஷ்டம்ங்கிறது கிடையாது..." இதயா ஆத்திரத்தில் கத்தி கொண்டே தன் தலையில் வைத்திருந்த பூவை பிய்த்து அதைத் தூக்கி எறிந்து தன் கோபத்தைக் காட்டியவள் அழுகையை அடக்க முடியாமல் படுக்கையில் போய் விழுந்தாள்.

'என்ன பெண் இவள்... வீட்டு சூழ்நிலையைக் கொஞ்சம் கூட யோசிக்காமல்...' அவளின் செயலில் கௌதமுக்கு ஆத்திரமாய் வந்தது.

"மீனா கவலைப்படாதே யோசிக்கலாம்..." ரெங்கநாதன் மீனாவுக்கு ஆறுதல் சொன்னவர் கிளம்ப... கௌதமும் விடைப்பெற்று அவருடன் வந்துவிட்டான்.

கோபத்துடன் தன் வீட்டிற்குள் நுழைந்தவன் மனம் அங்கே வீட்டை மெழுகி கொண்டு இருந்த மதுவை கண்டதும் குளிர்ந்தது. நிறைந்த மனதுடன் இயல்பாய் தன் வீட்டோடு பொருந்தி இருந்த மதுவை பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

"மாமா... என்ன சொன்னாங்க...?" அவர்களைக் கண்டதும் பரபரப்பாய் கேட்ட மதுவிடம் என்ன சொல்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

"வரதட்சனை அதிகம் கேக்குறாங்க..." ரெங்கநாதன் தான் சொன்னார்.

"ஓ..." என்றவள் முகம் சுருங்கி போனது. ரெங்கநாதன் நாயகியை தேடி போகக் கௌதமும் மதுவும் தனித்து இருந்தனர்.

"மது காபி போட்டு கொடுக்க முடியுமா..."

"இதோ..." என்றவள் சமையலறைக்குள் செல்ல... கௌதம் அவளைப் பின் தொடர்ந்தான்.

"என்ன மது முகம் ஒரு மாதிரியா இருக்கு..." கேட்டபடி சமையல் மேடையில் சாய்ந்து நின்றவனைப் பார்த்தவள்,

"காதலிச்சு தானே கல்யாணம் பண்ண போறாங்க... பின்னே எப்படி வரதட்சிணை இடையில் வந்தது..." என்றவள் காபி கலந்து அவன் கையில் கொடுத்தாள்.

"ம்... அவங்க அப்பா அம்மா கேட்டதுக்கு அந்தப் பையன் என்ன பண்ணுவான்... பார்க்கலாம் அவங்க கேட்டதைத் தெரிஞ்சிட்டு என்ன பண்ண போறான்னு... அவனுக்கு உண்மையான காதல் இருந்தா அவங்க அப்பா அம்மாவை எதிர்த்துட்டு வந்து இதயாவை கல்யாணம் பண்ணிக்கட்டும்..."

கௌதமை கண்ணிமைக்காமல் பார்த்தவள், "நீங்க ரொம்ப நல்லவங்க கௌதம்..." அவள் சொன்னதன் அர்த்தம் புரிந்து அவனது முகத்தில் லேசாய் சிரிப்பு வந்தது. இப்போது எல்லாம் கௌதம் அதிகம் சிரித்து அவள் பார்த்தது இல்லை. அந்தளவுக்கு அன்னையின் சோகம் அவன் மனதை ஆக்கிரமித்து இருந்தது.

"எனக்கு நீ கிடைச்சதே பெரிய கிப்ட்... இதுல வரதட்சணை எல்லாம் எதுக்கு...?" என்றவனின் பேச்சில் அவள் இதயம் தடம் புரண்டது. இந்த மாதிரி சின்னச் சின்ன வார்த்தைகள் தான் காதலை வாழ வைத்துக் கொண்டு இருக்கிறது.

************************************

"என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க அத்தை..." தன் காலில் விழுந்த மதுவின் தலை மீது கை வைத்து,

"நல்லாயிரும்மா..." என்று ஆசிர்வதித்த நாயகி, "பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மு..." என்று வாழ்த்தினார். இன்று மதுவுக்குப் பதினேழாவது பிறந்தநாள்.

"தேங்கஸ்..." என்று அவள் சிரித்தாள்.

"கௌதம் இங்கே வாப்பா..." அப்போது தான் வெளியில் இருந்து வீட்டினுள் நுழைந்த கௌதமை அவர் அழைத்தார்.

"என்னம்மா..."

"இன்னைக்கு மதுக்குப் பிறந்த நாள் கண்ணா... அவளை எங்கேயாவது அழைச்சிட்டு போயிட்டு வா..." தன்னை நினைத்து மறுகும் மகனின் மனதை மாற்ற எண்ணி அவனிடம் மதுவை வெளியில் அழைத்துப் போகச் சொன்னார்.

கௌதம் அருகில் நின்று இருந்த மதுவை குற்றவுணர்வுடன் நிமிர்ந்து பார்த்தவன், "ஹேப்பிப் பர்த்டே அம்மு..." என்றவன், அவளுக்கு மட்டும் கேட்கும் விதத்தில், "சாரி..." என்றான். 'பரவாயில்லை' என்பது போல் புன்னகைத்தாள் அவள். எப்போதும் அவளின்

பிறந்தநாளை அவன் மறந்தது இல்லை. இந்த வருடம் தான் அன்னையின் உடல்நிலையால் அதைக் கருத்தில் கொள்ளாமல் இருந்துவிட்டான்.

"அத்தை கிட்ட சொல்லிட்டு வா..." கௌதம் சொல்லவும்...

"அதெல்லாம் மீனா கிட்ட நான் கேட்டுட்டேன்..." நாயகி சொல்லவும்... கௌதமும் மதுவும் கிளம்பினர்.

"எங்கே போகலாம்ன்னு சொல்லு...?" மதுவிடம் கேட்டபடி வண்டியை எடுக்கப் போனவனைத் தடுத்தவள்,

"கோவிலுக்குப் போகலாமா..." என்றவளை பார்த்துச் சம்மதமாய்த் தலையசைத்தவன் பக்கத்தில் இருந்த கோவிலுக்கு அவளை அழைத்துச் சென்றான்.

கடவுளின் சந்நிதானத்தில் நின்று இருந்த இருவரின் மனமும் ஒன்றையே நினைத்துப் பிரார்த்தித்தது. நாயகி நலம் பெற வேண்டும் என்ற வேண்டுதலே அது... கோவிலை விட்டு வெளியில் வந்தவன்,

"உனக்கு என்ன கிப்ட் வேணும் அம்மு..."

கௌதமுக்கு இருக்கும் பணக்கஷ்டம் அவளுக்கு நன்கு தெரியும். நாயகியின் மருத்துவச் செலவுக்காக அவன் கையிருப்பு எல்லாம் கரைந்து கொண்டு வருவதை அவள் அறிவாள். சில சமயம் பற்றாக்குறையைத் தாக்கு பிடிக்க முடியாமல் அவன் கணேஷிடம் கடன் வாங்குவதும் அவளுக்குத் தெரியும்.

"ஒண்ணும் வேணாம்..." என்றவளை விசித்திரமாய்ப் பார்த்தவன்,

"ஏன்...?"

"இப்போ நீங்க இருக்கிற கஷ்டத்துல..." அவள் இழுக்கும் போதே அவனுக்குக் கோபம் வந்து விட்டது.

"அதுக்காக... உனக்கு வாங்கிக் கொடுக்கு கூடக் காசு இல்லாம இல்லை... என்ன வேணும்ங்கிறதை மட்டும்

சொல்லு..." அவனின் கோபத்தைக் குறைக்கும் வழி தெரியாமல் தவித்தவள் கண்ணில் அருகில் இருந்த பூக்கடை தென்பட,

"எனக்குப் பூ வாங்கிக் கொடுங்க..." அங்கு அழகாய் தொடுத்து வைக்கப்பட்டு இருந்த ஜாதிமல்லியை சுட்டி காட்ட... அதைக் கண்டு அவன் கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது.

"வா..." என்றவன் அவள் கேட்டதை வாங்கிக் கொடுக்க... ஆசையுடன் அதைத் தலையில் சூடியவள்,

"நல்லா இருக்கா..." என்று அவனைப் பார்த்து கேட்க...

பத்து ரூபாய் பூ வாங்கிக் கொடுத்ததில் இந்த உலகத்தையே தன் வசம் கொண்டது போல் மகிழ்ந்த மதுவின் சந்தோசம் அவன் உள்ளத்தில் ஜில் என்று பரவியது.

"அழகா இருக்கு..." என்றவனின் பார்வை அவளை மையலுடன் வருடியது வெகு நாட்களுக்குப் பின்...

திரும்ப வீட்டிற்கு வரும் போது இருவர் இடத்திலும் அழகான மௌனம் நிலவியது. தோளோடு தோள் உரச ஒருவரின் அருகாமையை ஒருவர் விரும்பியபடி நடந்தவர்கள் மனம் நிறைந்து இருந்தது.

அப்போது அந்த வழியே சென்றது இயக்குநர் நரேந்திரனின் கார்... தெருவோரத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தவரின் கண்ணில் அழகு பதுமையாய் நடந்து சென்று கொண்டு இருந்த மது விழுந்தாள். அவளின் அமைதியான அழகு அவரை ஈர்க்க,

"ஏய்... ஸ்டாப்..." அவசரமாய்க் கூவியவரின் குரலில் அவரது ஓட்டுநர் பயந்து போய்க் காரை நிறுத்தினான். கார் நின்றதும் இறங்கிய நரேந்திரனை தொடர்ந்து அவரது உதவியாளரும் இறங்கினான்.

"மனோ அந்தப் பொண்ணு யாரு எவருங்கிற டீடெய்ல்ஸ் எல்லாம் இன்னைக்குள்ள எனக்குத் தெரிஞ்சாகணும்..." என்றவரை உதவியாளர் வியப்புடன் பார்க்க...

"என்ன அப்படிப் பார்க்கிற மனோ... இவள் தான் என் அடுத்தப் படத்தோட ஹீரோயின்..." என்றவரின் பார்வை கௌதமோடு நடந்து சென்று கொண்டு இருந்த மதுவை பின் தொடர்ந்தது.

"மது கோவிலுக்குப் போயிட்டு வந்திட்டியா...?" மீனா கேட்கவும்...

"ஆமாம்மா... இந்தாங்க பிரசாதம்..." என்று நீட்டிய மதுவின் கையில் இருந்த திருநீறை எடுத்து நெற்றியில் இட்டு கொண்டவர்,

"கௌதம் பாவம் மது... இப்ப எல்லாம் அவன் சிரிச்சு பார்த்ததே இல்லை... அதான் அவனுக்குக் கொஞ்சம் மன மாற்றமா இருக்கட்டுமேன்னு தான் நாயகி சொன்னதும் உன்னை அனுப்பி வச்சேன்..." என்றவரை கண்டு சிரித்தவள் ஒன்றும் பேசவில்லை.

"எங்கே இந்த உஷா... இன்னுமா தூங்குறா...?" படுக்கையறைக்குள் நுழைந்த மீனா அங்கே உஷா தலையை மூடி கொண்டு படுத்து இருப்பதைக் கண்டு அருகில் வந்தவர்,

"ஏய் உஷா... எந்திரிடி..." நாலு அடி போட...

"ச்சு... லீவு நாளுல கூடத் தூங்க விடாம என்னம்மா இது..." அலுத்துக் கொண்டே எழுந்தவள் பல் துலக்கி விட்டு காபி கேட்க,

"ஆம்பிளை புள்ளை இல்லாத குறையை நீ தீர்த்து வைக்கிற..." வைதபடி காபி தம்ளரை அவள் கையில் கொடுத்தார் மீனா.

ஒரு வாய் காபி குடித்த உஷாவிற்கு ஓங்கரித்துக் கொண்டு வர வாயை மூடி கொண்டு பின்பக்கம் ஓடினாள். வயிற்றில்

உள்ளது எல்லாம் வாந்தி எடுத்தவளை கண்டு,

"இதுக்குத் தான் சொல்றது நைட் கொஞ்சமா சாப்பிடணும்... கிடைச்சது சான்ஸ்ன்னு தட்டு நிறைய அள்ளி போட்டுட்டு சாப்பிட்டா..." கேலி செய்த இதயாவை முறைத்த உஷா,

"அம்மா இங்கே பாருங்கம்மா... இதயா கிண்டல் அடிக்கிறா..." இதயாவின் பேச்சு மீனாவிற்கும் சிரிப்பை வரவழைக்கக் கஷ்டப்பட்டு அடக்கி கொண்டார். அப்போது அவர் நினைக்கவில்லை... அவர் பிழைப்புச் சிரிப்பா சிரிக்கப் போவதை...

அடுத்து வந்த நாட்களில் உஷா வாந்தி, தலை சுத்து என்று சுருண்டு சுருண்டு படுக்க மீனாவிற்கு அடி வயிற்றில் பகீரென்றது. இருந்தாலும் பதினைந்து வயது சின்னப் பெண்ணை அந்த மாதிரி அவரால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை. மருத்துவமனைக்கு உஷாவை அழைத்துச் சென்ற போது அந்தச் சின்னப் பெண்ணின் வண்டவாளம் தண்டவாளம் ஏறியது.

"ஏண்டி... பதினைஞ்சு வயசு கூட ஆகல அதுக்குள்ள உனக்கு ஆம்பிளை சுகம் கேட்குதா..." வீட்டிற்கு வந்ததும் மீனா அவளை அடி பின்னி எடுத்துவிட்டார்.

"அதானே உன்னை விட மூத்தவ நானே என் லவ்வர் கிட்ட தள்ளி நின்னு தான் பழகுறேன்... ஆனாலும் நீ இந்தளவுக்கு ஸ்பீடா இருக்கக் கூடாது உஷா..." இது தான் சாக்கு என்று குத்தி காட்டி கேலி பேசினாள் இதயா.

"பாவம்மா... குழந்தை உண்டாகி இருக்கிறவளை அடிக்க வேணாம்மா..." அன்னையைத் தடுத்தாள் மது. அவள் ஒருத்தி மட்டும் தான் உஷாவை அம்மாவின் அடியில் இருந்து காப்பாற்றினாள்.

"என்னை மட்டும் ஏன் அடிக்கிறீங்க...? இதயா காதலிக்கிற விசயம் கேட்டு நீங்க ஒண்ணுமே சொல்லல... என்னை விட ரெண்டு வயசு தான் அதிகம் மதுவுக்கு... அவள் காதலிக்கிறதுக்கும் நீங்க ஒண்ணும் சொல்லல... அதே இது

நான் செஞ்சா மட்டும் தப்பா... மது காதலிக்கிறப்போ நான் காதலிக்கக் கூடாதா..." சின்னவள் தான் செய்து இருக்கும் காரியத்தின் விபரீதம் புரியாமல் எதிர்த்து பேசினாள்.

அவளின் பேச்சில் மது அதிர்ந்து போனாள். உஷா சொல்வதும் சரி தானே என்று உள்ளுக்குள் மறுகி போனாள். தங்கைக்கு முன் மாதிரியா இருக்க வேண்டிய தான் தடம் மாறியதால் தான் அவளும் தடம் மாறி போய் விட்டாளோ என்று மனதுக்குள் வெட்கினாள். முதன் முறையாகத் தான் காதலித்ததை நினைத்து வேதனைப்பட்டாள்.

"எடு செருப்ப... எடுப்பட்ட நாயே என்ன பேச்சு பேசுற...? உலக்குச் சைஸ் இருந்திட்டு எட்டூருக்கு வாய் கிழியுதா...? இதயா வாய் பேசினாலும் இந்த விசயத்தில் அவள் சொக்க தங்கம்... மதுவை பத்தி பேச உனக்கு எந்த யோக்கியதையும் இல்லை... அவங்க காதலுக்கு நான் தான் சப்போர்ட் பண்றேன்... ஆனா நீ பண்ணி இருக்கிற கூத்துக்கு... தூ... இதுக்குப் பேரு காதலா...? வாயில கெட்ட வார்த்தை வந்திரும்... கண்ட நாய் கூடப் படுத்து வயித்துல வாங்கிட்டு வந்திட்டு வாயை பாரு..." ஆத்திரத்தில் அருகில் இருந்த குடையை எடுத்து உஷாவை அடி வெளுத்து விட்டார்.

கோபத்தில் மகளை அடித்துவிட்டாலும் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் பிரம்மை பிடித்தது போல் அப்படியே அமர்ந்துவிட்டார் மீனா. இவர்களின் வீட்டில் கேட்ட சத்தத்தை வைத்து ரெங்கநாதன் அங்கே வந்துவிட்டார். விசயம் கேள்விப்பட்டதும் அவருக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை. உஷாவிடம் அந்தப் பையன் யார் என்ன என்று விசாரித்தவர் கௌதமிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விட்டார்.

அடுத்த நாளே தன்ராஜின் வீட்டு முகவரி விசாரித்துத் தெரிந்து கொண்ட கௌதம் அவன் வீட்டில் இருக்கும் சமயம் பார்த்து மீனா, உஷா, ரெங்கநாதன் என அனைவரையும் அழைத்துக் கொண்டு சென்றான். எங்கோ வெளியில்

செல்ல வாசலுக்கு வந்த தன்ராஜ் உஷாவை குடும்பத்துடன் கண்டதும் திருடனுக்குத் தேள் கொட்டினார் போல் திருதிருவென விழித்தான்.

"யாருடா இது...?" கேட்டுக் கொண்டு வந்த அவனின் தந்தை முகம் கடுமையாய் இருந்தது.

"அப்பா... அது... வந்து..." என்று இழுக்க...

"சார்... நானே விசயத்தைச் சொல்றேன்..." கௌதம் அனைத்து விசயத்தையும் போட்டு உடைக்க... அடுத்த நொடி தன்ராஜின் கன்னத்தில் அவன் அப்பா ஓங்கி ஒரு அறை கொடுத்தார்.

"நீயே ஒரு தண்டச்சோறு... இதுல இன்னொரு தண்டச்சோறா..." என்றவர் தன் பெல்ட்டை எடுத்து அவனை விளாச... அந்தச் சத்தத்தில் அவனின் அம்மா, இரு தங்கைகள் என அனைவரும் உள்ளிருந்து வந்துவிட்டனர்.

"ஐயோ... ராஜாவை அடிக்காதீங்க..." அவனின் அன்னை தடுக்க...

"ராஜாவாம் ராஜா... வெறும் கூஜா பய..." ஆத்திரத்துடன் அவர் மேலும் மகனை அடிக்க...

"அப்பா... அவங்க பொய் சொல்றாங்க... எனக்கு இந்தப் பொண்ணு யாருன்னே தெரியாது..." அடி தாங்காமல் அலறினான் அவன். அதில் உஷாவின் மனம் காயப்பட்டுப் போனது. அடிப்பட்ட பார்வை ஒன்றை அவன் மேல் செலுத்தினாள்.

"இவ யாருன்னு உனக்குத் தெரியாது..." கௌதம் அவனை அடிக்க...

"உன்னைப் பத்தி எனக்கா தெரியாது... நான் உன் அப்பன்டா... என் கிட்டேயே பொய் பேசுறியா... ஏதோ வயசு கோளாறு படிக்காம ஊரை சுத்துறன்னு நினைச்சா... உன் தங்கச்சி வயசுள்ள பொண்ணைக் கர்ப்பமாக்கிட்டு வந்திருக்க... இதுக்கே உன்னைப் பொலி போடணும்

மவனே..." அதைக் கேட்டு அவனின் அன்னையின் சப்தநாடியும் ஒடுங்கியது. தங்கைகள் இருவரும் அருவருப்பாய் அவனைப் பார்த்தனர்.

"சார்... இதுக்குச் சாட்சியா இவனோட பிரெண்ட்ஸ் இருக்காங்க... நாங்க பொய் சொல்லல..." ரெங்கநாதன் சொல்லும் போதே அவரைக் கையமர்த்தித் தடுத்த தன்ராஜின் அப்பா,

"எங்க பையன் மேல மட்டும் தப்பு சொல்ல முடியாது... தப்பு உங்க வீட்டு பொண்ணு மேலயும் இருக்கு..." அவரின் பேச்சில் அனைவரது முகமும் தொங்கி போனது.

"சரி நடந்ததை விடுங்க... இனி ஆக வேண்டியதை பார்க்கலாம்..." என்று தொண்டையைக் கனைத்து கொண்டவர், "இந்தத் தறுதலையைப் படிக்க வைக்கிறதுக்கே எனக்குப் பல லட்சம் செலவாகி போச்சு... ஆம்பிள பிள்ளை நாளைக்குப் படிச்சு முடிச்சுக் குடும்பத்தைக் காப்பாத்துவான்னு நினைச்சேன்... ஆனா இப்படிக் குடும்ப மானத்தைக் கப்பல் ஏத்துவான்னு கொஞ்சமும் நினைச்சு பார்க்கல... உங்க பொண்ணை என் பையனுக்குக் கட்டுறதுல எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை..." அவர் அவ்வாறு சொன்னதும் மீனா மற்றும் உஷாவின் முகம் மலர்ந்தது.

"ஆனா எனக்கு வரதட்சணையா நான் கேட்கிற சீரை கொடுத்துட்டு இவனை உங்க வீட்டோடு மாப்பிள்ளையா கூட்டிட்டு போங்க... ஏன்னா இவன் பொண்டாட்டி கொண்டு வர்ற சீரில் தான் என் ரெண்டு பொண்ணுங்க கல்யாணத்தை நான் முடிக்கணும்... எனக்கும் பெரிசா வசதி ஒண்ணும் இல்லை பாருங்க..." வெளிப்படையாய் பேசிய அந்த மனிதரின் வார்த்தையில் இருந்த உண்மை உணர்ந்தவர்களாய் சரி என்று சம்மதம் சொல்லிட்டு வீடு வந்து சேர்ந்தனர் அனைவரும்.

இதயா மற்றும் உஷா இருவரின் வாழ்க்கையும் பணம் என்ற கயிற்றில் ஊசலாடியது. அந்தப் பணத்திற்கு என்ன செய்வது என்று தெரியாமல் மீனா தவித்த போது... அவரின்

தவிப்பை நீக்குவது போல் அமைந்தது இயக்குநர் நரேந்திரன் வருகை...

## துளி : 16

நரேந்திரனின் வேக நடைக்கு ஈடு கொடுத்தப்படி அவருடன் இணைந்து நடந்து மனோவுக்கு அவரை நினைத்து பிரமிப்பாய் இருந்தது.

'என்ன மனுசன் இவர்... எவ்வளவு உயரத்தில் இருக்கும் ஆள் இவர்... ஆனால் துளி கூட அந்தக் கர்வம் இல்லாமல் தன் இயல்பை தொலைக்காமல் எப்படித்தான் இப்படி இருக்கிறாரோ... உண்மையில் கிரேட் தான்...' மனதில் நினைத்தவன்,

"சார்... இந்த மாதிரி இடத்துக்கு நீங்க வரணுமா... இது எல்லாம் சின்ன விசயம்... நானே முடிச்சிட மாட்டேனா..." என்றவனைத் திரும்பி பார்த்தவர்,

"எல்லோரையும் ஒரே மாதிரி எடை போடாதே மனோ..."

"பணம், புகழ் வருதுன்னா யார் தான் சார் ஒத்துக்க மாட்டாங்க... அதுவும் உங்க படத்தில் நடிக்கணும்ன்னா நீ நான்னு போட்டி போட்டு வருவாங்க... இந்தப் பொண்ணு வராதா...?" அவனின் கேள்விக்கு மறுப்பாய் தலையசைத்த நரேந்திரன்,

"இல்லை மனோ... இந்தப் பொண்ணைக் கன்விஸ் பண்றது ரொம்பக் கஷ்டம்ன்னு எனக்குத் தோணுது..."

"எப்படிச் சார் சொல்றீங்க...?"

"சிலரை பார்க்கும் போது தானா தெரியும்... இந்தப் பொண்ணு நீ சொன்ன மாதிரி பணம், புகழுக்கு ஆசைப்படுற மாதிரி தெரியல... ஆனா எனக்கு அவள் தான் ஹீரோயினா வேணும்... அந்தப் பொண்ணு நடிச்சா மட்டுமே அந்தக் கரெக்டர் உயிர் வாழும்... அதான் நானே நேரிடையாய் களத்தில் இறங்கிட்டேன்..." மனித மனங்களைப் படிக்கத் தெரிந்தவாராய்...

அப்போது எதிரில் வந்த ஒருவர் அவரைக் கூர்ந்து பார்த்தவர், "நீங்க டைரக்டர் நரேந்திரன் தானே..."

"இல்லையே..." அசால்ட்டாய் சொன்னவரை ஆச்சிரியமாய்ப் பார்த்தான் மனோ.

"அவரே மாதிரியே இருந்தீங்களா... அதான் கேட்டேன்..."

"ஓ... அவனை மாதிரியா நான் இருக்கேன்... ஆனா நான் அவன் இல்லை..." இயல்பாய் சொன்னவர் மேலே நடக்க மனோவுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

மதுவின் வீட்டினுள் நுழைந்தவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு நேரே விசயத்திற்கு வந்தார். மதுவை சுட்டி காட்டி, "உங்க பெண்ணுக்கு நல்ல முக அமைப்பு இருக்கு... வருங்காலத்தில் பெரிய ஸ்டாரா வர வாய்ப்பு இருக்கு... என்னோட அடுத்தப் படத்தில் அவளை ஹீரோயினா போடலாம்ன்னு விரும்பறேன்... உங்களுக்கு விருப்பம் இருந்தால் மேலே பேசலாம்..."

"அது வந்து..." மீனா தயங்கும் போதே...

"சார் எங்க அப்பா கூடத் துணை நடிகர் தான்..." இதயா மகிழ்ச்சியுடன் சொல்ல...

"அப்படியா அப்போ ரொம்ப நல்லதா போச்சு... இந்த ஃபீல்டை பத்தி உங்களுக்கு நல்லாவே தெரியும்... நான் ஒண்ணும் சொல்ல தேவை இல்லை..." என்றவரை மது மிரட்சியுடன் பார்த்தாள்.

"இது என்னோட விசிட்டிங் கார்ட்... பின் பக்கம் என் பெர்சனல் நம்பர் எழுதி இருக்கேன்... நீங்க எப்போ வேணும்ன்னாலும் என்னைக் காண்டாக்ட் பண்ணலாம்..." மதுவின் அச்சத்தைப் பார்த்தவர் அதற்கு மேல் அங்கு இருக்கவில்லை கிளம்பிவிட்டார்.

"மது... அதிர்ஷ்டம் நம்ம வாசல் தேடி வந்து இருக்கு... வேணாம்ன்னு சொல்லிறாதே... சரின்னு சொல்லுடி... அதுவும் நரேந்திரன் படம்ன்னா சும்மா இல்லை... நீ பெரிய நடிகையானா... பெரிய வீடு, கார்ன்னு ஜாலியா இருக்கலாம்... இந்த மாதிரி கஷ்டப்படத் தேவை இல்லை..."

இதயா மதுவின் கையைப் பிடித்துக் கொண்டு குதூகலிக்க...

"எனக்குப் பிடிக்கல இதயா..." மெதுவே சொன்னவள் தன் கையை உருவி கொண்டாள்.

"லூசாடி நீ... அறிவு இருக்கா உனக்கு... கிடைச்ச வாய்ப்பை கப்புன்னு பிடிச்சுக்காம... இப்படி உளறிட்டு இருக்காதே..." இதயா படம் எடுக்கும் பாம்பாய் சீறினாள்.

"இதயா... நீ பேசாம இரு... இது மதுவோட வாழ்க்கை... அதை அவள் தான் தீர்மானிக்கணும்... அவளுக்குப் பிடிக்கலைன்னா விட்டுரு..." தீர்மானமாய்ச் சொன்ன மீனாவை முறைத்தாள் இதயா.

"அம்மா... அவ தான் சின்னப் பொண்ணு தெரியாம பேசுறான்னா... நீங்களும் புரிஞ்சிக்காம பேசுறீங்களே..."

"எனக்கு எல்லாம் புரியுது... புரியாம இல்லை... கௌதம், மது கல்யாணம் பேசி இருக்கிற இந்த நேரத்தில் இந்தச் சினிமா எல்லாம் வேணாம்... அண்ணியோட கடைசி ஆசை இது... இதை நிறைவேத்தலைன்னா நான் மனுசியே கிடையாது..."

"அப்போ உங்களுக்கு நான் முக்கியம் இல்லை... இதோ பிள்ளைத்தாச்சியா இருக்காளே உஷா முக்கியம் இல்லை... எங்க கல்யாணம் முக்கியம் இல்லை... உங்களுக்கு அந்தக் கௌதமும், உங்க செல்ல பொண்ணு மதுவும் தான் முக்கியம் இல்ல..."

"ஆமாம் அப்படித்தான் வச்சுக்கோ... நீங்களா வம்பை வலிய போய் வாங்கிட்டு வந்துட்டு இப்போ குத்துதே குடையுதேன்னு சொன்னா எப்படி...? உப்பை தின்னா தண்ணி குடிச்சு தான் ஆகணும்... உங்க ரெண்டு பேருக்காக மதுவோட வாழ்க்கையில் மண்ணை அள்ளி போட என்னால் முடியாது..." தாயின் பேச்சில் ஆத்திரம் அடைந்த இதயா,

"அப்போ இது தான் உங்க முடிவா... சரி உங்க விருப்பப்படி மதுவுக்குக் கல்யாணம் பண்ணி வச்சு சந்தோசமா இருங்க..." என்றவள் அருகில் நின்று இருந்த உஷாவின் கையைப் பிடித்து இழுத்து,

"வாடி..." என்று தரதரவெனச் சமையலறைக்குள் கூட்டி கொண்டு சென்றவள் அங்கு இருந்த மண்ணெண்ணெயை எடுத்து தன் மீதும் உஷா மீதும் கொட்டினாள். அதைக் கண்டு மது பதறியவள்,

"இதயா சொல்றதை கேளு..." என்றபடி அருகில் வர...

"யேய் அப்படியே நில்லு... பக்கத்தில் வந்த..." மதுவை மிரட்டிய இதயா தன் அம்மாவை பார்த்து, "நாங்க ரெண்டு பேரும் செத்து போறோம்... நீங்க ரெண்டு பேரும் சந்தோசமா இருங்க..."

"மது நீ மட்டும் காதலிக்கலாம்... ஆனா நான் காதலிக்கக் கூடாதா...? எனக்கு வாழணும்ன்னு ஆசையா இருக்கு மது... என் வயித்தில் இருக்கும் குழந்தை என்ன பாவம் பண்ணுச்சு மது... அதுவும் என் கூடச் செத்துப் போகப் போகுது... மது உனக்கும் கௌதம் மாமாவுக்கும் பெண் குழந்தை பிறந்தா என் பேர் வைங்க... இப்போ அனுபவிக்க முடியாததை அப்போவாவது அனுபவிச்சுக்கிறேன்..." கதறி அழுத உஷாவை கண்டு மதுவுக்குக் கண்ணீர் வந்தது.

"உஷா என்ன பேச்சு பேசுற...?" மது கலங்கினாள்.

"இதயா நெருப்பு வச்சுக்கிட்டா ரொம்ப எரியுமா...?" குழந்தை சுமப்பவள் குழந்தைத்தனமாய்க் கேட்டதில் மது அப்படியே உடைந்து போனாள்.

"நெருப்பு எரியாம குளிரவா செய்யும்... நாம ரெண்டு பேரும் வாழ்ந்து என்ன செய்யப் போறோம்..." என்ற இதயா தீப்பெட்டியை எடுத்து பற்ற வைக்கப் போக, ஆவேசம் வந்தது போல் அங்கே வந்த மீனா மீதி இருந்த மண்ணெண்ணெயை தன் மீது ஊற்றியவர்,

"உங்களைப் பெத்த பாவத்துக்கு நானும் செத்து போறேன்... ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன் நல்லா கேட்டுக்கோ... உங்க சந்தோசத்துக்காக மதுவோட வாழ்க்கையைப் பணயம் வைக்க நான் சம்மதிக்க மாட்டேன்... தப்பு செஞ்சது நீங்க... ஆனா தண்டனையை அவள் அனுபவிக்கணுமா... வேணாம்... அதைத் தப்பு செஞ்ச நீங்க தான் அனுபவிக்கணும்... உங்களைப் பெத்த எனக்கும் இந்தத் தண்டனை தேவை தான்... வாங்க... கொளுத்திக்கிட்டு மூணு பேரும் செத்து போவோம்... அப்படியாவது மது நல்லா இருந்தா சரி..." என்றவரை பார்த்து இதயா முகம் வெளிறி போனாள். அவள் நடத்திய நாடகம் வேறு திசையில் பயணிப்பதை உணர்ந்து பேய் அறைந்தார் போல் நின்றாள்.

"குடுடி..." அவள் கையில் இருந்த தீப்பெட்டியை மீனா பறிக்க...

"அம்மா..." என்று அலறியபடி அதைத் தட்டி விட்டாள் மது. "நீங்க மூணு பேரும் போனதுக்கு அப்புறம் நான் எப்படிம்மா சந்தோசமா இருப்பேன்... வேணாம்மா... எனக்குக் கல்யாணம் வேணாம்மா... நான் நடிக்கப் போறேன்... நீங்க எனக்கு வேணும்மா..." என்று கதறிவளை கண்டு இதயாவின் உதட்டில் வெற்றி புன்னகை பூத்தது.

"எங்களுக்காக நீ ஏன் மது உன் வாழ்க்கையைக் கெடுக்கணும்... நீ கௌதமை கல்யாணம் பண்ணிட்டு நிம்மதியா இரு..." மீனா மதுவை தேற்ற...

"எனக்கு மாமாவை விட உங்க உயிர் முக்கியம்மா..."

"அண்ணி பாவம் மது... மகன் கல்யாணத்தைப் பார்க்கணும்ன்னு ஆசையா இருக்காங்க..."

"அதுக்கு என்னம்மா... நிச்சயம் மாமா கல்யாணம் நடக்கும்... இந்த உலகத்தில் நான் மட்டும் தான் பெண்ணா...?"

"மது..." மகளின் பேச்சில் அதிர்ந்து போனார் மீனா.

"எல்லாக் காதலும் கல்யாணத்தில் முடியறது இல்லைம்மா... எனக்கு அந்தக் கொடுப்பினை இல்லை அவ்வளவு தான்..." என்றவளை கட்டி கொண்டு மீனா அழ...

"மது நீ சொல்றது உண்மையா..." இதயா கேட்க... ஆம் என்பது போல் தலையை ஆட்டினாள் மது.

"அப்போ பிராமிஸ் பண்ணி கொடு..." என்று சொன்ன இதயாவை நிமிர்ந்து மது பார்க்க, "அம்மா மேல ஆணையா பிராமிஸ் பண்ணு..." விடாமல் கேட்டாள் இதயா.

"இதயா உனக்கு இதயமே இல்லையாடி... கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாம இப்படிக் கேக்கிறியே...?" மீனா அரற்றினார். அது எதுவும் தன்னைப் பாதிக்காது என்று நின்று இருந்த இதயா மதுவையே பார்த்தாள்.

"அம்மா மேல சத்தியமா என் முடிவுல இருந்து மாற மாட்டேன்..." அன்னையின் தலை மீது கை வைத்துச் சத்தியம் செய்தாள் மது.

"இப்படிப் பண்ணிட்டியே மது... கௌதம் பாவம்டி... நீயும் தான்டி...." மதுவை நினைத்துத் தலையில் அடித்துக் கொண்டு அழுதார் மீனா. மற்றவர்களுக்காகத் தன் வாழ்க்கையில் மண் அள்ளி போட்டு கொள்கிறாளே என்று அவருக்கு ஆற்றாமையாக இருந்தது.

"மது உன் மேல் நம்பிக்கை இல்லாமல் இல்லை... ஆனா அவன் இருக்கான் பாரு... அந்தக் கௌதம்... அவன் உன் மனசை மாத்திட்டா... அதான் பிராமிஸ் பண்ண சொன்னேன்..." என்றவளை சலனம் இல்லாமல் பார்த்தாள் மது.

"அப்போ நரேந்திரன் சாருக்கு ஃபோன் பண்ணலாமா...?" அதற்கும் சலனம் இல்லாமல் இருந்த மதுவை கண்டு தோளை குலுக்கிய இதயா,

"உஷா... வா போய்க் குளிச்சிட்டு வரலாம்..." என்று அவளை அழைத்துச் சென்றாள்.

"மது நல்லா யோசிச்சு முடிவு பண்ணும்மா... அவங்க வாழ்க்கைக்கு நீ பொறுப்பு ஏத்துக்க முடியாது... நீ உன் வாழ்க்கையைப் பாரு..." மீண்டும் கெஞ்சினார் மீனா. அதற்கும் பதில் சொல்லாமல் அமர்ந்து இருந்த மதுவின் முகம் உணர்ச்சிகளைத் தொலைத்து இருந்தது.

எல்லாம் தன் கை மீறி செல்வதை உணர்ந்து என்ன செய்வது என்று தெரியாமல் அப்படியே பிரம்மை பிடித்தது போல் அமர்ந்து விட்டார்.

மறுநாள் காலையில் இந்த விசயத்தைக் கேள்விப்பட்ட கௌதம் அலுவலகம் செல்வதைக் கூட மறந்து புயல் போல் மதுவின் வீட்டிற்கு நுழைந்தான்.

"கௌதம்..." அவனைக் கண்டதும் மீனாவின் கண்கள் கலங்கியது. அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தவித்தார் அவர்.

"அத்தை... அம்மு எங்கே...?" அடக்கப்பட்ட கோபத்துடன் அவன் கேட்கும் போதே அவனின் குரல் கேட்டு மதுவே வெளியில் வந்தாள்.

"யாரை கேட்டுட்டுடி முடிவு எடுத்த...?" எடுத்த எடுப்பில் நேரிடையாய் கேட்டவனைக் கண்டு ஒரு நொடி திகைத்த மது...

"என் குடும்பத்தோட நல்லதுக்காக நான் எடுத்த முடிவு..." 'யாரை கேட்க வேண்டும்...?' என்ற மறைமுகக் கேள்வி அதில் ஒளிந்து இருப்பதைக் கண்டு அவன் கண்கள் ஆத்திரத்தில் சிவந்தது.

"ஓகோ உன் குடும்பமா...? இது எப்போது இருந்து...? நம்ம குடும்பம் எப்போ உன் குடும்பம் ஆச்சு..." கேட்டபடி அவள் அருகில் வந்தவன், "சரி உன் குடும்பம் உன் குடும்பமாவே இருந்திட்டு போகட்டும்... ஆனா நீ என் குடும்பம்டி... என் வாழ்க்கை நீ... நீ இப்படி ஒரு முடிவு எடுக்கிறதுக்கு முன்னாடி உன் புருசன் என்னைக் கேட்டு இருக்கணும்... என்ன பார்க்கிற... தாலி கட்டினா தான் கணவனா...? உன்

மனசாட்சி தொட்டு சொல்லு நான் உன் புருசன் இல்லைன்னு..." என்றவனின் நம்பிக்கை பேச்சில் அவள் வாயடைத்து போனாள்.

"அவ தான் அவள் முடிவை சொல்லிட்டாள்ல... சும்மா சும்மா ஏன் அவளைத் தொந்திரவு பண்ற..." எங்கே கௌதம் மதுவின் மனதை கலைத்து விடுவானோ என்று பயந்த இதயா அவனைப் பார்த்து எகிறினாள்.

"நீ வாயை மூடு... நான் உன் கிட்ட பேசலை..." வாயில் விரல் வைத்து இதயாவை பார்த்து சொன்னவன் மதுவின் புறம் திரும்பினான்.

"பதில் சொல்லுடி..."

"அதான் சொல்லிட்டேனே..."

"அப்போ நம்ம கல்யாணம்... என் அம்மாவோட கடைசி ஆசை..."

"உங்களுக்கு உங்க அம்மா முக்கியம் மாதிரி... எனக்கு எங்க அம்மா, அக்கா, தங்கச்சி உயிர் முக்கியம்... உங்க அம்மாவோட ஆசையை நிறைவேத்த நீங்க வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோங்க..." அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டு சொல்லிய மதுவின் கண்கள் கலங்கி இருந்தது. இந்த மாதிரி ஒரு வார்த்தையை உயிருக்கு உயிராய் காதலிப்பவனிடம் சொல்ல வேண்டிய தன் துர்பாக்கிய நிலையை எண்ணி மனதுக்குள் நொந்து போனாள்.

"அம்மு..." மதுவிடம் இருந்து இப்படி ஒரு பேச்சை அவன் எதிர் பார்க்கவில்லை.

"அத்தை அவள் தான் அறிவு இல்லாம பேசறான்னா நீங்களாவது சொல்ல கூடாதா..." ஆற்றாமையுடன் மீனாவை பார்த்து கேட்டான். அவரோ செய்வது அறியாது முகத்தை மூடி கொண்டு அழுதார்.

"நம்ம காதல் அவ்வளவு தானா அம்மு..." அவளின் முகத்தை நிமிர்த்தியவன் அவள் கண்ணுக்குள் ஊடுருவி பார்க்க... அந்தப் பார்வையின் வீரியம் தாங்காமல் அவளுக்குக் கண்கள் கலங்கியது... ஏதோ சொல்ல துடித்தது அவளது உதடுகள்...

"எத்தனை தடவை தான் அவள் சொல்லுவா... நல்ல மாட்டுக்கு ஒரு சூடு..." தங்கை மனம் மாறிவிடுவாளோ என்று இதயா கௌதமை கேவலமாய்ப் பேசினாள்.

"நான் அம்மு கிட்ட பேசினா உனக்கு என்ன...?" என்று கேள்வி கேட்டவன் பின் கண்கள் மின்ன, "ஓகோ அப்படிப் போகுதா கதை... இதுக்குத் திரைக்கதை, வசனம் எல்லாம் நீ தானா... என்னடா அம்முவை நடிக்க வைக்க நீ ஏன் இப்படித் துடிக்கிறேன்னு நினைச்சேன்... இப்ப தானே காரணம் புரியுது..." இதயாவை கேவலமான பார்த்தவன்,

"உனக்குப் பணம் வேணும்ன்னா நீ போய் நடிக்க வேண்டியது தானே... அம்முவை எதுக்குத் தொந்திரவு பண்ற...?"

"எனக்கு இப்படி ஒரு சான்ஸ் கிடைச்சா மிஸ் பண்ணுவேனா என்ன... ஆனா எனக்குத் தான் அந்தச் சான்ஸ் கிடைக்கலையே... மது மாதிரி நான் அழகாய் பிறக்கலையே..." பெருமூச்சு விட்டவள், "அவளை மாதிரி ஒருத்திக்கு தான் அவனவன் ஜொள்ளு விட்டுட்டுப் பணத்தை அள்ளி கொடுக்கிறான்... அவ அழகுக்கு..."

"என்னடி சொன்ன...?" இதயாவின் கன்னம் இரண்டிலும் மாறி மாறி அறைந்து தள்ளிவிட்டான் கௌதம்.

மீனா அவனைத் தடுக்கவில்லை. தான் செய்ய முடியாததை அவன் செய்ததை எண்ணி அமைதியாய் இருந்தார். மது தான் இடையில் புகுந்து தடுத்தாள். அதிர்ச்சியில் இதயா கன்னத்தில் கை வைத்தபடி அப்படியே அமர்ந்துவிட்டாள்.

"கௌதம்... மிருகம் மாதிரி பிஹேவ் பண்ணாதீங்க..."

"ஆமாம்டி நான் மிருகம் தான்... மனுசனா இருந்த என்னை மிருகமா மாத்தினது நீ தான்டி..." இதயா மேல் இருந்த அவனின் ஆக்ரோசம் மதுவின் மீது திரும்பியது.

"காதலை கொன்னுட்டு... காதலுக்குத் துரோகம் பண்ணிட்டு எப்படிடி ஒண்ணும் தெரியாத மாதிரி இருக்க முடியுது உன்னால... என்னால முடியலடி... இங்கே வலிக்குது..." இடது பக்க நெஞ்சை நீவி விட்டவனின் வலி கொஞ்சமும் குறையாமல் அவளையும் தாக்கியதை அவன் அறிவானோ...

"ப்ளீஸ் கௌதம்... என்னை உயிரோடு கொல்லாதீங்க..." கை எடுத்து கும்பிட்டவளை கண்டு விரக்தியாய் சிரித்தவன்,

"யார் நானா... நீயா...?" என்றவன், "அம்மு இப்பவும் சொல்றேன் இவங்களுக்காக நம் வாழ்க்கையைப் பணயம் வைக்காதே... அதுக்கான தகுதி இவங்க ரெண்டு பேருக்கும் கிடையாது... அவங்கவங்க செஞ்ச தப்பை அவங்கங்க தான் சரி செஞ்சுக்கணும்... அதுக்கு நீயும் நானும் போராட முடியாது... இப்பவே என் கூட வந்திரு... அத்தையையும் உன் கூடக் கூட்டிட்டு வா... ரெண்டு பேரையும் நான் பார்த்துக்கிறேன்..." அவ்வளவு அவன் கெஞ்சியும் அசையாமல் நின்றாள்.

அவளின் ஆழ்மனதில் தன் தங்கை கெட்டுப் போவதற்குத் தான் தான் காரணம் என்ற எண்ணம் ஆழ பதிந்து இருந்தது. அதை விட அன்னை தன் உயரை விடத் துணிந்தது அவளைப் பெரிதும் ஆட்டி படைத்தது. எல்லோர் உயிரையும் எடுத்து விட்டு தான் மட்டும் சந்தோசமாய் வாழ்ந்து என்ன பயன்...? அதற்குத் தன் ஒருத்தியின் மகிழ்ச்சியைப் பலி கொடுப்பது சரி என்று முடிவு எடுத்து இருந்தாள். கௌதமை பற்றி அவள் யோசித்தாலும் என்றாவது ஒரு நாள் அவன் தன்னை மறந்து வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வான்... அதன் பின் அவனுக்கு மது என்ற பெண்ணைப் பற்றி நியாபகம் கூட இருக்காது என்று நினைக்கும் போதே அவளுக்கு வலிக்கத்

தான் செய்தது. காதல் என்றாலே வலி தான்... அதற்கு அவளும் விதிவிலக்கு அல்லவே...

"அவ்வளவு தானா அம்மு..." அவனின் அந்த வார்த்தையில் எத்தனை அர்த்தங்கள் ஒளிந்து இருந்தது என்பது அவளுக்கு மட்டும் தான் தெரியும். அவனைத் தேற்றவோ ஆறுதல் சொல்லவோ அவளிடத்தில் வார்த்தைகள் இல்லை. அப்படியே அவள் தேற்றினாலும் அது வெறும் கண் துடைப்பே... எதுவும் மாறப் போவது இல்லை... அதனால் மௌனத்தைத் தாங்கி கொண்டு நின்றவள் அதையே அவனுக்குப் பதிலாய் அளித்தாள்.

ஓரிரு நிமிடங்கள் நின்று பார்த்தான்... அவளிடத்தில் இருந்து பதில் வரவில்லை என்றதும், "அழுத்தம்... மகா அழுத்தம்டி நீ... ஆனா ஒண்ணு சொல்றேன் கேட்டுக்கோ... இதுக்கு எல்லாம் சேர்த்து நல்லா அனுபவிக்கப் போற... அப்போ இந்தக் கௌதம் உன் கூட இருக்க மாட்டான்... இதோ இந்தக் காக்கா கூட்டம் தான் உன் கூட இருக்கும்..." இதயாவையும், உஷாவையும் சுட்டி காட்டியவன் சரேலென்று அங்கு இருந்து வெளியேறினான்.

அவன் போனதும் சக்தியை இழந்தார் போல் தரையில் அமர்ந்த மது உடைந்து போய் அழ ஆரம்பித்தாள். அது அவளுக்காகவா இல்லை அவனுக்காகவா... யாருக்காக???

**************************

"அம்மா... நான் போய் அத்தையைப் பார்த்துட்டு வரவா...?" என்ற மதுவை கண்டு,

"வேணாம்மா... அண்ணி மனசு உடைஞ்சு போயிருவாங்க..." மறுத்தார் மீனா.

"இல்லைம்மா... மாமாவுக்காக நான் அத்தை கிட்ட பேசியே ஆகணும்..." என்றவள் பிடிவாதமாய்க் கௌதமின் வீட்டிற்குச் சென்றாள்.

நாயகியை கண்டதும் அவளது விழிகளில் கண்ணீர் பொங்கியது. நாயகியின் கையைப் பிடித்துக் கொண்டு

கதறி அழுதுவிட்டாள்.

"அம்மு அழாதேம்மா... உன் சூழ்நிலை எனக்குப் புரியுது... நீ கலங்காதே..." தன்னைத் தேற்றிய நாயகியின் வார்த்தையில் இன்னமும் உடைந்தாள்.

"மாமா... அவரு..." சொல்ல முடியாமல் அவள் தேம்ப...

"சொல்லும்மா..."

"மாமாக்கு நல்ல பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைங்க அத்தை... எனக்காக அவர் வருத்தப்பட வேணாம்..."

"அம்மு..." கண்டிப்புடன் ஒலித்தது நாயகியின் குரல்... "நீ தான் எங்க வீட்டு மருமகள்... நீ மட்டும் தான் கௌதமுக்கு மனைவியாக முடியும்... என் காலம் முடிறதுக்குள்ள உங்க கல்யாணத்தைப் பார்க்க ஆசைப்பட்டேன்... அது தான் நடக்கல... அதனால் என்ன... என் ஆயுள் முடிஞ்சா முடிஞ்சிட்டு போகட்டும்... நீ உன் கடமைகள் எல்லாத்தையும் முடிஞ்சிட்டு வர்ற வரைக்கும் கௌதம் உனக்காகக் காத்துட்டு இருப்பான்... உங்களுக்கு மகளா நான் வந்து பிறப்பேன்... இதனால நீ எந்தக் குற்றவுணர்வும் அடைய தேவை இல்லை... எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும் அம்மு..." என்றவர் அவள் கன்னத்தில் முத்தமிட்டார்.

"மது எல்லாம் சரியாகும்மா..." ரெங்கநாதனும் தன் பங்குக்கு ஆறுதல் சொல்ல... எத்தகைய அன்பை தான் இழக்கிறோம் என்று வேதனைப்பட்டவள் கண்ணீர் மட்டும் நிற்கவில்லை.

"மாமா இன்னும் வரலையா..." கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் கேட்க...

"வந்துட்டான் மது... மாடியில் இருக்கான்..." நாயகி சொல்லவும்,

"நான் மாமாவை பார்க்க போகவா...?"

"தாராளமா போய்ப் பாரும்மா..." நாயகியும், ரெங்கநாதனும் சொல்ல... மது கனத்த மனதுடன் கௌதமை தேடி சென்றாள்.

இருள் கவிழ்ந்த அந்த இரவில் மொட்டை மாடியில் வந்து படுத்திருந்த கௌதமின் மனம் நிலை இல்லாமல் தவித்தது. மதுவின் துரோகம் அவன் நெஞ்சை வாள் கொண்டு அறுத்தது. அந்நேரம் பழக்கமான கொலுசொலி அருகில் கேட்க கோபத்துடன் எழுந்து உட்கார்ந்தான்.

"எதுக்குடி இங்கே வந்த... செத்துட்டேனா இல்லை உயிரோடு இருக்கேனான்னு பார்க்க வந்தியா..." ஆத்திரமாய்ப் பேசியவன் முன் மண்டியிட்டு அமர்ந்த மது,

"கௌதம்... நீங்க நூறு வருசம் நல்லா இருக்கணும்..." என்றபடி அவன் வாயை மூடியவள் அடுத்த நொடி அவனை இறுக அணைத்து கொண்டாள்.

அவளின் எதிர்பாராத இந்தச் செயலில் முதலில் திகைத்தவன் பின் தானும் அவளை அணைத்துக் கொண்டு அவளின் கூந்தலில் முகம் புதைத்தான்.

"நீ இல்லாம நூறு வயசு வரைக்கும் வாழ்ந்து நான் என்ன செய்யப் போறேன்டி... ஒரு நிமிசம் வாழ்ந்தாலும் நீ என் கூட இருந்தா அதுவே எனக்கு ஆயிரம் வருசம் வாழ்ந்ததுக்குச் சமம்..." என்றவன் கைகள் மேலும் மேலும் அவளை இறுக்கியது.

"அம்மு... சினிமா உனக்கு வேணாம்டி... அதோட இன்னொரு பக்கம் தெரிஞ்சா நீ தாங்க மாட்ட அம்மு. உன்னை மாதிரி சாப்ட்டான பொண்ணுக்கு அது சரிப்பட்டு வராது. இப்படியே என் கூட இருந்திரு... நான் உன்னைப் படிக்க வைக்கிறேன்... உன்னை நல்லா பார்த்துக்கிறேன்..."

முடியாது என்பது போல் தலையசைத்தவளை கண்டு அவனுக்குக் கொலைவெறியே வந்தது. "அப்போ போடி... இப்ப எதுக்கு வந்து கொஞ்சுற...?" தன்னிடம் இருந்து அவளைப் பிய்த்து எறிந்தான்.

"கௌதம்... நீங்க என்னை மறந்துட்டு வேற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோங்க... அடுத்தத் தடவை உங்களைப் பார்க்கும் போது உங்க மனைவியோட தான் பார்க்கணும்..." என்றவள் அவனது உதாசீனத்தையும் பொருட்படுத்தாமல் அவன் அருகே மீண்டும் வந்து,

"கடைசியாய் ஒரு முறை..." சொல்லும் போதே அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாமல் விழித்தவனின் நிலையைத் தனக்குச் சாதகமாக ஆக்கி கொண்டவள் அவன் முகத்தைப் பற்றி அதில் முத்த மழை பொழிந்தவள் கடைசியில் அவனது இதழில் வந்து இளைப்பாறினாள்.

என்ன தான் அவனுக்கு அவள் மேல் கோபம் இருந்தாலும் அவனும் உணர்ச்சிகள் நிறைந்த ஆண் மகன் இல்லையா. அதிலும் அவள் மனம் கவர்ந்தவள்... அவன் உயிர் காதலி... இது அவளே தானாய் மனமுவந்து அளிக்கும் ஆனந்த முத்தம். அவனால் அவளை மறுக்க முடியவில்லை. அவளைத் தரையில் சாய்த்து அவளது செயலை தனதாக்கி கொண்டவன் கைகள் அவனது கட்டுப்பாட்டையும் மீறி முன்னேறியது. அவளின் வயது என்ற அணையைத் தாண்டி காதல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அவனது கைகளின் மொழிக்கு ஏற்றவாறு இசைந்து கொடுத்த மதுவின் நிலையைக் கௌதம் உணர்வதற்கு ரொம்ப நேரம் ஆனது. தான் என்ன செய்தாலும் மறுக்காமல் உடன்பட்டவளை கண்டு ஒரு புறம் அவன் மனம் நெகிழ்ந்தாலும் மறு புறம் இரும்பாய் இறுகியது. சட்டென்று அவளை விட்டு விலகி எழுந்தவன்,

"நடிக்கப் போறீங்கல்ல... அதான் தாராளமயமாக்கல் கொள்கையை இப்போது இருந்தே கடைப்பிடிக்கிறீங்களோ..." வார்த்தை எனும் நெருப்பு கங்குகளை அவள் மீது அள்ளி வீசினான்.

"கௌதம்..." அவனின் வார்த்தையில் அதிர்ந்து போனவள் உடல் கூசி போனது.

"ச்சீ..." ஒற்றை வார்த்தையில் அவளை அடியோடு சாய்த்து வீழ்த்தியவன் வேகமாய்க் கீழிறங்கி சென்றுவிட்டான்.

கலைந்திருந்த உடைகளைக் கூடச் சரி பண்ண தோன்றாமல் அப்படியே அமர்ந்திருந்தவள் மேல் மழைத்துளி ஒன்று விழுந்தது. மேலே அண்ணாந்து வானத்தைப் பார்த்தவளுக்கு இருள் சூழ்ந்த வானம் வெறுமையாகக் காணப்பட்டது. இனி தன் வாழ்க்கையும் வெறுமையாகத் தான் இருக்கப் போவதை உணர்ந்தவள் கண்கள் கண்ணீரை சொரிந்தது. அவளின் சோகத்திற்கு ஏற்றார் போல் அந்த வானமும் கண்ணீர் மழையைப் பொழிந்தது.

## துளி : 17

"கெட்டிமேளம்... கெட்டிமேளம்..." அய்யரின் குரலை தொடர்ந்து ஒலித்த நாதஸ்வர ஓசையும், கூடி இருந்த உறவினர் கூட்டம் தூவிய பூ மழைக்கும் இடையில் ரஞ்சன் இதயாவின் கழுத்தில் தாலியை கட்டினான்.

மூத்தமகளின் திருமணம் முடிந்தது மீனாவுக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் மனதின் ஓரத்தில் வேதனை ஒன்று அரிப்பதை அவரால் தடுக்க முடியவில்லை. அருகில் நின்று கொண்டு இருந்த மதுவை திரும்பி பார்த்தார். உதட்டில் புன்னகை உறைய அவள் நின்று இருந்த கோலம் மனதை கவருவதாய் இருந்தாலும் அந்தப் புன்னகையில் ஜீவன் இல்லை என்பதை அவர் உணர்ந்தே இருந்தார். மகளின் ஜீவன் எது என்பது அவருக்குத் தெரியாதா... அதைத் தொலைத்து விட்டு நிற்பவளிடம் எப்படி உயிர்ப்பு இருக்கும்...?

"மது கண்ணு... ரொம்ப நேரமா நிற்கிறியே கண்ணு... கால் வலிக்கப் போகுதும்மா..." மதுவிடம் சொன்ன ரஞ்சனின் தாய் அவள் மறுக்க மறுக்க நாற்காலியை எடுத்து போட சொல்லி அதில் அவளை உட்கார பணித்தவர்... அவள் அருந்துவதற்குப் பழச்சாறை வரவழைத்து கொடுத்தார். அவரின் அதிகப்படியான உபசரிப்பு அவளைச் சற்று நெளிய வைத்தது என்னவோ உண்மை.

மது நடிக்கப் போகிறாள் என்றதும் முதல் ஆளாய் அவளது வீட்டிற்கு வந்தவர் அடுத்த முகூர்த்தத்தில் ரஞ்சன், இதயா திருமணத்தை நடத்த சம்மதித்து விட்டார்.

"நீங்க சீர் செய்றப்போ செஞ்சுக்கோங்க... அதான் இனி மது கண்ணு லட்சம் லட்சமாய்ச் சம்பாதிக்கப் போகுதே... அவள் அக்காவுக்குச் செய்ய மாட்டாளா என்ன...? இனி மேலும் சின்னஞ்சிறுசுகளைப் பிரிச்சு வைக்க வேண்டாம்..."

பெருந்தன்மையாய் சொல்வது போல் சொன்னாலும், ஆடுற மாட்டை எப்படி ஆடி கறக்கணும்... பாடுற மாட்டை எப்படிப் பாடி கறக்கணும் என்ற வித்தை அவருக்கு நன்கு

தெரிந்து இருந்தது. இதயாவை மருமகள் ஆக்கி கொண்ட பின் ஆண் இல்லாத மது வீட்டில் தன் மகனை வைத்து கொடி நாட்ட அவர் விரும்பினார். அவரைப் பொருத்தவரையில் இதயா பொன் முட்டையிடும் வாத்து... இதயாவை வைத்து மதுவை எப்படிச் சரி கட்டுவது என்று அவருக்குத் தெரியும்.

ரஞ்சன், இதயா திருமணத்தோடு உஷா, தன்ராஜ் திருமணத்தையும் சேர்த்து நடத்த வேண்டும் என்று சொன்ன போது அதை மட்டும் அவர் திட்டவட்டமாய் மறுத்துவிட்டார். "உங்களுக்கு வேணும்ன்னா பதினைஞ்சு வயசு பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி கொடுக்கிறது பெருமையான விசயமா இருக்கலாம்... ஆனால் எங்க உறவுக்காரங்க இதைக் கேள்விப்பட்டா நாக்கு மேல பல் போட்டு பேசுவாங்க... இந்த ஒரு விசயத்துக்கே நாங்க உங்க வீட்டில் சம்பந்தம் பண்ண கூடாது... ஆனா என்ன செய்ய என் பையன் உங்க பொண்ணை விரும்பிட்டானே..." என்று அவர் பேசிய போது யாராலும் அதை மறுக்கத் தோணவில்லை.

இத்தனை விசயங்கள் நடந்த போதும் இது எதுவும் ரஞ்சனுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டார் அந்தச் சாமார்த்தியசாலி அன்னை. இதயாவும் பணக்கார வாழ்வுக்கு ஆசைப்பட்டு இதைப் பற்றி ரஞ்சனிடம் மூச்சு விடவில்லை. இதோ வெற்றிகரமாக அவர்களின் திருமணம் முடிந்துவிட்டது. இதயா ஆசைப்பட்டது போல் கோடீஸ்வரனின் மனைவியாய் வாழ போய்விட்டாள்.

இதயா திருமணம் நடந்து முடிந்த மறுவாரமே உஷா, தன்ராஜ் திருமணம் எளிமையாய் கோவிலில் வைத்து நடந்தது. நடிப்பதற்காக மதுவிற்குக் கொடுக்கப்பட்ட முன் பணத்தைத் தன்ராஜ் தந்தையிடம் கொடுத்த பின் தான் அவர் திருமணத்திற்கே சம்மதித்தார். அதுவும் மீதி வரதட்சணையை வெகு சீக்கிரத்தில் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்.

முதலிரவு அன்று உஷா அவ்வளவு நாளாய் தன் மனதை உறுத்திய வருத்தத்தைத் தன்ராஜிடம் காண்பித்தாள். "என்னை யார்ன்னு கேட்டவங்க தானே நீங்க... என்னைத் தொடாதீங்க..." ஆசையுடன் அவள் அருகே வந்த கணவனிடத்தில் அவள் கோபம் கொள்ள, அவனோ அடக்கப்பட்ட கோபத்துடன் அவளைப் பார்த்தான்.

பின்னே என்ன அவன் விவரம் தெரிந்ததில் இருந்து இந்த மாதிரி முதலிரவுக்காக எத்தனை நாள் காத்திருந்தான். இது அவனின் எத்தனை நாள் கனவு... இதுக்கு முன்னர் அவளுடன் அவன் கூடி கலந்து இருந்தாலும் இந்த மாதிரி பூ மெத்தையில் அணு அணுவாய் நிதானமாய்த் தன்னவளை சுகிப்பது போல் வருமா... எல்லாவற்றையும் தன் மனைவி இப்படிப் பேசி நாசப்படுத்துகிறாளே என்று அவனுக்குக் கோபம் வந்தது. ஆனாலும் முயன்று தன்னை அடக்கி கொண்டான். கோபத்தைக் காட்ட வேண்டிய நேரம் இதுவல்லவே...

"எங்க அப்பாவை பத்தி உனக்குத் தெரியாது உஷ்... அவர் அடிச்சா எப்படி வலிக்கும் தெரியுமா...? அந்த மாதிரி அடி வாங்கினா நீ கூடத் தான் பொய் சொல்லுவ..." என்றவனைக் கண்டு அவளுக்குப் பாவமாய் இருந்தது. அன்று அவர் அடித்ததை அவள் தன் கண்ணால் பார்த்தாளே...

"ரொம்ப வலிச்சதா..."

"ம்... உஷ் ஐ லவ் யூம்மா... உன்னை விட்டா எனக்கு யார் இருக்கா...? எனக்கு அப்பா, அம்மா, தங்கச்சின்னு எல்லோரும் இருந்தும் இப்போ நான் யாரும் இல்லாத அநாதை..." என்று பரிதாபமாய்ச் சொன்னவனைக் கண்டு அவளுக்கு இரக்கம் சுரந்தது. தனக்காகத் தானே அவன் தன் குடும்பத்தைப் பிரிந்து வந்து இருக்கிறான் என்பதை உணர்ந்தவள் மனம் பாகாய் உருகியது கணவனுக்காக. அதன் பின் உஷாவை அவன் தன்வசப்படுத்திவதில் எந்தவித சிக்கலும் ஏற்படவில்லை.

சகோதரிகள் இருவரின் திருமணத்தையும் நல்லபடியாக முடித்த மதுவின் மனதில் அன்று கௌதம் பேசியதே காதில் ஒலித்தது. பழைய வீட்டை காலி செய்துவிட்டு புது வீடு செல்வதற்கு முன் கௌதம் வீட்டினரிடத்தில் விடைப்பெற வந்தாள். நாயகியும், ரெங்கநாதனும் தங்களின் துக்கத்தை மறைத்துக் கொண்டு அவளை மனதார வாழ்த்தினர். அவள் வருவதை அறிந்து அறையில் முடங்கிய கௌதமை சந்திக்க மனதை திடப்படுத்திக் கொண்டு உள்ளே சென்றாள்.

"கௌதம்..." அவள் வரவை உணர்ந்தாலும் திரும்பி பார்க்காமல் அமர்ந்து இருந்தவனின் கோபத்தின் அளவு அவளுக்குப் புரியாமல் இல்லை.

"கௌதம்..." அவள் மீண்டும் அழைத்த போது திரும்பி பார்த்தவன் விழிகள் ஆத்திரத்தில் சிவந்திருந்தது.

"நான் போய்ட்டு..." 'வர்றேன்' என்ற வார்த்தையை உள்ளுக்குள் விழுங்கியவள், "போறேன்..." என்றாள்.

அவள் சொன்ன வார்த்தையில் ஆத்திரத்துடன் எழுந்தவன் வேகத்தில் நாற்காலி தள்ளி சென்று விழுந்து சத்தம் எழுப்பியது.

"போறேன்... எவ்வளவு ஈசியா சொல்ற... எப்படிடி உனக்கு மனசு வந்தது...? ம்... மனசு அப்படி ஒண்ணு உனக்கு இருந்தா தானே..." அவனின் வார்த்தைகள் குத்தீட்டியாய் அவள் மனதை குத்தி கிழித்தது. ஏனோ அவளுக்கு இந்த வலி தேவையாய் இருந்தது... காயப்பட்ட அவள் மனதுக்கு இந்த வலி கூடச் சுகமாய் இருந்தது தான் ஆச்சிரியம்.

"இப்போ கூட உன் கை காலை உடைச்சு தூக்கிட்டுப் போய்த் தாலி கட்ட எனக்கு ஒரு நிமிசம் ஆகாது... ஆனா என் அம்மா என் கிட்ட வாங்கிய சத்தியம் என் கையைக் கட்டி போட்டு இருக்கு... என்ன சொக்கு பொடி போட்டு என் அம்மாவை மயக்குனடி... ராட்சசி எங்க அம்மாவையும் மட்டுமா மயக்கி இருக்க... அவங்க பையனையும் தானே..." என்றவன் பேச்சு அவளின் கண்களைக் கலங்க செய்தது.

"ஆனா ஒண்ணுடி உன்னை விட உன் அக்கா, தங்கச்சி பல மடங்கு உயர்ந்தவங்க... ஏன்னா அவங்க உன்னை மாதிரி இல்லாம அவங்க காதலுக்காக, காதலனுக்காகப் போராடுறாங்க பாரு... உண்மையில் அவங்க கிரேட் தான்... நீ என்னடான்னா உன் காதலை தாரவார்த்து கொடுத்துட்டு நிக்கிற... அந்த விதத்தில் அந்த ரஞ்சனும், தன்ராஜூம் கொடுத்து வச்சவங்க... ஆனா நான்...???" வேதனையுடன் கண்களை மூடியவன்,

"என் கண் முன் நிக்காதே போடி... என் வாழ்க்கையில் மறந்தும் உன்னை நான் சந்திக்கக் கூடாது... தப்பித் தவறி கூட என் கண்ணுல விழிந்துறாதே... அப்படி மட்டும் என் கண்ணில் விழுந்த உன் உயிரை எடுக்கக் கூடத் தயங்க மாட்டேன்... உன்னைக் காதலிச்ச பாவத்துக்கு என்னைக் கொலைக்காரன் ஆக்கிறாதே... போயிரு... இந்த வலியோடு என்னை விட்டு போயிரு... இதுக்கு மேல வலி தாங்குறதுக்கு என் மனசிலும், உடலிலும் தெம்பு இல்லை..." அதற்கு மேல் அவனை வேதனைப்படுத்த விரும்பாமல் பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு அங்கிருந்து ஓடி வந்துவிட்டாள்.

அதை இப்போது நினைத்து பார்த்தவள் கண்களில் கண்ணீர் விடாமல் வழிந்தது. "ஐ லவ் யூ கௌதம்..." அந்த வார்த்தைகள் மட்டுமே அவளுக்கு ஆறுதலாய், ஆதரவாய் இருப்பது போல் அவளது வாய் விடாமல் முணுமுணுத்தது.

மறுநாளில் இருந்து மது படப்பிடிப்பில் பிசியாகி போனாள். நிற்க நேரமில்லை என்பார்களே அது போல் காலில் சக்கரம் கட்டி கொள்ளாத குறையாக இறக்கை இல்லாமல் பறந்தாள். அந்த நேரம் தான் நாயகியின் உடல்நிலை மிகவும் மோசமாய் ஆனது. அவரை மருத்துவமனையில் சேர்த்து இருந்த விவரம் மதுவுக்குத் தெரிய வந்தது. ஆனால் அவரை அங்குச் சென்று பார்ப்பதற்குக் கூட அவளால் முடியவில்லை. நடிகை என்ற அந்தஸ்து அதற்கு அவளை அனுமதிக்கவில்லை. மீனா மட்டும் நாயகியை பார்த்துவிட்டு வந்தார்.

"கௌதம்..." மெல்ல அழைத்த அன்னையைக் கண்ட கௌதமின் கண்களில் கண்ணீர் வழிந்தது. எப்படி இருந்த அன்னை இப்படி ஆளே அடையாளம் தெரியாமல் உருக்குழைந்து போய்ப் படுத்திருந்தது அவனது நெஞ்சை அறுத்தது. புற்று நோய் இப்படி ஆளை உருக்கும் என்று அவன் நினைத்து கூடப் பார்த்தது இல்லை.

"அம்மா..." அவரின் கையைப் பிடித்துக் கொண்டான். நாயகியின் மறுபக்கம் அமர்ந்து இருந்த ரெங்கநாதனும் கண் கலங்கினார்.

"என் ஆயுள் முடிய போகுது..." அவர் சொல்லும் போதே ரெங்கநாதன் அவரின் வாயை மூடினார்.

"அப்படிச் சொல்லாதே நாயகி..."

"நீங்க எனக்கு வேணும்மா..." சின்னப்பிள்ளை போல் அழுது தேம்பிய மகனை கண்டு அவர் உள்ளம் ரத்தக் கண்ணீர் வடித்தது. காதல் தான் அவனுக்கு வேதனையைக் கொடுத்தது என்றால் தானும் ஆறுதலாய் அவனுடன் இருக்க முடியாமல் அதே வேதனையை மகனுக்குக் கொடுக்கிறோமே என்று அவரது மனம் கனத்துப் போனது.

"எனக்கு உயிர் போவது கூடப் பெருசா தெரியல... ஆனா உங்க ரெண்டு பேரையும் இப்படி அநாதையா விட்டுட்டு போறேனேன்னு நினைக்கும் போது மனசுக்கு கஷ்டமா இருக்கு..." நிறுத்தியவர் சற்று மூச்சு வாங்கிக் கொண்டு, "கௌதம்... எனக்காக ஒண்ணு செய்வியா..."

"நிச்சயம் செய்வேன்ம்மா... சொல்லுங்க..."

"மது பாவம்டா... சந்தர்ப்ப சூழ்நிலை அவளை இந்த மாதிரி நடக்க வச்சிருச்சு... அதுக்காக அவள் மேல் கோபப்படாதே... அவள் உன்னை ரொம்பவும் காதலிக்கிறாள்..."

தாயின் பேச்சில் இருந்த உண்மை அவனுக்குப் புரியாமல் இல்லை... அதுக்காக அவனின் காதலை கிள்ளுக்கீரை போல் தூக்கி எறிந்துவிட்டு அவள் போனதை அவனால் மறக்க முடியவில்லை... அவளை மன்னிக்கவும்

முடியவில்லை... உண்மை காதலுக்குத் துரோகத்தைப் பரிசாக அளித்துவிட்டு சென்ற துரோகி அல்லவா அவன் காதலி... அவளைப் பற்றி நினைக்கும் போதே அவன் முகம் உணர்ச்சிகளைத் தொலைத்து இறுகி போனது.

மகனின் முகமாற்றத்தை அந்த அன்னையால் உணர முடியாமல் இல்லை... மகனின் முகத்தை அன்போடு வருடியது அவரது மெலிந்திருந்த குச்சி கைகள்... "உன் வேதனை எனக்குப் புரியாமல் இல்லை கண்ணா... ஆனால் அவளையம் நினைத்து பாருடா... அவளுக்குன்னு யார் இருக்கா...? என்றாவது ஒருநாள் மீனா காலத்துக்கு அப்புறம் அவள் அநாதையாகி போனால் நீ தான் அவளுக்குத் துணையாய் இருக்கணும்..." என்றவரிடம் மௌனமாய்த் தலையசைத்தான். ஆனால் வாய்மொழியாய் எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை.

"இது போதும் கண்ணா..." என்றவர் ஒரு கையால் அவனின் கையைப் பிடித்துக் கொண்டு, "என்னங்க..." என்று கணவரை அழைத்து அவரின் கையை மறுகையால் பிடித்தவர், "நான் வர்றேன்... போற நேரத்துல வர்றேன்னு சொல்லுறாளேன்னு பார்க்கறீங்களா... நான் வருவேன்... மறுபிறவி எடுப்பேன்... கௌதமுக்கு மகளாக..." அழுத்தமாய்ச் சொன்னவரின் உயிர் பறவை அடுத்த நொடி அவரை விட்டுப் பறந்தது.

"அம்மா..." என்று கதறி அழுத கௌதமையும், மனைவி இறந்ததைக் கண்டு அழ கூட முடியாமல் இருந்த ரெங்கநாதனையும் தேற்றுவதற்கு அங்கு யாரும் இல்லை.

நாயகி இறந்ததை அறிந்த மது துயர் தாங்காமல் துடித்துப் போனாள். மற்றுமொரு அன்னையாய் அவளைத் தாங்கி, பாசம் காட்டியவர் அவர் அன்றோ... அவரின் மரணச் செய்தி கேட்டும் கடைசி முறையாய் அவரைச் சென்று பார்ப்பதற்குக் கூட முடியாத தன் நிலை மீது அவளுக்கு வெறுப்பாய் இருந்தது. தாயை இழந்து தவிக்கும் கௌதமிற்கு ஆறுதலாய், ஆதரவாய் இல்லாமல் போன தன்னை எண்ணி மனதுக்குள் சபித்தாள். அதை எல்லாம்

விடக் கொடுமை அன்புக்குரியவர் மரணத்திற்கு வாய்விட்டு அழ முடியாமல் தவிப்பது தான்.

ஏனெனில் நாளை அவளுக்குப் படப்படிப்பு இருந்தது அதுவும் காதல் காட்சி... இந்தச் சமயம் அவள் அழுது முகம் வீங்கி, கண் இமைகள் தடித்துப் படப்படிப்பக்கு சென்றால் நிச்சயம் நரேந்திரனின் கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும். அந்தளவுக்கு அவர் தன் தொழிலை தெய்வமாய் மதிப்பவர், நேசிப்பவர்... நடிப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பவர். திரைத்துறைக்கு அவளது அழகு கட்டாயம் தேவை... அதை அவளே சிதைத்தாள் என்றால் அங்கே அவளுக்கு இடம் இல்லை. இதை எல்லாம் நினைத்து பார்த்தவள் தன் உணர்வுகளைத் தொலைத்து, அழுகையை மறந்து தனக்குள் இறுகி போனாள்.

மீனா மட்டும் நாயகியின் இறப்பிற்குச் சென்றார். கௌதம் அவரிடம் மதுவை பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. அன்னை இறந்த துக்கம் ஒரு பக்கம் இருந்தாலும்... துக்கம் விசாரிக்கக் கூட வராதவளை அவன் மன்னிக்கத் தயாராய் இல்லை. மேலும் தன்னை ஏமாற்றிய நம்பிக்கை துரோகியை பற்றி விசாரிக்க அவனுக்கு மனம் வரவில்லை. மீனாவால் அவர்களுக்கு ஆறுதலை மட்டுமே சொல்ல முடிந்தது.

நாயகியின் மறைவிற்குப் பின் கௌதமும், ரெங்கநாதனும் மிகவும் கஷ்டப்பட்டனர். அவ்வளவு எளிதில் நாயகி மறைந்த துக்கத்தில் இருந்து அவர்களால் மீள முடியவில்லை. அதிலும் கௌதம் தான் மிகவும் கஷ்டப்பட்டான். அவ்வளவு நாள் நாயகி உடன் இருந்ததால் அவருடைய நோயின் தாக்கத்தின் முன் மதுவின் இழப்புப் பெரிதாக அவனைத் தாக்கவில்லை. அதையும் மீறி அந்த இழப்பு அவனைத் தாக்கும் போது அன்னையின் மடி அவனுக்கு ஆறுதலாய் இருந்தது. ஆனால் இப்போது அன்னையும் இல்லாமல், காதலையும் இழந்து அவனின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது.

அன்னையின் இழப்பையும், காதலியின் துரோகத்தையும் மறக்க முடியாமல் தவித்தவனுக்கு வரப்பிரசாதமாய் அமைந்தது குடிப்பழக்கம். முதன்முறையாய் குடித்துவிட்டு தள்ளாடி கொண்டு வந்தவனைக் கண்டு ரெங்கநாதன் அதிர்ந்து போனார்.

"என்னடா கண்ணா இது...? உன் அம்மா இழந்த துக்கம் எனக்கும் இருக்குடா... அதுக்காக இப்படிக் குடிச்சு கெட்டுப் போகலாமா...? அப்படிப் பார்த்தா உன்னை விட எனக்குத் தான்டா துக்கம் அதிகம்... இனி மேல் இந்தக் கர்மத்தை குடிக்காதே..." என்று கடிந்தவரை தலை சாய்த்து பார்த்தவன்,

"உங்களுக்கு மட்டும் தான் பொண்டாட்டி இழந்த துக்கம் இருக்குமா... எனக்கும் இருக்குப்பா... என் பொண்டாட்டி மது என்னை விட்டுட்டு போய்ட்டாப்பா... அந்த வலியை என்னால தாங்க முடியல... செத்துடலாம் போல இருக்குப்பா..." தந்தையின் மடியில் முகம் புதைத்தவன் முதன்முறையாய் காதலுக்காக வாய்விட்டு அழுதான். மகனின் துயரம் புரிந்த அந்தத் தந்தையால் என்ன ஆறுதல் சொல்லி அவனைத் தேற்றுவது என்று தெரியவில்லை.

அதன் பின் தினமும் குடித்துவிட்டு வருவது கௌதமிற்கு வாடிக்கையாய்ப் போனது. பார்த்துக் கொண்டு இருந்த வேலையையும் விட்டு விட்டான். எந்நேரமும் போதையில் இருந்தவன் அது தெளிவதற்கு இடம் கொடாமல் மேலும் மேலும் போதையேற்றிக் கொண்டான். அவனின் நிலை அறிந்து கணேஷ் அவனைத் தேடி வந்தான்... வேலை நேரம் போக மீதி நேரம் அவன் கூடவே இருந்தான். அதே போல் கௌதமின் பணத்தேவைகள் மற்றும் வீட்டு தேவைகளை அவனே பார்த்துக் கொண்டான்.

எத்தனை நாளைக்கு அவன் கையை எதிர்பார்க்க முடியும். ரெங்கநாதன் ஒரு முடிவுக்கு வந்தவராய் கணேஷிடம் தனக்கு ஒரு வேலை வாங்கித் தர சொன்னார். இந்த வயதில் அவர் வேலைக்குப் போவதை அவன் விரும்பவில்லை.

"அப்பா... நீங்க வேலைக்கு எல்லாம் போக வேணாம்... நான் பார்த்துக்கிறேன்..." என்றவனை மறுத்து வேலை வாங்கித் தர சொன்னவர் வேலைக்குச் சென்றார்.

மறந்தும் மகனை அவர் கடிந்து கொள்ளவில்லை. அவனின் துக்கத்தை மது பானம் தான் குறைக்கும் என்றால் அவன் போதையில் இருப்பதை அவரால் தடை சொல்ல முடியவில்லை. தன் நிலை மறந்து அவன் போதையில் விழுந்து கிடக்கும் போது அவரது பெத்த மனம் பதறும்...

மடிப்புக் கலையாமல் உடுத்தி கொண்டு முகச்சவரம் செய்து எப்போதும் புன்னகையுடன் பளிச்சென்று இருக்கும் மகனின் தோற்றத்தை நினைவில் கொண்டு வந்தவர் மனம் அவனின் இன்றைய நிலையை எண்ணி வருந்தத்தான் செய்தது. ஆனாலும் அவனை மாற்ற முயற்சி எடுக்கவில்லை. தான் சம்பாதித்து உட்கார வைத்து சோறு போட வேண்டும் என்று நினைத்த தன் தந்தை வயதான காலத்தில் வேலைக்குப் போய் உழைத்துத் தனக்குச் சோறு போடுவதை உணரும் நிலையில் கூட அவன் இல்லை. அந்தளவுக்குப் போதை அரக்கன் அவன் அறிவை மழுங்கடித்து இருந்தான்.
இதற்கிடையில் மதுவின் தாய் மீனா திடீரென்று இரத்த அழுத்தம் அதிகரித்து ஒரு பக்கம் கை கால் செயலிழந்து படுக்கையில் விழுந்தார். தனக்கு இருந்த ஒரே ஆதரவும் படுத்த படுக்கையாய் ஆனதில் மது மிகவும் உடைந்து போனாள். மாமியார் படுக்கையில் விழுந்தது தன்ராஜுக்குக் கொண்டாட்டமாய்ப் போய்விட்டது. அவனின் பார்வை மதுவை மோகமாய் மொய்க்க ஆரம்பித்தது. குழந்தை பெற்று இருந்த உஷா அவனுக்குக் கட்டில் சுகம் கொடுக்காததால் அவனின் பார்வை மதுவிடம் சென்றது.

மது நடிகை என்ற அலட்சியம், காதல் கை கூடாத தோல்வியில் மனம் தடுமாறி கொண்டிருப்பவள் என்ற நினைவு எல்லாம் சேர்ந்து அவனை மதுவிடம் நெருங்க சொல்லியது. உஷா கணவனின் எண்ணத்தை உணரவில்லை. உணரவில்லை என்பதை விட அந்தளவிற்கு அவளுக்கு அறிவும் இல்லை... பக்குவமும்

இல்லை. வாழ்க்கையை விளையாட்டாய் அனுபவித்துக் கொண்டு இருந்தாள் அந்தக் குழந்தை தாய்.

மதுவின் முதல் படம் வெளி வந்து நன்றாக ஓடியது. முதல் படத்திலேயே அவள் எல்லோர் கவனத்தையும் கவர்ந்துவிட்டாள். அடுத்தடுத்து பட வாய்ப்புகள் குவிந்தது. அவளது அந்தஸ்து, பொருளாதாரம் வளர்ந்தது. இந்நிலையில் இதயா பிரசவத்திற்காகப் பிறந்த வீட்டிற்கு வந்திருந்தாள். அப்போது வந்த இடத்தில் தன்ராஜ் சொல்ல கேட்டு தான் மதுவின் காதல் கதையும், அதைக் கொன்ற பாவத்தில் தன் தாய்க்கும் பெரும் பங்கு இருப்பதையும் ரஞ்சன் அறிந்தான்.

அவன் மனசாட்சி அவனைக் கொல்ல அன்றே தன் அன்னையிடம் சண்டையிட்டவன், "நீங்க இந்தப் பணத்துக்கு ஆசைப்பட்டுத் தானே அந்தச் சின்னப் பெண்ணோட வாழ்க்கையை அழிச்சீங்க... எவ்வளவு பெரிய கேவலம் எனக்கு... கல்யாண சந்தையில என்னை விலை பேசி இருக்கீங்க... எத்தனை அசிங்கம் இது... நான் இதயாவை தான் காதலிச்சேன்... அவ கொண்டு வர போற பணத்தை இல்லை... இனி இந்தப் பணத்தை வச்சிட்டு நீங்களே அழுங்க... எனக்குப் படிப்பு இருக்கு... என் மனைவி, குழந்தையைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்..." பெற்றோரை எதிர்த்து பேசிவிட்டு வந்தவனை அவன் மனைவி ஆதரவாய் வரவேற்கவில்லை. மாறாக,

"லூசுத்தனமான காரியத்தைப் பண்ணிட்டு வந்து இருக்கீங்களே... அவ்வளவு சொத்தையும் வேணாம்ன்னு ரொம்ப ஈசியா சொல்லிட்டு வந்தீட்டீங்க... பணத்தோட அருமை கொஞ்சமாவது தெரிஞ்சா தானே... என்னால எல்லாம் உங்க மாச சம்பளத்துல கஷ்டப்பட முடியாது... ஒண்ணு உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போங்க... இல்லை என் அம்மா வீட்டோடு இருங்க..." தீர்மானமாய்ச் சொன்னவளை கண்டு அவனுக்கு அருவருப்பாய் இருந்தது.

இதயாவின் உண்மை முகத்தைக் கண்டவனுக்குப் 'போயும் போயும் இவளையா உருகி உருகி காதலித்தோம்' என்று

வேதனையாக இருந்தது. ஆனாலும் அவன் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

"என் கூட வர்றதா இருந்தா வா... இல்லை நீ மட்டும் உங்க அம்மா வீட்டில் இருந்துக்கோ..." கடினமாய்ச் சொன்னவனைப் பார்த்து,

"ஓகோ... அந்தளவுக்கு ஆகி போச்சா..." என்று கூக்குரலிட்டவள் அன்னையின் அறைக்கு வந்து அங்கு இருந்த தூக்க மாத்திரையை அள்ளி எடுத்து வாயில் போட... அவன் தான் பதறிப் போனான்.

"வயித்துல குழந்தை இருக்கும் போது ஏன் இப்படிப் பண்ற இதயா..." அவளைக் கடிந்து கொண்டே அவள் வாயை திறக்க அவன் முயற்சி செய்ய அவளோ அழுத்தமாய் நின்று இருந்தாள். அதைக் கண்டு மீனா பதறி அழ ஆரம்பிக்க... கடைசியில் ரஞ்சன் தான் விட்டு கொடுக்க வேண்டியதாய் போயிற்று.

"நீ சொல்ற மாதிரி கேட்கிறேன் இதயா... டேப்லெட்டை துப்பும்மா..." அவன் சொன்னதும் தான் தாமதம் அவ்வளவு நேரம் வாய்க்குள் உதப்பி வைத்து இருந்த மாத்திரைய துப்பினாள். அதைக் கையில் ஏந்தி குளியலறைக்குச் சென்ற கணவனைக் கண்டு அவள் கண்கள் வெற்றி பெருமிதத்தில் மின்னியது. ஆனால் பாவம் அவளுக்குத் தெரியவில்லை... தன் காதலை விலை கொடுத்து(கொன்று) பணத்தை வாங்கி இருப்பதை...

அன்று மனதளவில் செத்த ரஞ்சன் அதன் பின் உயிர்ப்பிக்கவில்லை. காதல் இல்லாவிட்டாலும் கடமைக்காக வாழ்ந்தான். அங்கிருந்த சமயத்தில் தான் தன்ராஜின் கேவலாமான பார்வை மதுவின் மீது விழுந்ததை உணர்ந்தவன் அவளுக்குப் பாதுகாப்பாய் இருக்க முடிவு செய்தான். பிணந்தின்னி கழுகுகளாய் வட்டமிட்ட இதயா, உஷா, தன்ராஜ் இவர்களிடம் இருந்து மதுவை காப்பாற்ற முயன்றான். அது அவனை இதயாவிடத்தில் வேறு மாதிரி பிரச்சினையை உண்டு பண்ணியது. அதை எல்லாம் கண்டு கொள்ளாமல் தான்

ரஞ்சன் மதுவிற்குப் பக்கபலமாக இருக்கிறான். அவனால் முடிந்தது தன்ராஜிடம் இருந்து மதுவை காப்பாற்றுவது மட்டுமே...

அன்றும் நன்றாகக் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்த கௌதம் அங்குத் தொலைக்காட்சியில் ஓடி கொண்டு இருந்த மது நடித்த படத்தின் பாடலை கண்டதும் ஆத்திரம் கொண்டவனாய் அதைத் தூக்கி போட்டு உடைத்தான். இதை அங்கு இருந்த ரெங்கநாதனும், கணேஷூம் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ரெங்கநாதன் அதிர்ச்சியில் திகைத்து இருக்க... கணேஷ் தான் கௌதமின் கன்னத்தில் ஓங்கி அடித்தான்.

"உன் மனசுல என்னத்தான்டா நினைச்சிட்டு இருக்க... யாருக்கு தான் மனசுக்குள்ள கவலை இல்லை... இதோ மனைவியை இழந்து தவிச்சிட்டு இருக்காரே அவருக்குக் கவலை இல்லையா..." ரெங்கநாதனை சுட்டி காட்டியவன், "ஏன் எனக்குக் கவலை இல்லையா... பிறந்ததுல இருந்து அப்பா, அம்மா யாருன்னே தெரியாம வளர்ந்தேனே எனக்கு இல்லாத கவலையா உனக்கு வந்திர போகுது... நாங்க என்ன தண்ணியா அடிக்கோம்... இந்த வயசுல அவர் சம்பாதிச்சு போட்டு உட்கார்ந்து சாப்பிடறது மட்டும் இல்லாம அந்தக் காசுல தண்ணி அடிச்சிட்டு வர்ற பாரு... உன்னை எல்லாம்..." பேசி கொண்டு போனவன் கௌதமின் முகம் போன போக்கை கண்டு நிறுத்தினான். அத்தனை வேதனை அந்த முகத்தில்... அதைத் தாங்க முடியாதவனாய் கணேஷ் அவனை அணைத்துக் கொண்டான்.

"டேய் மாப்பிள்ளை ஊரு உலகத்துக்கு அட்வைஸ் பண்ற ஆளுடா நீ... அப்படிப்பட்ட நீ இப்படி நடந்துக்கலாமா சொல்லு... லவ் பெயிலியர் யாருக்கு தான் இல்லை... அதுக்காகத் தண்ணி அடிக்கிறது ஒண்ணு தான் தீர்வா... அவ உன்னை விட்டுட்டு போனா இப்படித்தான் உன்னை நீயே அழிச்சுக்குவியா...? அவள் முன்னாடி தலை நிமிர்ந்து நிற்க வேண்டாமா... அதை விட்டுட்டு இப்படிக் குடிச்சிட்டு சீரழிஞ்சா எப்படி...? அவளே அண்ணாந்து பார்க்கிற அளவுக்கு நீ வளர்ந்து, உயர்ந்து காண்பிக்க வேணாமா...?"

என்றவனின் பேச்சில் தலைகுனிந்து நின்றான் கௌதம். ஆனால் அவனின் மனதுக்குள் கணேஷின் வார்த்தைகள் தீயை மூட்டிவிட்டது என்னமோ உண்மை...

மறுநாள் காலையில் எழுந்த கௌதமின் முகம் தெளிந்து இருந்தது அவனது மனதை போல... தான் திரைத்துறைக்குச் செல்ல போவதாக அவன் சொன்ன போது கணேஷ் மட்டும் அல்ல ரெங்கநாதனும் ஆச்சிரியத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார். ஏனெனில் திரைத்துறை மீதான கௌதமின் வெறுப்பு அவர்கள் இருவருக்கும் நன்கு தெரியும்.

"கௌதம் என்னப்பா சொல்ற...? உனக்குத் தான் சினிமான்னாலே பிடிக்காதே..." ரெங்கநாதன் வாய்விட்டு கேட்டு விட்டார்.

"ஆமாம் பிடிக்காது தான்... நன்றி கெட்ட உலகம் அது... இந்த உலகத்துலேயே நான் அதிகம் வெறுப்பது சினி பீல்ட்டை தான்... ஆனா..." கண்களை இறுக மூடி திறந்தவன்,

"அவளை நான் ஜெயக்கணும்ப்பா... அவளைப் பழிவாங்கணும்ப்பா..." என்றவன் முகத்தில் கொலைவெறித் தாண்டவமாடியது.

அதற்கு மேல் அவர்களால் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. திரைத்துறையின் உள்ளே நுழைவது அவ்வளவு எளிதான காரியம் இல்லை... வாய்ப்பை தேடி ஒவ்வொரு இடமாய் ஏறி இறங்கினான் கௌதம். ரெங்கநாதன் கூட மகன் படும் துன்பம் கண்டு தான் வேண்டும் என்றால் தெரிந்தவர்களிடம் கேட்டு பார்க்கவா என்று கேட்ட போது அவன் உறுதியாய் மறுத்து விட்டான். அவன் திரைத்துறையில் காலூன்ற அலைந்த நேரத்தில் கணேஷ் அவனுக்குப் பொருளாதார ரீதியாய் பக்கபலமாய் இருந்தான் என்றால் மிகையில்லை.

கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் போராடி கௌதமிற்குப் பட வாய்ப்புக் கிடைத்தது. அதற்கு அடுத்த வருடம் ஒரே படத்தில் திரைத்துறையின் இன்றியமையாத நடிகர்களுள்

அவனும் ஒருவன் ஆகிவிட்டான். அவன் தந்தை என்றதில் ரெங்கநாதன் பெயர் பல வருடங்களுக்குப் பின் பத்திரிக்கையில் வந்தது. அதைக் கண்டு அவர் கண்கள் ஆனந்த கண்ணீர் வடித்தது. மகனை வைத்து தந்தைக்குப் பல பட வாய்ப்புக்கள் வந்தது. ஆனால் அவர் அதை மறுத்துவிட்டார். அவர் பட்ட காயத்தை அவர் மறக்கவில்லை. திரைத்துறை வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டார்.

கணேஷ் தன் வேலையை விட்டு விட்டு கௌதமின் முழு நேர உதவியாளன் ஆனான். திரைத்துறைக்கு வந்தாலும் கௌதம் மதுவை பார்ப்பதை தவிர்க்க தான் செய்தான். அவள் கலந்து கொள்ளும் எந்த விழாவுக்கும் அவன் போக மாட்டான். யாருக்கும் தெரியாத வகையில் அதை அழகாய்த் தவிர்த்துவிடுவான். ஆனால் மதுவை பற்றிய செய்திகள் அவன் காதில் விழுந்து கொண்டே தான் இருந்தது. அப்போது தான் மது தனக்கு நம்பிக்கையான உதவியாளர் ஒருவரை தேடுவதை அறிந்த கௌதம் கணேஷின் காதலி மேகாவை அவளிடம் அனுப்பி வைத்தான். அந்தக் காரியத்தை அவன் ஏன் செய்தான் என்று அவனுக்கு இதுவரை புரியவில்லை.

அவன் மனதில் அவளைப் பழிவாங்க வேண்டும் அவளைத் தன்னைத் தேடி வரவழைத்துக் காலில் விழ வைக்க வேண்டும் என்ற வெறியில் இருந்தவன் ஒரு நாள் விருது வழங்கும் விழாவில் எதிர்பாராத விதமாய் அவளைச் சந்தித்தான். பழிவாங்க வேண்டும் என்று நினைத்தவன் அவளின் மை விழி காதலில் கட்டுண்டது விந்தையிலும் விந்தை... அவளைச் சந்தித்ததும் அவன் மனதில் இருந்த காதல் பூதாகரமாக விஸ்வரூபம் எடுத்தது. பழிவாங்கும் குணம் மறைந்து அவள் வேண்டும் என்ற தாபம் மட்டுமே மிஞ்சியது.

அவள் வேண்டும் என்று அவன் அவளை நெருங்கினால் கல்யாணம் வேண்டாம் என்கிறாள் ராட்சசி... அதான் சில பல சதி வேலை செய்து திருமணப் பந்தத்தில் அவளை இணைத்துவிட்டான். திருமணம் முடிந்து மகிழ்ச்சியாய்

கொண்டாட வேண்டிய தேனிலவை துக்கத்துடன் கொண்டாடிய ஒரே ஆள் உலகத்தில் அவன் ஒருவனாக மட்டுமே இருப்பான். உரிமையுடன் தொட வேண்டியவளை உரிமை இல்லாத மாதிரி காட்டி கொண்டு கூடிய அவலநிலை எந்த ஆண் மகனுக்கும் வர கூடாது.

இதோ இப்போதும் திருமணம் நடந்து முடிந்த பிறகும் அவனுடன் வாழ மாட்டேன் என்று அடம் பிடிக்கும் அவளை என்னத்தான் செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் எய்த கடைசிப் பிரம்மாஸ்திரம் மட்டும் சரியாக வேலை செய்தால் அவள் அவனைத் தேடி வருவது நிச்சயம். அந்த இறுமாப்பில் அவன் நம்பிக்கையுடன் அவள் தன்னைத் தேடி வரும் நாளை எதிர்பார்த்து வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தான்.

**************************

இன்று...

மதுவின் இன்றைய இரவை துக்கம் மொத்தமாய்க் குத்தகைக்கு எடுத்து இருந்ததோ...!!! அவள் கண்களில் ஒரு பொட்டுத் தூக்கம் வரவில்லை... அவளின் நினைவுகளைக் கௌதமே நிறைந்து இருந்தான். திடீரென்று அவளின் அலைப்பேசி அழைக்கக் கௌதம் தானோ என்ற எண்ணத்தில் அவசரமாய் அதை எடுக்க அதில் ஏதோ தெரியாத எண் ஒளிர்ந்தது.

"ம்ப்ச்..." என்று அதைத் தூக்கி எறிந்தாள். ஆனால் விடாமல் அது அலறியதில் அவள் முகம் வெளியறியது.

'ஒருவேளை அவனாக இருக்குமோ...' அச்சத்தில் உள்ளமும், உடலும் நடுங்க அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள். அவளின் நினைப்பை பொய்க்காமல் ஒலித்தது அவனது குரல்.

"ஹாய் பேபி... ஹவ் ஆர் யூ மை ஸ்வீட் ஹார்ட்...?" உருகி குழைந்து ஒலித்தது அவனது குரல். அதற்கு அவளிடத்தில் பதில் இல்லை என்றதும்.

"என்னை நியாபகம் இல்லையா பேபி... நான் தான் திவாகர்... எனக்கு உன்னை நல்லாவே நியாபகம் இருக்கு... உன்னை மட்டுமா..." இடைநிறுத்தியவன் தாபமாய், "உன் உடம்பில் உள்ள மச்சங்களும் கூட... ஹவ் செக்ஸி யூ ஆர்..." மறுமுனையில் அவன் விட்ட பெருமூச்சில் இங்கே மதுவின் உடல் அருவருப்பில் நெருப்பாய்த் தகித்தது.

## துளி : 18

"நீ... நீ..." அன்றைய நினைவில் மதுவுக்கு வார்த்தைகள் வராமல் தொண்டைக்குள் சதிராட்டம் ஆடியது. "அதை மறக்கலையா...?" தான் கேட்கும் கேள்வி எவ்வளவு அபத்தமானது என்று தெரிந்த போதிலும் அவளையும் அறியாமல் கேட்டு விட்டாள்.

"உன்னால மறக்க முடிஞ்சதா பேபி...?" ஒரு மாதிரி குரலில் கேட்ட திவாகர் தான் எதையும் மறக்கவில்லை என்று அவளுக்குக் குறிப்பாக உணர்த்தினான்.

மறக்கும் படியான காரியமா அவன் செய்தது...? மதுவுக்கு உடல் எல்லாம் மிளகாய் அரைத்து பூசியது போல் எரிந்தது.

"என்ன மறக்க முடியலை தானே...?" ஆர்வமும் ஆசையுடனும் கேட்டவன், "உன்னால மறக்க முடியலைங்கிறப்போ என்னால மட்டும் எப்படிப் பேபி...?" என்றவனின் குரலில் அப்பட்டமாய் விரகதாபம் தெரிந்தது.

"என்னை ஏன் இப்படிப் படுத்துற...? என்னை விட்டுரு... நா... நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை..." சொல்லும் போதே அவள் கண்களில் கரகரவெனக் கண்ணீர் வழிந்தது.

"உன்னை விட்டுறதா..." ஏதோ ஹாஸ்யம் கேட்டது போல் பலத்த குரலில் சிரித்தவன், "நான் எங்கே இருக்கேன் தெரியுமா..." அவளிடம் கேள்வி கேட்டவன் தானே பதிலும் சொன்னான்.

"ஆஸ்திரேலியா... இங்கே டைம் என்ன தெரியுமா...? ஏர்லி மார்னிங் 3.30... இந்த நேரத்தில் உனக்கு நான் கால் பண்றேன்னா எதுக்கு...?" அவளுக்குப் புரிந்து போனது எல்லாம் புரிந்து போனது. காலை சுத்தின பாம்பு கடிக்காம விடாது என்று.

"உன் மேரேஜ் விசயம் கேள்விப்பட்டதும் அதிர்ச்சியாகி உடனே கால் பண்ணிட்டேன்... என்ன டைம்ன்னு கூடப் பார்க்கல... அந்தளவுக்கு நீ என்னை ஆட்டிப்படைக்கிற

பேபி..." என்றவன், "உனக்கு ஒண்ணு தெரியுமா...? எனக்குத் தினமும் ஒரு பொண்ணு வேணும்... அப்படித் தினமும் என் கிட்ட வர்ற பொண்ணுங்கல்ல உன்னைத் தேடி தேடி நான் அலுத்து போறேன்... ஒருத்தி கூட உன்னை மாதிரி இல்லை... இப்போ கூட ஆஸ்திரேலியா கேர்ள் ஒருத்தி என்னைக் கட்டிப்பிடிச்சிட்டு படுத்து இருக்கா... ஆனா உன் கிட்ட உள்ள அந்த வெட்கம், தயக்கம், தவிப்பு அப்புறம் இயற்கையாகவே சிவக்கிற உன் கன்னங்கள் எல்லாம் இவ கிட்ட கிடையாது... இவ என்ன உலகத்துல எந்தப் பெண்ணிடத்திலும் இல்லை..."

"எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று ...
ஏதோ அது ஏதோ ...
அடி ஏதோ உன்னிடம் இருக்கிறது ..."

மெல்லிய குரலில் பாடியவன் குரல் அடுத்து ஆத்திரத்துடன் ஒலித்தது, "நாலு வருசம்... நான் இந்தியாவுக்கு வந்து நாலு வருசம் ஆகுது... இதுக்கு எல்லாம் காரணம் யாரு...? நீ தான்... என் நிம்மதியை குலைச்ச உன் நிம்மதியை நான் காவு வாங்க வேணாமா...? நீ மட்டும் கல்யணம் பண்ணிட்டு நிம்மதியா செட்டிலாக நான் விட்டிருவேனா என்ன...? வர்றேன் பேபி... நீ எதிர்பாராத நேரத்தில் உன் கண்முன் வந்து நிற்பேன்... உன் புருசன் கிட்ட சொல்லி வை...உன் மேல எனக்கு அப்புறம் தான் அவனுக்கு உரிமைன்னு... அதையும் மீறி அவன் உனக்கும் எனக்கும் இடையில் வந்தான் வை... அப்புறம் உயிரோடு இருக்க மாட்டான்..."

அவளின் பதிலை எதிர்பாராமல் அவன் வைத்துவிட மதுவோ அவனின் வார்த்தைகள் தந்த அதிர்ச்சியில் அப்படியே கல்லெனச் சமைந்தாள். இத்தனை நாள் அவள் எதற்காகக் கௌதமை மறுத்து வந்தாளோ அதை மெய்ப்பிக்கும் வண்ணம் அமைந்தது திவாகரின் பேச்சு. அவளுக்கு நன்கு தெரியும் திவாகர் கௌதமின் உயிருக்கு எமனாக வருவான் என்று... அதனால் தான் அவள் முடிந்தவரை கௌதமை தவிர்த்தது.

திருமணப் பந்தத்தில் மது கௌதமுடன் இணையாமல் போனாலும் திரை மறைவில் அவனுடன் வாழும் வாழ்க்கை நிச்சயம் திவாகரின் கவனத்துக்கு வந்து இருக்கவும் வாய்ப்பில்லை. திவாகரின் இந்த அநாவசிய மிரட்டலுக்கும் வாய்ப்பில்லை. இப்போது தன்னால் கௌதமுக்கு ஆபத்து என்றதும் அவளால் தாங்க முடியவில்லை. அடுத்து என்ன செய்வது... கௌதமை இந்த இக்கட்டில் இருந்து எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாமல் விழித்தாள்.

மறுநாள் விடிந்ததும் மது தனக்குள் முடிவு எடுத்து கொண்டாள். எந்தக் காரணமும் கொண்டும் கௌதமிடம் செல்ல கூடாது. தான் அவனைப் பிரிந்து இருப்பது தான் அவனுக்கு நல்லது... அவனது உயிர்க்கும் நல்லது... நினைப்பது எளிது ஆனால் அதைச் செயல்படுத்துவது...? அவளுக்குக் கண்ணீர் முட்டி கொண்டு வந்தது.

"போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேன்... எனக்கு ஏன் இந்த நிலைமையைக் கொடுத்தாய் கடவுளே... கணவன், பிள்ளைகள்ன்னு சராசரி வாழ்வு வாழ கூட எனக்கு அருகதை இல்லையா...? முதலில் நாயகி அத்தையோட ஆசையை நிறைவேத்தாம அவங்களைச் சாகடிச்சேன்... இப்போ கௌதமோட ஆசையை நிறைவேத்த முடியாம அவங்களை உயிரோடு சாகடிக்கிறேன்... அவங்க படற வேதனை பார்த்து எனக்கு மனசு வலிக்குது... அவங்க என்ன கேட்டாங்க... அவங்க மனைவியா வாழ தானே என்னை வர சொல்றாங்க... அந்தச் சாதாராண விருப்பத்தைக் கூட என்னால நிறைவேத்த முடியலையே..." வாய்விட்டு கதறிவள் அப்படியே உடைந்து போய் அழுதாள்.

எவ்வளவு நேரம் அழ முடியும்... கண்ணீரும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் வற்றிவிட்டாலும் அவளது மன துக்கம் மட்டும் கொஞ்சம் கூட வற்றவில்லை. பிறகு தன் மனதை தேற்றியவளாய் ஒரு முடிவுக்கு வந்தவளாய் தன் எண்ணத்தைச் செயலாற்ற தொடங்கினாள்.

தான் எப்போதும் வேலைக்கு வரும் நேரத்திற்கு முன்னரே வந்து விட்ட மேகா குற்றவுணர்வுடன் மதுவின் முன் நின்றாள். "குட்மார்னிங் மேம்... சாரி மேம்... நான்..." அவள் மேலே பேசும் முன் கையமர்த்தி அவளைத் தடுத்தவள்,

"உன் மேல் எந்தத் தப்பும் இல்லை மேகா... நான் தான் அந்த அக்ரீமெண்டை வாசிச்சு பார்த்து இருக்கணும்... அதைச் செய்யாதது என் தப்பு தான்..." என்று நிறுத்தியவள், "கௌதம் மேலும் எந்தத் தப்பும் இல்லை... அவராக இருப்பதால் தான் இந்தளவுக்குப் பொறுமையா இருக்காரு... வேற யாராவது இருந்திருந்தா நடந்து இருக்கிறதே வேற... தப்பு எல்லாம் என் மேல் இருக்கும் போது யாரையும் குறை சொல்லி பயன் இல்லை..." விரக்தியாய் வந்தது அவளது வார்த்தைகள்.

"போனதை நினைச்சு வருத்தப்படுறதுல எந்த அர்த்தமும் இல்லை... மேகா அந்தக் குட் வில் புரொடக்சன்ல கால்ஷீட் கேட்டாங்கல்ல... அதுக்கு ஓகே சொல்லிடு... வேற எந்தப் படம் வந்தாலும் மறுக்காமல் சரின்னு சொல்லிரு..." மேகாவிடம் சொன்னவள் அயர்வுடன் கண்களை மூடி கொண்டாள்.

அடுத்த ஐந்து நிமிடங்களில் சுவற்றில் அடித்த பந்தாகத் திரும்பி வந்தாள் மேகா. "மேம்... அவங்க வேற ஆக்ட்ரசை புக் பண்ணிட்டாங்களாம்... எல்லாப் புரொடக்சன்லேயும் இதே தான் சொல்றாங்க..." மேகா சொன்னது சற்று அதிர்ச்சியாகத் தான் இருந்தது மதுவுக்கு.

"காரணம் எதுவும் சொன்னாங்களா...?" மதுவின் கேள்விக்குப் பதில் எப்படிச் சொல்வது என்று மேகா தவிப்புடன் நின்று இருந்தாள்.

"எதுவா இருந்தாலும் பரவாயில்லை சொல்லு மேகா..."

"மேம்... உங்களுக்கு மேரேஜ் முடிந்ததால முன்ன மாதிரி மார்க்கெட் இருக்காதுன்னு சொல்றாங்க..."

"ஓ..." என்றவள் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை.

மாட்டில் இருந்து எவ்வளவு பால் கறக்க முடியுமா எல்லாவற்றையும் கறந்துவிட்டு அதைச் சக்கையாக்கிய பின் அதனால் எந்த உபயோகமும் இல்லை என்று தெரிந்த பின் அந்த மாட்டை அடி மாட்டுக்கு விற்று விடுவார்கள். அதே போல் தான் இந்தத் திரைப்படத்துறையும்... பெண்கள் அழகு இருக்கும் வரை அவர்களை உபயோகப்படுத்திச் சம்பாதித்து விட்டு அவர்களுக்குத் திருமணமானாலோ இல்லை கொஞ்சம் அழகு குறைந்தாலோ எதைப் பற்றியும் யோசிக்காமல் தயவு தாட்சண்யம் இன்றித் தூக்கி தூர எறிந்துவிடுகிறது.

இதற்கு விதிவிலக்கு ஆண்கள்... எத்தனை வயதானாலும் பேத்தி போன்ற பெண்களுடன் காதல் பாடலுக்கு நடனமாட அவர்கள் தயார்... அதைப் பார்த்து ரசிக்கவும் ரசிக கூட்டம் தயாராகத் தான் இருக்கிறது. இந்தச் சாதக நிலை ஏன் பெண்களுக்கு இல்லை... ஆண் எத்தனை வயதானாலும் ஆண் தான் என்ற சமுதாயத்தின் ஆணாதிக்கச் சிந்தனை தான் இங்கே பிரதிபலிக்கிறதோ... கடைசியில் அடிமாடாய்ச் செல்லும் மாடுகளும் பெண்ணும் ஒன்றாய்ப் போனது தான் இங்கே வேதனையான விசயம்...

விசயம் கேள்விப்பட்ட இதயா தான் குதித்தாள்... "நான் தான் அன்னைக்கே சொன்னேனே... நீ என் பேச்சை கேட்டியா... கடைசியில் அவன் பேச்சு கேட்டு இப்படிச் சான்ஸ் கிடைக்காம இருக்க... அவன் ஏதோ சதி திட்டம் தீட்டுறான்... பார்த்து ஜாக்கிரதையா இருந்துக்கோ..." என்ற அக்காவின் பேச்சுக்கு மதுவின் உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது.

'சாத்தான் வேதம் ஓதுது...' மனதுக்குள் வெறுப்பாய் நினைத்தவள் சகோதரியின் முகத்தைப் பார்க்க பிடிக்காமல் வேறு பக்கம் பார்த்தாள். ஆனால் இதயா சொல்வது தான் நடக்கப் போகிறது என்பது அப்போது அவளுக்குத் தெரியவில்லை.

அடுத்து வந்த பத்துத் தினங்கள் ஒருவித அழுத்தத்துடன் கழிந்தது மதுவுக்கு. ஏதோ பெரிய ஆபத்து தனக்கு வர

போவதாய் அவளது உள்ளுணர்வு அவளை அச்சுறுத்தியது. ஆனால் அந்த ஆபத்து திவாகர் மூலம் தான் வரும் என்று நினைத்தவள் நினைவு பொய்யானது... அவளுக்கு வந்த ஆபத்து அவளது மனங்கவர்ந்த காதலன் மூலமாக வந்து அவளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

ஆம்... அவளும் கௌதமும் நடித்த அந்தப் படம் சரியாகப் போகவில்லை. படத்தை வாங்கிய விநியோகஸ்தர்கள் கூட்டம் ஒன்றை கூட்டி மது தான் இந்த நஷ்டம் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏகமனதாக ஒரு தீர்மானம் எடுத்தனர். அந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்த எண்ணி அவளது வீட்டை முற்றுகையிட அடுத்து என்ன செய்வது என்று அவள் சற்று திகைத்து தான் போனாள்.

அப்போதும் அவள் கௌதமின் உதவியை நாடவில்லை. தனக்குப் பத்து நாள் கால அவகாசம் கொடுக்குமாறு வேண்டி கொண்டாள். இந்த விசயம் மேகா மூலம் கௌதமுக்கும் தெரிய வந்தது. அதை அவன் கேட்டு கொண்டானே ஒழிய அதைப் பற்றி மேலே எதுவும் பேசவில்லை. எப்படி இவ்வளவு பெரிய தொகையை அடைப்பது என்று மது சற்றுத் திணறித்தான் போனாள்.

இந்த ஐந்து வருட காலத்தில் அவள் சம்பாதித்தது என்று பெரியதாக எதுவும் இல்லை. இந்த வீடு மற்றும் புறநகர் பகுதியில் வாங்கிப் போட்ட சில ஏக்கர் நிலம் இது தான் அவளது சொத்தாக இருந்தது. அதையும் ரஞ்சன் தான் வற்புறுத்தி வாங்க வைத்தான். வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று கூட அவளுக்குத் தெரியாது. அதை எல்லாம் இதயா தான் பார்த்து கொள்கிறாள். ஏனெனில் சின்னச் சின்னச் செலவுக்குக் கூடத் தன்னை எதிர்பார்க்காமல் இருப்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு.

"இதயா... பேங்கில் எவ்வளவு பணம் இருக்குது...?" மது கேட்டதும் தான் தாமதம் இதயா படபடவென்று படபடத்து விட்டாள்.

"இங்கே ஆகுற செலவுக்கு நான் எங்கே இருந்து மிச்சம் பிடிக்க... வரவும் செலவும் சரியா தான் இருக்கு... இதில் அம்மாவோட செலவுக்கு வேற தனியா ஒரு தொகை போகுது... ஏதோ நானாகக் கண்டு இழுத்து பிடிச்சுக் குடும்பத்தைக் கொண்டு போறேன்... என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்கிறியே மது..." இதயா வைத்த ஒப்பாரியில் தான் என்ன கேட்டோம் என்பதை மறந்து போனாள்.

"இல்லைன்னா விடேன் இதயா... அதுக்கு ஏன் இப்படிக் கத்துற...?" சலிப்புடன் சொன்ன மது அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

பட வாய்ப்புகள் இல்லாமல் கையில் பணம் பெரிதாக இல்லை. இதில் இந்தக் கடன் வேறு... அந்தத் தொகையை நினைத்து பார்த்த மதுவுக்கு மலைப்பாக இருந்தது. இதை எப்படித் திருப்பிச் செலுத்தி மீள போகிறோம் என்று தெரியாமல் விழித்தாள். யோசித்து யோசித்துப் பார்த்தவளுக்குப் புலப்பட்ட ஒரே வழி அந்தப் புறநகர் பகுதியை விற்பது ஒன்று தான். கடனை அடைக்க முடியாமல் அவமானப்படுவதை விடச் சொத்துக்களை விற்பது மேல் என்ற முடிவுக்கு வந்தாள். இடத்தை விற்க ஏற்பாடு பண்ணும் போது தான் அதில் இருந்த சிக்கல் அவளுக்குத் தெரிய வந்தது.

கௌதமின் வக்கீல் என்று சொல்லி கொண்டு வந்த ஒருவர், "மேடம்... நான் கௌதம் சாரின் லாயர்... நீங்க உங்க கணவருக்கு உங்களுடைய அனைத்து அசையும், அசையா சொத்துக்களையும் அவருக்குக் கிப்ட்டா கொடுத்து இருக்கீங்க... அதுக்கான லீகல் பேப்பர்ஸ் இதோ..." சில காகிதத்தாளை எடுத்து அவள் புறம் நீட்டியவர்,

"அதனால உங்க கணவர் அனுமதி இல்லாமல் உங்க சொத்துக்களை நீங்க விற்க முடியாது..." அவர் நீட்டிய அத்தனை தாளையும் வாசித்துப் பார்த்தவளுக்கு உலகமே இருட்டி கொண்டு வந்தது. எவனை அவள் முழுதாய் நம்பி இருந்தாளோ அவன் இத்தனை பெரிய துரோகத்தைச்

செய்வான் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவரிடம் அந்தக் காகிதங்களை மறுபடியும் நீட்டியவள்,

"உங்க கௌதம் சார் கிட்ட சொல்லுங்க... அவரோட எல்லாச் சொத்துக்களையும் திருப்பிக் கொடுத்துடுறேன்னு... இந்த வீட்டையும் சேர்த்து..." வேறு எதையும் பேசவில்லை.

வக்கீல் சென்றதும் இதயா மதுவை திட்டி தீர்த்தாள்... "எனக்குத் தெரியும்... என்னைக்காவது ஒரு நாள் அவன் உன்னை நடுத்தெருவில் நிற்க வைப்பான்னு... ஆனா அது இவ்வளவு சீக்கிரம்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல..."

"இதயா தேவையில்லாம பேசாத... உனக்குப் பிடிக்கலன்னா வீட்டை போ... அதை விட்டுட்டுக் கௌதமை பத்தி தப்பா பேசின அதைப் பார்த்திட்டு நான் சும்மா இருக்க மாட்டேன்..." மது அவளை எச்சரிக்கவும்...

"இதுக்கு மேல அவன் வீட்டில் இருக்க எனக்கு என்ன பைத்தியமா பிடிச்சியிருக்கு..." என்ற இதயா வீட்டை விட்டுக் கிளம்பத் தயாரானாள். அவள் வீட்டை விட்டு வெளியேறுவதைக் கண்டு மது கொஞ்சம் கூட அலட்டி கொள்ளவில்லை.

இனி அவளுக்கு மதுவின் தயவு தேவையில்லை. தேவைக்கு அதிகமாய் மதுவிடம் இருந்து பணத்தைக் கறந்தாகிவிட்டது. இதற்கு மேல் மது கூட இருந்தால் அவளுக்கும், அன்னைக்கும் உட்கார வைத்து சோறு போட வேண்டி வருமோ என்ற பயத்தில் முதல் ஆளாய் வீட்டை விட்டு வெளியேறுவதில் குறியாய் இருந்தாள். அவள் போவதை கண்டு உஷா கலங்கி போனாள்.

"இதயா நீயும் போயிட்டா... எனக்கு யாரு இருக்கா...?" கண் கலங்கியவளை எரிச்சலுடன் பார்த்த இதயா,

"யாரும் இல்லைன்னு ஏன் சொல்ற... அதான் ராஜை பெத்தவங்க இருக்காங்கல்ல... அவங்க கிட்ட போ... உன் கிட்ட வரதட்சணை வாங்கி அவங்க பொண்ணுங்களைக் கரை சேர்க்க தெரிஞ்சது இல்ல... அதே மாதிரி உன்னைக்

காப்பாத்தவும் அவங்களுக்குக் கடமை இருக்கு..." தங்கைக்கு எடுத்து சொன்னாள்.

ரஞ்சன் தான் இதயாவின் முடிவு கேட்டு அதிர்ந்து போனான். "இதயா நீ பண்றது தப்பு... நோயாளி அத்தையை வச்சிக்கிட்டு மது என்ன பண்ணுவா...? பாவம் அவள்... நீ இந்த வீட்டில் இருக்க வேணாம்ன்னு நினைச்சது எனக்கு ரொம்பச் சந்தோசம் தான்... அதுக்காக அவங்களை இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போறது தப்பு... நாம வேணும்ன்னா அவங்களை நம்மளோட கூட்டிட்டு போகலாமா...?" அவன் கேட்டதும் தான் தாமதம் தன் நெற்றிக்கண்ணைத் திறந்தாள் இதயா.

"எவ்வளவு தைரியம் இருந்தா என் கிட்டேயே இப்படிச் சொல்வீங்க... என்ன உங்க கள்ளத் தொடர்பை தொடரலாம்ன்னு நினைக்கிறீங்களோ..." என்று கேட்டவளை அடுத்த நொடி அறைந்து இருந்தான் அவன்.

"இன்னொரு தடவை இப்படிப் பேசினே நான் மனுசனா இருக்க மாட்டேன்... நீ என்ன வேணா பேசிக்கோ... ஆனா நான் உன் கூட வர மாட்டேன்... மது, அத்தைக்குச் சப்போர்ட்டா இங்கே தான் இருக்கப் போறேன்..." ரஞ்சன் அறைந்ததில் ஏற்கெனவே வெகுண்டு இருந்தவள் அவனது பேச்சில் இன்னமும் வெகுண்டாள். நேரே மதுவிடம் சென்றவள்,

"என்னடி... இப்போ மயக்குறதுக்கு யாரும் கிடைக்கலன்னு என் புருசனை மயக்க பார்க்கிறியா...?" இதயாவின் பேச்சில் மது கூனிக்குறுகி போய்விட்டாள். ஏற்கெனவே கௌதமின் செயலில் மனமுடைந்து இருந்தவளை சகோதரியின் இந்த வார்த்தை இன்னமும் மனமுடைய செய்தது.

ரஞ்சனிடம் வந்து கைக்கூப்பிய மது, "மாமா... ஏதோ மானத்தோட வாழ்ந்துட்டு இருக்கேன்... அதையும் உங்க மனைவி கேவலப்படுத்திட்டாங்க... இதுக்கு மேல இங்கு இருந்தீங்கன்னா... இருக்கிற கொஞ்ச நஞ்ச மானத்தையும் உங்க மனைவி வாங்கிடுவாங்க... ப்ளீஸ் மாமா தயவுசெஞ்சு அவங்க கூடப் போயிடுங்க..."

"இந்த நிலைமைல எப்படி மது...?" ரஞ்சன் தயங்கினான்.

"எனக்கு வேற வழி தெரியல... ப்ளீஸ்..." என்றவள் அவன் காலில் விழ வர... ரஞ்சன் பதறிப் போனான்.

"அய்யோ என்னம்மா இது...?" என்றவன் அதுக்கு மேல் தாமதிக்கவில்லை... இதயாவோடு கிளம்பினான் கனத்த இதயத்தோடு.

உஷாவும் தன்ராஜூம் கிளம்பும் போது அவன் தன் மனைவியை முன்னால் போகச் சொல்லிவிட்டு மதுவிடம் வந்தவன், "மதுக்குட்டி... இதுக்குப் போய் நீ இடிஞ்சி போகத் தேவையில்லை... உன் கிட்ட தான் மூலதனமா உன் அழகு இருக்குதே... நான் வேணும்ன்னா பணத்துக்கு வேற ஏற்பாடு பண்ணவா..." ஈயென்று இளித்தவனைக் கண்டு மதுவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

"செருப்படி வாங்கும் முன் ஓடி போயிரு..." ஆத்திரத்தில் முகம் சிவக்க கத்தியவளை கண்டு பயந்து ஓடிவிட்டான் அந்தக் குள்ளநரி.

எல்லோரும் போனதும் ஓய்ந்து போன தோற்றத்துடன் அப்படியே அமர்ந்துவிட்டாள். அடுத்து அவளும் இந்த வீட்டை விட்டு கிளம்ப வேண்டும். கௌதமிற்குச் சொந்தமான இந்த வீட்டில் அதற்கு மேல் இருப்பதற்கு அவளுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை.

"ஏன் கௌதம் இப்படி ஒரு செயலை செஞ்சீங்க...? உங்களை நம்பியதற்கு எனக்கு நீங்க கொடுத்த தண்டனையா இது...? நான் உங்களைத் தேடி வரலை... கல்யாணம் வேணாம்ன்னு சொன்னா அதில் ஏதோ அர்த்தம் இருக்குன்னு உங்களுக்கு ஏன் புரியாம போச்சு... நீங்க என்னைப் புரிஞ்சிக்கிட்டது அவ்வளவு தானா..." மனதுக்குள் புலம்பியவளின் புலம்பல் கௌதமின் காதை சென்று அடைந்ததோ இல்லையோ திவாகரின் காதில் சென்று அடைந்தது.

"ஹாய் பேபி... இந்தத் திவாகர் இருக்கும் போது நீ எதுக்கும் கலங்க கூடாது... உனக்காக நான் இருக்கேன் பேபி... இது எல்லாம் எனக்குப் பிச்சை காசு... இப்பவே எல்லாப் பணத்தையும் அவங்க மூஞ்சில விட்டு எறியறேன் பாரு..." என்றபடி அவளின் அருகில் அமர்ந்தவனை அச்சத்துடன் அதே சமயம் அதிர்வுடன் பார்த்தாள் மது.

அப்போது தான் அங்கே வந்த மேகா திவாகரை கண்டு பிரமித்தாள். நெடுநெடுவென உயரத்தில் அழகாகக் கம்பீரமாக இருந்தவனின் அழகு பார்ப்பவர்களைக் கவர்வதாய் இருந்தது. அதற்கு மேகாவும் விதிவிலக்கு அல்ல... அவள் வெகு சுவாரஸ்யமாகத் திவாகரை பார்த்தாள். அவளின் நல்ல நேரமோ என்னமோ அவன் கண்ணில் மதுவை தவிர வேறு யாரும் விழவில்லை.

"பேபி நான் இருக்கும் போது இப்படி அழ கூடாது... ஓகே..." வெகு உரிமையாய் அவனின் கை அவளின் கண்ணீரை துடைக்கப் போக... மேகாவின் புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கியது. அவனின் செயலில் அருவருத்த மது தன்னிச்சையாய் பின்னுக்கு நகர்ந்து அமர்ந்தாள்.

"ஓகே... ஓகே... தொடல... அப்புறமா மொத்தமா தொட்டுக்கிறேன்..." என்றவன், "முதல் வேலையாய் உன் கடனை அடைப்பது தான் என் வேலை... பை பேபி..." என்றவன் மதுவின் கன்னம் தட்டி விடைப்பெற அவனை வெறுப்புடன் பார்த்தாள் அவள்.

'இவன் ஹீரோ இல்லை... வில்லன்...' என்று மனதுக்குள் நினைத்தாள் மேகா.

திவாகர் சென்றதும் மதுவுக்கு மனம் குமுறிக் கொண்டு வந்தது. இருக்கிற பிரச்சினை போதாது என்று இவன் வேறு இப்போது வந்து பிரச்சினை செய்கிறானே என்று மனதுக்குள் நொந்து போனாள். அதே சமயம் திவாகர் அவளின் கடன் முழுவதையும் அடைத்தால் என்றால் அதற்கு அப்புறம் தன் நிலை...??? காலம் முழுவதும் அவனின் கைப்பாவையாய்... அதை அவளால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை.

"மேம்..." மேகா அழைக்கவும் திரும்பி பார்த்தவள் அவளைக் கண்டதும் அவளது கண்ணில் கண்ணீர் பொங்கி கொண்டு வந்தது. முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள்,

"என்ன மேகா...?"

"மேம்..." மதுவின் ஓய்ந்த தோற்றத்தை கண்டு அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது.

"மேம்... என்னால் தான்..." மேலே பேச முடியவில்லை அவளால்... தடால் என்று மதுவின் காலில் விழுந்தாள் அவள். அவளின் செயலில் பதறி போய் எழுந்த மது,

"நீ என்ன பண்ணுவ மேகா... எல்லாம் என் விதி..." விரக்தியாய் சொன்னவள் அவளை எழுப்பிவிட்டாள்.

"நீ கிளம்பு மேகா... நாளையில் இருந்து நீ இங்கே வர வேணாம்..." என்றவள், "கொஞ்சம் இரு..." என்று சொன்னவள் உள்ளே சென்று பணத்தை எடுத்துக் கொண்டு வந்தவள், "என்னிடம் இது தான் இருக்கு வச்சுக்கோ மேகா..." என்க... அவளின் அந்தச் செயலில் மேகா அவளை அணைத்துக் கொண்டு கதறிவிட்டாள்.

"நீங்க என்ன சொன்னாலும் சரி மேம்... உங்களை விட்டு நான் போக மாட்டேன்... காலம் பூரா உங்க வீட்டில் வேலைக்காரியா நான் இருப்பேன்..." என்று உணர்ச்சிவசப்பட்டவள் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, "எனக்கு வெளியில் கொஞ்சம் வேலை இருக்கு... போயிட்டு வந்திடறேன்..." என்றவள் நேரே சென்ற இடம் கௌதமின் வீடு.

மேகாவின் நல்ல நேரம் கௌதம் வீட்டில் இருந்தான். "என்ன சொல்றா உங்க மேடம்...?" அவளைக் கண்டதும் ஆவலுடன் வரவேற்றவனை அவள் கோபமாய்ப் பார்த்தாள்.

"சார் நீங்க செஞ்ச வேலையால எங்க மேம் இப்போ நடுத்தெருவுல நிற்கிறாங்க... ஏன் சார் நீங்க அவங்களுக்கு ஹெல் பண்ண வரல... அவங்களா வரணும்ன்னு நீங்க

நினைச்சா அது இந்த ஜென்மத்தில் நடக்காது..." படபடவெனப் பேசியவளை கணேஷ் அடக்கினான்.

"மேகா... யாரை பார்த்து என்ன பேசுற...?"

"எல்லாம் தெரிஞ்சு தான் பேசுறன்... இனியும் உங்க சார் லேட் பண்ணினா... இன்னொருத்தன் இடையில் வந்து மேம்மை தூக்கிட்டு போயிருவான்..." என்றவளை புரியாமல் பார்த்தனர் இருவரும்.

"யாரை சொல்ற...?" மேகா திவாகரை பற்றிச் சொல்லவும் கௌதமின் முகம் கோபத்தைத் தத்தெடுத்தது.

"எங்க கதையில் இவ்வளவு நாள் வராமல் இப்போ என்ட்ரி கொடுக்கும் அந்த வில்லன் யாரது...?" ஆத்திரத்துடன் அவன் கேட்கும் போதே மேகாவின் அலைப்பேசி அடித்தது. எடுத்துக் காதில் வைத்தவள் பதற்றத்துடன்,

"இதோ வந்துடறேன் மேம்..." என்றபடி அலைப்பேசியை அணைத்தவள், "மேமோட அம்மாவுக்கு உடம்பு சரி இல்லாம ஹாஸ்பிட்டல்ல சேர்த்து இருக்காங்களாம்... நான் கிளம்பறேன்..." என்று கிளம்பியவள் பின் நின்று கௌதமிடம்,

"சார் மேமோட வாழ்க்கை இப்போ உங்க கையில் தான் இருக்கு... நல்ல முடிவா எடுங்க..." என்றவள் மேலே நடக்க...

"சிஸ்டர் நில்லுங்க.. நாங்களும் வர்றோம்..." என்ற கௌதம் கணேஷூடன் கிளம்பினான்.

மருத்துவமனையை அடைந்த கௌதம் உள்ளே விரைந்து செல்ல மற்ற இருவரும் அவனைப் பின் தொடர்ந்தனர். அங்கே ஐசியூவின் முன் நின்று இருந்த மதுவை கண்டதும் கௌதமின் கால்கள் ஒரு கணம் தயங்கியது. பின் விரைவாய் அவள் அருகில் சென்றான்.

"அம்மு..." அவளின் கலங்கிய தோற்றம் கண்டு அவனின் கண்கள் கலங்கியது. அவளின் இந்த நிலைக்குத் தானும் ஒரு காரணம் அல்லவா...

அவனைத் திரும்பி பார்த்தவள் கண்ணில் எப்போதும் அவனைப் பார்க்கும் போது தோன்றும் மின்னல் இல்லை... மாறாக அது தன் உயிர்ப்பை இழந்து இருந்தது. 'ஏன் இப்படிச் செய்தாய்...?' என்ற கேள்வியைத் தாங்கி இருந்தது. அவளின் முகம் சொல்லொண்ணா துயரை பிரதிபலித்தது.

"அம்மு..." என்றவன் அவள் அருகில் அமர்ந்து அவளை அணைத்துக் கொண்டான். அவளோ அவன் அணைப்பில் அடங்காமல் திமிற... அவனோ வலுக்கட்டாயமாய் அவளைத் தன் கையணைவில் வைத்துக் கொண்டான். கொஞ்சம் கொஞ்சமாய் அவனுக்குள் அடங்கிப் போனவள் அழுகையில் தேம்பினாள். அப்போது அங்கே வந்த கணேஷும், மேகாவும் இனி கௌதம் பார்த்து கொள்வான் என்று ஒதுங்கி நின்றார்கள்.

கௌதம் கண்களால் கணேஷை அழைத்தான்... "டாக்டர் கிட்ட கேட்டுட்டு வா கணேஷ்... எவ்வளவு செலவானாலும் பார்த்துக்கலாம்ன்னு சொல்லு..." அவன் சொன்னதைக் கேட்டு அங்கிருந்து சென்ற கணேஷ் அடுத்து பத்து நிமிடங்களில் திரும்பி வந்தான்.

"கௌதம்... பயப்படத் தேவையில்லையாம்... பிரஷர் கொஞ்சம் அதிகமாயிருக்கு அவ்வளவு தான்... இப்பவே ரூமுக்குக் கொண்டு வந்துருவாங்களாம்..." கணேஷ் சொன்னதும் கௌதமின் நெஞ்சில் முகம் புதைத்து இருந்த மது நிம்மதி உற்றவளாய் தலையை நிமிர்த்திப் பார்த்தாள்.

கௌதம் கணேஷிடம், "கணேஷ்... மதுவோட கடன் எல்லாத்தையும் ஒண்ணு விடாம அடைச்சிரு... அதுவும் அவன் அடைப்பதுக்கு முன்னாடி செஞ்சிரு... அப்புறம் மீடியாவுக்குச் சொல்லிரு... இன்னும் இரண்டு நாளில் எங்களோட ரிசப்சன் நடக்கும்ன்னு ஒரு அனௌன்ஸ்மென்ட் கொடுத்திரு..." மேலே சொல்ல போனவனைத் தடுத்த மது,

"கௌதம்..."

"ஷ்... பேசாம இருக்கணும்... நீ பேசி நான் நிறையக் கேட்டாச்சு... இனி நான் சொல்றதை நீ கேளு... இனியும் உன்னை விட்டு வச்சா புதுசு புதுசா வில்லன் முளைச்சிக்கிட்டே இருப்பாங்க... நான் சினிமாவுல தான் ஹீரோ... நிஜத்தில் நான் சாதாரண ஆள்... என்னால வில்லன்களை எல்லாம் பறந்து பறந்து அடிக்க முடியாது..." கேலி குரலில் கூறியவன் பின்,

"என் அம்மாவோட ஆசையைத் தான் நிறைவேத்த முடியல... முடிஞ்சா உங்க அம்மாவோட ஆசையையாவது நிறைவேத்து... உண்மையில் அவங்க மேல பாசம் இருந்தா..." கடின குரலில் சொல்லியவன் முகமும் கடினமாய் மாறியிருந்தது.

## துளி : 19

கடல் போல் விரிந்து பரந்து இருந்த அந்த அமைதியான வீட்டினுள் ஆர்ப்பாட்டமாய் நுழைந்தான் திவாகர். அவனின் அன்னை நாச்சியார் திடீரென்று அவனைக் கண்ட இன்ப அதிர்ச்சியில்,

"திவா..." சந்தோசமும் துக்கமும் முகத்தில் போட்டி போட அவருக்குப் பேசுவதற்கு வார்த்தை வரவில்லை.

"ஹாய் மாம்... எப்படி இருக்கீங்க...?" அம்மாவின் கன்னம் தொட்டு கொஞ்சியபடி பேசியவன், "ஐ ரியலி மிஸ் யூ மாம்... உங்களை மட்டும் இல்லை... உங்க சமையலையும் தான்..." என்றபடி அணைத்துக் கொள்ள அதுவரை மகனின் வரவை நம்ப முடியாமல் இருந்த நாச்சியார் என்ற சிலைக்கு உயிர் வந்தது.

"ஏம்ப்பா... இந்த அம்மாவை பார்க்க இப்பத்தான் உனக்கு நேரம் கிடைச்சதா...?" வெகு நாட்கள் இல்லை இல்லை வருடங்கள் கழித்துப் பார்க்கும் மகனை தன் கண்ணுக்குள் நிரப்பிக் கொண்டார் அந்த அன்பு தாய்.

"அதை உன் புருசன் கிட்ட சொல்லு... எப்போ கேட்டாலும் வராதே... வராதேன்னு சொன்னா நான் என்ன

பண்ணுவேன்... இனி யார் சொன்னாலும் நான் கேட்க போறது இல்லை... நான் இங்கே தான் இருக்கப் போறேன்..." அவன் சொல்லி கொண்டு இருக்கும் போதே...

"ஹாய் அண்ணா..." என்றபடி வந்தாள் அவனின் சின்னத் தங்கை தர்ஷினி. இவள் கல்லூரியில் படிக்கிறாள். மூத்த தங்கையைத் திருமணம் செய்து கொடுத்தாகி விட்டது.

"ஹாய் தர்ஷூ..." என்றபடி தங்கையை அணைத்து கொண்டவனை ஒரு குரல் தடுத்து நிறுத்தியது.

"தர்ஷி... இது என்ன கட்டிப் பிடிச்சிட்டு... அண்ணனா இருந்தாலும் வளர்ந்த ஆம்பிள்ளை கிட்ட கொஞ்சம் தள்ளி நின்னு பேசுறது நல்லது..." மகனை முறைத்துக் கொண்டு கடினமான முகத்துடன் அங்கே வந்தார் நம்பி. நம்பி பிரபல திரைப்படத் தாயாரிப்பாளர். அவரின் ஒரே செல்ல மகன் தான் இந்தத் திவாகர்.

"சாரி டாட்..." தந்தையின் கண்டிப்பில் அண்ணனிடம் இருந்து அவசரமாய் விலகினாள் தர்ஷினி.

"டாட்..." கோபத்துடன் கத்திய மகனை கொஞ்சமும் சட்டை செய்யாமல் மனைவி பக்கம் திரும்பியவர், "நாச்சி... அவன் கிட்ட சொல்லிரு... அடுத்தப் பிளைட்டை பிடிச்சு ஊரு போய்ச் சேர சொல்லி..." கடுமையுடன் மொழிந்தவர் தன் அலுவலக அறையை நோக்கி நடந்தார்.

"மாம்... இவர் மனசுல என்ன நினைச்சிட்டு இருக்காரு..."

"அப்பாவை பத்தி தான் தெரியுமே திவா..." கொதித்த மகனை சமாதானப்படுத்தியவர், "நீ வாப்பா... சாப்பிடலாம்..." அவனின் கைப்பிடித்து அழைக்க,

"ச்சு... நீங்க போங்க மாம்... இதை இப்படியே விடக் கூடாது... எனக்கு இன்னைக்கு ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும்..." தாயின் கரத்தை உதறியவன் தந்தையின் அறையை நோக்கி வேகமாக நடந்தான்.

கோபத்தில் மூச்சிரைக்கத் தன் முன் நின்ற மகனை அலட்சியமாய் நிமிர்ந்து பார்த்த நம்பி எதுவும் பேசாமல் தன் வேலைகளில் மூழ்க... திவாகர் ஆத்திரத்துடன் பல்லை கடித்தான்.

"டாட் நீங்க சொன்னதுக்கு என்ன அர்த்தம்...?" மகனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் சாவகாசமாய் அவனைப் பார்த்தவர்,

"ஏன்னு உனக்குத் தெரியாது...?" அவர் கேட்டதில் அவனின் முகம் கன்றிக் கறுத்தது.

"அவள் என் சிஸ்டர்... நீங்க அதை முதல்ல நியாபகம் வச்சுக்கோங்க..." தன்னைச் சமாளித்துக் கொண்டு பதில் அளித்தான்.

"ம்... அப்படியா...?" கேட்டவரின் குரலில் அநியாயத்திற்கு நக்கல் இருந்தது.

"டாட்... நீங்க பேசுறது ஒண்ணும் சரி இல்லை..."

"எதுடா சரி இல்லை..." சிங்கம் போல் கர்ஜித்தவர் கோபத்துடன் எழ... அவர் அமர்ந்திருந்த அந்தச் சொகுசு நாற்காலி சத்தத்துடன் தள்ளி போனது.

"உன் தங்கச்சியை விடச் சின்னப் பொண்ணுங்களை எல்லாம் கொஞ்சமும் இரக்கம் இல்லாமல் சீரழிச்சியே அதுக்குப் பேர் என்னடா...? ராஸ்கல்... உன்னை எல்லாம் அன்னைக்கே கொன்னு போட்டு இருக்கணும்..." அவனின் சட்டை காலரை கோபத்துடன் பற்றியவர், "அதை நான் ஏன் செய்யல தெரியுமா... உன் அம்மா முகத்துக்காகத் தான்... தான் பெத்தது வைரம்ன்னு நினைச்சிட்டு இருக்கா... ஆனா அது கண்ணாடி கல்லுன்னு அவளுக்குத் தெரியல... உன் சுயரூபம் மட்டும் அவளுக்குத் தெரிஞ்சது அவளே சோத்துல விசம் வச்சு உன்னைக் கொன்னுருவா..."

"என்னமோ ஊரு உலகத்துல நடக்காததையா நான் நடந்துக்கிட்டேன்... சும்மா சும்மா சவுண்ட் விடாதீங்க..."

அப்போதும் தன் தவறை உணராமல் அலட்சியமாய்ப் பேசியவனைக் கண்டு அவருக்கு அருவருப்பாய் இருந்தது.

"அது என்ன கண்றாவியோ... அதை எல்லாம் நீ வெளிநாட்டில் போய் வச்சிக்கோ... இங்கே வேணாம்... இங்கே எனக்குன்னு கௌரவம் இருக்கு... அதைக் கெடுத்துடாதே... நாலு வருசத்துக்கு முன்னாடி நீ செஞ்ச வேலைக்குப் பேப்பரில் நியூஸ் வந்து நாறிப் போயிருக்க வேண்டியவன்... உன் அம்மாவுக்காக நான் தலையிட்டு உன்னைக் காப்பாத்தினேன்... ஆனா இனியும் நீ திருந்தாம இருந்தா நானே உனக்குத் தண்டனை கொடுக்க வேண்டி வரும்..." கண்டிப்புடன் கூறியவரை அலட்சியத்துடன் பார்த்தவன்,

"அன்னைக்கு மட்டும் என்னை நீங்க தனியா செயல்பட வைச்சிருந்தீங்கன்னா எனக்கு இந்த ஒளிவு மறைவு வாழ்க்கை தேவைப்பட்டு இருக்காது... எல்லாம் உங்களால தான் டாட்..." குற்றம் சுமத்தியவனை எப்படித் திருத்துவது என்று அவருக்குச் சுத்தமாய்த் தெரியவில்லை.

"ஏண்டா உனக்குக் கொஞ்சம் கூட மனசாட்சி இல்லையா...? இந்த மாதிரி கேவலமான காரியம் பண்ணும் போது ஒரு நிமிசம் கூடவா உன் தங்கச்சிங்க நியாபகம் உனக்கு வரல...? உன்னை எல்லாம் என் பிள்ளைன்னு சொல்லவே எனக்கு வெட்கமா இருக்கு..."

"என் தங்கச்சிங்களுக்கு ஏன் அந்த நிலைமை வர போகுது... அவங்க எல்லாம் இளவரசிங்க... அன்னாடம் காய்ச்சிங்க கூட, காசுக்காகப் படுக்கிறவங்க கூட என் தங்கச்சிங்களைக் கம்பேர் பண்ணாதீங்க... " கடுமையாகச் சொன்னவன், " எல்லாரையும் என் தங்கச்சியா நினைச்சா நான் பொண்ணுங்களுக்கு எங்கே போவேன்...?" நக்கலாய் கூற...

"இதுக்கு எல்லாம் நல்லா அனுபவிக்கப் போறடா..." சபித்த தந்தையை அகங்காரம் மேலிட பார்த்தவன்,

"அது வரப்போ பார்த்துக்கலாம்... அது வரைக்கும் நல்லா அனுபவிச்சுக்கிறேன்..." என்றவன் அவரின் பதிலை எதிர்பார்க்காமல் அறையை விட்டு வெளியேறினான்.

அவன் போனதும் அப்படியே தோய்ந்து போய் நாற்காலியில் அமர்ந்தார் நம்பி. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் தலையில் கை வைத்தவர் மனம் யோசனையில் ஆழ்ந்தது. அதே யோசனையுடன் வெளிவந்தவர் கண்ணில் உணவு மேசையில் திவாகரை அமர வைத்து உணவு ஊட்டி கொண்டு இருந்த நாச்சியார் தென்பட்டார். அந்த முகத்தில் தெரிந்த அளவற்ற அன்பை கண்டு அவரின் மனம் துடித்தது.

'நாச்சி... உன் பிள்ளையின வண்டவாளம் உனக்குத் தெரிஞ்சா அதை உன்னால் தாங்க முடியுமா...?' அவரின் மனம் ஊமையாய் அழுதது. உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு ஐந்து தலைமுறைக்குச் சொத்துக்கள் இருந்தும் அவருக்கு மனதில் நிம்மதி இல்லை. எந்தப் புள்ளியில் தன் மகன் தவறிழைக்க ஆரம்பித்தான் என்று அவருக்குத் தெரியவில்லை.

*******************************

"கண்ணா... உன் கிட்ட இதை நான் சத்தியா எதிர்பார்க்கல..." ரெங்கநாதன் மகனை குற்றம் சாட்டினார். மீனாவுக்கு உடல்நலம் சரி இல்லை என்றதும் நேரே மருத்துவமனைக்கு வந்துவிட்டார் அவர். மீனாவிடம் உடல்நலத்தை விசாரித்தவர் தன் மகனின் செயல் கண்டு கோபம் அடைந்தார்.

"என்னப்பா நீங்க கூடப் புரிஞ்சிக்காம பேசுறீங்க...? எல்லாம் அம்முவுக்காகத் தான்..."

"என்னடா அம்முவுக்காக...? காதல் இருந்தா மட்டும் போதாது... அவளுக்கு ஒரு கௌரவக் குறைவுன்னா ஓடி வந்து உதவி செய்யணும்... அதை விட்டுட்டு அதுக்கு நீயே காரணமா இருந்தா என்ன செய்றது...?" அவனைக் கடிந்தவர் மதுவிடம் திரும்பி, "மது... உனக்கு இந்தப் பயல்

வேணாம்மா... நானே உனக்கு வேற மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..."

"அப்பா..." அவரின் பேச்சில் கௌதம் உண்மையாகவே அலறினான்.

"மது உண்மையா தான்ம்மா சொல்றேன்... உனக்காக இந்த மாமா இருக்கேன்... நீ எதுக்கும் கவலைப்படக் கூடாது..." ஏற்கெனவே கௌதமின் செயலில் காயப்பட்டுப் போயிருந்த மதுவின் மனம் அவரின் பேச்சில் ஆறுதல் அடைந்தது.

"மாமா..." அவரின் தோளில் சாய்ந்து விம்மினாள். அவரும் அவளைப் பாசத்துடன் அரவணைத்துக் கொண்டார்.

'இங்கே ஒரு மாமன் யங்கா ஹண்ட்சம்மா இருக்கேன்... அவள் கண்ணுக்கு என்னைத் தெரியல... ஆனா அந்த வயசான மாமா மட்டும் கண்ணுக்கு தெரியுறாரோ... உனக்கு இந்த ஓரவஞ்சனை ஆகாதுடி அம்மு...' மனதுக்குள் அவளைக் கடிந்தாலும் அவனின் கண்கள் மதுவை ஏக்கத்துடன் தழுவியது. அவனுக்கான உரிமையைப் பெற அவன் மனம் மௌனமாய்ப் போராடியது.

"போதும்... போதும்... ஓவரா சீன் போடாதீங்க... அப்புறம் இந்த ஹாஸ்பிட்டல் அம்மு விடுற கண்ணீரில் மூழ்க ஆரம்பிச்சிடும்..." கௌதமின் கிண்டலில் அங்கிருந்த அனைவரும் சிரித்தனர்.

படுக்கையில் இருந்த மீனாவின் முகத்திலும் புன்னகையின் சாயல். கௌதமை பக்கத்தில் அழைத்தவர், 'மதுவை கல்யாணம் பண்ணிக்கோ...' என்று சைகையால் சொல்ல... அதைப் புரிந்து கொண்டவன்,

"நானா அத்தை மாட்டேங்கிறேன்... உங்க பொண்ணு தான் வேணாம்ன்னு சொல்றா..." சிறு பிள்ளை போல் புகார் படித்தான் அவன்.

"நீங்க மட்டும் உங்க பொண்ணு சம்மதத்தை வாங்கிக் கொடுங்க இங்கேயே அம்மு கழுத்துல தாலி கட்டுறேன்..."

மீனா தன் மகளை அருகில் அழைத்தவர் பாசத்துடன் அவளின் முகத்தைத் தடவி கொடுத்தவர், 'கௌதமை கல்யாணம் பண்ணி கொள்...' என்று சைகையில் சொல்ல... அவளோ சம்மதம் சொல்லாமல் ஒருவித அழுத்தத்துடன் அமைதியாய் இருந்தாள்.

'அந்தத் திவாகர் கிட்ட இருந்து கௌதமால் மட்டும் தான் உன்னைக் காப்பாத்த முடியும்... நான் சொல்றதை கேளு...' என்றவரின் கண்களில் அச்சம் அப்பட்டமாய்த் தெரிந்தது. மீனா என்ன சொல்கிறார் என்று மற்றவர்களுக்குப் புரியவில்லை. ஏனெனில் திவாகரை பற்றி அவர்களுக்கு முழுதாய்த் தெரியாது அல்லவா...!!!

காலையில் நடந்தது அவரின் கண் முன் விரிந்தது. காலையில் திவாகர் மதுவிடம் பேசியது அனைத்தையும் ஒருக்களித்துச் சாத்தி இருந்த கதவின் மூலம் கேட்டு விட்டார். திவாகர் காலை சுத்திய பாம்பு என்று அன்று மது சொன்னதன் அர்த்தம் இன்று அவருக்குப் புரிந்தது. ஐயோ... இனி தன் மகளின் நிலை என்று மனதுக்குள் கலங்கியவருக்கு ரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது. அடுத்த நொடி கையும் காலும் வெட்டி வெட்டி இழுக்க ஆரம்பித்தது.

மூத்தமகளும், கடைசி மகளும் வீட்டை விட்டுப் போன போது கூட அவர் கலங்கவில்லை. மாறாக மகிழ்ச்சி தான் அடைந்தார். ஆனால் மீண்டும் அந்தத் திவாகர் மதுவின் வாழ்வில் வருவது கண்டு அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதன் விளைவு அவரின் உடல்நிலை மோசமாக ஆனது.

மகளிடம் கேட்டு ஒன்றும் வேலைக்காகப் போவது இல்லை என்று உணர்ந்தவர் கௌதமின் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணில் ஒற்றி கொண்டவர் பார்வையால் அவனைக் கெஞ்ச... அதன் பின் கௌதம் ஒரு நொடி கூடத் தாமதிக்கவில்லை.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க... வீட்டுக்குப் போனதும் கல்யாணத்தை வச்சுக்கலாம்

அத்தை..." என்றவன் திடுக்கிட்டுத் தன்னைப் பார்த்த மதுவின் முகத்தை மறந்தும் பார்க்காமல் கணேஷிடம் திரும்பி,

"கணேஷ் வா... வெளியில் கொஞ்சம் வேலை இருக்கு..." என்று அவனை அழைத்துச் சென்றான்.

"மது எனக்கு இப்போ தான் சந்தோசமா இருக்கு..." ரெங்கநாதன் மகிழ்ச்சியுடன் சொன்னார்.

"கங்கிராட்ஸ் மேம்..." மேகா வாழ்த்து சொல்ல... மீனா மகளின் கையை நெகிழ்ச்சியோடு பிடித்துக் கொண்டார். மதுவோ செய்வது அறியாது அமர்ந்து இருந்தாள்.

அன்று மாலை மீனா, மதுவை தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வந்த கௌதம் உடனேயே தங்கள் திருமணத்தை எளிமையாய் வீட்டினுள் நடத்த விருப்பம் கொண்டான். மதுவினால் இந்தத் திருமணத்தை மறுக்கவும் முடியவில்லை... வெறுக்கவும் முடியவில்லை. ஒரு மனம் கௌதம் வேண்டும் என்றது... மறுமனம் கௌதம் வேண்டாம் என்றது தன்னால் அவனுக்கு வரும் ஆபத்தை உணர்ந்து... ஆனால் எல்லாம் தன்னை மீறி நடந்து கொண்டு இருப்பதை உணர்ந்தவள் வேறுவழியின்றிப் பார்வையாளராய் வேடிக்கை பார்த்தாள்.

தான் வாங்கிக் கொடுத்த பட்டு புடவையில் எளிமையான அலங்காரத்தில் தேவதை போல் நின்று இருந்தவளை கண்டு கௌதமின் மனம் எப்போதும் போல் மயங்கி கிறங்கி போனது. கையில் தாலியை ஏந்தியவன் மனம் இந்த ஜென்ம பலனை அடைந்தார் போன்று பூரித்துப் போனது. மதுவின் கழுத்தின் அருகே தாலியை கொண்டு போனவன் ஒரு நொடி தயங்கி நின்றான். அதில் நிமிர்ந்து பார்த்த மதுவின் முகத்தை உற்றுப் பார்த்தான் அவன். அவள் கண்களில் எப்போதும் தோன்றும் வலி, வேதனையைத் தவிர்த்து கொஞ்சமே கொஞ்சம் என்றாலும் அதில் தெரிந்த மகிழச்சியில் அவனின் மனம் நிறைந்தது. தான் அவளை நிரம்ப வேதனைப்படுத்தி விட்டோமோ என்று மனதுக்குள் குமைந்தவன் அவளின் விழிகளில்

தெரிந்த மொழியில் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தான். அதன் பின் அவன் ஒரு நொடி கூடக் காத்திருக்கவில்லை. மதுவின் சங்கு கழுத்தில் மங்கலநாண் பூட்டி அவளைத் தன்னவளாய் ஆக்கி கொண்டான்.

எத்தனை நாள் தவம் இது... எத்தனை வருட காத்திருப்பு இது... எல்லாம் திருமணம் என்ற பந்தத்தில் ஒரு முடிவுக்கு வந்ததை மகிழ்ச்சியுடன் உணர்ந்தவன் கண்களின் ஓரம் கரித்தது. அவளின் கையை ஆசையுடன் இறுக பற்றிக் கொண்டவன் முதலில் தந்தையின் காலில் விழுந்தான்.

"நல்லா இருங்க..." என்ற ரெங்கநாதனின் கண்களில் கண்ணீர் மல்கியது. அவரின் அன்பு மனைவியின் கனவு அல்லவா... கௌதம், மதுவின் திருமணம்...

'நாயகி... நீ நினைச்ச மாதிரி நம்ம பையன் மதுவை கல்யாணம் பண்ணிக்கிட்டான்...' மனைவியை நினைத்து அவரின் உள்ளமும், கண்களும் கசிந்தது.

அடுத்து மீனாவின கால்களில் விழ படுத்த நிலையில் அவர்களை ஆசிர்வாதம் செய்தவர் கண்கள் கண்ணீரை சொரிந்தது. இனி மதுவை கௌதம் பார்த்து கொள்வான் என்ற நிம்மதி அவரின் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

அதன் பின் மதுவை பூஜையறைக்குச் சென்று விளக்கேத்த பணித்தார் மீனா. தாய் சொல்லை தட்டாமல் அங்குச் சென்றவள் தெய்வமாகி விட்ட நாயகியின் புகைப்படத்தை அங்கே கண்டதும் அவளின் கண்கள் குளமானது. அன்று அவர் நோயிற்று இருந்த அந்த நிலையிலும் தனக்காக, தன் உணர்வுகளைப் புரிந்து கொண்டு பரிந்து பேசியதை நினைத்து இன்று அவளுக்கு அழுகை வந்தது. அவளின் உணர்வுகளின் தடுமாற்றத்தை உணர்ந்தவனாய் அவள் அருகில் வந்த கௌதம்,

"அம்மு இனி நீ எதுக்கும் கலங்க கூடாது..." என்று அவளை ஆறுதலாய் அணைத்தவன் அவளுடன் இணைந்து

விளக்கேற்றி வைத்து அன்னையின் படத்தின் முன் இருவரும் விழுந்து வணங்கினர்.

"அப்பாடா இருந்த ஒரு தடையும் நீங்கியாச்சு... இப்போ தான் நிம்மதியா இருக்கு கண்ணம்மா... இனி நாம கல்யாணம் பண்ணிக்கலாம்... நாளைக்கே உன் அப்பா கிட்ட வந்து பொண்ணு கேட்கவா...?" கொஞ்சலாய் கேட்ட கணேஷ் மேகாவின் தோளின் மீது கைப் போட்டு அவளைத் தன் பக்கம் இழுக்க... அவனின் திடீர் செயலில் திகைத்தவள் மதுவை அச்சத்துடன் பார்த்தாள்.

அவள் நினைத்தது போல் மது புரியாமல் இருவரையும் மாறி மாறி பார்க்க... மேகா கணேஷின் விலாவில் தன் முழங்கையால் இடித்து, "மேம்..." என்று சொல்ல... அதில் கணேஷ் அவளை அவசரமாய் விடுவித்தவன் மதுவை பார்த்து அசடு வழிந்தான்.

"மேகா என்ன நடக்குது இங்கே...?"

"மேம்... நானும் கணேஷும் லவ்வர்ஸ்... கௌதம் சார் தான் என்னை உங்க கிட்ட அனுப்பி வச்சார்... மத்த விபரத்தை சாரிடமே கேட்டு தெரிஞ்சிக்கோங்க... பை மேம்..." என்றவள் மதுவிடம் இருந்து தப்பும் மார்க்கமாய்க் கணேஷை இழுத்துக் கொண்டு வெளியில் ஓடினாள்.

மது கேள்வியாய் கௌதமை பார்க்கவும் கௌதம், "அவள் சொல்றது எல்லாம் உண்மை தான்... உன்னைப் பத்தி தெரிஞ்சிக்கத் தான் அவளை உன் கிட்ட அனுப்பி வச்சேன்..." என்றவன் கணேஷ், மேகா காதல் கதையை அவளிடம் கூறினான். அதற்கு மது பதில் ஒன்றும் சொல்லவில்லை. அமைதியாய் அங்கிருந்து நகர்ந்துவிட்டாள்.

'கோபமாய் இருக்காளோ... ஏன் ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டேங்கிறா...' சிந்தனையில் மூழ்கினான் கௌதம்.

இரவு வந்து இருவருக்கும் வேண்டிய தனிமையைக் கொடுத்தது. அவனின் அறைக்குள் நுழைய தயங்கியபடி

நின்று இருந்தவளை தன் இரு கரம் கொண்டு தூக்கியவன், "அன்னைக்கு மட்டும் தைரியமா வர தெரிஞ்சது... இன்னைக்கு என்ன...? ம்..." அவளின் முகத்தோடு முகம் வைத்து கேட்டவன் அவள் சூடியிருந்த பூவின் வாசத்தில் மயங்கி நின்றான்.

"ச்சு... விடுங்க..." அவன் கைகளில் அவள் திமிறவும்...

"விடவாடி தாலி கட்டி இருக்கேன்... இனி விடுறதை பத்தி மூச் விடக் கூடாது..." அவளைக் கட்டிலில் இறக்கி விட்டவன் தானும் அவள் மேல் கவிழ்ந்தான்.

"ஏன் கௌதம் இப்படிச் செஞ்சீங்க...? உங்க கிட்ட நான் இதை எதிர்பார்க்கல..." என்றவளின் முகம் வேதனையைத் தத்தெடுத்தது. அவளின் பேச்சில் அவளை விட்டு விலகி அமர்ந்தான் அவன்.

"நீங்க இப்படி ஒரு துரோகம் பண்ணுவீங்கன்னு நான் கனவுல கூட நினைச்சு பார்க்கல..." அவளின் வார்த்தைகள் அவனுள் கனன்று கொண்டு இருந்த நெருப்பை விசிறி வைத்து விசிறி விட ஆத்திரத்துடன் ஒரு கையால் அவளின் தாடையைப் பற்றித் தன் பக்கமாய் இழுத்தவன்,

"நானும் தான்டி நினைச்சு இருந்தேன்... நீ எனக்குத் துரோகம் பண்ண மாட்டேன்னு... ஆனா நீ..." துயரத்துடன் நிறுத்தியவன், "நீ பண்ணிய துரோகத்தை விட நான் ஒண்ணும் பெருசா துரோகம் பண்ணிடல... அன்னைக்கு யாருக்காக என்னை விட்டு போனியோ அவங்க சுயரூபம் உனக்குத் தெரியணும், என்னைத் தேடி நீ வரணும்... நம்ம கல்யாணம் நடக்கணும்... அதுக்காகத் தான் உன் சொத்து எல்லாத்தையும் என் பெயருக்கு மாத்தினேன்... அப்பவும் நீ என்னைத் தேடி வரல... நான் தான் உன்னைத் தேடி வந்தேன்... மத்தப்படி துரோகம் பண்றதுக்காக இல்லை... துரோகம் பண்றவனா இருந்தா உன்னைத் தேடி நான் வந்து இருக்க மாட்டேன்... துரோகமாம் துரோகம்..." ஆத்திரத்துடன் அவளை உதறியவன் அலமாரி திறந்து கத்தை காகிதத்தாளை அவளின் முன் விசிறியடித்தான்.

"படிக்கத் தெரியும் தானே நல்லா படிச்சு பாரு... உன்னிடம் உள்ள சொத்தை விடப் பல மடங்கு அதிகமான என்னுடைய எல்லாச் சொத்துக்களையும் உன் பெயரில் எழுதி வைச்சிருக்கேன்... அதுவும் உன் சொத்தை எழுதி வாங்குறதுக்கு ஒரு வாரத்துக்கு முன்னாடியே... இதோ இதையும் படிச்சு பாரு... நீ எனக்கு எழுதி கொடுத்த சொத்து அத்தனையையும் உன் பெயருக்கே திருப்பி மாத்தி எழுதிட்டேன்... நான் போய் உனக்குத் துரோகம் பண்ணுவேனா... அப்படியே பண்ணினாலும் அது உன்னை என் கூடத் தக்க வச்சிக்கிறதுக்காக மட்டும் தான் இருக்கும்..."

அவனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனின் நேசத்தைப் பறை சாற்றியது. தனக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்யும் அவனின் காதல் முன்னால் தன்னுடைய காதல் கடுகாய்த் தெரிந்தது அவளுக்கு... நொடி நேரம் கூட அவள் யோசிக்கவில்லை...

"கௌதம்..." என்று கதறிக் கொண்டே அவனின் காலில் சரண்டைந்தாள். அவளின் செயலில் பதறி போனவன்,

"ஹேய் அம்மு என்ன இது...? எழுந்திரு..." அவளை அவன் தூக்க முயல... அவளோ எழாமல் இது நாள் வரை தான் அவனுக்குச் செய்த துரோகத்தை, பாவத்தைத் தன் கண்ணீர் கொண்டு அவனின் பாதத்தைக் கழுவினாள்.

"என்னை மன்னிச்சிருங்க..." அவனின் காலை பிடித்துக் கொண்டு அவள் அழ... அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவன்,

"அம்மு ப்ளீஸ் அழாதேடி..." அவனின் கண்களும் கலங்கியது. அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"என்னைப் புரிஞ்சிக்கிட்டியே... எனக்கு அதுவே போதும்..." அவளை அணைத்தவாறு எழுந்தவன் அவளைக் கட்டிலில் அமர வைத்து அவளின் அழுத விழிகளைத் துடைத்துவிட்டான்.

அருகில் இருந்த பாலை எடுத்து ஊற்றி அவளிடம் கொடுத்தான். வறண்டு இருந்த தொண்டைக்கு அது தேவையாய் இருக்க மறுக்காமல் வாங்கிக் குடித்தாள். அவள் பாதிக் குடித்துக் கொண்டு இருக்கும் போதே தம்பளரை பிடுங்கியவனை அவள் கேள்வியாய் பார்க்க...

"புருசன் குடிச்ச எச்சில் பாலை தான் பொண்டாட்டி குடிக்கணும்... ஆனா நம்ம கதை தான் தலைகீழா இருக்கே... அதான் புதுமையா நீ குடிச்ச பிறகு நான் குடிக்கிறேன்..." நமட்டு சிரிப்புடன் கூறியவன் மீதி பாலை ஒரே மடக்கில் குடித்து முடித்தான். அவனின் பேச்சில், செயலில் அவள் முகம் செவ்வானமானது.

"கௌதம்..." அருகில் அமர்ந்தவன் நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள்.

"என்னடி வச்சியிருக்கக் கௌதமுக்கு..." என்றவனின் குரலில் கிறக்கம் வழிந்து ஓடியது.

"என் கிட்ட அப்படி என்ன இருக்குன்னு என்னைக் காதலிச்சீங்க...? உங்க காதலுக்கு முன்னாடி என் காதல் எல்லாம் தூசு... உங்களை ரொம்பக் காயப்படுத்திட்டேன் இல்லையா கௌதம்...?" என்றவளின் கண்ணில் நீர் நிறைந்தது.

அவளின் முகத்தைத் தன் இரு கரம் கொண்டு நிமிர்த்தியவன் தன் இரு கட்டை விரல் கொண்டு அவளது கண்ணீரை துடைத்தவன், "இவ்வளவு நாள் நீ அழுதது போதும்... உன்னோட விழிநீரை தாங்க தான் நான் வந்துட்டேனே... இனி மேல் எதுக்காகவும் நீ அழ கூடாது..." என்றவன் அவளின் இரு விழிகளில் இதமாய் முத்தமிட்டான்.

"மாமா..." என்றவள் காற்று கூடப் புகாதபடி அவனை இறுக கட்டி கொண்டாள். பதிலுக்கு அவனும் அவளை இறுக அணைத்துக் கொண்டு அப்படியே அமைதியாய் அமர்ந்து இருந்தான்.

அன்று போல் அவனின் கைகள் செய்யும் குறும்புத்தனத்தை எதிர்பார்த்து மயக்கத்துடன் காத்திருந்தவள் அது கிட்டாமல் ஒருவித ஏமாற்றத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"மாமா..." தாபத்துடன் அழைத்தவள் அவனின் சட்டை காலரை பற்றி இழுத்து அதில் முகம் பதித்தாள். ஏதோ யோசனையில் இருந்தவன் அவளின் செயலில் அவளைக் குனிந்து பார்த்தான். கண்கள் மூடி அவள் இருந்த விதம் அவளின் மனநிலையைத் தெளிவாய் படம் பிடித்துக் காட்ட சிரித்துக் கொண்டே அவள் காதோரம் குனிந்தவன்,

"என்னடி ஸ்லீப்பிங் டோஸ் வேணுமா..." என்று கிசுகிசுக்க...

"ம்... ம்..." ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னவளை அதையும் சொல்லவிடாமல் தடை செய்தான் தன் இதழ்களால்.

அதில் மயங்கியவள் மனதில் திவகாரின் நினைவு பின்னுக்குச் சென்றது. அவள் நினைவில் நின்றது எல்லாம் கௌதம் மட்டுமே. முதன் முறையாக மனதில் எந்தவித சஞ்சலமும் இல்லாமல் இணைந்த இருவரின் மனமும் நிறைந்து கணப்பட்டது. தனக்கான இணையைத் தேடி களைத்து அதன் பின் அதைக் கண்டதும் எழும் ஆவேச காதல் மட்டுமே அங்கே இருவரையும் ஆட்சி செய்தது. கிடைக்கவே கிடைக்காது என்று ஏங்கிய கைப் பொருள் கையில் கிடைத்தால் கொஞ்சி கொஞ்சி கொண்டாடுவோமே அந்த மனநிலையில் இருவரும் இருந்தனர். அவர்களின் மாசற்ற காதலின் மதிப்புக்கு முன் காகிதத்தாளின் சொத்துக்களின் மதிப்பு கேட்பாரற்று கீழே கிடந்தது.

மது கூடலின் அயர்வில் கண்மூட கௌதமோ அவளை அணைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தான். அவன் மதுவின் கழுத்தில் தாலி கட்டும் சமயம் அவளின் விழிகளில் தெரிந்த வேதனை கலந்த மகிழ்ச்சியையும் மீறி வெளிப்பட்ட அச்சம் அவனின் மனதுக்குள் பலவித யோசனையை விதைத்தது. அவளின் அச்சத்துக்கு என்ன

காரணம் என்று யோசித்தவனின் நினைவில் மேகா கூறிய திவாகர் வந்தான். அவனின் வார்த்தைகளையும், மது திருமணம் வேண்டாம் சொன்னதற்கான காரணத்தையும், அவளின் அச்சத்தையும் இணைத்து பார்த்தவனுக்கு ஏதோ புரிந்தது. ஆனால் புரிந்த விசயம் தான் அவ்வளவு உவப்பானதாய் இல்லை.

'அந்தத் திவாகரை...' ஆத்திரமாய்ப் பல்லை கடித்தவன் கண்கள் தீக்கங்கு போல் ஜொலித்தது. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிட ஆரம்பித்தான். அந்தத் திவாகரை பற்றி எக்காரணம் கொண்டும் மதுவிடம் கேட்க கூடாது என்று முடிவு எடுத்தவன் தானே களத்தில் இறங்கி அந்தத் திவாகரை சந்திக்க நினைத்தான். ஆனால் எதிர்பாராவிதமாய் அந்தத் திவாகரே வலிய வந்து கௌதமை சந்தித்தான்.
அதிகாலையில் ஆழ்ந்த நித்திரையில் இருந்த மதுவின் நெற்றியை யாரோ வருடியது போல் இருக்கத் திடுக்கிட்டுக் கண்களை விழித்தவள் அங்கே தன் கணவன் கௌதமை கண்டதும் மந்தகாச புன்னகையுடன் அவனைத் தன்னோடு சேர்த்து அணைக்க...

"ஹேய் அம்மு விடுடி... சர்ட் கசங்க போகுது..." அவனின் குரலில் விலகல் இருந்தாலும் அவனோ விலகாமல் அவளின் கைகளுக்குள் வாகாய் அடங்க தான் செய்தான். அவனின் வார்த்தையில் அவனை விடுவித்தவள் தன் கண்களை நன்கு திறந்து பார்த்தாள்.

வெளியில் செல்வது போல் உடுத்தி இருந்தவனைக் கண்டதும் அவளின் கண்கள் அன்னிச்சையாய் கடிகாரத்தைப் பார்த்தது. 'அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து எங்குச் செல்கிறான்...?' யோசனையுடன் அவள் கேட்கும் முன் அவனே வாய்த் திறந்தான்.

"இன்னைக்கு ஒரு முக்கியமான ஷூட்டிங் இருக்குடா... போயாகணும்... இன்னும் கொஞ்ச நாள் தான் அம்மு... எல்லாக் கமிட்மென்ட்டையும் முடிச்சிட்டு உனக்கு நான்...

எனக்கு நீன்னு... நமக்குன்னு உண்டான தனி உலகத்தில் நீயும், நானும் மட்டுமாய்..."

அவளின் காதோரம் கிசுகிசுத்த அவனது குரலில் அவளது உள்ளம் மயங்கியது. அவன் சொன்னதின் அர்த்தமோ வேறு... அதை அவள் எடுத்துக் கொண்ட அர்த்தமோ வேறு... எல்லாக் கணவனையும் போல் தன் கணவனும் தன்னுடன் இருக்க விரும்புகிறான் என்று மட்டும் நினைத்தாள். அவனின் விருப்பத்தின் அளவு அந்நேரம் அவளுக்குத் தெரிந்து இருக்கவில்லை. தெரியும் போது அவள் உணர்வாள் அவனின் காதலின் ஆழத்தை...

அவளது நெற்றியில் மீண்டும் அவன் இதழ் பதித்து நிமிர்ந்த போது அவளது கை அவனைப் போக விடாமல் தடை செய்தது.

"என்னடி...?" அவளைத் தன் வயிற்றோடு அணைத்துக் கொண்டான். அவனுக்கும் போக மனம் இல்லையோ...

"நீங்க எங்கேயும் போக வேண்டாமே..." என்றவளின் வார்த்தையில் இருந்த நடுக்கம் உணர்ந்து அவன் அவளது முகத்தை நிமிர்த்த... நேற்று பார்த்த அவளது கண்களின் அச்சம் இன்றும் அவளது கண்களில் மிச்சம் இருந்ததைக் கண்டு யோசனையாய் பார்த்தவன்,

"என் அம்முவுக்கு என்ன பயம்... ம்...?" கேட்டவனிடத்தில் என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

அந்தத் திவாகரால் அவனுக்கு ஆபத்து என்பதை அவள் எப்படி உரைப்பாள். அப்படியே அதை அவள் உரைத்தாலும், 'அந்தத் திவாகர் யார்...? அவனால் எனக்கு ஏன் ஆபத்து...?' என்ற கேள்விகள் கௌதமிடத்தில் முளைக்கும். அதன் பின் திவாகருக்கும், அவளுக்கும் இடையில் நடந்த அந்த அசிங்கத்தைக் கௌதமிடம் சொல்ல வேண்டி வரும்... அதன் பின்... நினைத்தவள் நெஞ்சம் குலுங்கியது. அவளது மனக்கண்ணில் திவாகரை கொலை செய்துவிட்டுக் கையில் விலங்கோடு நிற்கும் கௌதமின் தோற்றம் வலம் வந்து அவளை வேதனை கொள்ளச் செய்தது.

'கடவுளே...' என்று கண்களை மூடியவளின் விழி வழியே வழிய தயாராக இருந்த கண்ணீரை கண்ட கௌதம் அதைத் தாங்கினான் தன் இதழ்களால்... கண்களைத் திறந்தவளின் பார்வை அவனைப் பாவமாய்ப் பார்த்தது.

"இங்கே பார் அம்மு... உனக்காக நான் இருக்கேன்... இவ்வளவு நாள் எப்படியோ... இனி மேல் எந்தத் துன்பமும் உன்னை நெருங்காதபடி நான் பார்த்துக்குவேன்... என் மேல் நம்பிக்கை வை அம்மு..." என்றவனைப் பார்த்து கலங்கிய விழிகளோடு தலையசைத்தவள் உதட்டில் புன்னகை கீற்று. அவனின் வார்த்தைகள் அவளுக்குச் சற்று தன்னம்பிக்கையைக் கொடுத்தது. வாழும் வாழ்க்கை கொஞ்ச காலம்... அதையும் கௌதமோடு கைக் கோர்த்து வாழ்ந்து பார்க்க மகிழ்ச்சியுடன் தயாரானாள்.

"வரவா அம்மு..." அவளின் அனுமதி வேண்டி அவன் நிற்க... அவளோ அவனின் சட்டை காலரை பிடித்து இழுத்து,

"ஓ... வரலாமே..." என்று அவனைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு கலகலவெனச் சிரித்தாள். வெகுநாள் கழித்து மனம் விட்டு சிரித்த மனைவியின் சிரிப்பை ரசித்தபடி அவளின் முகத்தை வருடியவன் தன் படப்பிடிப்பை மறந்தவனாய் அவளுள் புதைந்தான்.

*************************

படப்பிடிப்பின் இடையில் கிடைத்த ஓய்வு நேரத்தில் தனியாக அமர்ந்து இருந்த கௌதமின் மனதை மதுவே ஆக்கிரமித்து இருந்தாள். காலையில் அவளாய் அவனை அழைத்த விதத்தை எண்ணி எண்ணி தனக்குள் சிரித்துக் கொண்டான். முந்தாநாள் வரை அவனுக்கு எட்டாக்கனியாய் அவனுக்குப் போக்கு காட்டி கொண்டு இருந்தவள் இன்று அவனது கைகளில் என்பதை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை... அப்போது அவனைத் தேடி அவனின் ரசிகன் ஒருவன் வந்திருப்பதாய் கணேஷ் சொல்ல... சரி என்று அவனைப் பார்க்க சம்மதித்தான்.

"ஹாய் மிஸ்டர். கௌதம்..." என்றபடி வந்த அந்த இளைஞன் சாதாரண வர்க்கத்தைச் சேர்ந்தவன் போல் இல்லை. அவனின் தோற்றம், உடை எல்லாம் அவன் மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லாமல் சொல்லியது. எழுந்து பதிலுக்கு வணக்கம் தெரிவித்த கௌதமின் கையைப் பற்றிக் குலுக்கிய அந்தப் புதியவன்,

"உங்கள் திருமணத்துக்கு எனது வாழ்த்துக்கள்..." என்று புன்னகையுடன் வாழ்த்து சொன்னவன் கௌதமின் கையில் அழகிய பூங்கொத்தை பரிசாக அளித்தான்.

"தேங்க்ஸ்..." என்ற கௌதமின் கண்கள் பூக்களை ரசனையுடன் வருடிவிட்டு நிமிரும் போது அந்தப் புதியவன் அங்கு இல்லை. சுற்றும் முற்றும் பார்த்தவன் அவனை எங்கும் காணாது தன் தோள்களை அலட்சியமாய்க் குலுக்கி கொண்டு நாற்காலியில் அமர்ந்தான்.

அப்போது அங்கே அவன் அருகில் வந்து அமர்ந்தாள் அந்தப் படத்தில் அவனுக்கு அக்கா வேடத்தில் நடிக்கும் நடிகை. ஆனால் கௌதமை விட வயது குறைந்தவள் தான். "கௌதம் நீங்க இப்படின்னு நான் கொஞ்சம் கூட நினைக்கல...?" என்றவளின் பேச்சில் கண்களைச் சுருக்கினான்.

"என்ன சிஸ்... ஏன் இப்படிச் சொல்றீங்க...?"

"அப்புறம் என்ன கௌதம்... இந்த இன்டஸ்ட்ரீயில் நான் மரியாதை வச்சியிருக்கும் சில ஆட்களில் நீங்களும் ஒருத்தங்க... ஆனா நீங்க இந்த மாதிரி பொறுக்கி கூட எல்லாம் பிரெண்ட்ஷிப் வச்சிருக்கிறதை பார்க்கும் போது மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு..."

"நானா... யார் கூட...?" கௌதமுக்கு இன்னமும் அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பது புரியவில்லை.

"அதான் இப்போ வந்துட்டு போனானே... திவாகர் அந்தப் புறம்போக்கு நாயை தான் சொல்றேன்..." என்றவள்

முகத்தில் அருவருப்பும், வெறுப்பும் சரிசமமாய்க் கலந்து இருந்தது.

"அவன் பேரு திவாகரா...? உங்களுக்கு அவனைத் தெரியுமா...?" அவனின் குரலில் பரபரப்பு தோன்றியது.

"ஆமாம்..." என்றவள், "அவனை எனக்கு நல்லாவே தெரியும்... அவன் பேமஸ் புரொடியூசர் நம்பியின் ஒரே மகன்... என் முதல் படத்தைத் தாயரிச்சது அவர் தான்... அப்போ தான் அவன் எனக்கு அறிமுகம் ஆனான்...ஆரம்பத்துல நல்லா இனிக்க இனிக்கப் பேசினான்... அதுக்கு அப்புறம் தானே தெரிஞ்சது அவன் ஒரு விசப்பாம்புன்னு..."

அன்றைய நினைவின் தாக்கத்தில் அவளது முகம் கன்றிச் சிவந்தது. அவள் சொன்னதைக் கேட்டு அவனுக்கு உள்ளுக்குள் கிலி பிடித்தது. ஏனெனில் மதுவின் முதல் படத்தின் புரொடியூசர் நம்பி தான். 'இவளிடம் வாலாட்டியது போல் மதுவிடமும் வாலாட்டி இருப்பானோ...' என்று நினைத்தவன் உள்ளம் அதை நினைத்து சிலிர்த்து அடங்கியது. அதற்கு ஏற்றார் போல் அவளும் பேச்சை தொடர்ந்தாள்.

"அந்தப் படுபாவி என் கிட்ட மட்டும் இல்லை பல பெண்கள் கிட்ட தன் கை வரிசையைக் காட்டி இருக்கான்..." என்றவள் திவாகரின் கை வரிசை என்ன என்ன... அது எப்படிப் பட்டது என்று ஒவ்வொன்றாய் எடுத்து சொல்ல சொல்ல கௌதமின் முகம் கோபத்தில் சூரியனாய்த் தகித்தது.

"சரி கௌதம் என்னை ஷூட்டிங்குக்குக் கூப்பிடுறாங்க... நான் கிளம்பறேன்..." என்றவள் அங்கிருந்து அகன்றது கூடத் தெரியாமல் வெறி பிடித்தவன் போல் அமர்ந்து இருந்தான்.

"என் அம்முக்கு லவ் லெட்டர் கொடுத்தவனையே அடிச்சு பந்தாடினவன் நான்... மவனே நீ மட்டும் அவள் கிட்ட இந்த மாதிரி நடந்து இருந்தேன்னு தெரிஞ்சது அடுத்த நிமிசம் உனக்குச் சங்கு தான்... உன்னை அணு அணுவாய் துடிக்க

வச்சு கொன்னுட மாட்டேன்..." என்றவனிடம் வார்த்தையில் இருந்த தீவிரம் முகத்திலும் இருந்தது. தன் கையில் இருந்த திவாகர் கொடுத்த பூங்கொத்தை அவன் கீழே விசிறியடிக்க... அதில் இருந்த சின்ன அட்டை அவனது காலடியில் வந்து விழுந்தது. அதை எடுத்து பார்த்த கௌதமின் ரௌத்திரம் பன்மடங்கு அதிகரித்தது.

'உனக்கு முன் மதுவை அறிந்தவன் நான்... அதுவும் மிகவும் அந்தரங்கமாய்... அப்படி என்றால் நான் யார்...?' என்ற குறிப்பை படித்தவன் அதையும் தூக்கி எறிந்தான்.

"உனக்கு எமன் இந்தக் கௌதம் தான்டா..." என்றவனின் கண்களில் கொலைவெறித் தாண்டவமாடியது.

## துளி : 20

ஏதேதோ யோசனையில் உழன்ற கௌதமின் எண்ணங்களைத் தடை செய்வது போல் படப்பிடிப்பிற்காக அழைப்பு வர, முயன்று தன் யோசனையைத் தள்ளி வைத்தவன் படப்பிடிப்பில் கலந்து கொள்ள எழுந்தான். அது ஒரு சண்டைக் காட்சி. கௌதம் ஒருவனைப் பத்து பேர் ஒன்று போல் சேர்ந்து அடிப்பது மாதிரியான காட்சி அது. இயக்குநர் ஏற்கெனவே கௌதமிடம் அந்தக் காட்சியை நன்கு விளக்கி இருந்தார்.

அதில் ஒருவன் கௌதமின் கன்னத்தில் ஓங்கி குத்தும் போது அவன் அதை உணர்ந்து விலக வேண்டும். எல்லாமே சரியாகத் திட்டமிடப்பட்டு அந்தக் காட்சி இயக்கப்பட்டது. ஏதோ யோசனையில் இருந்த கௌதம் அவன் அடிக்க வருகிறான் என்று தெரிந்தும் முகத்தை விலக்காமல் இருக்க... கையை ஓங்கி கொண்டு வந்தவன் கௌதம் விலகாமல் இருப்பதைக் கண்டு திடீரென்று தன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் எதையும் செய்ய முடியாமல் கௌதமின் கன்னத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான். வாங்கிய அடியின் தாக்கத்தில் கௌதம் நிலைக்குலைந்து அருகில் இருந்த சுவற்றில் சாய... சாய்ந்த வேகத்தில் அதில் நீட்டி கொண்டு இருந்த கம்பி அவனது கையைக் கிழித்துவிட்டது. இருவருமே சுதாரிக்கும் முன் இந்த அசம்பாவிதம் நடந்து முடிந்துவிட்டது.

"ஸ்... ஆ..." வலி தாங்க முடியாமல் கௌதம் மெதுவே சத்தமிட்டான். சட்டை கிழிந்து லேசாக ரத்தம் எட்டி பார்க்க ஆரம்பித்து இருந்தது. அதற்குள் அவனை அடித்த துணை நடிகன் பதற்றத்துடன் அவன் அருகில் ஓடி வந்து,

"சார் தெரியாம நடந்திருச்சு... சாரி சார்..." கண்களில் கண்ணீர் மல்க அவன் மன்னிப்பை வேண்டினான். பெரிய நடிகர்களைப் பகைத்துக் கொண்டால் அடுத்த வேளை உணவுக்கான வருமானம் கிடைக்காது என்பது அவனுக்கு நன்கு தெரியும். அதற்குள் மொத்த படக்குழுவும் கௌதம் முன் பதட்டத்துடன் வந்து நின்றனர்.

"உன் மேல் எந்தத் தப்பும் இல்லை... நான் தான் கவனிக்காம இருந்திட்டேன்..." வலியை பொறுத்துக் கொண்டு கௌதம் சொன்னான். அதில் எல்லோரும் நிம்மதியுற்றனர். பின் அவசரமாகக் கௌதமை கணேஷோடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மருத்துவமனையில் கைக் காயத்திற்கு நாலைந்து தையல் போட்ட பின் கௌதம் ஓய்வெடுக்க வீட்டிற்குச் சென்றான். வரவேற்பறையில் அமர்ந்து இருந்த ரெங்கநாதன் அவனின் கையில் இருந்த கட்டை கண்டு பதறிவிட்டார்.

"என்ன கண்ணா இது...?"

"ஒண்ணும் இல்லைப்பா... கம்பி லேசா கிழிச்சிருச்சு..." அவன் சொல்லும் முன்னே அவர் சமையலறை நோக்கி குரல் கொடுத்தார்,

"மது இங்கே கொஞ்சம் வா..." கௌதமிற்குப் பிடித்த இளநீர் பாயசத்தைச் செய்து கொண்டு இருந்தவள் மாமனாரின் குரலில் அதைச் சமையல்காரர் வசம் ஒப்புடைத்து விட்டு வரவேற்பறைக்கு வந்தாள். அங்கே கௌதமை கண்டதும் அவளின் முகம் மலர்ந்தது.

"வந்துட்டீங்களா...?" சேலை முந்தானையை இடுப்பில் சொருகி கொண்டு வெகு இயல்பாகத் தன்னை நோக்கி வந்தவளை அவனின் கண்கள் இமைக்காமல் ரசித்தது.

அவனின் வீட்டில் தன்னவளை இந்த மாதிரி கற்பனையில் பொருத்தி பார்த்து எத்தனை முறை அதை எண்ணி ஏங்கியிருப்பான். அந்த ஏக்கம் இன்று நனவானதை எண்ணி அவனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. ஆனால் அதையும் மீறி அவன் மனதின் மூலையில் சிறு வலி ஒன்று எட்டி பார்க்க தான் செய்தது. அவளுக்கு என்று இருந்த தனிப்பட்ட அடையாளத்தை அழித்து விட்டோமோ என்ற எண்ணம் அவனை வாட்டி வதைக்கத் தான் செய்தது.

அருகில் வந்த மதுவுக்கு அவனின் கைக் காயம் தெரிய பதட்டத்துடன் அவன் அருகே மண்டியிட்டு, "இதுக்குத்தான்

உங்களை வெளியில் போக வேணாம்ன்னு சொன்னேன்... அவன் எமன்... நம்ம உயிரை எடுக்காம விட மாட்டான்..." அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது. அவளின் வார்த்தையில் அவன் கண்கள் கூர்மையானது.

"என்ன அம்மு சொல்ற...?" என்று கேட்டவனுக்குப் பதில் சொல்ல முடியாமல்,

"அது..." என்னவென்று அவளால் சொல்ல முடியும்...? அவள் விழிப்பதில் இருந்து அவள் சொன்ன 'அவன்' திவாகர் என்று உணர்ந்து கொண்டான். அவனைப் பற்றிய பேச்சு தனக்கும் அவளுக்கும் இடையில் வேண்டாம் என்று நினைத்தவன் பேச்சை மாற்றினான்.

"இன்னைக்கு ஷூட்டிங் ஸ்பாட்ல பைட் சீன் எடுத்தாங்க... நான் தெரியாம கம்பி மேல விழுந்துட்டேன்... சின்னக் காயம் தான்... இதுக்கு எல்லாமா அழுவாங்க..." அவளின் கண்களை அவன் துடைத்து விட...

"நான் அதிர்ஷ்டம் இல்லாதவ... எனக்கும் சந்தோசத்துக்கும் ரொம்பத் தூரம்... என்னோட தூரதிர்ஷ்டம் உங்களையும் பின் தொடருது..." அவனின் கைகளில் முகம் புதைத்து விம்மினாள் அவள்.

"யேய் லூசாடி நீ... என்ன வார்த்தை பேசுற... நீ தான்டி என் அதிர்ஷ்டம்..." என்றவன் அவளைத் தன் மடியில் ஆதரவாய் சாய்த்துக் கொண்டான். இருவரின் அந்நியோன்யத்தைக் கண்ட ரெங்கநாதனின் கண்கள் பனித்தது. இதற்காக எத்தனை போராட்டங்களை, தடைகளைத் தன் மகன் தாண்டி வந்திருக்கான் என்று நினைத்தவரின் உள்ளம் தன் மகனை நினைத்துப் பெருமிதத்தில் விம்மியது. அவர்களைத் தொந்திரவு செய்யாமல் அந்த இடத்தை விட்டு மெதுவே நகர்ந்தார்.

"இப்படியே அழுதுட்டு இருந்தா எப்படி... எனக்குப் பசிக்குதுடி..." காதோரம் கிசுகிசுத்த கௌதமின் வார்த்தையில் பட்டென்று நிமிர்ந்தவள்,

"வாங்க..." என்றவள் அவனைக் கைத் தாங்கலாகப் பிடிக்க வர,

"ஏய் அம்மு ஓவரா சீன் போடாதடி... எனக்குக் கையில தான் அடிப்பட்டு இருக்கு... கால்ல இல்ல..." என்றவனை முறைத்தவள் அவன் சொல் பேச்சுக் கேட்காமல் அவனுடன் அறைக்கு வந்து கட்டிலில் அவனைச் சாய்வாக உட்கார வைத்த பின்பே வெளியில் சென்றாள். அவளின் செயலில் அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

பத்து நிமிடங்களில் உணவுடன் வந்தவள் தட்டு எடுத்து உணவை பரிமாறியவள் தட்டை அவன் புறம் நீட்டினாள். அவனோ அதை வாங்காமல் அவளைப் பார்த்தான். அவனின் பார்வைக்கான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாமல்,

"என்ன...?"

"கையில அடிப்பட்டு இருக்குல்ல... ஊட்டி விடுறது..." கேட்டவனின் குரலில் குறும்பு நிரம்பி வழிந்தது.

"ஹலோ... ஓவரா சீன் போடதீங்க கௌதம் சார்... இடது கையில் தான் அடிப்பட்டு இருக்கு... வலது கையில் இல்லை..." பொங்கிய சிரிப்பை அடக்கி கொண்டாள் அவள்.

"நான் சொன்னது எனக்கே திருப்பி வருதா...? ப்ளீஸ்டி..." கெஞ்சினால் தான் காரியம் நடக்கும் என்று உணர்ந்தவனாய் அவன் கெஞ்ச,

"இதுக்குப் போய் ப்ளீஸ் போடணுமா...?" என்று அவன் தலையை இடது கையால் செல்லமாய்க் கலைத்து விட்டவள் உணவை ஊட்டிவிட்டாள். பதிலுக்கு அவனும் தன் பங்கிற்கு அவளுக்கு ஊட்ட அவனின் செயலில் அவளுக்குக் கண்கள் கசிந்தது.

அன்னை படுக்கையில் விழுந்த பின் யாரும் அவளைப் பார்த்து சாப்பிட்டியா, தூங்கினியா என்று கேட்டது இல்லை. இப்போது கௌதம் ஊட்டி விடவும் அவனிடத்தில் அவள்

தன் அன்னையைக் கண்டாள். அவளின் கசிந்த கண்களைக் கண்டவன்,

"என்னடி இது... எப்ப பாரு டேமை திறந்து விட்டுட்டு இருக்க... உன்னோட கண்ணீரை தஞ்சாவூர் பக்கம் திறந்துவிட்டா ஆறு போகம் நெல்லு விளையும்... காவேரி பிரச்சினையே இருக்காது..." கிண்டலாய் சொன்னவனைப் பார்த்து,

"நான் எவ்வளவு பீல் பண்ணிக்கிட்டு இருக்கேன்... உங்களுக்கு விளையாட்டா இருக்கா...?" என்று வருந்தியவளை தன்னுடன் அணைத்து கொண்டவன்,

"நான் தான் சொன்னேனே நீ எதுக்கும் பீல் பண்ண கூடாதுன்னு... நான் எதுக்கு இருக்கேன்... உன்னை நல்லா பார்த்துக்கத் தானே... நான் இருக்கிற வரை நீ எதுக்கும் கலங்க கூடாது..." என்றவன் மீண்டும் அவளுக்கு ஊட்டி விட அதை மறுக்காமல் வாங்கிக் கொண்டாள்.

அவன் உண்டு முடித்ததும் மாத்திரையைக் கொடுத்து அவனை விழுங்க செய்தவள், "நீங்க கொஞ்ச நேரம் தூங்குங்க..." என்றவள் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கீழே செல்ல முயல...

"அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்... இப்போ நீ இங்கே வா..." இரு கரம் நீட்டி அழைத்தவனின் அழைப்பை புறக்கணிக்க முடியாமல் அவன் அருகே வந்து அமர்ந்தவள் அவனைத் தன் மடி மீது சாய்த்து கொண்டாள். மெல்ல அவனின் முடியில் தன் கை விட்டு அவள் வருட அதன் இதத்தில் அவனது கண்கள் சுகமாய் மூடியது.

அவன் உறங்கியதும் அவனின் கைக் காயத்தை வருடியவளுக்குக் கண்கள் கலங்கியது. என்னத்தான் கௌதம் இது படப்பிடிப்பில் நடத்த விபத்து என்று சொன்னாலும் இதன் பின்னணியில் திவாகரின் சதி ஏதும் இருக்கிறதா என்று அவளால் சிந்திக்காமல் இருக்க இயலவில்லை. அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் கௌதமின் நெற்றியில் விழுந்து வழிந்தது.

அதில் உறக்கம் களைந்தவன் அவளின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவளது விழிகளில் தெரிந்த கலக்கத்தில் எழுந்து அமர்ந்தவன்,

"இங்கே வா..." என்று அழைத்து அவளைத் தன் மடி தாங்கினான்.

"கௌதம்..."

"என்னம்மா..."

"நமக்கு இந்த ஊர் வேணாம் கௌதம்... எங்கேயாவது கண் காணாத இடத்துக்குப் போயிறலாம்..."

"ஏன்...?"

"தெரியல... பயமாயிருக்கு..." அவனின் இடுப்பை கட்டி கொண்டவள் அவனின் வயிற்றில் முகம் புதைத்து கொண்டாள்.

"எதைப் பத்தியும் யோசிக்காதே... தூங்கு..." என்றவன் அவளைத் தூங்க வைக்க முயற்சிக்கச் சில நிமிடங்களில் அதில் வெற்றியும் பெற்றான்.

உறங்கும் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் அவளை இந்தளவுக்கு அலைக்கழிக்கும் திவாகரை நினைத்து ஆத்திரம் கொண்டான். அந்தத் திவாகரை எப்படி அணுகுவது என்று யோசித்துக் கொண்டிருந்தவனின் விழிகள் மாத்திரையின் உபயத்தில் மெல்ல கண் மூடியது. அவன் கண்கள் தான் மூடியது ஒழிய அவனின் உள்ளம் திவாகரை எப்படிப் பழிவாங்குவது என்று உறங்காமல் யோசித்தது.

****************************

"கௌதம் இன்னைக்கு ரிசப்சன் அவசியம் வைக்கணுமா...?" கணேஷ் சற்று கவலையுடன் கேட்டான். ஏனெனில் நேற்று ஏற்பட்ட கௌதமின் கைக் காயம் இன்னமும் ஆறவில்லை. அப்படி இருக்கும் போது

ரிசப்சனில் கலந்து கொண்டால் அவனின் உடல் சோர்வடையாதா என்று கணேஷ் கவலை கொண்டான்.

"டேய் மதுவும் நீயும் படுத்துறது கொஞ்சமும் சரியில்லைடா... சாதாரணக் காயம் இதுக்குப் போய் எதுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்றீங்கன்னு தெரியல..." என்றவன், "இன்னைக்கு ரிசப்சன் கட்டாயம் நடந்தாகணும் கணேஷ்... மதுவை ஊரறிய என் மனைவியாய் அறிவிக்கப் போகும் இந்த நாளுக்காக நான் எத்தனை நாள் காத்திருந்தேன் தெரியுமா... இது என் கனவுடா... ப்ளீஸ் இதைத் தள்ளி போட நினைக்காதே..." நண்பனின் இறைஞ்சுதலில் கணேஷுக்குச் சிரிப்பு வந்தது.

"சரி எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்... நீயும் சிஸ்டரும் ரெஸ்ட் எடுங்க... டான்னு ஆறு மணிக்கு ரிசப்சன் ஹாலுக்கு வந்தா போதும்..." என்றவன் புறப்படக் கௌதம் தோழனை நெகிழ்ச்சியுடன் பார்த்தான்.

மாலையில் ரெங்கநாதன், மீனாவிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு வரவேற்பு நடக்கும் ஹோட்டலை நோக்கி கிளப்பினர் கௌதமும், மதுவும். மீனா வரவேற்பிற்கு வர இயலாததால் அவருக்காகப் பிரத்யேக நேரடி ஒளிபரப்புக்கு ஏற்பாடு செய்து இருந்தான் கௌதம்.

அழகுற இருந்த மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு கர்வமாய் அந்த ஹோட்டல் வளாகத்தில் இருந்த ரிசப்சன் ஹாலுக்குள் நுழைந்தான். கூடியிருந்த அத்தனை பேரின் கண்களும் தங்களை ஆர்வத்துடனும், பொறாமையுடனும், வியப்புடனும் பார்ப்பதை கண்டவனுக்குப் பெருமையாய் இருக்கத் தன்னவளின் இடை மீது அழுத்தமாய்க் கைப் போட்டு அழைத்துச் சென்றான்.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த திவாகரின் கண்கள் ஆத்திரத்தில் சிவந்தது. நான்கு வருடங்களுக்கு முன்பு பார்த்ததை விட இன்று ஒப்பனையில் தேவதை போல் அழகாய் இருந்தவளின் அழகு அவனைப் பித்தம் கொள்ளச் செய்தது. அந்த நொடியே அவளை ஆசைத்தீர

அனுபவிக்க வேண்டும் என்று அவனின் உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் விரகத் தாபத்தில் துடித்தது.

"மேம்... எவ்வளவு அழகா இருக்கீங்க தெரியுமா...? என் கண்ணே பட்டுரும் போலிருக்கு..." என்றபடி தன்னுடன் இணைந்து நடந்த மேகாவை முறைக்க முயன்று தோற்ற மது,

"சரியான கேடி நீ..." என்று அவளை அன்போடு அணைத்து கொண்டாள்.

"சாரி மேம்... உண்மையைச் சொல்லாததுக்கு..."

"நீ எனக்கு நல்லது தான் பண்ணியிருக்கே... அதனால சாரி எல்லாம் வேணாம்... வேணும்ன்னா தண்டனை கொடுக்கலாம்..." என்றவளை மேகா பயத்துடன் பார்க்க... மது கணேஷிடம் திரும்பி,

"முதல்ல இவள் கழுத்துல தாலி கட்டுங்க... அது தான் அவளுக்கான தண்டனை..." அதைக் கேட்டு மேகா நாண... அவளின் நாணத்தைக் கணேஷ் ஆர்வமாய்ப் பார்த்தான். இருவரையும் கண்டு கௌதம், மதுவுக்குச் சிரிப்பு வந்தது. இத்தனை பேச்சும் மேடை ஏறுவதற்குள் நடந்து முடிந்திருந்தது.

திரைப்பிரபலங்கள் பலர் கலந்து கொண்டு அவர்களை வாழ்த்தினர். நரேந்திரனும் தன் மனைவி, மகன் சித்தார்த் உடன் அங்கு வந்து இருந்தார்.

"வாழ்த்துக்கள் கௌதம்... மது..." இருவருக்கும் வாழ்த்து சொன்னார்.

"மது... என்னுடைய ஆசையை நிறைவேத்தாம போயிட்டியேம்மா போயிட்டியே..." போலியாய் வருத்தப்பட்ட சித்தார்த் வராத கண்ணீரை துடைத்துக் கொண்டான். அவனின் வார்த்தையில் கௌதமின் புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கியது...

"பின்னே என்ன மது... உன் கல்யாணத்துல உன் அண்ணனா எல்லா வேலைகளையும் செய்யணும்... மச்சினன்ங்கிற முறையில் உன் மாப்பிள்ளை கைப்பிடித்து மணவறை அழைச்சிட்டு வரணும்... இப்படி என்னவெல்லாமோ கனவு கண்டேனே... கடைசியில் எல்லாமே ஊமை கண்ட கனவா போச்சே..." நாடக பாணியில் சொன்னவனைக் கண்டு எல்லோரும் சிரித்து விட்டனர். இப்போது தான் கௌதமிற்கு மனது லேசானது போல் இருந்தது.

"அதுக்கு என்ன மச்சான்... எங்க குழந்தைக்கு உங்க மடியில் வச்சு காது குத்திர்றோம்... ஆனா ஒண்ணு தாய்மாமன் சீரை நீங்க கரெக்ட்டா செஞ்சிரணும்..." கௌதம் கேலியாய்ச் சொன்னான்.

"செஞ்சிட்டா போச்சு... மது குழந்தைக்கு இல்லாததா..." என்ற சித்தார்த், "மாப்பிள்ளை..." என்று கௌதமை கட்டி கொள்ள...

"மச்சான்..." என்று பதிலுக்குப் பாசமழை பொழிந்தான் கௌதம்.

"டேய் அரட்டை போதும்டா... நமக்கு அடுத்து நிறையப் பேர் இருக்காங்க... வாடா..." நரேந்திரன் தன் மகன் முதுகில் கை வைத்து தள்ள...

"ஓகே... ஓகே..." என்றபடி அங்கிருந்து நகர்ந்தான் சித்தார்த்.

அந்த நேரம் யாரும் எதிர்பாராத விதமாகத் திவாகர் மேடையை நோக்கி வந்தான். வந்தவன் நேரே கௌதமிடம்,

"உங்க பெருந்தன்மைக்கு என் வாழ்த்துக்கள்..." என்றவன் நமட்டு சிரிப்புடன், "அணில் கடித்த பழத்துக்கு எப்பவுமே ருசி அதிகம் இல்லையா...?" அவனின் பார்வை விசமத்துடன் மதுவின் மீது படிந்தது.

திவாகரை கண்டதும் மதுவின் முகம் பேயறைந்தது போலானது. கௌதமின் கையை இறுக பற்றியவள் அவனின் தோளுக்குப் பின் மறைந்தாள். ஆனால் அவளை

இழுத்து தன் அருகில் கொண்டு வந்த கௌதம் அவளைத் தன்னுடன் இறுக்கி அணைத்து ஆதரவு கொடுத்தவன்,

"ஹலோ மிஸ்டர்... என் மனைவியை மரியாதை இல்லாமல் பேசாதே... இதே இது இந்த வார்த்தையை நீ வேறு இடத்தில் வச்சு சொல்லி இருந்தேன்னு வை... உன் குடலை உருவி மாலை போட்டு இருப்பேன்... நான் பார்க்க தான் டீசண்ட்... ஆனா உள்ளுக்குள்ள பக்கா லோக்கலு..." அடிக்குரலில் உறுமிய கௌதமை திவாகர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பெண்களிடத்தில் மட்டுமே தன் வீரத்தை காட்டியவன் அந்த ஆண் மகனின் கர்ஜனையில் திகைத்து போய் நின்றான்.

"நீ எங்கடா இங்கே வந்த..." என்று கேட்டபடி அங்கே வந்த நரேந்திரனை கண்டு பழையபடி அவனின் முகம் ஆத்திரத்தை தத்தெடுத்தது.

"மதுவுக்கும் எனக்கும் ஒரு கணக்கு பாக்கி இருக்கு... அதை முடிச்சிட்டு போகலாம்ன்னு வந்தேன்..." நக்கலாய் கூறியவனை முறைத்து பார்த்தவர்,

"அந்தக் கணக்கை உன் அப்பா கிட்ட பேசி நான் முடிச்சிக்கிறேன்... இப்போ நீ கிளம்பலாம்..." என்றவர் அவனை அப்புறப்படுத்துவதிலேயே குறியாக இருந்தார். வேறுவழியின்றி அங்கிருந்து நகர்ந்தவன் மதுவின் மீது வைத்திருந்த பார்வையை மட்டும் விலக்க கொள்ளவில்லை.

வரவேற்பு முடிந்ததும் மதுவை ரெங்கநாதனுடன் வீட்டிற்கு அனுப்பி வைத்த கௌதம் நேரே நரேந்திரனிடம் பேச சென்றான். அவனின் விருப்பம் அறிந்து அவரும் தன் மனைவி, மகனை அனுப்பி விட்டு அவனிடம் வந்தார்.

"திவாகருக்கும் மதுவுக்கும் இடையில் என்ன நடந்தது...? அவள் ஏன் அவன் கிட்ட இப்படிப் பயப்படுறா...? உங்களுக்கு விசயம் தெரிஞ்சு இருக்கும்ன்னு எனக்குத் தெரியுது... அதான் கேக்கிறேன்..." அவன் நேரடியாக விசயத்திற்கு வர... அவர் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அமைதி காத்தார்.

"நிச்சயம் நான் மதுவை சந்தேகப்பட மாட்டேன்..." அவசரமாய்ச் சொன்னவனைக் கண்டு புன்னகைத்தவர்,

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா கௌதம்... ஆனால்..." என்று நிறுத்த...

"எதுவாயிருந்தாலும் சொல்லுங்க சார்..." அவன் அப்படிச் சொன்னதும் அவர் திவாகரை பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். அதே நேரம் திவாகரும் அதைத் தான் நினைத்துக் கொண்டு இருந்தான்.

வீட்டிற்கு வந்த திவாகருக்கு ஆத்திரம் அடங்க மறுத்தது. எத்தனையோ முரட்டுப் பெண்களை அடக்கத் தெரிந்தவனுக்கு இந்தப் பிள்ளைப்பூச்சியை அடக்க முடியாமல் போய்விட்டதை எண்ணி கோபம் கோபமாய் வந்தது. தான் திரும்பத் திரும்ப மதுவிடம் தோற்றுக் கொண்டு இருக்கிறோம் என்பதை உணர்ந்தவனுக்குத் தன் தோல்வியை ஒப்புக் கொள்ள மனம் இல்லை. அடங்க மாட்டாமல் கொதித்த மனதை ஆற்றுவதற்குத் தான் அணிந்து இருந்த சங்கிலியில் பென்டட் போல் இருந்த அந்தப் பென்ட்ரைவை எடுத்தவன் தன் மடிகணினியில் சொருகினான்.

அதில் இருந்த பல பெண்களின் பெயர் கொண்ட ஃபோல்டர்களில் மதுவின் பெயரை தேடி எடுத்தவன் அதில் இருந்த காணொளி காட்சியை ஓடவிட்டான். அதில் இருந்த காட்சிகள் என்றும் போல் இன்றும் அவனைச் சூடேற்றியது. மதுவின் அழகு அவனைப் பித்தம் கொள்ளச் செய்தது. சாவதாக இருந்தாலும் அவளை அனுபவித்து விட்டு இறக்க வேண்டும் என்று அவன் மனம் பேராசைப்பட்டது.

"மது பேபி..." கிறக்கமாய் வந்தது அவனது வார்த்தைகள். வெறியுடன் கணினி திரையை வருடியது அவனது விரல்கள்.

"உன் புருசன் தைரியமா இருந்து என்ன பண்ண...? நீ அப்படியே அதே பயத்தோட தானே இருக்க... உன்னோட

பயம் தான் என்னோட பலம்... உன்னை எப்படி என் வலையில் விழ வைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்றவன் கண்கள் போதை வஸ்துவை உண்ணாமல் மயங்கி கிறங்கியது. நான்கு வருடங்களுக்கு முன் மதுவை சந்தித்த அந்த நிகழ்வை நினைத்துப் பார்த்தது.

மதுவின் முதல் படத்தைத் திவாகரின் தந்தை நம்பி தான் தயாரித்தார். படத்தின் பூஜையின் போது தான் திவாகர் மதுவை பார்த்தான். பார்பி டால் போல் இருந்த அவளின் அழகு முதல் பார்வையிலேயே அவனை அடித்து வீழ்த்தியது. அவளிடம் பேசி பழக அவன் ஆசை கொண்டான். ஆனால் நரேந்திரனுக்குப் பயந்து தன் வாலை சுருட்டி கொண்டான். ஏனெனில் அவரின் கண்டிப்பு உலகப் பிரசித்தி பெற்றது.

அதற்குள் வேறு ஒரு நடிகை அவனின் வலையில் விழ அவன் மதுவை மறந்து அவள் பின்னே போய்விட்டான். கிட்டத்தட்ட படம் முடியும் தறுவாயில் மீண்டும் வந்தவனின் கண்களில் மது விழுந்தாள். முன்பு பார்த்ததை விடக் கூடுதல் அழகாய் இருந்தவளை கண்டு அவன் மனம் கள் வெறிக் கொண்டது. அவளைத் தன் வலையில் வீழ்த்த அவன் முடிவு செய்தான்.

அடிக்கடி படப்பிடிப்பில் கலந்து கொண்டவன் அவளிடம் நல்ல மாதிரியாய் பேசி பழக முடிவு செய்தான். ஆனால் மது அவனைக் கண்டாலே பயந்து பத்தடி தள்ளி நின்றாள். அவன் என்றில்லை... எந்த ஆணிடத்திலும் அவள் பேசவோ பழகவோ தயாராக இல்லை. இது தெரியாமல் அவளிடம் அவன் மேலும் மேலும் பழக முற்பட அதை நரேந்திரன் கண்டு கொண்டார். அவனைக் கூப்பிட்டு எச்சரிக்கை செய்தார்.

"திவாகர் உன்னைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... மது எனக்கு வேண்டப்பட்ட பொண்ணு... அவள் கிட்ட உன் புத்தியை காட்டின நான் உன் அப்பா கிட்ட பேச வேண்டி வரும்..." அவர் சொன்னதை அலட்சியப்படுத்தியவன்,

"வேண்டப்பட்ட பொண்ணுன்னா எப்படிச் சார்...? என்ன மாதிரி உறவு...? சார் சொன்னா கோபிச்சிக்கக் கூடாது... இந்த வயசுல உங்களால ஒரு பொண்ணை அதுவும் இளம் பெண்ணைத் திருப்திப்படுத்த முடியுமா...? நான் வேணும்ன்னா உங்களுக்கு ஹெல் பண்ணவா..." என்று விகாரமாய்ச் சிரித்தவனிடத்தில் நரேந்திரன் ஒன்றும் பேசாது அவனின் தந்தையிடத்தில் அவனின் பேச்சை ஒன்று விடாமல் கூறிவிட்டார்.

அதைக் கேட்ட நம்பி அவனைக் கூப்பிட்டு எச்சரிக்கை செய்தார். அதன் பின்பு தான் அவனின் மனதில் மதுவின் மீதான வன்மம் கூடி கொண்டு போனது. அவன் மனதில் திட்டம் ஒன்று தீட்டினான். அதன் முதல்கட்ட வேலையாக மதுவின் உடையலங்கார நிபுணரிடத்தில் பணத்தை அள்ளி கொடுத்து அவள் உடை மாற்றும் போது அவளை அந்தரங்கமாய்ப் புகைப்படம் எடுக்கச் செய்தான். அதை வாங்கியவன் கண்ணில் எதையோ சாதித்த திருப்தி...

மறுநாள் மதுவிற்கு அலைப்பேசியில் அழைத்தவன், "மது பேபி நான் உன்னைப் பார்க்கணும்... நோ... நோ... நான் பேசும் போது நீ இடையில் பேச கூடாது... இப்போ உடனே நான் சொல்ற இடத்துக்கு நீ வரலைன்னா... அடுத்தச் செகண்ட் உன்னோட அழகான ஃபோட்டோக்கள் நெட்டில் உலா வரும்... அதுக்குச் சாம்பிள் ஒண்ணு உன்னோட செல்லுக்கு அனுப்பி இருக்கேன்... பாரு..." என்றவன் சில நிமிடங்கள் நிதானித்துப் பின், "பார்த்தியா குட்... நான் அட்ரஸ் சொல்றேன் குறிச்சிக்கோ..." என்றவன் தனது பண்ணை வீட்டின் முகவரியை அளித்தான்.

மதுவோ தன் அலைப்பேசியில் வந்த அந்தப் புகைப்படத்தைப் பார்த்தவாறு பிரம்மை பிடித்துப் போய் நின்றாள். அவள் உடை மாற்றும் கோலம் மிகவும் அந்தரங்கமாய்ப் புகைப்படம் எடுக்கப்பட்டு இருந்தது. யார் எடுத்தார்கள் என்று தெரியவில்லை. அதைப் பார்த்து மிகவும் பயந்து போனாள். காவல்துறையை அணுகவோ இல்லை தந்தை போல் அவளைப் பார்த்துக் கொள்ளும் நரேந்திரனையோ சென்று சந்திக்க முடியாமல் அந்த

அந்தரங்க புகைப்படம் அவளைத் தடை செய்தது. யாரிடம் சொல்லி ஆலோசனை கேட்பது என்று கூடத் தெரியாமல் விழித்தாள். அதற்காக அவன் சொன்ன இடத்திற்கும் அவள் செல்லவில்லை. ஒருவித பயத்துடன் நாளை கடத்தினாள்.

சில நாட்கள் கழித்துப் படத்தின் பாடல் காட்சியைப் படமாக்க வெளியூர் சென்றிருந்தனர் படக்குழுவினர். ஒருநாள் படப்பிடிப்பு முடிந்து தனது அறைக்குச் சென்று கொண்டு இருந்தவளை ஒரு ஆணின் கரம் அவளின் வாயை பொத்தி வளைத்துப் பிடித்துப் பக்கத்தில் இருந்த அறைக்குள் வலுக்கட்டாயமாய் அழைத்துச் சென்றது. பயத்தில் திமிறியவளை எளிதில் அடக்கிய அந்த ஆடவன் அவளைக் கட்டிலில் தூக்கி போட்டான். அவனை அடையாளம் கண்டதும் அவளுக்குத் திக்கென்று இருந்தது. அந்த நல்லவர் நம்பியின் மகன் இப்படிக் கெட்டவனாக இருப்பான் என்று அவள் நினைத்து கூடப் பார்க்கவில்லை.

"என்னடி என் கிட்டேயே திமிர் காண்பிக்கிறியா...? அன்னைக்கு உன்னை நான் வர சொன்னேன்ல நீ ஏன் வரல...?" என்றபடி அவளது கன்னத்தில் ஓங்கி அடித்தான் திவாகர். எதிர்பாராத அந்த அடியில் அவள் அப்படியே சுருண்டு போய்க் கட்டிலின் மூலையில் போய் விழுந்தாள்.

"நீ இப்போ என் கூடப் படுக்கல... உன்னோட ஃபோட்டோசை எல்லாம் நெட்ல ஏத்திருவேன்..." என்றவன் விரல் அலைப்பேசியில் இருந்த 'அப்லோட்' என்ற பட்டன் மீது பட்டும் படாமல் இருந்தது.

"இது டச் ஸ்க்ரீன் ஃபோன்... என்னோட அனுமதி இல்லாம என் கைப்பட்டது அடுத்த நிமிசம் உன் மானம் காத்துல பறக்கும்... நீ சரின்னு சொன்னா நான் மட்டும் தான் உன் அழகை பார்ப்பேன்... நீ சம்மதிக்கலைன்னா... உலகமே உன் அழகை பார்க்கும்... வசதி எப்படி...?" வில்லன் சிரிப்பு சிரித்தவனைக் கண்டு அவள் பயத்தில் உறைந்து போனாள்.

"நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை... ப்ளீஸ் என்னை விட்டுரு..." என்று கையெடுத்து கும்பிட்டு கேட்டவளை

எக்காளமாய்ப் பார்த்தவன்,

"எல்லாப் பொண்ணுங்களும் இப்படித்தான் சீன் போடுவாங்க... கடைசியில் இங்கே தான் விழுவாங்க..." என்று தன் மடியை தட்டி காட்டியவன் முகத்தில் ஆண் என்கிற அகம்பாவம் அதிகமாய் இருந்தது.

"ம்... சீக்கிரம்... நான் சொன்னதைச் செய்..." என்றவன் அவளை அவசரப்படுத்தினான்.

"வேணாம்..." மீண்டும் கெஞ்சியவளை முறைத்தவன்,

"இது வேலைக்கு ஆகாது..." என்று அலைப்பேசியில் கை வைக்கப் போக... அதில் அவள் பதறி போனாள்.

"வேணாம்... நெட்ல போட்டுறாத..." அவன் அருகே வந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டு இறைஞ்சியவளை இரக்கம் இல்லாமல் பார்த்தவன்,

"அப்போ நான் சொல்றதை செய்றியா...?" என்றவனின் பார்வை அவளின் மேனியை ஆசையுடன் பார்த்தது. அவனுக்குப் பதில் சொல்லாமல் தலை குனிந்து அழுது கொண்டிருந்தவளை கண்டு,

"நீயே உன் ட்ரெசை ஒவ்வொண்ணா கழட்டு..." என்றவனின் பேச்சில் திடுக்கிட்டு போய் நிமிர்ந்தவள் அவனைப் பாவமாய்ப் பார்த்தாள்.

"நீயா தான் என் கிட்ட வரணும்... நானா உன்னை அடைஞ்சா அது திருப்தியா இருக்காது... நாளைக்கு நீயே நான் உன்னை ரே பண்ணிட்டேன்னு கம்ப்ளைண்ட் பண்ண கூடாது பாரு அதுக்குத் தான் சொல்றேன்... எனக்கு எதுவுமே தானா தான் கனியணும்... கிடைக்கணும்... வளவளன்னு பேசாம காரியத்தில் கண்ணாயிரு பேபி..." என்றவன் மீண்டும் அலைப்பேசியில் கையைக் கொண்டு போக... மதுவின் கண்கள் சுற்றும் முற்றும் எதையோ தேடி அலைந்தது. அது காண கிடைக்காமல் போகவே சோர்ந்து போனவள் அருகில் உல்லாச புன்னகையோடு வந்தவன்,

"நீ தற்கொலை பண்ணனும்னாலோ இல்லை என்னைக் கொல்லணும்ன்னு நினைச்சா கூட அது என் விருப்பம் இருந்தா தான் நடக்கும்... என் அனுமதி இல்லாம உன் உயிரோ, என் உயிரோ போகாது..." அவனின் வார்த்தையில் பூகம்பம் வந்து அந்த விடுதி இடிந்து தான் செத்துப் போகக் கூடாதா என்று மனதுக்குள் அலறினாள்.

"என்ன பேபி யோசனை... நான் மூணு எண்ணுவேன் அதுக்குள்ள நீ நான் சொன்னதைச் செய்யணும் இல்லை..." என்றவன், "ஒன்... ட்டூ..." மூன்று என்று அவன் சொல்வதற்கு முன் மதுவின் கைகள் சுடிதாரின் ஜிப்பின் மீது படிந்தது.

வேறுவழியின்றித் தோற்று போனவளாய் மதுவின் கைகள் அவளின் உடைகளை மெதுவே களைய தொடங்கியது. சூரியனுக்குக் கூடக் காட்டாமல் மறைத்து வைத்த தனது அழகிய வதனத்தைக் காமுகனிடத்தில் காட்ட வேண்டிய தன் நிலையை எண்ணி ரத்த கண்ணீர் வடித்தது அவளது மனமும், கண்களும். அவளைக் கொண்டே அவளது ஆடையைத் துகிலுரிய செய்தான் அந்த நவீன துச்சாதனன். இதைத் தான் தன் கை கொண்டே தன் கண்ணைக் குத்துவது என்று சொல்வார்களோ...

## துளி : 21

"ப்ளீஸ் வேண்டாம்... இதுக்குப் பதிலா என்னைக் கொன்னு போட்டுரு..." மது தன் கற்பை காப்பாற்றிக் கொள்ளக் கடைசி முறையாய் திவாகரிடம் மண்டியிட்டு மன்றாட... அவனோ அதற்குக் கொஞ்சமும் இரக்கம் இல்லாமல்,

"உன்னைக் கொல்றதால எனக்கு என்ன யூஸ்...? அதுக்குப் பதிலா நீ உயிரோடு என் கட்டிலுக்கு வந்தா..." கண்களை மூடியவன் மனக்கண்ணில் அந்தக் காட்சியைக் கண்டு ரசித்தான்.

அவனின் இந்த மெய் மறந்த சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கி கொண்டு அவனை அடித்து வீழ்த்தி விட்டு அவள் தப்பி இருக்கலாம். ஆனால் அந்தப் பதினேழு வயது பாவையோ பயத்தில் அழுது கொண்டு கால்கள் வேரூன்ற அங்கேயே அசையாமல் நின்று இருந்தாள். இந்த மாதிரியான விசயங்கள் எல்லாம் அவளுக்குப் புதிது. தாயின் அரவணைப்பில் பாதுகாப்பாய் வளர்ந்த சின்னஞ்சிறிய பறவை அவள். இது நாள் வரை அவள் அறிந்த, பார்த்த உலகம் வேறு... இன்று அவள் பார்க்கும் உலகமோ வேறு... அதிலும் யாருடைய துணையும் இல்லாமல் படப்பிடிப்புக்கு வந்தது அவளது பிசகு தானோ...

மீனா குழந்தை பிறந்த உஷாவையும், குழந்தை உண்டாகி இருக்கும் இதயாவையும் பார்த்துக் கொள்ள வேண்டி வீட்டில் தங்கிவிட மது தனியே வர வேண்டியதாய் போயிற்று. நரேந்திரன் தான் மதுவை பார்த்துக் கொள்வதாய்க் கூறியதும் அந்த அன்னையும் நிம்மதியாய் அவளை அனுப்பி வைத்தார். ஆனால் வந்த இடத்தில் இப்படி ஒரு வேடவன் வலை விரித்துக் காத்திருப்பான் என்று அவள் நினைத்து கூடப் பார்க்கவில்லை.

"மது பேபி..." திவாகரின் குரலில் தேம்பி கொண்டு இருந்தவள் நிமிர்ந்தாள்.

"கற்பனையே அப்படியே ஜிவ்வுன்னு இருக்கு... உண்மையா நடந்தா... நேரத்தை கடத்தாதே பேபி..." என்றவன், "நான் சொல்றதை செய்ய மாட்ட இல்ல... ஓகே... இப்பவே உன் ஃபோட்டோவை..." அவன் முடிக்கும் முன்,

"இல்லை வேணாம்..." கண்ணீரோடு மறுத்தவள் மெதுவாய் தன் ஆடைகளைக் களையலானாள்.

'இந்தச் சினிமா உனக்கு வேணாம்டி... அதோட இன்னொரு பக்கம் தெரிஞ்சா நீ தாங்க மாட்ட அம்மு. உன்னை மாதிரி சாப்ட்டான பொண்ணுக்கு அது சரிப்பட்டு வராது' அவள் மனதில் அன்றொரு நாள் கௌதம் கூறிய வார்த்தைகள் வந்து போனது.

'கௌதம்... நீங்க சொன்னது எவ்வளவு உண்மை... என்னை மாதிரி பெண்ணுக்கு இந்தச் சினிமா உலகம் சரி வராது... எனக்குப் பயமா இருக்குக் கௌதம்... என்னை வந்து காப்பாத்தி கூட்டிட்டு போங்களேன்...' மனதுக்குள் ஓலமிட்டவளின் கைகள் அந்தக் காமுகனின் கட்டளைக்குக் கீழ் படிந்தது.

மதுவின் ஆடைகளற்ற மேனியை கண்ட திவாகரின் கண்கள் இமைக்க மறந்தது. அவன் அறிந்த பெண்களில் மதுவை போல் ஒரு அழகியை கண்டது இல்லை. அவளின் அழகிய மேனி அவனைப் போதை பொருளை உட்கொள்ளாமலேயே அவனைப் போதை கொள்ளச் செய்தது. அந்த அழகை என்றும் தனதாக்கி கொள்ள, ரசிக்க அவன் விரும்பினான். அதன் விளைவு தன் அலைப்பேசியில் அத்தனையையும் பதிவு செய்தான். அவள் தன் ஆடையைத் தானே துகிலுரிவதை அவனின் அலைப்பேசி தன்னுள் உள்வாங்கிக் கொண்டதை அந்தப் பேதை பெண் அறியவில்லை. அவளுக்கே தெரியாமல்

அவளின் ஆடையில்லா மேனியை அவன் படம் பிடித்துக் கொண்டான்.

தன் இரு கைகளைக் கொண்டு தன்னை மறைத்துக் கொள்ள முடிந்தளவு மறைத்துக் கொண்ட மதுவின் முகம் அவமானத்தில் கன்றி சிவந்து போயிருந்தது. கட்டிய கணவனாய் இருந்தால் கூட எந்தக் குடும்பத்து பெண்ணும் இப்படி ஒரு காரியத்தைச் செய்யத் துணிய மாட்டாள். இயல்பான பெண்மையின் கூச்சம், வெட்கம் அவளைத் தடுக்கும். ஆனால் தான் அதை எல்லாம் இழந்து ஒரு அந்நிய ஆடவன் முன் இப்படி நிற்கிறோமே என்ற எண்ணமே அவளை உயிரோடு கொன்றது. இன்னமும் தன் உயிர் போகாமல் இருப்பதைக் கண்டு தன் மேலேயே அவளுக்கு வெறுப்பாய், அருவருப்பாய் இருந்தது.

"வாவ்..." தன் முன் நின்று இருந்த மதுவின் அழகை அவளைச் சுற்றி வந்து ரசித்தவன், "இன்னைக்குத் தான் பேபி நான் பிறவி பலனை அடைந்தேன்..." என்றவன் அவளைத் தன்னோடு சேர்த்து அணைக்க முயல,

"வேணாம்..." என்று மருகியவளை அவன் சிறிதும் சட்டை செய்யவில்லை.

"எனக்கு வேணுமே..." என்றவன் அவளைப் படுக்கையில் தள்ளி அவளைத் தன் வசமாக்க முயன்றான்.

அவன் தன்னைத் தொடும் போது மதுவுக்கு அந்த இடம் எல்லாம் நெருப்பாய்த் தகித்தது. அன்று கௌதம் தன்னைத் தொட்ட போது தான் உருகி குழைந்தது நியாபகத்திற்கு வர முயன்றளவு தன் எதிர்ப்பை காட்டினாள் அவள். இந்த உடல் கௌதமுக்கு மட்டுமே சொந்தமானது என்ற எண்ணமே அவளுக்குப் போராடுவதற்குத் தேவையான வலுவை அவளிடத்தில் கொடுத்தது. என்ன போராடியும் அந்தக் கயவனின் பிடியிலிருந்து ஒரு அங்குலம் கூட அவளால் நகர முடியவில்லை.

"விட்டுறா என்னை..." இயலாமையினால் எழுந்த ஆத்திரத்தில் சத்தம் போட்டு கத்தியவள் பலம் கொண்ட மட்டும் அவனைத் தாக்கினாள். அவளின் தாக்குதல் தொடர்ந்த அதே நேரம் அவனின் தேடுதலின் வேட்கையும் அதிகரித்தது.

"என்னையாடி அடிக்கிற உன்னை..." தன்னைக் காயப்படுத்தியவளை அவனும் காயப்படுத்தத் துவங்கினான்.

நரேந்திரன் தனது அறைக்கு ஓய்வு எடுக்குச் சென்ற போது திவாகர் இருந்த அறையைத் தாண்டி தான் சென்றார். அப்போது வித்தியாசமான முனங்கல் சத்தம் கேட்கவும் அவரின் நடை நின்றது. அந்த அறைக் கதவின் அருகில் சென்று காதை தீட்டி அவர் கேட்க... ஒரு பெண் அலறுவது மெல்லிய குரலில் கேட்க அதற்கு மேல் அவர் தாமதிக்கவில்லை. அவர் அறைக்கதவை ஓங்கி தட்ட போக அதிர்ஷ்டவசமாக அது தானே திறந்து கொண்டது. மதுவை உள்ளே இழுத்து வரும் அவசரத்தில் திவாகர் திரும்பி பார்க்காமல் காலால் கதவை மூட அது பூட்டாமல் அப்படியே லேசாகச் சாத்தப்பட்டு இருந்தது.

அவசரமாய் உள்ளே சென்றவர் அங்கே கண்ட காட்சியில் அப்படியே உறைந்து நின்றார். யாரோ பெண் என்று எண்ணி வந்தவர் அங்கே மதுவையும் திவாகரையும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

"டேய் அவளை விடுறா..." என்றவர் அவன் மேல் பாய்ந்து சென்று தாக்க... எதிர்பாராத அந்தத் தாக்குதலில் திவாகர் நிலைக்குலைந்து தள்ளி போய் விழுந்தான்.

அந்த இடைப்பட்ட நேரத்தில் அங்கிருந்த போர்வையை எடுத்து மதுவை பார்க்காமல் அவள் மீது போட்டவர், "மது... உன் ட்ரெசை போட்டுக்கிட்டு உன் ரூமுக்கு போ... இவனை நான் பார்த்துக்கிறேன்..." அவர் சொன்னதும்

திகைத்திருந்த மதுவுக்கு உயிர் வந்தது. அவசரமாய்ப் போர்வையைச் சுற்றிக் கொண்டு கீழே கிடந்த தன் உடைகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்த குளியலறைக்குள் சென்றாள்.

"டேய் கிழவா... உன்னை என்ன பண்றேன் பாரு... என்னையா அடிச்ச...?" திவாகர் கத்தி கொண்டே அவரைத் தாக்க வர அப்போது 'டுமில்' என்ற சத்தம் மட்டும் கேட்டது.

உடை மாற்றிக் கொண்டு வந்த மது அங்கே கண்ட காட்சியில் அதிர்ந்து போய் அப்படியே நின்றாள். பயத்தில் அவளது தளிர் மேனி நடுங்கியது. திவாகர் முழங்காலில் குண்டடி பட்டு கீழே கிடந்து துடித்துக் கொண்டு இருந்தான். நரேந்திரனின் கையில் துப்பாக்கியை பிடித்துக் கொண்டு ஆக்ரோசமாய் நின்று கொண்டு இருந்தார்.

"நீ பண்ணின வேலைக்கு உன்னைக் கொன்னு போட்டு இருக்கணும்..." அவர் ஆத்திரமாய்க் கத்த...

"என்னைக் கொன்னுட்டா நீ தப்பிக்க முடியுமா...? இப்போ என்னைச் சுட்டதுக்கே நீ தண்டனை அனுபவிச்சு தான் ஆகணும்..." அந்த நிலையிலும் இறுமாப்புக் குறையாமல் திமிராய்ப் பேசினான் திவாகர்.

"என்னோட எதிரிகளிடம் இருந்து என்னைக் காப்பாத்திக்கத் தான் நான் துப்பாக்கி வச்சிருக்கேன்... இதுக்கு லைசென்ஸ் இருக்கு... என்னைக் கொல்ல நீ வந்த அதனால உன்னைச் சுட்டேன் சொல்றதுக்கு எனக்கு எவ்வளவு நேரமாகும்..." அவனுக்கு அலட்சியமாய்ப் பதில் சொன்னவர்,

"மது வாம்மா போகலாம்..." என்று அவளை அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

மதுவை அவளது அறைக்கு அழைத்துச் சென்றவர் என்ன வார்த்தை சொல்லி அவளுக்கு ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினார். அவளோ அவரை ஏறிட்டும் பார்க்காமல் அறையின் மூலையில் தன் உடலை குறுக்கி கொண்டு அமர்ந்தாள். முழங்கால்களைக் கட்டி கொண்டு அமர்ந்து இருந்தவள் கண்கள் மட்டும் அச்சத்தில் அலைப்பாய்ந்து கொண்டு இருந்தது.

"மது..." அவர் அழைத்தும் அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை. மேலும் தன் உடலை குறுக்கி கொண்டவள் மேனி அதிர்ந்தது. அவள் எதனால் அப்படி இருக்கிறாள் என்பதை உணர்ந்தவர் கண்களை வேதனையுடன் மூடி கொண்டார். அவருக்குப் பெண் குழந்தைகள் இல்லை என்றாலும் தாயாய், சகோதரியாய், மனைவியாய் என்று பல ரூபத்தில் பெண்கள் அவரது வாழ்க்கையில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் உணர்வுகளை அவரால் புரிந்து கொள்ள முடியும் போது மதுவின் உணர்வுகளை அவரால் புரிந்து கொள்ள முடியாதா என்ன...

"மது... என்னை ஒரு ஆணாய் பார்க்காதே... உன் அப்பாவா என்னை நினைச்சு பாரு... ஒரு அப்பாவுக்கு என்றுமே தன் பெண் சின்னக் குழந்தை தான்... அது போலத் தான் நீயும் எனக்கு..." தனது மனதின் எண்ணத்தை அவர் தெளிவாய் எடுத்துரைக்க அதில் நிமிர்ந்து பார்த்தவள் கண்களில் நீர் நிறையக் கையெடுத்து கும்பிட்டாள்.

"அவன் உன்னை ஏதும்..." தவிப்பாய் வந்தது அவரது வார்த்தைகள். அதற்கு இல்லை என்று அவள் தலையசைக்கவும் தான் அவருக்கு நிம்மதியாய் இருந்தது.

"நடந்ததைக் கெட்ட கனவா நினைச்சு மறந்திரு மது... அந்தத் திவாகரால் எந்தத் தொல்லையும் ஏற்படாம நான் பார்த்துக்கிறேன்..." என்றவருக்கு அவளால் தலையை மட்டுமே அசைக்க முடிந்தது. ஆனால் அவளின் உள்ளமோ

நடந்த அநியாயத்தை எண்ணி எண்ணி உள்ளுக்குள் குமுறிக் கொண்டு இருந்தது.

அதற்கு மேல் மதுவை அங்கே தங்க வைக்க நரேந்திரனுக்கு விருப்பம் இல்லை. படப்பிடிப்பை ரத்து செய்தவர் அவளைச் சென்னைக்கு அழைத்து வந்துவிட்டார். அவளை அவளது வீட்டில் விட்ட பின்பே அவரது மனம் நிம்மதியுற்றது.

"மது கொஞ்ச நாள் ரெஸ்ட் எடு... அதுக்குப் பிறகு ஷூட்டிங் வச்சிக்கலாம்..." என்றவரை பார்த்து மௌனமாய்த் தலையை ஆட்டினாள் அவள்.

அன்னையின் மடியில் ஆறுதல் தேடலாம் என்றால் இதயாவை பிரசவத்திற்கு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தனர். அதன் பின் வந்த நாட்களில் அவளால் மீனாவிடம் கூடத் தன் மனப்பாரத்தைச் சொல்ல முடியாமல் போனது. அந்தளவுக்கு மீனாவை மற்ற வேலைகள் ஆக்கிரமித்துக் கொண்டது. மதுவும் படத்தின் இறுதிக்கட்ட வேலைகளில் மூழ்கிவிட்டாள். முதலில் படத்தை முடிப்பது அதற்கு அப்புறம் என்ன செய்யலாம் என்று யோசிப்போம் என்று முடிவு செய்தாள்.

அங்கே திவாகரை அறையைச் சுத்தம் செய்ய வந்த பையன் பார்த்துவிட்டு நிர்வாகத்தினரிடம் கூற அவர்கள் அவனை மருத்துவமனையில் சேர்த்தனர். திவாகர் காவல்துறையில் புகார் அளிக்க வேண்டாம் என்று சொன்னது கேட்டு அவர்களும் மகிழ்ச்சியுடன் ஒத்து கொண்டனர். பின்னே நன்றாக நடந்து கொண்டிருக்கும் விடுதியை புகார் கொடுத்து மூட வைக்க அவர்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கு...

திவாகரின் நிலையறிந்து அவனது தந்தை நம்பி உடனே அங்கே விரைந்து வந்தார். "யாருடா உன்னை இப்படிச்

செய்தது...?" தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்று சும்மாவா சொன்னார்கள். தந்தையின் கோபம் அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது.

"வேற யார் எல்லாம் அந்த நரேந்திரன் தான்..." அதற்கு மேல் நம்பி என்ன ஏது என்று கூட விசாரிக்கவில்லை. மருத்துவமனையில் இருந்து மகனை கூட்டி கொண்டு சென்னை வந்தவர் நேரே நரேந்திரனிடம் தான் சென்றார்.

"என் மகனை துப்பாக்கியால் சுட உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும் நரேந்திரா...?"

"வாங்க மிஸ்டர். நம்பி... முதல்ல உட்காருங்க..." அவரின் கோபம் கண்டு நரேந்திரன் கொஞ்சமும் அலட்டி கொள்ளவில்லை.

"நான் உட்கார வரலைய்யா... முதல்ல நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு...?"

"சரி பதில் சொல்றேன்... இப்போ நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லுங்க... உங்க பொண்ணுங்க கிட்ட யாராவது தப்பா நடந்துக்கிட்டா நீங்க என்ன செய்வீங்க..."

"கொன்னு போட்டுருவேன் கொன்னு..." ஆத்திரத்தில் நம்பியின் கண்கள் சிவந்தது.

"அதைத் தான் நான் செய்தேன்..." என்ற நரேந்திரனின் அமைதியான பேச்சில்,

"என்ன சொல்றீங்க...?" நிற்க முடியாமல் தொப்பென நாற்காலியில் அமர்ந்தார் நம்பி.

மதுவிடம் திவாகர் நடந்து கொண்ட முறையைச் சொன்னவர், "மது எனக்கு மகள் போல... என் கண் முன்னாடி அவளைச் சீரழிக்கிறதை பார்த்துட்டு என்னால சும்மா இருக்க முடியுமா...? எந்தத் தகப்பனும் நான் செய்ததைத் தான் செய்வான்... இப்போ சொல்லுங்க நான் செய்தது தப்பா...?" நரேந்திரனின் கேள்விக்கு நம்பியால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

திவாகரை பற்றி அவருக்கு அரசல் புரசலாக ஏதோ கொஞ்சம் தெரியும். ஆனால் குலப் பெண்களை மிரட்டி இந்த மாதிரி நடந்து கொள்வான் என்று அவர் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை. நெஞ்சிலும் தோளிலும் தான் சுமந்து வளர்த்த தன் செல்ல மகன் பல பெண்களின் கற்பில் விளையாடியதை அவரால் ஜீரணிக்கக் கூட முடியவில்லை.

"இதுக்கு என்ன ஆதாரம்...?" நம்பியின் குரல் நம்பிக்கையற்று ஒலித்தது. இருந்தாலும் நூற்றில் ஒரு சதவீதமாவது தன் மகன் குற்றமற்றவனாக இருக்க மாட்டானா என்று நம்பியது அந்தத் தந்தை உள்ளம்.

"ஆதாரம்... ம்... மதுவை தவிர்த்து பார்த்தாலே நிறைய ஆதாரம் இருக்கு..." என்ற நரேந்திரன் தன் நாட்காட்டியை எடுத்து அதில் இருந்த தொலைப்பேசி எண்களை நம்பியின் முன் நீட்டி,

"மது பாதிக்கப்பட்டதுக்குப் பின்பு நான் திரட்டிய தகவல்... இதிலுள்ள நம்பர்கள் எல்லாம் திவாகரால் பாதிக்கப்பட்ட பெண்களோடது... இவர்களில் சில பேர் இன்னமும் மீள முடியாமல் திவாகர் கஸ்டடியில் தான் இருக்காங்க... நீங்க நல்லது பண்ணனும்ன்னு நினைச்சா இந்தப் பெண்களைத் திவாகர் பிடியில் இருந்து காப்பாத்துங்க... மதுவை நான் பார்த்துக்குவேன்... இந்த ஆதாரத்தை நான் போலீசில் கொடுத்து திவாகர் மேல் கம்ப்ளைண்ட் கொடுக்க முடியும்...

உங்களுக்காகத் தான் அதைச் செய்யாமல் இருக்கேன்... உங்க மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு..."

நரேந்திரனின் பேச்சில் முற்றிலும் தளர்ந்து போனார் நம்பி. "நிச்சயம் உங்க நம்பிக்கையைக் காப்பாற்றுவேன் நரேந்திரன் சார்..." என்றவர் நரேந்திரனிடம் விடைப்பெற்று நேரே மகனிடம் தான் சென்றார்.

"ஏண்டா பொறுக்கி உனக்கு எவ்வளவு கொழுப்பு இருந்தா ஃபோட்டோ எடுத்து மிரட்டி பொண்ணுங்களைப் படுக்கைக்குக் கூப்பிடுவ... அந்தளவுக்கு உடல் கொழுப்பு எடுத்து அலையறியா ராஸ்கல்..." என்று ஆக்ரோசமாய்க் கத்தியவர் திவாகர் அணிந்திருந்த பெல்ட்டை கழட்டி அதைக் கொண்டே அவனை அடித்தார். எதிர்பாராத அவரின் அடியில் அவன் நிலைக்குலைந்து போனான். பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு அடித்த தந்தையின் கையை இறுக பிடித்தவன்,

"அதுக்கு என்ன இப்போ...? நான் அப்படித்தான் இருப்பேன்... உங்களால என்ன செய்ய முடியும்...?" தெனாவெட்டாய் கேட்டவனைக் கொலை செய்யும் ஆத்திரம் வந்தது நம்பிக்கு.

"என்ன செய்வேனா... உன்னை நல்லவன்னு நினைச்சிட்டு இருக்காங்களே உன் அம்மா, தங்கச்சிங்க அவங்க கிட்ட உன்னோட கேடுகெட்ட இந்த விசயத்தைச் சொல்வேன்... என்ன சொல்லவா...?" அன்னை, தங்கை என்றதும் அவனது சர்வாங்கமும் அடங்கியது. அவர்களின் முன்னால் அவன் தன் மதிப்பை இழக்க விரும்பவில்லை. அதிலும் தன்னை உயிராய் நேசிக்கும் அன்னையின் முன் தரம் தாழ்ந்து போவதை அவன் விரும்பவில்லை. அவன் அமைதி காக்கவும் நம்பியும் அமைதியாய்ச் சென்றுவிட்டார்.

அடுத்தப் பத்தாவது நாள் நம்பி அவனை ஆஸ்திரேலியா கிளம்பச் சொன்னார். ஏன் என்று கேட்ட மனைவியிடம்,

"இங்கேயே இருந்தா குட்டிச்சுவராய்ப் போயிருவான்... அதனால அங்கே எம்பிஏ படிக்க அனுப்ப போறேன்... வெளிநாட்டில் தனியா இருந்து கஷ்டப்பட்டா தான் நம்மளோட அருமை, பணத்தோட அருமை அவனுக்குத் தெரியும்..." என்று மனைவியை அடக்கிவிட்டார். நாச்சியாரும் மகனின் நல்லதுக்குத் தானே என்று கணவரின் விருப்பத்திற்குச் சரி என்று தலையாட்டினார்.

தந்தையின் முடிவில் எரிச்சலான திவாகரை அவனது நண்பர்கள் தேற்றினர். "டேய் எவ்வளவு நாள் தான்டா உள்ளூர் பிகரையே கரெக்ட் பண்ணிட்டு இருப்ப... ஃபாரின் பிகரை கரெக்ட் பண்றதுல தான் தனிக் கிக்கே இருக்கு மச்சி..." என்று அவனின் பெண்ணாசைக்கு அவர்கள் தூபம் போட அரைக்குறை மனதாய் கிளம்பச் சம்மதித்தான்.

அவனின் வெளிநாட்டு பயணத்துக்கு முக்கியக் காரணகர்த்தா மது தான் என்று அவனுக்குக் கடைசி நேரத்தில் தெரிய வந்தது. விமான நிலையத்தில் இருந்து அவளைத் தொடர்பு கொண்டவன்,

"என்னை ஃபாரினுக்கு அனுப்பிட்டேன்னு மட்டும் சந்தோசப்படாதே... ஒரு நாள் இல்லை ஒரு நாள் உன்னைத் தேடி வருவேன்... நீ எனக்கு மட்டும் தான் சொந்தம்... நீ என்னை விட்டு விலகணும்ன்னு நினைச்சாலோ இல்லை வேற யாரையாவது கல்யாணம் பண்ணனும்ன்னு நினைச்சாலோ அடுத்த நொடி உன் கண் முன்னாடி நான் வந்து நிப்பேன்... எனக்குத் தான் உன் மேல முதல் உரிமை இருக்கு... ஏன்னா உன் உடலை பார்த்த முதல் ஆம்பிளை நான் தான் இல்லையா... அப்போ அதை அனுபவிக்கும் முதல் உரிமையும் எனக்குத் தான் உண்டு... என் அம்மாவுக்காகத் தான் நான் இப்போ போறேன்... ஆனா உன்னை அடையணும்ன்னு நினைச்சா உடனே இங்கே வந்துடுவேன்... அப்புறம் ஒரு விசயம் இவன் குலைக்கிற நாய் கடிக்க மாட்டான்னு மட்டும் நினைக்காதே... அன்னைக்கு எடுத்த வீடியோ என் கிட்ட தான் இருக்கு...

அதுவும் உன் கையாலேயே உன் ட்ரெசை நீ கழட்டுற வீடியோ... அதைப் பார்க்கிற எவனும் உன்னைக் கட்டிக்க முன் வருவானா...? அப்படியே முன் வந்தாலும் என் கையால அவன் சாகப் போறது உறுதி... நான் காலை சுத்தின பாம்பு உன்னைக் கடிக்காம விட மாட்டேன்..." அவளை மிரட்டியவன் விமானத்திலேறி ஆஸ்திரேலியா பறந்தான்.
திவாகரின் மிரட்டலில் மது அரண்டு தான் போனாள். அதிலும் அவன் வசம் உள்ள தன்னைப் பற்றிய ஆதாரம் அவளை மானத்தோடு வாழவிடாது என்பதை உணர்ந்தவள் தன் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தாள். நடித்துக் கொண்டு இருந்த படத்தை முடித்துக் கொடுத்தாயிற்று. அக்கா, தங்கைக்குச் செய்ய வேண்டிய கடமைகள் செய்தாகி விட்டது. அன்னையை அவர்களில் யாராவது ஒருவர் பார்த்துக் கொள்வார்கள். தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்து விட்டோம் என்று எண்ணியவள் கண் முன்னே,

"எனக்கான கடமையை நீ செய்தாயா அம்மு... என்னை ஏமாற்றிவிட்டாயே..." கௌதமின் ஏமாற்றம் கவிழ்ந்த முகம் வந்து அவளைக் குற்றம் சாட்டியது.

"கௌதம்... ஐம் சாரி கௌதம்... நான் உங்களுக்கு வேண்டாம்... நான் எச்சில் இலைக்குச் சமமானவள்... என்னைப் போன்ற பெண் உங்களுக்கு வேணாம்... என்னால் உங்களுக்கு அவமரியாதை தான் ஏற்படும்..." என்று வெகு நேரம் வாய்விட்டு கதறி அழுதவள் கண்களைத் துடைத்துக் கொண்டு தற்கொலை செய்வதற்கு ஆயத்தமானாள்.

உத்திரத்தில் தொங்கிய மின்விசிறியில் புடவையைக் கட்டியவள் அதைத் தன் கழுத்தில் மாட்டும் போது அவளின் அன்னை மீனா ஏதேச்சையாக அங்கு வந்தார். அவளின் செயலை கண்டு பதறியவராய் அவளை விடுவித்தவர் அவளை அணைத்துக் கொண்டு தலையில் அடித்துக் கொண்டு அழுதார்.

"பாவி பெண்ணே... இப்படி ஒரு முடிவு எடுக்க உனக்கு எப்படிடி மனசு வந்திச்சு... உன்னை நம்பி இருக்குற இந்த அம்மாவை கொஞ்சமாவது நினைச்சு பார்த்தியா... நீ இப்படித் தற்கொலை பண்ற அளவுக்கு அப்படி என்னடி நடந்துச்சு..." என்று கதறிய தாயிடம் மனதில் இருந்த பாரத்தை எல்லாம் சொல்லி அழுதாள் மது.

"எனக்கு வாழவே பிடிக்கலம்மா... சாகணும் போலிருக்கு... அம்மா ஒரு பொண்ணா என் உணர்வுகளை உங்களால புரிஞ்சிக்க முடியுதா... பெத்த உங்க கிட்ட கூடக் காட்டாம மறைச்ச என் உடலை, இவ்வளவு ஏன் கட்டிய கணவன் கிட்ட கூட உடலை காட்ட முடியாமல் கூச்சப்படும் பெண் இனத்தில் பிறந்த நான் அந்தப் படுபாவி முன்னாடி நானே என் ட்ரெசை அவிழ்த்து... ஐயோ என்னால தாங்க முடியலம்மா... உடம்பு எல்லாம் நெருப்பு வச்ச மாதிரி எரியுதும்மா... நான் எல்லாம் உயிரோடவே இருக்கக் கூடாதும்மா... சாகணும்... நான் சாகணும்மா..." அலறி துடித்த மகளை எப்படிச் சமாதானம் படுத்துவது என்று தெரியவில்லை அவருக்கு.

"மது... நீ இவ்வளவு மன வேதனைப்படுறதை கூட உணர முடியாம போனேனே... நான் எல்லாம் என்ன அம்மா...?" மீனா நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார். சின்னப் பெண் பட்ட துன்பத்திற்குத் தன்னால் ஆறுதல் கூடச் சொல்ல முடியவில்லையே என்று அந்தத் தாய் உள்ளம் கதறியது. பின் தன் கண்களைத் துடைத்துக் கொண்ட மீனா மகளின் முகத்தைப் பற்றி,

"இங்கே பார் மது... அந்தப் பாவியே உயிரோடு இருக்கும் போது நீ ஏன் சாகணும்...? நீ எந்தத் தப்பும் பண்ணலம்மா..." மீனாவின் கைகள் மதுவை முகத்தை ஆறுதலாய் வருடியது.

"இல்லம்மா நான் சாகணும்..." வெறிப்பிடித்தவள் கத்தியவளின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தவர்,

"அப்படி நீ சாகணும்ன்னு முடிவு பண்ணிட்டேன்னா நானும் உன் கூடச் சாக வர்றேன்... வா... ரெண்டு பேரும் சேர்ந்து செத்து போகலாம்..." அவரின் ஆவேசத்தில் அவள் மலங்க மலங்க விழித்தாள். அதைக் கண்டு அந்தத் தாயுள்ளம் உருகியது.

"எனக்குச் சத்தியம் பண்ணி கொடு மது... எந்த நிலையிலும் நீ தற்கொலை பண்ணிக்கக் கூடாது... இந்த மாதிரி சின்னச் சின்ன விசயத்துக்கு எல்லாம் பெண்கள் கோழை மாதிரி சாகுறதுன்னா நாட்டில் பல பெண்கள் தற்கொலை தான் பண்ணிக்க வேண்டி இருக்கும்... கற்பை இழந்த எத்தனையோ பெண்கள், ஆசிட் வீச்சிற்கு ஆளான பெண்கள் இப்படி யாரும் தற்கொலைக்கு முயல்வது இல்லை... பத்திரிக்கையை எடுத்து பாரு... அதில் எத்தனை பேர் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காகப் போராடுறாங்கன்னு... உன்னை நான் போராட எல்லாம் சொல்லல... வாழத்தான் சொல்றேன்... அந்தப் பாவி தான் இங்கே இல்லையே... அப்புறம் ஏன் நீ பயப்படுற...? தைரியமா இருடா..." அன்னையின் வார்த்தையில் சிறிது அமைதியானவள் மௌனமாய் அவர் மடியில் படுத்திருந்தாள்.

"சத்தியம் பண்ணும்மா..." தன் முன் கையை நீட்டிய அன்னையை நிமிரந்து பார்த்தவள் விழிகள் கலங்கி இருந்தது.

"எனக்காக..." இறைஞ்சுதலாய் கேட்ட அன்னையைக் கண்டு மனம் உருக கண்களில் கண்ணீர் மல்க அவரது கையில் தன் கையை அழுத்தமாய் வைத்தவள் சரி என்பது போல் தலையசைத்தாள். மீனாவும் கண்ணீரோடு மகளை அணைத்துக் கொண்டார்.

மகளை மரணத்தில் இருந்து மீட்ட அந்தத் தாய் மனவுளைச்சல் காரணமாக மறுநாள் ஒரு பக்கம் கை, கால் செயல் இழந்து படுத்த படுக்கையானார். தாயின் இந்த

நிலை மதுவை இன்னமும் கவலைக்கு உள்ளாக்கியது. படத்தில் நடிக்கக் கூடாது என்று தான் எடுத்திருந்த முடிவை அன்னைக்காக மாற்றிக் கொண்டாள். அன்னையின் மருந்துவச் செலவு, அவரின் பராமரிப்புச் செலவு இதற்காகவாவது தான் நடித்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்திற்கு அவள் தள்ளப்பட்டாள்.

திவாகரினால் ஏற்பட்ட பாதிப்பால் அவளுக்கு இரவில் நிம்மதியான உறக்கம் என்பது இல்லாமல் போனது. இரவில் உறக்கம் வருவதற்காகத் தூக்க மாத்திரையை விழுங்கும் பழக்கத்துக்கு ஆளாகி இருந்தாள். அதை அறிந்த அவளது அன்னை மிகவும் மனம் வருந்தினார். அவள் அருகில் இருந்து அவளது துயர் துடைக்காமல் போன தன் நிலையை அறவே வெறுத்தார். அவரால் ஒன்றை மட்டும் செய்ய முடிந்தது. அது தூக்க மாத்திரையைத் தன்னுடைய அறையில் வைத்துக் கொண்டது மட்டுமே. மது அதை எடுக்கும் போது எல்லாம் அவர் கண்காணித்துக் கொண்டு இருப்பார். ஏனெனில் ஏற்கெனவே தற்கொலை வரை சென்ற மகளைக் காப்பாற்றி வைத்து இருக்கிறார். மீண்டும் அவள் அந்த முடிவை நாடி விட்டால் அதற்காகத் தான் அவர் அவ்வாறு செய்வது. அவள் கூடுதலாய் ஒரு மாத்திரை எடுத்தாலும் அவரது கண்கள் கலங்கிவிடும். அவரின் மனம் அறிந்து அவளும் அந்த நம்பிக்கையை இன்று வரை காப்பாற்றுகிறாள்.

திவாகரிடம் கற்றுக் கொண்ட பாடம் அவளைத் திரைத்துறையின் கறுப்புப் பக்கத்தில் இருந்து காப்பாற்றியது. நரேந்திரனும் அவரது மகன் சித்தார்த்தும் அவளுக்குப் பக்க பலமாக அவளது செயல்களுக்குத் துணையாக அவளுக்குப் பாதுகாவலாக இருந்தார்கள் என்றால் மிகையில்லை.

********************************

நரேந்திரன் சொல்ல சொல்ல கேட்டுக் கொண்டு இருந்த கௌதமின் மனம் யாரோ பாறாங்கல்லை ஏற்றி வைத்தது போல் கனத்துப் போயிருந்தது. அவனுக்கு நரேந்திரன் மேல் சிறிது கோபம் உண்டு. ஏனென்றால் அமைதியாகச் சென்று கொண்டு இருந்த தங்கள் வாழ்க்கையில் புயலை கிளப்பியவர் என்ற கோபம் அவன் மனதின் ஓரத்தில் இருந்து கொண்டே இருந்தது. அதிலும் மதுவின் மீதான சித்தார்த்தின் அதிகப்படியான அக்கறை அவனின் எரியும் எண்ண நெருப்பில் மேலும் எண்ணையை ஊற்றியது போலானது.

ஆனால் இன்று அவர் தான் தன்னவளை பாதுகாத்துத் தன்னிடம் பத்திரமாகச் சேர்ப்பித்து இருக்கிறார் என்றதும் அவனது எண்ணத்தில் அவர் பல மடங்கு உயர்ந்து போனார். "சார்..." நெகிழ்ச்சியுடன் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டவன், "நன்றிங்கிற ஒரு வார்த்தையில் நீங்க செய்த உதவியை அடக்க முடியாது... ஆனாலும் எனக்கு அதைத் தவிர வேறு வார்த்தை வரவில்லை..." என்றவனின் குரல் தளுதளுத்தது.

"என்ன கௌதம் இது... மது என் பொண்ணு மாதிரி அவளுக்கு ஒண்ணுன்னா நான் பார்த்துட்டு சும்மா இருக்க மாட்டேன்..." என்றவர், "இனியும் அந்தத் திவாகர் வாலாட்டினா என் கிட்ட சொல்லு கௌதம்... அவனை நான் பார்த்துக்கிறேன்..."

"இல்லை சார்... இனி நான் அவனைக் கவனிச்சிக்கிறேன்... நான் இருக்கும் போது என் மதுவை ஒரு துன்பம் நெருங்க விட மாட்டேன்..." அவனின் பேச்சை கேட்டு கவலை அகன்றவராய் அவர் பெருமிதத்துடன் அவனைப் பார்த்தார்.

"மதுவுக்குப் பொருத்தமானவன் நீதான்ய்யா..." என்று அவனின் தோளில் தட்டி கொடுத்தவர் வீட்டிற்குக் கிளம்பக் கௌதமும் வீட்டிற்குக் கிளம்பினான்.

எப்படித்தான் காரை ஓட்டி கொண்டு வீடு வந்து சேர்ந்தானோ அது அவனுக்கே தெரியாது. மதுவை காண வேண்டும் என்ற ஆவல் உந்த நேரே தனது அறைக்குத் தான் சென்றான். அவனின் வரவுக்காகக் காத்திருந்தார் போல் மதுவும் உறங்காமல் விழித்துக் கொண்டு இருந்தாள்.

"கௌதம் வந்துட்டீங்களா...?" என்றவள் ஓடி வந்து அவனை அணைத்து கொண்டாள். ஏற்கெனவே அவளுக்கு நடந்த அநியாயத்தைக் கண்டு மனம் உருகி இருந்தவன் அவளின் இந்தச் செயலில் முற்றிலும் நெகிழ்ந்தான்.

"ஏண்டி பார்த்து ஒரு இரண்டு மணி நேரம் கூட ஆகல அதுக்குப் போய் இப்படி ஒரு பில்டப்பா...?" அவளைக் கேட்டவன் தனது அன்பை அவள் முகம் முழுவதும் பதித்த முத்தத்தின் மூலம் பிரதிபலித்தான். அவனின் செயலில் அவள் களுக்கென்று சிரித்தாள்.

"என்னைச் சொல்லிட்டு இங்கே மட்டும் என்ன வாழுதாம்..." அவனைக் கிண்டலடித்தாலும் அவனின் கைகளில் அவள் உருகி குழைய தயங்கவில்லை. அவளைக் கைகளில் ஏந்தியவன் கட்டிலை நோக்கி நடந்தவன்,

"தூக்கம் வந்தா தூங்க வேண்டியது தானே... எனக்காக ஏன் முழிச்சிட்டு இருக்க அம்மு...?"

அவனின் கேள்வியில் அவளின் முகம் சுருங்கி போனது. திவாகரினால் ஏற்பட்ட பாதிப்பால் இரவு தூக்கம் என்பது அவளுக்கு இல்லாமல் போய்விட்டது. இப்போது தான் கௌதமின் அருகாமையில், பாதுகாப்பான அணைப்பில் அவள் தன் கவலையை மறந்து உறங்குகிறாள். அதிலும் இன்று திவாகர் பேசிய பேச்சில் அவளது மனம் பழையபடி எதை எதையோ எண்ணி மருகி கலங்கலானது.

தனது பதிலுக்காகத் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்த கணவனின் அன்பில் கண்கள் கலங்கியவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனை இழுத்து அணைத்தவள் அவனின் காதோரம், "ஸ்லீப்பிங் டோஸ் இல்லாமல் எப்படித் தூங்கறது..." கிசுகிசுக்க அதைக் கேட்டு கௌதமின் அணைப்பு இறுகியது.

அன்று அவள் இரவு உறக்கம் வருவதற்காகத் தூக்க மாத்திரை உபயோகப்படுத்துவதாய்ச் சொன்ன போது தான் தேவையில்லாமல் கோபப்பட்டது அவனுக்கு நியாபகம் வந்தது. ஆனால் அதன் பின்னணியில் இவ்வளவு பெரிய வலி இருக்கும் என்று அவன் நினைத்து கூடப் பார்த்தது இல்லை.

"சாரி அம்மு..." என்றவன் அவளை அணைத்தபடி அமர்ந்து இருந்தான்.

"கௌதம்... அந்தத் திவாகர்..." அவள் மேலே பேசும் தன் கை கொண்டு அவள் வாயை மூடியவன்,

"ப்ளீஸ் அம்மு... நோ மோர் டாக்கிங்..." தன் கைகளுக்குக் கொடுத்த வேலையை இப்போது தனது இதழ்களுக்குக் கொடுத்தான். அவளின் புண்பட்ட இதயத்திற்கு இதமாய்ப் பதமாய் இருந்தது அவனது அன்றைய உறவு.

மறுநாள் படப்பிடிப்புக்கு சென்ற கௌதமிற்கு அன்று மனநிலை சரி இல்லாதது போல் இருக்க முடிக்க வேண்டிய வேலைகளைச் சீக்கிரமாய் முடித்துக் கொண்டு வீடு திரும்பினான். அவன் நினைத்தது போல் மது சோக சித்திரமாய்க் காணப்பட்டாள். அவளது கண்கள் அடிக்கடி அலைப்பேசியை உற்று உற்று பார்த்துக் கொண்டு இருந்தது.

"கௌதம் என் கூடவே இருங்களேன்... ப்ளீஸ்..." என்றவள் அவனின் நெஞ்சில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். எதற்கோ பயந்து அவனிடம் அடைக்கலம் புகுந்தது போல் இருந்தது அவளது செய்கை.

"என்ன அம்மு...?" என்று கேட்டவன் அவளின் தலையை இதமாய் வருடி விட... அவளிடம் இருந்து பதில் இல்லை. அவனும் அவளின் மனநிலைக்கு ஏற்றவாறு அமைதி காத்தான். ஆனால் ஏதோ ஒன்று சரி இல்லை என்று மட்டும் அவன் உள்மனம் சொல்லியது. அப்போது அவளது அலைப்பேசி அழைக்க அதை அவள் எடுக்காமல் அவனை இறுக அணைத்துக் கொண்டு அமர்ந்து இருந்தாள்.

"அம்மு ஃபோன் அடிக்குது பாரு..."

"ம்ப்ச்... அடிச்சா அடிச்சிட்டு போகட்டும்..." சலிப்பும் வெறுப்பும் சரிவிகிதமாய்க் கலந்து இருந்தது அவளது குரலில். அப்போது அவனுக்கு மூளையில் எச்சரிக்கை மணி அடித்தது.

"அம்மு எனக்குப் பசிக்குது... சாப்பிட ஏதாவது எடுத்திட்டு வாயேன்..." அவனின் திட்டம் பலித்தது.

"என்ன வேணும் சொல்லுங்க... செஞ்சு எடுத்திட்டு வர்றேன்..." அவன் வாய்க்கு வந்த உணவு பதார்த்தத்தின் பேரை சொல்ல அவள் சரியென்று அறையை விட்டு வெளியேறினாள்.

அவன் நினைத்தது போல் அவள் போனதும் அழைத்த அவளது அலைப்பேசியை வேகமாய் உயிர்ப்பித்து அவன் காதில் வைக்க.. அடுத்த முனையில் திவாகரின் குரல் நாரகாசமாய் ஒலித்தது.

"என்ன பேபி... நீ ஃபோனை எடுக்காம இருந்தா நான் அப்படியே விட்டுருவேனா என்ன...? உனக்கு வர வர என் மேலுள்ள பயம் விட்டு போச்சுன்னு நினைக்கிறேன்... உன் காதல் கணவன் உன் கூட இருக்கான்ங்கிற தைரியமா...? அவனையே இல்லாம ஆக்கிட்டா... அதுக்கு அப்புறம் என்ன பண்ணுவ...?" எக்காளமாய்ப் பேசியவன், "என்ன நான் கேட்டதுக்கு நீ பதிலே சொல்லல..."

அப்படி அவன் என்ன தான் கேட்டு இருப்பான்... ஏன் மது இப்படிப் பயப்படுகிறாள் என்று யோசித்த கௌதம் அமைதி காக்க... அதைக் கண்டு மது தான் பதில் பேசாமல் நேரத்தை கடத்துகிறாள் என்று நினைத்த திவாகர் ஆத்திரம் அடைந்தான்.

"மௌனம் சம்மதம்ன்னு எடுத்துக்கலாமா... இனி உனக்குச் சம்மதம் இருந்தாலும் சரி... இல்லைன்னாலும் சரி நீ என் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டுத் தான் ஆகணும்... இல்லைன்னா உன் கௌதம் உடம்பில் உயிர் தங்காது... அதனால நான் சொல்றதை கேட்டு இந்த அட்ரசுக்கு இன்னும் இரண்டு மணி நேரத்தில் நீ வரணும்..." என்றவன் அன்று போல் இன்றும் தனது விருந்தினர் இல்லத்தின் முகவரியை கொடுத்துவிட்டு,

"அன்னைக்கு மாதிரி ஏமாத்தலாம்ன்னு மட்டும் நினைக்காதே... அன்னைக்கு நடக்காதது இன்னைக்கு நடக்கும்..." என்று அகங்காரமாய்ச் சொல்லியவன் அவளின் பதிலை எதிர்பாராது அலைப்பேசியை வைக்க... கௌதமின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது. தனது தந்தையின் அறைக்குச் சென்று எதையோ தேடி எடுத்துக் கொண்டு வந்தமர்ந்தான்.

அதற்குள் மது உணவை எடுத்துக் கொண்டு வர கௌதம் அவளுக்கு ஊட்டி விட்டு தானும் உண்டவன் அவளுக்கே தெரியாமல் அவள் கொண்டு வந்த பாயாசத்தில் தந்தையின் அறையில் இருந்து எடுத்து வந்த தூக்க

மாத்திரை இரண்டை கலக்கினான். அதை அவளுக்குக் கொடுத்தவன் கண்கள் கலங்கியது. உண்டு முடித்ததும் மதுவின் கண்கள் தூக்கத்தில் சுழன்றது.

"கௌதம்... எனக்குத் தூக்கமா வருது... உங்க மடியில் படுக்கவா...?"

"இதை நீ கேட்கணுமா அம்மு..." என்றவன் அவளைத் தன் மடி சாய்த்து அவளை உறங்க வைத்தான்.

'நிம்மதியாய் தூங்கு அம்மு... நீ தூங்கி எழும் போது அந்தக் கயவன் உனக்குச் செய்த பாவத்திற்குத் தண்டனை அனுபவித்து இருப்பான்... இது உன் மேல் சத்தியம் அம்மு... இன்றோடு உன்னைப் பிடித்த சனியன் ஒழிய போகுது...' மனதுக்குள் சொல்லியவன் அவளுக்குப் போர்த்திவிட்டு அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்.

பின் கணேஷூக்கு அழைத்தவன், "கணேஷ்... நான் சொல்ற ரெண்டு பொருளும் இன்னும் அரை மணி நேரத்தில் நீ வாங்கிட்டு வரணும்..." தனக்குத் தேவையான பொருளை கௌதம் கூற..

"கௌதம்... அது எதுக்குடா உனக்கு...?"அவன் சொன்னதைக் கேட்டுக் கணேஷ் பதறினான்.

"முடியுமா முடியாதா...?" வேறுவழியின்றிக் கணேஷ் அவன் சொன்னதை வாங்கித் தருவதாக உறுதியளித்தான்.

சொன்ன மாதிரி அரை மணி நேரத்தில் தன் முன் வந்து நின்ற நண்பனை மெச்சுதலாய் பார்த்த கௌதம் அவன் வாங்கி வந்த பொருட்களை வாங்கிக் கொண்டான்.

"கௌதம்... நானும் உன் கூட வரவா..." அவனுக்கு ஏதும் ஆபத்து வந்துவிடுமோ என்று கணேஷ் அஞ்சினான்.

"இல்லை கணேஷ்... இது நான் மட்டுமே செய்ய வேண்டிய வேலை..." என்று சொன்ன கௌதமின் முகம் என்றும் இல்லாத அளவுக்கு இன்று ரௌத்திரத்தை தாங்கி இருந்தது. அதைக் கண்டு கணேஷ் மௌனமாய்ப் பின்வாங்கினான்.

திவாகர் சொன்ன முகவரிக்கு அவன் குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்று முன்பே சென்று அங்கு வந்து காத்திருந்தான் கௌதம். அவனின் கண்கள் சுற்றுப்புறத்தை நன்கு அலசி ஆராய்ந்தது. அக்கம் பக்கம் அதிக வீடுகள் இல்லாமல் தனியே அமைந்திருந்த அந்த விருந்தினர் இல்லம் அவன் செய்யப் போகும் காரியத்திற்கு எல்லா வகையிலும் உற்ற துணையாய் இருந்தது. ஆனால் வாயிலில் உள்ள காவலாளியை எப்படி அப்புறப்படுத்துவது என்று அவன் யோசிக்கலானான்.

சற்று நேரத்தில் திவாகர் கார் அங்கு வந்தது. காரை விட்டு இறங்கிய திவாகரின் மனமோ என்றும் இல்லாத அளவுக்கு உற்சாகமாய் இருந்தது. காவலாளியை சைகையில் அருகில் அழைத்தவன் அவன் வந்ததும் அவன் கையில் பணத்தைத் திணித்து,

"இரண்டு மணி நேரத்திற்கு நீ இங்கே வர வேணாம்... வெளியில் போயிட்டு என்ஜாய் பண்ணிட்டு வா..."

"சார்... அப்பா..." தலையைச் சொறிந்தான் அந்தக் காவலாளி. திவாகர் வந்தால் இங்கு விடவே கூடாது என்று நம்பி கடுமையாகக் கட்டளையிட்டு இருந்தார் அந்தக் காவலாளிக்கு. ஏனெனில் திவாகரின் லீலைகள் எல்லாம் அந்த விருந்தினர் இல்லத்தில் தான் அரங்கேறி இருக்கிறது என்பதை அவர் காலத் தாமதமாய்த் தெரிந்து கொண்டார்.

மேலும் இரண்டு ஆயிரம் ரூபாய் தாள்களை அவன் கையில் திணித்த திவாகர், "நீ போ... ஏதாவதுன்னா நான் அப்பா கிட்ட பேசிக்கிறேன்..." என்று அவனை

அப்புறப்படுத்தியவன் உல்லாசமாய் அந்த வீட்டினுள் நுழைந்தான்.

காவலாளி வீட்டை விட்டு வெளியேறுவதைக் கண்ட கௌதமின் முகத்தில் விசம புன்னகை வந்தமர்ந்தது. இனி தன் வேலை சுலபம் என்று நினைத்தவன் தன் கைக் கடிகாரத்தில் மணியைப் பார்த்தான். இருபது நிமிடம் அப்படியே அமர்ந்து இருந்தவன் அதன் பின் காரை அந்த இல்லத்தினுள் சத்தமில்லாமல் செலுத்தினான். காரில் இருந்து இறங்கியவன் மறக்காமல் உடன் எடுத்து வந்திருந்த பையை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

கௌதம் அழைப்பு மணியை அடித்ததும் அடுத்த நொடியில் வாய் எல்லாம் பல்லாகக் கதவை திறந்தான் திவாகர். அங்கே மது இல்லாமல் கௌதம் மட்டும் இருக்கக் கண்டு அவன் முகம் ஒரு நொடி ஏமாற்றத்தில் சுருங்கி அடுத்த நொடி பயங்கரமாய் மாறியது.

"என்ன உன் பொண்டாட்டி உன்னை அனுப்பிட்டு அவள் பத்திரமா இருக்காளா...? நீ உயிரோட இருந்தா தானே அவள் பத்திரமா இருக்க முடியும்..." என்று சொல்லி கொண்டே திவாகர் அவன் மேல் பாயும் முன் கௌதம் அவன் முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டான்.

போதையில் இருந்த திவாகர் தள்ளாடியபடி கீழே விழிந்தான். கௌதம் இருபது நிமிடம் காத்திருந்தது இதற்காகத் தான்... நிச்சயம் திவாகருக்குப் பெண் சமச்சாரம் தேவைப்பட்டால் கூடவே மதுவின் போதையும் தேவைப்படும் என்று கணித்துத் தான் அவன் செயலாற்றினான். அவனின் கணிப்பு திவாகர் விசயத்தில் பொய்க்கவில்லை.

"என்னையாடா அடிச்ச... உன்னை என்ன பண்றேன்னு பாரு..." திவாகர் எழும் முன் தன் தோளில் இருந்த பையைப்

பத்திரமாய்க் கீழே வைத்த கௌதம் சராமாரியாகத் திவாகரை தாக்க துவங்கினான். கதாநாயகனாய் வருவதற்காக அவன் கற்றுக் கொண்ட தற்காப்புக் கலைகள் எல்லாம் இப்போது அவனுக்குக் கை கொடுத்தது. ஆனால் பெண்களிடம் மட்டுமே வீரத்தை காட்டிய கோழை திவாகர் அந்த ஆண் மகனின் வீரத்திற்கு முன் சமாளிக்க முடியாமல் தோற்று போக ஆரம்பித்தான். அவன் கொடுத்த ஒவ்வொரு அடிக்கும் அவன் அலறிய அலறல் அந்த வீடு முழுவதும் எதிரொலித்தது.

திவாகரை திரும்ப எழ முடியாத அளவுக்கு அடித்த கௌதம் அவனைத் தூக்கி அங்கு இருந்த நாற்காலியில் அமர வைத்து தான் கொண்டு வந்து இருந்த பையில் இருந்து கயிறை எடுத்து அவனை நாற்காலியோடு சேர்த்து கட்ட ஆரம்பித்தான்.

"டேய்... விழு...றா..." பேச முடியாமல் குழறிய திவாகரால் கௌதமின் செயலை தடுக்க முடியவில்லை. அந்தளவுக்கு அவனின் உடல் அடி வாங்கி இருந்தது. அடுத்துக் கௌதம் திவாகரின் சட்டையைக் கிழித்து அவனின் வாயையும் சத்தம் வராமல் இறுக கட்டினான்.

திவாகரை நாற்காலியில் இறுக்கமாய்க் கட்டிய கௌதம் பையில் இருந்து அடுத்து எடுத்த பொருளை கண்டதும் திவாகரின் கண்கள் உயிர் பயத்தைப் பிரதிபலிக்க... கௌதமின் கண்களோ வெறிக் கொண்ட வேங்கை போல் பளபளத்தது.

"என் மதுவுக்கு லவ் லெட்டர் கொடுத்த பையனையே உயிர் போற அளவுக்கு அடிச்சவன் நான்... ஆனா நீ அவள் உயிரை கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துக்கிட்டு இருக்கிறதை தெரிஞ்சதுக்கு அப்புறமும் பார்த்துட்டு சும்மா இருக்க நான் என்ன கையாலாகாதவன்னு நினைச்சியா...? என் மதுவின் நிம்மதியை கெடுத்த உனக்கு நான் இப்போ கொடுக்கப்

போற தண்டனை தான் சரியானது..." என்றபடி திவாகரின் அருகில் வந்தவன்,

"உன்னால சீரழிக்கப்பட்ட அத்தனை சகோதரிகள் சார்பாகவும், அவங்க பெத்தவங்க சார்பாகவும் இந்தச் சகோதரன் கௌதம் உனக்குத் தண்டனை கொடுக்கப் போறேன்டா... அதை எல்லாம் விட என் மதுவின் காதலனா கணவனா இதை நான் செய்யலைன்னா என் ஆன்மா கூட என்னை மன்னிக்காதுடா..." வினாடி நேரம் கூடத் தாமதிக்காமல் கௌதம் தன் கையில் இருந்த திராவகத்தை (ஆசிட்) திவாகரின் உயிர் பாகத்தின் மீது ஊற்றினான்.

அடுத்த நொடி திவாகர் உயிர் போகும் வலியை உணர்ந்தான். கண்கள் எல்லாம் இருட்டி கொண்டு வர அவனால் இந்த வேதனையைத் தாங்கி கொள்ள முடியவில்லை. அவனது உடல் வலியில் துடிக்கக் கூட முடியாமல் இறுக கட்டப்பட்டு இருந்தது. வேதனையில் வாய் விட்டு அலற முடியாமல் வாயும் இறுக கட்டப்பட்டு இருந்தது. அவனது கண்கள் மட்டுமே அவனது வலியை பிரதிபலித்தது. ஆண் என்ற அகம்பாவத்தில் எத்தனையோ பெண்களைச் சீரழித்த திவாகர் இப்போது ஆண் என்கிற அடையாளத்தை இழந்திருந்தான்.

"என்ன வலிக்குதா...? எரியுதா...? இப்படித் தானடா இருந்திருக்கும் அந்த அப்பாவி பெண்களுக்கு... அவங்க அனுமதி இல்லாம அவங்க கற்பை சூறையாடும் போது... அதுக்கு எல்லாம் நீ அனுபவிக்க வேண்டாம்..." எகத்தாளமாய் நகைத்த கௌதமை பரிதாபமாய்ப் பார்த்தான் திவாகர். அவன் மனக்கண்ணில் தன்னிடம் கெஞ்சி கதறிய பெண்களின் முகம் ஒவ்வொன்றாய் வந்து போனது.

## துளி : 22

ஊன் உருகுவது என்பதற்கான அர்த்தத்தை அன்று தான் திவாகர் உணர்ந்தான். தன் கண் எதிரேயே தன் உடல் சதை உருகி கீழே விழுவதைக் கண்டவன் கண்கள் வலியை தாங்க முடியாமல் கண்ணீரை பொழிந்தது. 'இப்படிச் சித்திரவதை செய்வதை விட என்னை ஒரேடியாய் கொன்று விடேன்' என்று அவனின் கண்கள் கௌதமிடம் கெஞ்சியது.

"என் மதுவும் இப்படித் தானேடா உன் கிட்ட கெஞ்சினா...? அவளுக்கு நீ இரக்கம் காண்பிச்சியா... இல்லைல்ல... அப்புறம் நான் எப்படிடா உனக்கு இரக்கம் காண்பிப்பேன்... உன்னைக் கொன்னுட்டா எந்தவொரு வலியும் இல்லாம நீ நிம்மதியா போய்ச் சேர்ந்துருவ... ஆனா என் மது அனுபவிச்ச வேதனை... அதுக்கு நான் பதிலடி கொடுக்க வேணாம்... இப்போ நீ உயிரோடு இருந்தும் எதுக்கும் பிரயோஜனம் இல்லாத ஒரு ஆண் மகன்..." கௌதம் வேண்டும் என்றே ஆண் மகன் என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்தான்.

"நீ மதுவை எடுத்த வீடியோ எல்லாம் எங்கே வச்சிருக்க...? சொல்லு... இல்லை இந்த ஆசிட்டை உன் மூஞ்சில ஊத்திடுவேன்..." கௌதமின் வார்த்தையில் திவாகரின் முகம் வெளிறிப் போனது. வேண்டாம் என்பது போல் தலையை இடமும் வலமுமாய் வேகமாய் ஆட்டினான். அவனின் செய்கை கண்டு கௌதம் வாய் விட்டுச் சிரித்தான்.

"ஏண்டா டேய்... இன்னமும் உயிர் வாழணும் ஆசை இருக்கா என்ன...? அப்படியே வாழ்ந்தாலும் நோ யூஸ்..." உதட்டை பிதுக்கி ஏளனமாய்ச் சிரித்த கௌதம் அவனின் வாயில் கட்டி இருந்த துணியை அவிழ்க்க...

அத்தனை நேரம் வாய் விட்டு அழ முடியாமல் வலியை அடக்கி கொண்டு இருந்த திவாகர் சத்தம் போட்டு அழ துவங்கினான். "ஷ்... சத்தம் போட கூடாது... எங்கே

வச்சியிருக்கன்னு மட்டும் சொல்லு..." கௌதம் அவனை மிரட்ட...

"என்... செ...யின் லாக்..." திவாகர் சொல்லி முடிக்கும் முன் அவனின் கழுத்து சங்கிலியை கையில் எடுத்தவன் அதில் இருந்த லாக்கெட்டை பிடித்து இழுக்க... அதில் பொருத்தி இருந்த பென்ட்ரைவ் கையோடு வந்தது. அதைக் கண்டதும் ஆத்திரம் தலைக்கேறிய கௌதம்,

"நாதாரி... இந்த அசிங்கத்தைக் கழுத்தில் தொங்க போட்டுக்கிட்டு அலையறியா...? உன்னை எல்லாம்..." திவாகரின் முகத்தில் ஓங்கி குத்துவிட்டான் கௌதம். இப்போது திவாகர் கொஞ்சம் கொஞ்சமாய்த் தன் சுயநினைவை இழக்க ஆரம்பித்தான்.

"இது மட்டும் தானா... இல்லை வேற ஏதும் ஆதாரம் இருக்கா..." கௌதம் அவன் கன்னத்தைத் தட்டி கேட்க...

"இ...ல்...லை..." குழறலாய் சொன்னவன் அடுத்த நொடி மயங்கி போனான். கௌதம் நின்று அவனின் நிலையை ஒரு நிமிடம் திருப்தியுடன் பார்த்துவிட்டு வெளியில் வந்தான்.

மாலை மயங்கி இரவு கவிழ்ந்து கொண்டு இருந்தது. அந்த வீட்டின் முன்பு சற்று தள்ளி இருந்த கடலை நோக்கி நடந்தான். ஆட்கள் அரவமற்ற அந்தக் கடற்கரை அமைதியாய் காட்சி அளித்தது. அங்கே கிடந்த கல்லை எடுத்து அந்தப் பென்ட்ரைவை சுக்கு நூறாய் உடைத்தவன் அதைக் கடலுக்குள் வீசி எறிந்தான். அவன் மனதில் எதையோ சாதித்த நிம்மதி, திருப்தி எழ சந்தோசத்தில் நடக்க முடியாமல் அங்கேயே முட்டி போட்டு அமர்ந்தவனுக்கு மகிழ்ச்சியில் ஓவென்று வாய் விட்டு அழ வேண்டும் போல் இருந்தது. தன்னவளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தான் நியாயம் செய்துவிட்டதாய் கருதியவன் மனம் நிறைந்து இருந்தது. சில நிமிடங்கள் கண்களை மூடி தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தியவன் எழுந்து தன் காரை நோக்கி நடந்தான்.

வீட்டிற்கு அவன் வரும் வரை மது தன் துயில் களையவில்லை. அவளின் உறக்கம் களையாமல் குளியறைக்குள் புகுந்தவன் குளித்துவிட்டு அவளிடம் வந்தான்.

"இப்போ தான் அம்மு எனக்கு நிம்மதியா இருக்கு... எதையோ சாதிச்சிட்ட மாதிரி சந்தோசமா இருக்கு... உனக்காக உன்னோட காதலுக்காக உயிரையும் கொடுக்க நான் தயாரா இருக்கும் போது உன்னை மிரட்டுபவனை என்னால் சும்மா விட முடியுமா...? அதான் அவனுக்குத் தண்டனையை நானே கொடுத்திட்டேன்... போலீஸ், கோர்ட்டுன்னு போனா சட்டத்துல உள்ள ஓட்டைகளை வச்சு அவன் உடனே வெளியில் வந்துடுவான்... ஆனா இப்போ... உயிர் இருந்தும் அவன் பிணம் தான்... சட்டப்படி நான் செஞ்சது தப்பு தான்... இதுக்காகப் போலீசில் சரண் அடையவும் மாட்டேன்... ஆனா என் அம்முவுக்காக நான் செஞ்சது சரியே... உனக்காக நான் எதுவும் செய்வேன்..." அவளை அள்ளி அணைத்து தன் மேல் போட்டு கொண்டவன் அவளின் நெற்றியில் முத்தமிட்டான்.

"மாமா..." என்று தூக்கத்தில் சிணுங்கியவள் அவனின் தோளில் முகத்தைத் தேய்த்தவள் அவனை அணைத்துக் கொண்டு மீண்டும் சுகமாய்த் தன் உறக்கத்தைத் தொடர்ந்தாள். அவளின் செயலில் அவனுக்குச் சிரிப்பு வந்தது. குனிந்து அவளது நெற்றியில் செல்லமாய் முட்டியவன்,

"தூங்கு மூஞ்சி அம்மு..." அவளின் நிம்மதியான உறக்கத்திற்காகத் தான் செய்துவிட்டு வந்த காரியத்தை நினைத்தவன் மனம் லேசானது. மனைவியை அணைத்துக் கொண்டு உறங்க முற்பட்டவன் கண்களை ஆழ்ந்த உறக்கம் தானாய் வந்து தழுவி கொண்டது.

******************

நம்பி அப்போது தான் வீட்டிற்குள் நுழைந்தார்... நுழையும் போதே அவரின் அலைப்பேசி சத்தமிட்டது. எடுத்து பார்த்தவர் அது விருந்தினர் இல்லத்தின் காவலாளி என்றதும் எடுத்துக் காதில் வைத்தவர்,

"திவா மறுபடியும் வந்து பிரச்சினை பண்றானா...?"

"இல்லை சார்... நம்ம தம்பி... தம்பி..."

"தம்பிக்கு என்ன விசயத்தைச் சொல்லு..." நம்பியின் குரலில் எரிச்சல் மண்டியது. மறுபக்கம் அவன் திவாகரின் நிலையை விவரிக்க விவரிக்க நம்பி அப்படியே தொய்ந்து போய் அங்கிருந்த சோபாவில் தொப்பென அமர்ந்தார்.

மகன் செய்யும் அநியாயத்திற்கு என்றாவது ஒரு நாள் யாரிடமாவது நன்றாக வாங்கிக் கட்டி கொள்ளப் போகிறான் என்று அவர் நினைத்து இருந்தார் தான். ஆனால் அது இவ்வளவு சீக்கிரம் என்று அவருக்குத் தெரியாது.

"நீ திவாவை உடனே என் பிரெண்ட்டோட ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போ... இப்பவே நான் அங்கே வர்றேன்..." அவர் அலைப்பேசியைத் துண்டிக்கும் போது நாச்சியார் பதறியபடி அங்கே வந்தார்.

"என்னங்க நம்ம திவாவுக்கு என்ன ஆச்சுங்க...?"

மனைவிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் நம்பி கண்களை இறுக மூடி கொண்டு சோபாவில் சாய்ந்தார். திவாகரின் மேலிருந்த வெறுப்பில் அவனை மருத்துவமனையில் சென்று கூடப் பார்க்க அவருக்கு விருப்பம் இல்லை. தான் அத்தனை தடவை சொல்லியும் உல்லாசமாக இருப்பதற்காக விருந்தினர் இல்லத்துக்குச் சென்று இருக்கிறான் என்றால் அவனின் திமிர் எப்படிப்பட்டதாய் இருக்கும். அதான் பாதிக்கப்பட்ட யாரோ

ஒருவன் இனி திவாகரால் முற்றிலும் செயல்பட முடியாதபடி செய்துவிட்டான். தன் குடும்பத்து வாரிசு இப்படிக் கெட்டு சீரழிந்ததோடு மட்டும் இல்லாமல் இந்தக் குடும்பத்தின் குல பெருமையை இப்படிக் காற்றில் பறக்க விட்டு விட்டானே என்று அவருக்கு ஆதங்கமாய் இருந்தது.

"என்னங்க நான் கேட்டுட்டே இருக்கேன்... நீங்க இப்படி இருந்தா எப்படி... திவாவுக்கு என்னங்க ஆச்சு...?" பதறிய மனைவியைக் கண்டு அவரின் கண்கள் கலங்கியது. மனைவியின் கைகளைப் பிடித்துக் கொண்டு,

"அதை எப்படி நாச்சி என் வாயால் சொல்வேன்..." நாச்சியாரின் கைகளில் முகம் புதைத்து அழுகையில் குலுங்கினார் அந்தப் பெரிய மனிதர்.

"என்னங்க..." என்றும் கம்பீரம் குறையாமல் வலம் வரும் தன் கணவன் அழுகையில் உடல் குலுங்குவதைக் கண்டு நாச்சியாரின் மனம் பதைபதைத்தது.

"நம்ம பையனை நாம சரியா வளர்க்காம போயிட்டோம் நாச்சி... அவன்... அவன்..." மகனின் திருவிளையாடல்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் கூறியவர், "இத்தனை வருசம் இந்தச் சினி இன்டஸ்ட்ரியில் இருந்து இருக்கேன்... ஒரு நாள் பாதை மாறிப் போனது உண்டா... இல்லை அதுக்கான சந்தர்ப்பம் தான் எனக்கு அமையாமல் போனதா...? அப்பவும் இப்பவும் சரி அந்த ராமன் மாதிரி தானே நான் வாழ்ந்துட்டு இருக்கேன்... ஆனா நான் பெத்த மகன்... ஐயோ நினைச்சாலே மனசு பதறுது... அந்தப் பொண்ணுங்களை நினைக்கும் போது எனக்கு நம்ம வர்ஷு, தர்ஷி நியாபகம் தான் வருது..." புலம்பியவரை பார்த்து நாச்சியார்,

"இப்போ திவாவுக்கு என்னாச்சு..." அவரின் முகத்தில் இருந்து அவர் என்ன நினைக்கிறார் என்பதை நம்பியால் அனுமானிக்க முடியவில்லை.

"அவனுக்கு..." திவாகருக்கு நடந்த கொடுமையை நம்பி ஒன்று விடாமல் சொன்னார். அப்போது அங்கே வந்த தர்ஷினி,

"அம்மா... அண்ணா... ச்சே அவன் எல்லாம் அண்ணன்... த்தூ..." அருவருப்பில் முகத்தைச் சுளித்தவள், "அம்மா அவனை எல்லாம் நீங்க மன்னிக்காதீங்கம்மா... அவனுக்குத் தேவையான பனிஷ்மெண்ட் தான்... அவனை அப்படியே விட்டுருங்கம்மா... அப்படியே அநாதையாய் செத்து போகட்டும்..." அழுதபடி சொன்னவளை கண்டு இருவரும் திடுக்கிட்டனர். நம்பி தான் தர்ஷினியை ஆறுதலாய் அணைத்துக் கொண்டார்.

எதற்கும் பதில் சொல்லாமல் அமைதியாய் எழுந்த நாச்சியார் கணவரிடம், "அவன் கண் முழிச்சும் என்னைக் கூட்டிட்டு போங்க..." என்றவர் நேரே பூஜையறைக்குச் சென்றார். அவரின் செயலில் இருந்து அவரது மனநிலை என்ன என்று யாராலும் கணிக்க முடியவில்லை.

நம்பி பெத்த கடனுக்கு மருத்துவமனைக்குச் சென்றார். நண்பரின் மருத்துவமனை என்றதால் காவல்நிலையம், வழக்கு என்று இழுத்தடிக்காமல் திவாகருக்கு உடனடியாகச் சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது. சிகிச்சை முடித்துவிட்டு வந்த அவரது மருத்துவ நண்பர்,

"திவாவோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை... இன்னும் கொஞ்ச நாளைக்கு அவனை அன்கான்ஷியசா வச்சிருக்க வேண்டி வரும்... அப்போ தான் அவனுக்குப் பெயின் தெரியாது..." என்றவர், "யாருப்பா இப்படி ஒரு காரியத்தைச் செய்யத் துணிஞ்சது..."

"தெரியல... அவன் போட்ட ஆட்டம் கொஞ்சமா நஞ்சமா... அதுல பாதிக்கப்பட்டவங்க யாராவது செஞ்சிருக்கணும்..." விரக்தியாய் சொன்னார் நம்பி.

திவாகர் மருத்துவமனையில் இருக்கும் விசயத்தை எவ்வளவு தான் ரகசியமாக வைத்தாலும் அடுத்து வந்த தினங்களில் விசயம் வெளியில் கசியத்தான் செய்தது. அவனால் பாதிக்கப்பட்ட பெண்கள் வேண்டும் என்றே வாழ்த்துக்கள் அடங்கிய அட்டையையும், பூங்கொத்தையும் கொடுத்துவிட்டு கேலியாய் சிரித்துவிட்டு நலம் விசாரித்தார்கள். ஒரு சிலர் இன்னும் ஒரு படி மேலே போய்,

"திவா டார்லிங்... நம்மளோட அடுத்த டேட்டிங்கை எப்போ வச்சுக்கலாம்...? ஐம் வெய்ட்டிங் ஃபார் யூ டார்லிங்..." தேன் தடவிய குரலில் விசம் தடவிய வார்த்தைகளைக் கொண்டு அவனைப் பார்த்து எள்ளலாய் கூறியவர்கள் அவனின் தன்மானத்தை வேண்டும் என்றே சீண்டி அவனை உயிரோடு கொன்றார்கள்.

அவனுக்கு வந்து குவிந்த வாழ்த்து அட்டையும், பூங்கொத்துக்களின் எண்ணிக்கையும் வைத்து அவனால் எத்தனை பெண்கள் பாதிப்படைந்து இருக்கிறார்கள் என்று சொல்லிவிடலாம். ஆனால் எண்ண முடியாத அளவுக்குச் சொல்ல முடியாத அளவுக்கு அதன் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடியது.

"எத்தனை பெரிய பாவத்தைச் சம்பாதிச்சு வச்சிருக்கப் பாரு..." வெறுப்புடன் சொன்ன நம்பி கோபத்தில் அங்கு இருந்த பூங்கொத்து ஒன்றை எடுத்து அவன் மீதே விசிறியடித்தார்.

அவமானத்தில் துடித்த திவாகர் தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய கௌதமை பழிவாங்க எண்ணினான். தன் நண்பனின் உதவியோடு அருகில் இருந்த காவல்துறையில் கௌதமின் மீது புகார் செய்தான்.

மறுநாள் நம்பிக்கு அவரது நண்பரிடம் இருந்து அழைப்பு வந்தது. "நம்பி உடனே வா... திவா போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுத்துப் போலீசை கூப்பிட்டு இருக்கான்... அவங்க

இங்கே வந்து விசாரிச்சிட்டு இருக்காங்க..." அவரது பதற்றம் நம்பியை தொற்றிக் கொள்ள உடனே மருத்துவமனைக்குப் பறந்தார்.

"இன்ஸ்பெக்டர்... என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிய அந்தக் கௌதமை நீங்க சும்மா விடக் கூடாது... அவனை உடனே அரஸ்ட் பண்ணுங்க... போங்க..." தன் உடல் வலியை கூட மறந்தவனாய் உச்சஸ்தானியில் கத்தினான். அப்போது தான் நம்பி உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும் மரியாதை நிமித்தம் வணக்கம் தெரிவித்த அந்தக் காவல்துறை அதிகாரி,

"சார் உங்க மகன் நடிகர் கௌதம் மேல கம்ப்ளைண்ட் கொடுத்து இருக்கார். கௌதம் சமூகத்துல பெரிய அந்தஸ்து உள்ள பெரிய மனிதர்... அப்கோர்ஸ் நீங்களும் தான்... இதை நான் ப்ரோசிஜர் பண்ணலாமா வேணாமா...? நீங்க தான் சார் சொல்லணும்... பின்னாடி ஏதும் பிரச்சினை வந்துற கூடாது பாருங்க..."

நம்பிக்கு இப்போது எல்லாம் புரிந்தது. தன் மகனின் இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் கௌதம் ஏன் வந்தான் என்று...? அன்று அந்தச் சின்னப் பெண்ணுக்கு நடந்த கொடுமையைத் தான் தட்டி கேட்காமல் மகனை நாடு கடத்தியதால் உண்டான பலன் இது என்று... என்று இருந்தாலும் செய்த பாவத்துக்குத் தண்டனை அனுபவித்துத் தான் ஆக வேண்டும். அதைத் தான் தன் மகன் அனுபவிக்கிறான் என்று மனதில் நினைத்தவர் தன் மனதை திடப்படுத்திக் கொண்டு,

"சார் என் மகனுக்குக் கொஞ்ச நாளா மனநிலை பாதிக்கப்பட்டு இருக்கு... அதனால இப்படித்தான் திடீர் திடீர்ன்னு ஏதாவது சம்பந்தம் சம்பந்தமில்லாமல் பேசுவான்... அவனே தான் ஆசிட் பாட்டிலை எடுத்து தன் மேலே கவுத்திக்கிட்டான்... அதுக்குச் சாட்சி நான் தான்... நான் தான் அவனைத் துடிச்சிட்டு இருக்கிறதை பார்த்துட்டு

ஹாஸ்பிட்டல்ல கொண்டு வந்து சேர்த்தேன்... இதில் யாரும் சம்பந்தப்படல... அவன் கொடுத்த கம்பளைண்ட்டை நான் வாபஸ் வாங்கிக்கிறேன்... உங்களைத் தேவையில்லாமல் சிரமப்படுத்தியதுக்கு மன்னிக்கணும்..." இரு கையைக் கூப்பிய நம்பியை கண்டு அந்த அதிகாரி பதறிப் போனார். திடுக்கிட்டு பார்த்த நண்பனை கடைக் கண்களால் அடக்கினார் நம்பி.

"சார் நீங்க ஏன் மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு... சரி சார் நான் கிளம்பறேன்..." அவர் விடைப்பெற...

"இன்ஸ்பெக்டர் அவர் சொல்றதை நம்பாதீங்க... எனக்குப் பைத்தியம் இல்லை... நான் நார்மலா தான் இருக்கேன்... அந்தக் கௌதம் தான் என் மேல் ஆசிட்டை ஊத்தினான்..." ஏறக்குறைய அலறியவன்,

"டேய் அப்பா... நீ எல்லாம் மனுசனா... பெத்த புள்ளையைப் பைத்தியக்காரன்னு சொல்ற... கூப்பிடுய்யா என் அம்மாவை... அவங்க சொல்லட்டும் நான் பைத்தியக்காரனா இல்லையான்னு..." என்று கத்தியவன் கையிலேறிக் கொண்டு இருந்த குளுக்கோஸ் பாட்டிலை பிடுங்கி தந்தையின் மீது தூக்கி அடித்தான்.

நல்லவேளையாக நம்பி அவனின் நோக்கம் அறிந்து சட்டென்று விலக அந்தப் பாட்டில் சுவற்றில் மோதி உடைந்தது.

"நான் சொன்னப்போ நம்பலைல... நீங்களே பார்த்துக்கோங்க..." என்ற நம்பி வெறுப்பில் முகத்தைச் சுளித்தார்.

"சார் எந்தப் பைத்தியம் தான் தன்னைப் பைத்தியம்ன்னு ஒத்துக்கும்... விடுங்க சார்..." என்ற அதிகாரி, "எதுக்கும் அதுக்குன்னு உள்ள ஹாஸ்பிட்டல்ல சேர்க்கிறது நல்லது சார்..."

அதைக் கேட்ட திவாகரின் முகம் அஷ்ட கோணலாகியது. "யேய் யாரை பார்த்து பைத்தியம்ங்கிறே..." என்றவன் தன்னை அறியாமல் அந்த அதிகாரியை அடிப்பதற்காகப் படுக்கையில் இருந்து எழ போக வலி தாங்க முடியாமல் மீண்டும் படுக்கையில் விழுந்தவன் வேதனையில் அரற்றினான்.

அந்நேரம் அங்கே வந்த நாச்சியாரை கண்டதும் திவாகரின் முகம் வலியை மறந்து மலர்ந்தது. "அம்மா... பாருங்கம்மா... இந்த அப்பா என்னைப் பைத்தியம்ன்னு சொல்றாரு... நான் பைத்தியம் இல்லைன்னு நீங்களாவது சொல்லுங்கம்மா... உங்க பையன் பைத்தியம் இல்லை தானே..." அன்னை வந்துவிட்ட தைரியத்தில் அவனின் முகபாவமே மாறியது. தன்னைப் பற்றிய உண்மையைத் தந்தை அன்னை இடத்தில் சொல்லி இருக்க மாட்டார் என்று அவன் நம்பினான்.

"சார்... நான் சொல்றேன் என் மகன் பைத்தியம் தான்... இவனைப் பத்து மாசம் சுமந்து பெத்த அம்மா சொல்றேன் இவன் பைத்தியம்... பைத்தியம்... பைத்தியம்..." நாச்சியார் சொன்னதைக் கேட்டு நம்ப முடியாமல் வாயை பிளந்தபடி திவாகர் அப்படியே இருந்தான். அன்பே உருவான அன்னை இப்படிப் பேசியது அவனால் ஜீரணிக்கக் கூட முடியவில்லை.

நாச்சியார் சொன்னதைக் கேட்டதும் அந்த அதிகாரி அவனை மனநிலை சரியில்லாதவன் என்று முடிவு செய்து நம்பியிடம் விடைப்பெற்றார். அவர் சென்றதும் நாச்சியார் அமைதியாய் மகன் அருகில் வந்து நின்றார்.

"அம்மா... நீங்க... நீங்க இப்படிச் சொல்வீங்கன்னு நான் எதிர்பார்க்கல... அவன் என்னை என்ன மாதிரியாக்கி இருக்கான்னு தெரிஞ்சும் நீங்க சொன்னது..." வார்த்தை வராமல் அவனின் கண்கள் கலங்கியது.

நாச்சியார் அவனைத் தீர்க்கமாய்ப் பார்த்தவர், "நீ பைத்தியம் தானேடா... பெண் பித்துப் பிடித்த நீ பைத்தியம் இல்லாம வேற என்ன...? ச்சீ... உன்னைப் போய் என் வயித்துல சுமந்து பெத்தேனே... என் வயித்தை தீயில் சுட்டுப் பொசுக்கினா கூட அந்தப் பாவம் தீராது... நீ எனக்கு மகனே இல்லை... எனக்கு மகன்னு ஒருத்தன் இருந்தான்... ஆனா இப்போ இல்லை... அவன் செத்து போய் ரொம்ப நாளாகி போச்சு... இனி எனக்கு ரெண்டு பொண்ணுங்க மட்டும் தான்... நான் செத்தா கூட என் முகத்துல முழிக்காதே..." ஆவேசமாய்ச் சொன்னவர்,

"உன்னை அடிச்சு கொல்லணும்ன்னு இருக்கு... ஆனா அதுக்குக் கூட உன்னைத் தொடணும்ன்னு நினைக்கிறப்போ ஒரு பொண்ணா என் உடம்பு எல்லாம் கூசுது... த்தூ..." என்று அவன் முகத்தில் காறி உமிழ்ந்தார். அதைத் துடைக்கக் கூட மறந்தவனாய் திவாகர் சிலையாய் அமர்ந்து இருந்தான்.

பின் தன் கணவர் அருகில் வந்தவர், "அவனோட ஹாஸ்பிட்டல் பில்லை மட்டும் பெத்த பாவத்துக்குக் கட்டிடுங்க... அவன் உடம்பு சரியானதுக்கு அப்புறம் நம்மைத் தேடி வர கூடாது... அதையும் அவன் கிட்ட ஸ்ட்ரிக்ட்டா சொல்லிடுங்க..." கணவருக்குச் சொல்வது போல் மகனிடம் சொன்னவர், "வாங்க போகலாம்..." திவாகரை திரும்பி கூடப் பார்க்காமல் அவர் நடக்க... நம்பி தன் நண்பரின் கையை அழுத்திவிட்டு மனைவியைப் பின் தொடர்ந்தார்.

யார் யாரோ எல்லாம் அவனை வெறுத்த போது கூடத் திமிராய் கண்டு கொள்ளாமல் இருந்த திவாகர் அன்னையின் வார்த்தையில் அப்படியே செத்துப் போனான். அதுவும் அவர் கடைசியாய் சொன்ன வார்த்தைகள் அவன் இதயத்தில் சம்மட்டியால் அடித்தது போலிருந்தது. அதற்காக அவன் திருந்தினான் என்றில்லை. அன்பை மட்டுமே காட்டிய அன்னை திடீரென்று இவ்வாறு பேசியது அவன் மனதை வருத்தியது.

நாள் முழுவதும் அவரது வார்த்தையில் உழன்றவன் உண்மையில் மனநிலை பாதிக்கப்பட்டான்.

அன்னை வார்த்தைகள் ஒரு பக்கம் என்றால்... அவனிடம் அடிமையாய் அவன் காலால் இட்ட பணியைச் சிரமேற் கொண்டு சிரத்தையாய் செய்த ஆணின் அடிமையாகக் காலம் காலமாய்க் கருதப்பட்ட பெண்கள் இப்போது அவனின் நிலை கண்டு தைரியம் வர பெற்றவர்களாய் எள்ளி நகையாடியது அவனை மிகுந்த மனவுளைச்சலுக்கு ஆளாக்கியது.

அவனின் பலம் ஆண்மை மட்டுமே என்று கருதியவன் அதை இழந்ததும் தான் அனைத்தும் இழந்தவனாய் எண்ணி தனக்குத் தானே மருகினான். அதன் விளைவு அன்றிரவு தான் இருந்த பத்தாவது தளத்தின் அறையின் பால்கனி வழியே கீழே குதித்துத் தற்கொலை செய்து கொண்டான். ஆண் என்கிற அகம்பாவத்தில் தலைக்கனம் பிடித்தாடிய அவனது தலை கனம் தாங்காமல் வேகத்துடன் தரையில் மோதி சிதறு தேங்காய் போல் சிதறியது.

வாழும் வாழ்க்கை கொஞ்சம்... அதில் தேவையில்லாத ஆட்டம் போட்ட அவன் வாழ்க்கையின் நிசர்சனத்தை உணராமல் சிறுமையாய் வாழ்ந்து வெறுமையாய் மடிந்தான்... வாழ்ந்தான் மடிந்தான் என்று இருக்காமல்... வாழ்ந்தான் வென்றான் என்று மற்றவர்கள் நெஞ்சங்களில் நீடித்து வாழாமல்... வீணே வாழ்ந்து மடிந்தான் அந்த வீணாய் போன வீணன்...

## துளி : 23

சமையலறையில் வேலையாய் இருந்த மதுவின் கண்களைப் பின்புறமாய் வந்து மூடினான் கௌதம். அதைக் கண்டு அங்கிருந்த வேலைக்காரர்கள் தங்களுக்குள் சிரித்தப்படி அகன்றனர்.

"கௌதம்..." என்று செல்லமாய்ச் சிணுங்கியவள், "இது என்ன விளையாட்டு... நான் சமைக்கணும்... மாமா வந்துடுவாங்க..."

"அது எப்படிடி தொட்டு பார்க்காமலே நான் தான்னு கண்டுப்பிடிச்ச..." தன் கைகளை விலக்கியவன் அவளை அணைத்தார் போன்று நின்று கொண்டான். இன்று அவனுக்குப் படபிடிப்பு இல்லை...

அவனின் பேச்சு கேட்டு அவனை முறைத்தாள் அவள்... "ம்... வெளியில் போய் இதைச் சொல்லிறாதீங்க... சிரிக்கப் போறாங்க..."

"ஓ... நீ அதைச் சொல்றியா..." கண்சிமிட்டியவன் செயலில் அவள் முகம் சிவந்தது. அருகில் இருந்த கரண்டியால் அவன் கையில் செல்லமாய் அடித்தவள்,

"வம்பிழுக்காம போங்க..."

"பார்த்தியா நான் வந்த விசயத்தை மறந்திட்டு என்ன என்னமோ பேசிட்டு இருக்கேன்... நீ வா..." அவள் கையைப் பிடித்து இழுக்க...

"சமைக்கணுமே..." என்று அவள் ராகம் பாட...

"அதைச் சமையக்காரம்மா பார்த்துக்குவாங்க... நீ வாடி..." அவளின் தோளின் இரு புறமும் கை வைத்து அவளைத் தள்ளி கொண்டு சென்றான்.

அறைக்கு அழைத்துச் சென்றவன் கட்டிலில் அவளை அமர வைத்தவன், "கண்ணை மூடேன் அம்மு..."

"எதுக்கு...?"

"ம்ப்ச்... சொன்னதைச் செய்..." அவன் சொன்னதும் கண்களை மூடியவளிடம், "நான் சொல்ற வரைக்கும் கண்ணைத் திறக்க கூடாது..." என்றவன் இரு வினாடி கழிந்த நிலையில்,

"இப்போ கண்ணைத் திற..."

கௌதம் சொன்னதும் கண்களைத் திறந்தவள் தன் முன் பிரித்து வைக்கப்பட்டு இருந்த செய்தித்தாளை கண்டு அதிர்ந்து போனாள். திவாகரின் தற்கொலை செய்தி பிரசுரிக்கப்பட்ட பக்கம் தான் அவள் முன் வைக்கப்பட்டு இருந்தது. அன்று அவளை மிரட்டிய திவாகர் அதன் பின் அவளிடம் பேசாமல் போனதால் அவள் அவனை மறந்துவிட்டாள்.

ஆனால் அவ்வப்போது முணுக் முணுக்கென்று அவனின் பேச்சு வலியை கொடுக்கும் தான்... அது எல்லாம் கௌதமின் அன்பில், காதலில் பின்னுக்குச் சென்றுவிடும். கௌதமின் அருகில் அவள் பயம் தெளிந்து சற்றுத் தைரியமாகத் தான் இருந்தாள் என்பது தான் உண்மை. மீண்டும் திவாகரை பற்றிய செய்தியை படித்ததும் அவளது உடல் நடுங்கியது.

"மாமா..." அவனின் கைகளை இறுக பற்றிக் கொண்டாள். அவளின் நிலையை உணர்ந்து அவள் அருகில் அமர்ந்து அவளை அணைத்துக் கொண்டான். அவனது செயலில் அவள் உடைந்து போய் அழுதாள்.

"அம்மு சாரிம்மா... இவன் தொந்திரவால நீ மனசு கஷ்டப்பட்டு இருக்கும் போது நான் வேற உனக்குக் கஷ்டத்தைக் கொடுத்துட்டேன் என்ன... என்னை மன்னிச்சிரு அம்மு..." அவளின் கைப்பற்றி முத்தமிட்டவன் மன்னிப்பை வேண்ட...

"நீங்க எதுக்கு மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு... நீங்க எது செஞ்சாலும் என் நல்லதுக்குத் தான்னு எனக்குத் தெரியும்... ஆனா அவன்..." ஆத்திரத்தில் பல்லை கடித்தவள், "அவனும் நீங்களும் ஒண்ணா கௌதம்..." என்றவள் ஏதோ

நினைத்தவளாய் அவனை ஏறிட்டு பார்த்தவள் விழிகள் அச்சத்தைப் பிரதிபலித்தது.

"கௌதம் உங்களுக்கு... நான்... திவாகர்..." வார்த்தைகள் எழும்பவில்லை அவளுக்கு.

"ம்... நரேந்திரன் சார் கிட்ட கேட்டு தெரிஞ்சுக்கிட்டேன்..." அவன் சொல்லி முடிக்கும் முன் அவனை அணைத்துக் கொண்டு,

"கௌதம்..." அவன் நெஞ்சில் விழுந்து கதறி அழுதாள்.

"ஹேய் அம்மு... இப்போ எதுக்கு இப்படி அழற... உனக்கு நடந்தது ஒண்ணும் இல்லாதது... இதுக்குப் போய் இப்படிக் கலங்கலாமா...? இந்த விசயத்தைப் பத்தி நாம பேசுறது இதுவே கடைசியாய் இருக்கணும்ன்னு தான் நான் சொன்னது... எந்த உறுத்தலும் இல்லாமல் நீ நிம்மதியா, சந்தோசமா வாழணும்ன்னு தான் நான் உன் கிட்ட சொன்னது... இப்படி நீ அழறதுக்கு இல்லை..." என்று அவன் சமாதானப்படுத்திய போதும் அவள் அழுகையை விடவில்லை.

"எப்படிக் கௌதம் அதை மறக்க சொல்றீங்க... எந்த ஒரு பொண்ணும் செய்யக் கூடாத காரியத்தை என்னைச் செய்ய வச்சுட்டானே அந்தப் பாவி... நீங்க கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு சொன்னப்போ எல்லாம் நான் எப்படித் தவிச்சு போனேன் தெரியுமா... உங்களுக்குப் பண்ணின துரோகத்துக்கு நான் நல்லா அனுபவிச்சிட்டேன்... எனக்கு இது வேணும்... நான் சாகுற வரைக்கும் என்னால மறக்க முடியாது..." என்று கதறியவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் அவளின் போக்கில் சிறிது நேரம் அழவிட்டான். அவள் அழுகை குறைந்து தேம்பி கொண்டிருக்க...

"எனக்குத் துரோகம் பண்ண உன்னால முடியுமாடி சொல்லு... உன் மனசு அறிஞ்சு நீ எதுவும் பண்ணல... சூழ்நிலை அப்படிப் பண்ண வச்சிருச்சு... நீ கல்யாணம் வேணாம்ன்னு சொன்னதுக்கு அர்த்தம் இப்போ புரியுது

அம்மு... அது தெரியாம நான் தான் வார்த்தையால் உன்னைக் கொன்னுட்டேன்..." என்றவனின் கண்கள் கலங்கியது.

"போனது போகட்டும் அம்மு... அவன் இறந்தது உனக்குச் சந்தோசமா இல்லையா...?" அவன் கேட்டதும் அவன் நெஞ்சில் முகம் புதைத்து தேம்பி கொண்டு இருந்தவள் சட்டென்று ஏறிட்டு பார்த்தாள்.

"ம்... ரொம்பச் சந்தோசமா இருக்கு... இது அவனுக்கு வேண்டிய தண்டனை தான்..." என்று சொன்னவளின் முகம் அன்றைய நாளின் நினைவின் தாக்கத்தில் இறுகி போனது.

"அம்மு..." என்றவன் அவளின் முகத்தை வருடி அதன் இறுக்கத்தைக் குறைக்கலானான். கொஞ்ச நேரம் ஏதோ யோசனையில் இருந்தவள்,

"அன்னைக்குத் திவாகர் எனக்கு ஃபோன் பண்ணின போது..." நியாபக அடுக்கில் அன்றைய நாளின் நினைவை தேடியவள் கண்கள் பிரகாசமுற...

"அப்போ திவாகரோட இந்த நிலைக்குக் காரணம் நீங்க தானா...?" அவளின் புத்திக் கூர்மையை மனதிற்குள் மெச்சி கொண்டவன்,

"அம்மு... உனக்கு வேணும்ன்னா உன் புருசன் சூப்பர் ஹீரோவா இருக்கலாம்... ஆனா நிஜத்தில் நான் ஒரு டம்மி பீஸ்ம்மா... நான் அதைச் செய்யல..." உண்மையை மறைத்து பொய் கூறினான்.

அவளுக்கான நியாயத்தை அவன் வழங்கிவிட்டான் என்று அவள் தன் செயலில் மகிழ்ச்சி தான் அடைவாள் என்று அவனுக்குத் தெரிந்த போதும் ஏனோ அவன் உண்மையை அவளிடம் சொல்லவில்லை. இன்று மகிழ்ச்சியை அளிக்கும் இந்தச் செயல் நாளை வருத்தத்தை அளிக்கலாம்... அதனால் அவன் சொல்லாமல் மறைத்துவிட்டான். அதுவும்

போக வெளியில் போடும் நாயகன் வேசத்தை வீட்டில் காண்பிக்க அவன் விரும்பவும் இல்லை.

"ஓ... அப்போ நீங்க இல்லையா...?" ஏமாற்றம் கவிழ்ந்தது அவளது முகத்தில்.

"எப்பவுமே நான் இல்லை..." கேலியாய் சொன்னாலும் அவளின் ஏமாற்றம் அவனைத் தாக்க தான் செய்தது.

"அவனால பாதிக்கப்பட்ட எத்தனையோ பேருல யாராவது ஒருத்தர் இந்த மாதிரி பண்ணி இருக்கலாம்... இனி மேல் நீ அதை நினைச்சுக் குழம்பக் கூடாது... சந்தோசமா இருக்கணும் என்ன..." அவன் சொன்னதுக்குச் சம்மதமாய்த் தலையசைத்தவளை கண்டு,

"ஹலோ மேடம்... நீங்க சந்தோசமா இருந்தா மட்டும் போதாது... என்னையும் சந்தோசப்படுத்தணும்..." அவனின் பேச்சுப் புரியாமல்... 'எப்படி' என்பது போல் பார்த்தவளை அணைத்துக் கொண்டு படுக்கையில் சரிந்தவன்,

"இப்படி..." என்று தன் இணையைச் சந்தோசப்படுத்துவது எப்படி என்று தனி அகராதியை படைக்க ஆரம்பித்தான்.

திவாகர் இறந்த விசயத்தை மீனாவிடம் சொன்ன போது அவர் பெருத்த நிம்மதி அடைந்தார். மகளின் வாழ்வில் நெருஞ்சி முள்ளாய் உறுத்தியவன் ஒழிந்தான் என்ற செய்தி அவருக்கு அளவில்லா மகிழ்ச்சியை அளித்தது. அதே சமயம் கணேஷை இந்த விசயம் யோசிக்க வைத்தது.

கணேஷிற்கு அன்று கௌதம் ஏன் திராவகம், கயிறு எல்லாம் கேட்டான் என்று திவாகரின் மரணம் மூலம் ஓரளவு உணர்ந்து கொண்டான். நிச்சயம் திவாகருக்கும் மதுவுக்கும் இடையில் ஏதோ இருப்பது அவனுக்குப் புரியத்தான் செய்தது. ஆனாலும் நண்பனிடத்தில் எதையும் கேட்டுச் சங்கடப்படுத்தாமல் எதுவும் தெரியாதது போல் காட்டி கொண்டான். தன் காதலி மேகாவிடம் கூட இது பற்றி அவன் மூச்சு விடவில்லை. உயிர் காப்பான் தோழன் என்பது மட்டுமல்ல தன் உயிர் போனாலும் நண்பனை

காட்டி கொடுக்க மாட்டான் தோழன்... அது தான் உயிரினும் சிறந்த நட்பு.

இதயாவுடன் தனியே வந்த ரஞ்சன் அவளின் குணம் பிடிக்காமல் அவளிடம் இருந்து விவாகரத்து வாங்கி விட்டான். குழந்தையைக் கொடுக்க மாட்டேன் என்று கூறியவளை நீதிமன்றத்துக்கு இழுத்து அவள் வசம் இருந்த தனது மகளைத் தன்னிடம் எடுத்துக் கொண்டான். கணவனும் இல்லாமல் குழந்தையும் இல்லாமல் இருந்தாலும் இதயா கொஞ்சமும் திருந்தவில்லை. அவளுக்கு வேண்டிய பணம் இருக்கிறது... பொழுது போக்க மகளிர் சங்கம் இருக்கிறது. அதனால் அவளின் வாழ்வு மகிழ்ச்சியாகத் தான் சென்றது அவளைப் பொருத்தவரையில். இதயாவை போன்றவர்கள் எந்தக் காலத்திலும் திருந்த மாட்டார்கள்.

உஷா புகுந்த வீட்டில் பட்ட கஷ்டங்கள் அவளை நன்கு பக்குவப்படுத்தி இருந்தது. மனிதர்களை எடை போடும் அளவிற்கு அவளிடம் முதிர்ச்சி காணப்பட்டது. தன்ராஜ் தன் படிப்பை சரிவர முடிக்காததால் வேலை என்று பெரியதாகக் கிடைக்கவில்லை. அவனுக்குக் கிடைக்கும் வருமானத்தில் அவனது மனைவி, மக்கள் உண்பதற்குப் போதுமானதாய் இல்லை.

ஆம்... அவன் தந்தை வீட்டில் இருந்தாலும் அவனின் குடும்பத்திற்கு அவன் தான் உழைத்து தர வேண்டும் என்று அவனின் தந்தை கண்டிப்பாகக் கூறிவிட்டார். அவன் பணம் கொடுக்காத போது அவனது குடும்பம் அன்று பட்டினி தான். குழந்தைகள் பசியில் அழும் போது அவன் ஒரு தந்தையாய் துடித்துப் போனான். முதன் முறையாய் அவனுள் இருந்த தகப்பன் என்ற உணர்வு அவனின் தவறுகளை எண்ணி வருந்த செய்தது. வறுமை அவனுக்கு வாழ்க்கையின் நிதர்சனத்தை எடுத்து கூறியது. தேவையில்லாத கேளிக்கை விளையாட்டுக்களை அறவே விட வைத்தது.

வறுமையைச் சமாளிக்க முடியாமல் கௌதமிடம் போய்ச் சரண் அடைந்தான். தனக்கு நிரந்தரமாய் ஏதாவது ஒரு வேலை வாங்கித் தரும்படி கேட்டுக் கொண்டான். அவனை அலட்சியமாய்ப் பார்த்த கௌதம்,

"உனக்குத் தான் உழைக்காம சம்பாதிக்கிற வித்தை தெரியுமே... உன் கிட்ட தான் மூலதனமா உன் அழகான பொண்டாட்டி இருக்காளே... அவளை வச்சு பணத்துக்கு ஏற்பாடு பண்ணு... உன்னால முடியலைன்னா நான் வேணும்ன்னா ஏற்பாடு பண்ணவா..."

"டேய்..." தன்ராஜ் ஆத்திரத்துடன் கௌதமின் சட்டையைப் பிடித்தான். அவனின் செயலில் கௌதம் பயந்து பின் வாங்கவில்லை... நிதானமாய் அவனைப் பார்த்தவன்,

"உன் மனைவியைச் சொன்னா உனக்கு இவ்வளவு கோபம் வருதே... அப்போ நீ என் மனைவியை இப்படிச் சொன்னதுக்கு எனக்கு என்ன மாதிரி கோபம் வந்து இருக்கணும்..." குரலை உயர்த்தாமல் பேசியவனின் பேச்சு தன்ராஜூக்கு அச்சத்தைக் கொடுத்தது.

"சகலை என்னை மன்னிச்சிருங்க..." என்று கௌதமின் காலில் விழுந்தவன், "அந்தத் தன்ராஜ் எப்பவோ செத்துட்டான் சகலை... இப்போ இருக்கிறது திருந்திய புதுத் தன்ராஜ்..."

"நான் மன்னிச்சு என்ன பண்ண போறேன்... மன்னிக்கிறவங்க மன்னிச்சாங்கன்னா நான் செய்ய வேண்டியதை செய்றேன்..." குறிப்பாக மது தான் மன்னிக்க வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொன்னான்.

"நான் அண்ணி கிட்டேயே பேசறேன் சகலை..." என்ற தன்ராஜ் நேரே மதுவிடம் வந்தான்.

"அண்ணி என்னை மன்னிச்சுருங்க..." திடீரென்று தன் காலில் விழுந்தவனைக் கண்டு மது பதறி போய் எழுந்தாள்.

"நான் செஞ்சது, பேசியது எல்லாம் தப்பு தான்... என்னை மன்னிச்சிருங்க... நானும் உஷாவும் ரொம்பக் கஷ்டத்தில்

இருக்கிறோம்... குழந்தைகள் பட்டினியில் கிடக்குதுங்க... நீங்க தான் எப்படியாவது சகலை கிட்ட சொல்லி வேலைக்கு ஏற்பாடு பண்ணனும்..." நெடுஞ்சாண் கிடையாக விழுந்து மன்றாடி மன்னிப்பு கேட்டவனை மன்னிப்பதை தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை. அதுவும் தங்கை மற்றும் அவளின் குழந்தைகளுக்காக வேலை வாங்கித் தருவதாக உறுதி அளித்தாள்.

இரவு கணவன் வந்ததும் அவனிடத்தில் தன்ராஜ் வந்து போன விசயத்தைச் சொன்ன மது, "பாவம் கௌதம்... அவனுக்கு ஒரு வேலை பார்த்து கொடுங்களேன்..." என்றவளை கூர்ந்து பார்த்தவன்,

"அவன் பாவமா அம்மு..." கௌதம் கேட்டதில் மதுவின் முகம் தன்ராஜ் செயலை நினைத்து கன்றியது. இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"தப்பை உணர்ந்து மன்னிப்பு கேட்கும் போது மன்னிக்காம எப்படி இருக்க முடியும்... அவனுக்காக இல்லைன்னாலும் அந்தக் குழந்தைகளுக்காகவாவது நீங்க உதவி செய்யலாமே..." அடுத்தவர்களுக்காக யோசிக்கும் தன்னவளின் குணத்தில் அவன் தன் அன்னையைக் கண்டான்.

அவள் மீதான காதல் என்றும் போல் இன்றும் அவனை ஈர்க்க... "உண்மையில் நீ தேவதை தான்டி..." மையலுடன் கூறியவன் அவளின் இதழை சிறை செய்தான். அவனின் செயலுக்கு ஒத்துழைத்தவள் சிறிது நேரம் சென்று அவன் விடுவித்ததும்,

"தேவதைக்கு வரம் கொடுக்க மாட்டீங்களா...?" தான் கேட்டதை உறுதிப்படுத்த மீண்டும் அவள் கேட்க,

"தேவதைக்கு வரம் கொடுக்கும் அளவுக்கு நான் பெரிய ஆள் இல்லைம்மா... ஆனாலும் என் தேவதைக்காக இதைச் செய்றேன்..." அவன் சொன்னதும் அவனது கன்னத்தில் இதழ் பதித்துத் தன் நன்றியை அவள் தெரிவித்தாள்.

"என்னங்க... உஷா கூட இப்போ திருந்திட்டாளாம்... ஆனா இதயா அப்படியே தான் இருக்கா போல... தன்ராஜ் சொன்னான். பாவம் ரஞ்சன் மாமா..." ரஞ்சனுக்காக மெய்யாய் வருந்தினாள் மது.

"இதயா திருந்தினா தான் அதிசயம் அம்மு... அவ இப்படி இருக்கிறது தான் அவ நேச்சருக்கு அழகு... இல்லைன்னா இந்த உலகம் தாங்காது..." சிரிக்காமல் கேலி பேசியவனை...

"உங்களை..." என்று அவள் அடிக்க வர... அவள் கையில் அகப்படாமல் சிறிது நேரம் போக்கு காட்டியவன் பின் அவள் கையில் அகப்பட்டு அவளோடு படுக்கையில் சரிந்தான்.

"அம்மு உனக்கு ஹனிமூன் போகாதது வருத்தமா இருக்கா...?" அவள் இல்லை என்பது தலையசைக்க...

"ஆனா எனக்கு வருத்தமா இருக்கே... இன்னும் ஆறு மாசம் பொறுத்துக்கோ... எல்லா ஷூட்டிங்கும் முடிச்சிட்டு நாம ஹனிமூன் போகலாம்..."

"அதுக்கு முன்னாடி ஒரு கடமை இருக்கு ஹீரோ சார்..." என்றவளை பார்த்தவனின் பார்வை மாறியது...

"ஆமாம்ல மறந்தே போயிட்டேன்..." என்றவன் கடமை தவறாத கணவனாய் செயலில் இறங்க...

"ம்ப்ச்... எப்ப பாரு இந்த நினைப்பு தானா..." அவனின் கையைத் தட்டிவிட்டவள், "நான் அதைச் சொல்லல... கணேஷ் அண்ணா, மேகா கல்யாணத்தைப் பத்தி சொன்னேன். அண்ணாவுக்கு யாரு இருக்கா... அதனால நாம தான் அவங்க சார்பா மேகா வீட்டில் போய்ப் பொண்ணு கேட்கணும்..." அவனே மறந்து போன விசயத்தை அவள் நியாகப்படுத்தியதும்,

"என் ஸ்வீட் அம்மு..." என்று அவளைக் கொஞ்சியவன், "நாளைக்கே போறோம்... கல்யாணத்தைப் பேசி முடிக்கிறோம்... ஓகே..." என்றவன் சற்று முன் நிறுத்தி

வைத்திருந்த தன் கடமையை ஆர்வமாய்த் தொடங்க அவள் சிணுங்கிய போதும் அவனுடன் இழைய தான் செய்தாள்.

மதுவிடம் சொன்னது போல் மறுநாளே கணேஷின் சார்பாக அவனும், மதுவும் மேகா வீட்டிற்குச் சென்று பெண் கேட்டனர். சிறிதும் யோசிக்காமல் அவர்களும் தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்க அடுத்தப் பத்துத் தினங்களில் அவர்களது திருமணம் ஊரே மெச்சும்படி பிரமாண்டமாய் நடந்தது.

கௌதம் சொன்னது போல் அடுத்த வந்த ஆறு மாதமும் ஓய்வில்லாமல் காலில் சக்கரம் கட்டியது போல் பறந்தான். ஆம் உண்மையில் படப்பிடப்பிற்காக விமானத்தில் மாறி மாறி பறக்க தான் செய்தான். மது கௌதம் முகம் பார்த்தே பல மாதங்களாகி இருக்கும். கௌதம் தன்னுடைய வேலைகள் எல்லாத்தையும் முடித்துவிட்டு மதுவை தேடி வந்தான் கையில் தேனிலவுக்குக் கனடா செல்லும் விமானப் பயணச்சீட்டுடன்...

திட்டமிட்டபடி கனடா வந்ததும் அவன் அவளை அழைத்துச் சென்றது அங்கிருந்த வீடு ஒன்றுக்கு... அடுக்குமாடி குடியிருப்பில் இருந்த அந்த வீட்டிற்கு அழைத்துச் சென்றவன் மதுவிடம், "வீடு எப்படி இருக்கு...? பிடிச்சிருக்கா...?" பின்புறமாய் அவளை அணைத்தவன் அவளின் காதோரம் கிசுகிசுக்க...

"ரொம்ப... ரொம்பப் பிடிச்சிருக்கு கௌதம்..." முகம் மலர்ந்து சொன்னவளின் கண்கள் அந்த வீட்டை வலம் வந்தது. அதைக் கண்டு அவன் உதட்டில் மர்ம சிரிப்பு ஒன்று வந்தமர்ந்தது.

"நாம ஏன் ஹோட்டல்ல தங்காம இப்படிச் சர்வீஸ் அப்பார்ட்மென்ட்ல தங்கி இருக்கோம்...?" அதிமுக்கிய கேள்வி கேட்டவளை கையில் அள்ளியவன்,

"ஹனிமூன் வந்திட்டு தேவையில்லாத ஆராய்ச்சி எல்லாம் பண்ண கூடாது அம்மு... ஹனிமூனுக்குத் தேவையான ஆராய்ச்சியே வேற..." சொல்லி கொண்டு

படுக்கையறைக்கு வந்தவன் அவளைக் கீழே இறக்க விட... அவனின் ஆராய்ச்சி என்ன என்பது புரிந்தவளின் முகம் வெட்கத்தில் செவ்வானமாய்ச் சிவந்தது.

ஒரு மாதமும் திகட்ட தேனிலவை அனுபவித்தனர் இருவரும். உடல் மொழியை விட மனதின் மொழி அவர்களை இன்னமும் காதலில் இறுக்கி பிணைத்தது. கௌதமின் காதலில் அவள் எப்போதும் போல் உருகி கரைந்தாள். ஒரு மாதம் முடிந்ததும் இன்னமும் ஊருக்குக் கிளம்பாமல் இருந்தவனைக் கண்டு,

"கௌதம் நாம எப்போ ஊருக்கு போறோம்...?" என்றவளை தன் அருகில் அமர்த்தியவன்,

"நாம ஊருக்குப் போகப் போறது இல்லை அம்மு..." என்றவனை அதிர்ச்சியாய் பார்த்தாள் அவள்.

"மாமா... அம்மா... இவங்க எப்படித் தனியா இருப்பாங்க...? ப்ளீஸ் கௌதம் விளையாடாதீங்க..." இப்போதும் தனக்காக யோசிக்காமல் அவனின் அப்பாவுக்காகவும், அவளின் அன்னைக்காகவும் யோசித்தவளை கண்டு அவனுக்குப் பெருமையாய் இருந்தது.

"அவங்க ரெண்டு பேரையும் கணேஷ், மேகா பார்த்துக்குவாங்க... அப்பப்போ தன்ராஜூம், உஷாவும் வந்து பார்த்துக்கிறதா சொல்லி இருக்காங்க... நான் எடுத்த இந்த முடிவுக்கு முதலில் ஆதரவு கொடுத்தது அத்தை தான்..." என்றவன் தன் முடிவு என்ன என்பதைச் சொல்லாமல் இழுத்தடித்தான்.

"என்ன முடிவு பண்ணி இருக்கீங்க கௌதம்..."

"நான் இங்கேயே ஒரு ஜாப் தேடிக்கிட்டேன்... ஏற்கெனவே ஐடி பீல்ட்ல இருந்ததால ஈசியா கிடைச்சிருச்சு... இனி நம்ம வாழ்க்கை இங்கே தான் மது... அங்கே போறது பத்தி இப்போதைக்கு மறந்திரு... இதுவரை அடுத்தவங்களுக்காக வாழ்ந்தது போதும் அம்மு... இந்த வாழ்க்கை நமக்காக நாம வாழணும்ன்னு நான் விரும்பறேன்... ப்ளீஸ் அம்மு

எனக்காக இதைச் செய்ய மாட்டியா..." அவளிடம் கெஞ்சியவனைக் கண்டு அவள் உள்ளம் காதலால் இரங்கியது.

தனக்காகப் பார்த்து பார்த்து செய்யும் அவனின் சந்தோசத்தின் முன் அவளுக்கு வேறு எதுவும் பெரியதாய் தெரியவில்லை. அன்னையைப் பற்றிக் கூட அவள் கவலைப்படவில்லை. ஏனெனில் அன்னையைக் கௌதம் பார்த்து கொள்வான் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. தனது மகிழ்ச்சிக்காகப் பாடுபடும் அவனது மகிழ்ச்சிக்காக அவள் அவனின் விருப்பத்திற்குச் சம்மதித்தாள்.

"உங்க விருப்பம் தான் என் விருப்பம் கௌதம்..." என்று சொன்னவளை நன்றியுடன் பார்த்தான்.

"என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு ரொம்பத் தேங்க்ஸ் அம்மு... எனக்கு அந்தச் சினிமா உலகமே பிடிக்கல... எப்படியோ பாதை மாறி அதுக்குள்ள போயிட்டேன்... இவ்வளவு நாளா மூச்சடைச்ச மாதிரி இருந்தது... இப்போ தான் ப்ரீயா பீல் பண்றேன்..." என்றவன் அவள் மடியில் படுத்துக் கொண்டு,

"அம்மு இன்னொரு விசயமும் உன் கிட்ட இருந்து மறைச்சுட்டேன்..." என்றவனைப் புரியாமல் பார்த்தாள் மது.

"அம்மு நான் உன் கிட்ட ஒண்ணு கேட்பேன்... உண்மையா பதில் சொல்லு... இங்கே என் சம்பளத்துல சிக்கனமா இருந்து வாழ வேண்டி இருக்கும்... உனக்கு அது வருத்தமா இருக்குமா...?" அவனின் கேள்வி நியாயமே... இதுவரை கதாநாயகியாய் உயரத்தில் இருந்து பழகியவள் இன்று சாதாரண நிலைக்குத் தள்ளப்பட்டால் அதை ஏற்க அவளால் முடியுமா என்ற தயக்கம் அவனிடம் இருந்தது.

"என் கௌதம் எங்கே இருக்காங்களோ அங்கே தான் இருப்பேன்... உண்மையைச் சொல்லணும்ன்னா இந்த வாழ்க்கை எனக்குப் பிடிச்சு தான் இருக்கு..." அன்று போல் இன்றும் மனம் மாறாமல் இருந்தவளை கண்டு அவனுக்குள் காதல் பெருக்கெடுத்தது. தன் காதலை வித

விதமாய் அவளிடத்தில் காட்டியவன் வெகு நேரம் சென்றே அவளை விடுவித்தான். பின்பு சீரியசாக,

"அம்மு... இங்கே வர்றதுக்கு முன்னாடி சில வேலைகள் எல்லாம் முடிச்சிட்டு தான் வந்தேன். இவ்வளவு நாள் என் கூடவே இருந்த கணேஷூக்கு என்னோட ஷேர்ஸ், பிசினஸ் இன்வெஸ்ட்மெண்ட் எல்லாத்தையும் கொடுத்துட்டேன்... அவன் செஞ்ச உதவிக்கு இது எல்லாம் ரொம்பக் குறைவு தான்... அப்புறம் மேகா பேர்ல ஒரு வீட்டை எழுதி கொடுத்துவிட்டேன்... அப்பா, அத்தைக்குத் தேவையான பணத்தைப் பேங்கில் போட்டுட்டேன்... கணேஷ் அதை ஹண்டில் பண்ணிக்குவான்... அப்புறம்..." இழுத்தவன் ஒரு கணம் கண்களை மூடி அமைதியாய் இருந்தான். அவனின் அமைதி அவளுக்கு அச்சத்தைக் கொடுத்தது.

"கௌதம்..." அவனை அழைத்தாள். அவளின் அழைப்பில் கண்களைத் திறந்தவன் கண்கள் கலங்கி இருந்தது. அவனின் நிலை அவளை உருக்க...

"என்ன கௌதம்..." அவளது கைகளை எடுத்துக் கன்னத்தில் வைத்து கொண்டவன்,

"மீதியிருந்த எல்லாச் சொத்துக்களையும் கேன்சர்ல பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக அம்மா பேருல ஒரு ட்ரஸ் ஆரம்பிச்சு அப்பாவின் பொறுப்பில் ஒப்படைச்சிட்டு வந்து இருக்கேன்..." அன்று அவன் அவனது சொத்துக்கள் எல்லாத்தையும் அவளது பெயருக்கு மாற்றியதை அறிந்தவள்... மறுநாளே எல்லாவற்றையும் அவனது பெயருக்கு திருப்பி எழுதி கொடுத்துவிட்டாள்... அவன் சொல்ல சொல்ல கேட்காமல்...

கௌதமின் இந்தச் செயல் அவளை நெகிழ செய்தது. பணம், புகழ் இரண்டு போதையும் உண்டவர்கள் எல்லாம் தலை கால் புரியாமல் ஆடும் போது... அது அனைத்தும் இருந்தும் நிலை மாறாமல் இருக்கும் கௌதம் அவளின் மனதில் பல படி உயர்ந்து நின்றான். அவன் தன் கணவன் என்பதில் அவளுக்குக் கர்வமாய், பெருமையாய் இருந்தது.

"என் கௌதம்..." என்று அவனை ஆவேசமாய் அணைத்து கொண்டவள் தன் பரிசு மழையை அவன் மேல் பொழிந்தாள். அவளின் காதலில் கட்டுண்டு அவனும் சுகமாய் நனைந்தான்.

கனடா வாழ்க்கை ஓரளவுக்குப் பழகி போனது மதுவுக்கு. காலையில் எழுந்து சமைத்து கணவனை வேலைக்கு அனுப்பி... அதன் பின் வீட்டு வேலைகள் செய்து... மாலையில் அவனின் வரவிற்காக ஆவலுடன் காத்திருப்பது அவளுக்கு மிகவும் பிடித்து இருந்தது. இதற்காகத் தானே இவ்வளவு போராட்டமும்...

அது போல் ஒரு நாள் வேலையில் இருந்து வந்தவன் கையோடு அவளின் மேற்படிப்பிற்கான விண்ணப்பத்தைக் கொண்டு வந்தான்.

"கௌதம் இப்போ போய்ப் படிக்கணுமா...? என்னால முடியாது..." அவள் மறுக்க...

"நீ டாக்டருக்கு படிக்க ஆசைப்பட்ட அது தான் முடியாம போச்சு... இப்போ நீ படிச்சு இருக்கிற ஹிஸ்ட்ரியில் டாக்டரேட் வாங்கணும் அம்மு... இது என் விருப்பமும் கூட... எனக்காக இதைச் செய்ய மாட்டியா அம்மு...?"

மது தொலைத்தூர கல்வி மூலம் இளங்கலை வரலாறு படித்து முடித்திருந்தாள். அதை மேலும் தொடரும் படி கௌதம் சொன்னதை அவளால் மறுக்க முடியவில்லை. ஏனெனில் அவளுக்குப் படிப்பின் மீது அவ்வளவு ஆசை...

"ம்... படிக்கிறேன்..." அவனுக்குச் சம்மதமாய்த் தலையை ஆட்டியவளை கண்டு அவனுக்கு நிம்மதியாய் இருந்தது.

********************

"அம்மு... தலையைக் கூடக் காய வைக்காம எங்கே கிளம்பற...?" வகுப்பிற்கு நேரமாகி விட்டதை உணர்ந்து அவசரமாகக் கிளம்பியவள் ஈர தலையைச் சரிவரத் துவட்டாமல் அப்படியே புறப்பட... அதற்குத் தான் அவன் சத்தம் போட்டுக் கொண்டு இருந்தான்.

"நைட் எல்லாம் தூங்கவிடாம கூத்தடிச்சா நான் எப்படி நேரத்தோட எழுந்துக்க முடியும்..." அவள் முணுமுணுக்க...

"நீ மட்டும் டாக்டர் பட்டம் வாங்கினா போதுமா... நானும் வாங்க வேண்டாமா..." என்றவனின் பார்வை அவளின் மேனியை ஆர்வமாய் மேய்ந்தது.

"உங்களை..." என்று அவள் அடி மொத்தியதை சிரிப்புடன் வாங்கிக் கொண்டவன் அவளின் முடியை ஹேர் ட்ரையர் கொண்டு உலர்த்த மறக்கவில்லை. பின் அவளது முடியை அழகாய் வாரி சிறு க்ளிப்பில் அடக்கியவன் அவளைத் திருப்பி அழகு பார்த்தான்.

"இப்போ எவ்வளவு அழகா இருக்கு... எல்லாத்தையும் நான் தான் சொல்லணும்... அம்மு வர வர உனக்கு மறதி கூடி போச்சு..." என்றவனைக் கண்ணாடி முன் நிற்க வைத்தவள் அவனின் தலையைச் சுட்டி காட்டி 'என்ன' என்பது போல் கண்களால் வினவினாள். அதைக் கண்டவன் அசடு வழிய சிரித்தான்.

"போதும் போதும் சிரிச்சு சிரிச்சே மயக்காதீங்க..." என்றவள் அவனின் தலையைத் தன் அருகில் இழுத்து அவனின் தாடையில் கை வைத்து கலைந்து கிடந்த அவனின் முடியை சீவி விட்டாள். அவள் உயரத்திற்குக் குனிந்தவன் அவளின் செயலை புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அவனுக்குச் சீவி முடித்தவள் அவனின் பார்வையில் மயங்கியவள் அவனின் கன்னங்களை இரு கரத்தில் தாங்கி, "மாமா... ஐ லவ் யூ..." என்று அவனின் நெற்றியில் முத்தமிட்டு அவனின் நெஞ்சில் சாய்ந்தாள்.

"ம்ஹூம்... இப்படியே இருக்க எனக்குச் சுகமா தான் இருக்கு... ஆனா உனக்கு க்ளாஸ் இருக்கே அம்மு..."

"இன்னைக்கு ஒரு நாள் லீவு போடறேனே..." என்றவளின் குரல் குழைந்து வந்தது.

"அடிங்..." என்று அவளது தலையில் செல்லமாய் முட்டியவன், "ஓடு... ஓடு... புக்ஸ் எடுத்திட்டுக் கிளம்பு...

க்ளாஸ் கட் அடிக்கப் போறியா... நான் தான் உன்னை அடிக்கப் போறேன்..." என்றவன் அதற்கு நேர்மாறாய் அவளுக்குப் பதிலாக அவளின் பையைத் தயார் செய்து அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

அன்று மாலையில் வெளியில் உலாவ போன போது அவர்களுக்கு எதிரில் வந்த தமிழர் ஒருவர் இருவரையும் கண்டு ஒரு நொடி தயங்கினார். பின் அவர்களை உற்று பார்த்துவிட்டு அருகில் வந்தவர்,

"நீங்க ஆக்டர் கௌதம் கிருஷ்ணாவும், இவங்க உங்க மனைவி ஆக்ட்ரஸ் மதுஸ்ரீயும் தானே..." திடீரென்று அவர் அப்படிக் கேட்டதும் இருவரும் திடுக்கிட்டு போயினர். சற்றுச் சமாளித்துக் கொண்டு இருவரும் ஒருமித்த குரலில்,

"இல்லையே..." என்க... கேட்டவருக்குப் பெரும் குழப்பமாய்ப் போய்விட்டது.

"சாரிங்க..." என்றபடி அவர் நகர...

சிறிது தூரம் மௌனமாய் நடந்தவர்கள் பின் நின்று ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டவர்களுக்குச் சிரிப்புப் பொங்கியது. வாய் விட்டு சிரித்தவர்களின் சிரிப்புச் சத்தம் அந்தப் பிரதேசம் எங்கும் அழகாய் நிறைவாய் ஒலித்தது. அவர்களின் இந்த மகிழ்ச்சி இன்று போல் என்றும் தொடர அந்த இறைவன் அருள் புரிவாராக...

முற்றும் *_*